

நமது தமிழ் நாடு

வட ஆர்க்காடு மாவட்டம்



சோமலெ

வட ஆர்க்காடு மாவட்டம்

(1961 வரை)

'சோமலெ'

பாரி நிலையம்
184/88, பிராட்வே, சென்னை-600 108.
தொலைபேசி: 044-25270795

முதல் பதிப்பு : 2014

நூல் பற்றிய விவரங்கள்

நூற் பெயர்	:	வட ஆர்க்காடு மாவட்டம்
ஆசிரியர்	:	'சோமலெ'
தாள்	:	11.6 கி. கிராம்
நூலின் அளவு	:	கிரௌன் சைஸ்
மொத்தப் பக்கங்கள்	:	224
வெளியிடுவோர்	:	பாரி நிலையம் 184/88. பிராட்வே, சென்னை–108.
பொருள்	:	மாவட்ட வரிசை
கணினி	:	லதா கம்பியூட்டர், சென்னை – 1. 9840405847.
நூலின் விலை	:	**85.00**
அச்சிட்டோர்	:	மோனார்க் அச்சகம், பெரியார் பாதை, சென்னை.

'சோமலெ'
வாழ்வும் தொண்டும்

இலக்கியம், அரசு அறிவியல், பயணஇயல், மானிடவியல், மொழியியல், நாட்டுப்புறவியல், இதழியல், நாடுகள், மாநிலங்கள், மாவட்டஇயல் எனப் பல துறைகளிலும் முத்திரை பதித்த சென்ற நூற்றாண்டு எழுத்தறிஞர் சோமலெ இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் நெற்குப்பை என்ற ஊரில் 11.02.1921இல் பிறந்த அவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் லெட்சுமணன். அவர் தந்தையார் பெரி. சோமசுந்தரம். தாயார் நாச்சம்மை ஆச்சி. இரு அண்ணன்களையும் மூன்று அக்காள்களையும் அடுத்து ஆறாவதாகப் பிறந்த கடைக் குட்டியே சோமலெ.

சென்னையின் மாநிலக் கல்லூரியில் பி.ஏ. பட்டமும் மும்பையின் ஹாரிமன் இதழியற் கல்லூரியில் இதழியற் பட்டயமும் அவர் பெற்ற முறைசார்ந்த கல்வியாகும். எனினும் வாழ்நாள் முழுதும் அவர் உலகம் முழுதும் சுற்றித் தேடிக் கற்ற கல்வி கரையிலது.

தம் குடும்பம் நடத்தி வந்த ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தின் பொருட்டு 1948ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா முதலிய நாடுகளுக்கும் அவர் பயணம் சென்று வந்தார். இயல்பாகவே அவருள் இருந்த எழுத்தார்வம் தூண்டப் பெற்று அவர் முழுமையாக எழுத்துப் பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டது இந்தப் பயணத்தால் ஏற்பட்ட விளைவுதான்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத் துறையில் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைக் காமராஜ் பல்கலைக் கழகத்திலும் செனட் உறுப்பினராக இருந்துள்ளார்.

கனடா, தாய்லாந்து, பிரான்ஸ், சுவீடன் முதலிய உலக நாடுகளைப் பற்றியும், 12 ஆப்பிரிக்க நாடுகள் பற்றியும் கண்டுணர்ந்து எழுதியுள்ளார். நமது தமிழ்நாடு வரிசை என்ற தலைப்பில் அன்றைய தமிழ் நாட்டின் 10 மாவட்டங்களின் வரலாறு, இலக்கியங்கள், மக்கள் பேச்சு மொழி உள்ளிட்ட செய்திப் பதிவு நூல்களையும் படைத்துள்ளார். அவருடைய இறுதி நாட்களில் கூடத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வேண்டுகோளின்படி வட மாநிலங்களில் வாழும் தமிழர்களை நேரில் கண்டு வட மாநிலங்களில் தமிழர் என்னும் அரிய நூலைக் கொண்டு வந்துள்ளார்.

தமிழ் இதழ்கள் என்னும் இதழியல் நூல், நீங்களும் தூதுவர் ஆகலாம் என்னும் அரசு அறிவியல் நூல், செட்டிநாடும் செந்தமிழும், வளரும் தமிழ், ஆகிய மொழி-பண்பாட்டு ஆய்வு நூல்கள், தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் என்னும் மானிட இயல் நூல், Folk lore, Travel Literature முதலிய ஆங்கில நூல்கள் என ஏறத்தாழ 60 நூல்கள் அவரால் இயற்றப் பட்டுள்ளன.

பாவேந்தரின் விருப்பப்படி தமிழுக்குத் துறை தோறும் தொண்டு செய்த தமிழ்த் தேனி சோமலெ 04-11-1986 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்.

- பேராசிரியர் செ. இராதாகிருஷ்ணன்

சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் மு. வரதராசன் அவர்கள்
அன்புடன் வழங்கிய

சிறப்புரை

நண்பர் திரு. 'சோமலெ' உலகம் சுற்றிய தமிழர்; முன்னேற்றம் பெற்ற நாடுகள் பல கண்டு நல்ல அனுபவம் பெற்றவர்; முற்போக்கான முறையில் நேரிய தமிழ் நடையில் நூல்கள் பல எழுதிப் பயிற்சி நிரம்பியவர். ஆஸ்திரேலியா அமெரிக்கா முதலான நாடுகளைப் பற்றி எழுதிய இவர்தம் எழுதுகோல் தமிழ் நாட்டினைப் பற்றி விரிவாக எழுத முன் வந்தது மகிழத்தக்கது. தமிழ் நாட்டின் பல மாவட்டங்களையும் நன்கு ஆராய்ந்து ஆங்காங்குக் கிடைக்கும் குறிப்புகளை யெல்லாம் விடாமல் தொகுத்து, நிரல்பட வகுத்து, அழகிய நூல்களாக ஆக்கித் தரும் அவர்தம் முயற்சி போற்றுதற்குரியது.

அந்தந்தப் பகுதிகளின் இயற்கை வனப்பும் வளமும் பற்றிய குறிப்புகளைத் தருவதோடு அவற்றிற்குரிய அரசியல் வரலாற்றுச் செய்திகளையும் மக்கள் தொகை, தொழில் வகை, வாணிப வளம் முதலிய குறிப்புக்களையும் சுவைபடச் சேர்த்துத் தந்துள்ளார். அவ்வம் மாவட்டங்களில் மக்கள் பேசும் மொழியில் உள்ள திரிபுகளையும் சிறப்பியல்புகளையும் ஊர்ப் பெயர்களின் காரணங் களையும் நாட்டுப் பாடல்களையும் கல்வெட்டுக் குறிப்புக்களையும் அவர் தந்துள்ள முறை பெரிதும் பயன் தருவதாகும். சிற்சில செய்திகளையும் குறிப்புக்களையும் இந்நூலில் காணும்போது, "இத்தகைய குறிப்புகள் இவர்க்கு எப்படிக் கிட்டினவோ?" என்று நினைந்து வியக்க வேண்டியுள்ளது. இடங்களையும் மக்களையும் கூர்ந்து நோக்கி ஆய்வதில் இவர் பெற்றுள்ள தனிப் பயிற்சியே இத்தகைய நூல்கள் எழுதுவதில் இவர்க்குத் துணையாக உதவி யுள்ளது எனலாம்.

காய்தல் உவத்தல் அகற்றி, ஆராய்ச்சி முறையில் செய்திகளையும் தொகுத்தும் வகுத்தும் தரும் கடமையை மேற்கொண்டு இத்தகைய நூல்கள் எழுதியபோதிலும், ஆங்காங்கே இவருடைய உள்ளமும் புலனாகாமற் போவதில்லை. 'இவ்வூரில் இருப்பவை', 'இவ்வூரில் காணத்தக்கவை' என்ற தலைப்புக்களில் வெறும் பட்டிபோல் சில பெயர்களையும் தொடர்களையும் தரவேண்டிய இடத்திலும், இவருடைய உணர்ச்சியும் குறிக்கோளும் இன்னவை என விளங்கி விடுகின்றன.

"பழமைப் பெருமையை உணர்த்தும் இடங்களைப் பேண அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கோடிகளை அள்ளித் தெளிக்கின்றனர்..... ஆனால் கலைவளம் நிறைந்த வேலூரில் பழமைச் சின்னமான கோயில் தேடுவாரின்றியும் கோட்டை அரசாங்க அலுவலகமாகவும் இருக்கிறது. நாம் இந்தியாவில் இருக்கிறோம்; அமெரிக்காவில் இல்லை."..... "தக்கோலத்தில் இருப்பவை; 22 தெருக்கள், 5000 மக்கள், எழில் மண்டபம், கிளை நூலகம், 1000 தறிகள், தேர்தல் காலத்தில் வள்ளலாக விளங்கும் செல்வர்கள், தேடுவாரின்றியும் வருவாயின்றியும் தவிக்கும் புகழ் பெற்ற கோயில்கள்".... இவை எடுத்துக்காட்டுக்கள்.

ஆகவே, இந்நூல் வரிசையால் தமிழகத்தின் பகுதிகள் வரலாற்று விளக்கமும் அறிமுகத் தெளிவும் பெறுவதோடு மட்டும் அல்லாமல், கற்கும் மக்களின் உள்ளத்தில் எழும் கடமையுணர்ச்சியாலும் புதிய ஊக்கத்தாலும் சீரும் சிறப்பும் பெற்றுக் குறை தீர்ந்து பொலிவதற்கும் இடம் உண்டு. எழுத்துத் தொண்டின் வாயிலாக இவ்வாறு இவர் செய்யும் நாட்டுத் தொண்டு வெல்க, விளங்குக.

- மு. வரதராசன்

✦ ✦ ✦

முன்னுரை

வரலாற்றுப் புகழ்பெற்ற வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பற்றி ஒரு நூல் எழுத நேர்ந்தது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இம்முயற்சியில் முனைந்ததும் மாவட்டத்தின் சில பகுதிகளைத் தனியாகவும், சில பகுதிகளை இம்மாவட்டத்தின் கலெக்டராக இருந்த தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் M.A., I.A.S., அவர்களுடனும் சுற்றிப் பார்த்தேன். இம்மாவட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன் பணியாற்றிய S.K. செட்டூர் I.C.S. அவர்களும், தமிழன்பர்களான பச்சையப்பன் அவர்கள், R. சுந்தரமூர்த்தி அவர்கள், சக்கரவர்த்தி நயினார் அவர்கள் ஆகியோரும்; 'வேலூர் கெஜட்' ஆசிரியராக இருந்த A. பார்த்தசாரதி அவர்களும், தமிழ் நாடு அரசாங்கத்தின் செய்தி விளம்பரத் துறையில் பொருட்காட்சி அலுவலராக உள்ள ஜெயசந்திரன் அவர்களும், திருவண்ணாமலை அன்பர் வெ.வா. திலகர் அவர்களும், தக்கோலம் ஊரினரும் செங்கற்பட்டு மாவட்டத்து விளம்பர அலுவலரும் ஆகிய நாகபூஷணம் அவர்களும், சோளிங்கர் வழக்கறிஞர்களான வீராசாமி அவர்களும் இராமநாதன் அவர்களும் என் வினாக்களுக்கு விடை கூறி உதவினார்கள்.

செங்கம் கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் புலவர் சு. பரமசிவம், B.A. அவர்கள், செங்கம் வட்டத்தைப் பற்றிய சில குறிப்புகளை அனுப்பினார்கள். அப்பள்ளியில் பணிபுரியும் மற்றொரு ஆசிரியரான புலவர் மு.வை. அரவிந்தன், B.O.L. அவர்கள் பேச்சுத் தமிழ், நாட்டுப் பாடல், பழமொழிகள் போன்ற சுவையான பல செய்திகளை எனக்காக முயன்று சேகரித்து உதவியிருக்கிறார்கள். இவ்விரு அன்பர்களின் நட்பு எனக்கு ஏற்படக் காரணமாக இருந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்களுக்கு என் நன்றி உரியது.

இந்நூலின்கண் 1961—ஆம் ஆண்டில் சேகரிக்கப் பெற்ற மக்கள் தொகைப் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தந்து உதவிய சென்சஸ் துறை அலுவலர்க்கும் படங்கள் உதவிய செய்தி விளம்பரத் துறையினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கையெழுத்துப் படியை டைப்பு அடித்து உதவிய மயிலாப்பூர் திரு. M. ஆறுமுகத்துக்கும் என் நன்றி உரியது.


டாக்டர் மு.வ. அவர்கள் ஆசிரியர்களெல்லாம் போற்றும் ஆசிரியர். எழுத்தாளரெல்லாம் போற்றும் எழுத்தாளர். தலைசிறந்த சிந்தனையாளர். உரிமைப் போராட்ட நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் 'தமிழ் இயற்றுரை வல்லார்' எனப் பாராட்டிப் பதக்கம் வழங்கப் பெற்றவர். எக்கொள்கையினரும் எங்கள் மு.வ. என்று ஏற்றுக் கொள்ளும் நிலையை எட்டியவர். நேரத்தைப் பொன்னேபோல் போற்றும் இவர்கள் இந்நூலைப் படித்துப் பார்த்துச் சிறப்புரை ஒன்றைத் தந்து என்னைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாத்தனூர் அணை
28–8–1961. 'சோமலெ'

✦ ✦ ✦

பொருளடக்கம்

வரைபடம்


ஆந்திரம்
குடியேற்றம்
வேலூர்
அரக்கோணம்
செங்கற்பட்
வாலாஜாப் பேட்டை
ஆரணி
செய்யாறு
போளூர்
திருப்பத்தூர்
வந்தவாசி
செங்கம்
சேலம்
தென் ஆர்க்காடு
வட ஆர்க்காடு
மாவட்டம்
வட்டங்களும்
நகரங்களும்

வட ஆர்க்காடு மாவட்டம்

1. தோற்றுவாய்

அம்பு புக முடியாத அடர்ந்த காடுகள், எதிரிகள் எளிதில் உச்சியை அடைய இயலாத உயர்ந்த மலைகள், மலைச் சாரலில் மகிழ்ந்து பொழுது போக்க ஏற்ற ஏலகிரி மலை, கோமுட்டி ஏரி போன்ற இடங்கள், போர்க் கலைக்கு அரணாக உள்ள வேலூர்க்கோட்டை, கலைக் கருவூலமான கலியாண மண்டபம், அமைதி தாண்டவமாடும் சாத்தனூர் அணையின் அழகுப் பூங்கா, இந்திய நாடே வியக்கும் வகையில் புதிய மருத்துவ முறைகளைக் கையாளும் கிறித்தவ மருத்துவமனை, அப்பரும் ஆளுடைப் பிள்ளையும் பாடிப் பரவிய திருவண்ணாமலை, அமெரிக்கரும் ஐரோப் பியரும்கூட அமைதி காணும் ரமண மகரிஷி ஆசிரமும் கிறிஸ்துகுல ஆசிரமும், ஏழைக்கும் இன்றியமையாத மண்பாண்ட முதல் அரசரும் ஆவலோடு விழையும் விலைமிக்க கம்பளங்கள் ஈறாகப் பல்வேறு பொருள் களைச் செய்யும் தொழில்கள் - இவற்றை உடையது வட ஆர்க்காடு மாவட்டம்.

தமிழ்நாட்டின் பெரிய மாவட்டங்களுள் இது ஒன்று. ஆந்திரம், மைசூர் மாநிலங்களின் எல்லையில் இந்த மாவட்டம் அமைந்திருக்கிறது. எண்ணி முடியாதவாறு ஏராளமான கோட்டைகளும் போர்க்களங்களும் இங்கே உள்ளன. ஆங்கிலேயரின் ஆட்சி தமிழ்நாட்டில் வேரூன்றி யதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் இங்கேதான் நிகழ்ந்தன.

தலைநகர்

இம்மாவட்டத்தின் தலைநகரான வேலூர், தமிழ் நாட்டின் தலைசிறந்த நகரங்களுள் ஒன்றாகும். மரமில்லாத மலை, நீரில்லாத ஆறு, படையில்லாத கோட்டை, அதிகாரமில்லாத போலீசு, விக்கிரகமில்லாத கோயில் ஆகியவற்றை வேலூரில் காணலாம்.

"கோட்டை இருக்குது; மலையிருக்குது;
படைகள் இல்லாத தடபுடல்!
கோவில் இருக்குது; சிலையிருக்குது;
தேவனில்லாத தரிசனம்!
போலீஸ் படைகள் தடபுடல் பழகுது;
அதிகாரமில்லாத அதிசயம்!"

என்ற நாட்டுப் பாடலும் உண்டு.

பெயர்க் காரணம்

மாவட்டத்தாலும் தலைநகராலும் வரலாற்றில் இடம் பெற்றுள்ள வட ஆர்க்காடு பற்றிய எல்லாச் செய்திகளையும் தெரிவிப்பது இந்நூலின் நோக்கம் ஆகும்.

முதலில், மாவட்டத்தின் பெயர்க் காரணத்தை ஆராய்வோம்.

ஆர்க்காடு என்பது ஒரு நாட்டுக்கும் ஒரு நகருக்கும் பெயராகும். ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். ஆர்க்காட்டு நாடு ஆத்தி மரங்கள் மிகுந்த நாடாகும். ஆறு காடுகள் இருந்த இடமென்று புராணங்களை ஆதாரமாகக் கொண்டு கூறுவாரும், ஆறும் காடுகளும் நிறைந்த பகுதி என்றும் சொல்லுவாரும் உள்ளனர்.

ஏராளமான பெரிய ஆலமரங்கள் நிறைந்த காடுகள் இருந்ததாகவும் அதனால் 'ஆற்காடு' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் வேறு சிலர் கருதுகின்றனர்; இப்போது செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள

திருவாலங்காடு, (சித்தூர் மாவட்டத்தில் சேருவதற்கு முன்) வட ஆர்க்காட்டில் இருந்ததையும் இதற்கு ஆதாரவாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆர்க்காடு என்னும் பெயர் பற்றித் தமிழ்த் தென்றல், திரு.வி.க. அவர்கள் வடஆர்க்காடு ஜில்லா - 14-ஆவது அரசியல் மாநாடு வேலூரில் கூடியபோது, 3-5-1920-இல் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்.

> 'இப்பொழுது வட ஆறுகாடு, தென்னாறுகாடு என்று வழங்கப்பட்டு வரும் நிலப்பகுதி, பண்டைக் காலத்தில் ஆர்க்காடு என்றும், இடைக் காலத்தில் ஆறுகாடு என்றும் வழங்கப்பட்டு வந்தது. முன்னையது பழந்தமிழ் நூல் வழக்கு; பின்னையது புராண வழக்கு. இவ்விரு வழக்கும் இற்றை ஞான்று வீழ்ந்து பட்டன. இதுகாலை ஆற்கா டென்றே பல்லோர் எழுதுகின் றனர். நம் ஊர்ப் பெயர்கள் இந்நாளில் மருவிப் பொருளின்றிப் 'பொலிவதை' நோக்குழி எனது மனம் வருந்தா நிற்கிறது. நம் ஊர்ப் பெயர்களை நமது மொழியின் இயல்புக் கேற்றவாறு உச்சரிக்கும் வழக்கில் நம்மவர் தலைப்படுவராக.'

ஆர்க்காடு என்னும் நகரம் 18-ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றது. இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நவாபுகள் வாயிலாகவே ஆங்கில ஆட்சிக்கு அடிகோலப் பெற்றது. ஆகையால் ஆங்கிலேயர்கள் ஆர்க்காட்டின் பெயரை இரு மாவட்டங்களுக்குப் பொறித்தனர். இவ்வாறு தோன்றியவை தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களாகும்.

எல்லைகள்

வடக்கே ஆந்திர மாநிலத்துச் சித்தூர் மாவட்டம், கிழக்கே செங்கற்பட்டு மாவட்டம், தெற்கே தென் ஆர்க்காடு மாவட்டம், மேற்கே சேலம் மாவட்டம்

ஆகியவை இம்மாவட்டத்தின் எல்லைகளாக உள்ளன. குறுக்கை 12°-க்கும் 13°, 15'-க்கும் நெடுக்கை 78° 25'-க்கும் 79° 50'-க்கும் இடைபட்ட 12,180 சதுர கி.மீ. (4654 +100 சதுர மைல்) பரப்புடையது வட ஆர்க்காடு மாவட்டம்.*

ஆட்சிப் பிரிவுகள்

இம்மாவட்டம் வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம், தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம் என்று இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

நில வருவாய்த் துறையின் ஆட்சி முறைக்காக இம் மாவட்டம் வேலூர், திருப்பத்தூர், ஆறணி, திருவண்ணா மலை என்னும் நான்கு கோட்டங்களாகவும், திருப்பத்தூர், குடியேற்றம், வேலூர், வாலாஜா, அறக்கோணம், செய்யாறு (சேயாறு), ஆறணி, வந்தவாசி, திருவண்ணா மலை, செங்கம், போளூர் என்னும் 11 வட்டங்களாகவும் ஒவ்வொரு வட்டமும் பல வட்டாரங்களாகவும் பிரிக்கப் பட்டுள்ளன. இவை பற்றிய விவரம் பிற்சேர்க்கையில் காண்க.

ஆட்சிப் பிரிவுகளின் வரலாறு

வட ஆர்க்காடு மாவட்டம் அமைக்கப் பெற்றபோது, வட வேங்கடமாகிய திருப்பதியுட்படச் சந்திரகிரி சித்தூர் பழமனேரி வட்டங்கள் இம்மாவட்டத்தில் அடங்கி யிருந்தன. 1911 ஏப்ரல் முதல் நாளில் சித்தூர் என்ற புதிய மாவட்டம் வெள்ளைக்காரரர்களால் உருவாக்கப்பட்டது. இம்மூன்றும் வட்டங்களும் அந்த மாவட்டத்தில் அப்போது சேர்க்கப்பட்டதால் 1954-இல் ஆந்திரம் தனி மாநிலமாக ஏற்பட்டபோது அதில் ஒரு பகுதியாகி விட்டன. 1960 ஏப்ரல் முதல் நாளில் சித்தூர் மாவட்டத்தி

* 1960–இல் ஆந்திரத்திலிருந்து சேர்க்கப்பட்ட கிராமங்களின் சர்வே முடியவில்லை. இவற்றின் பரப்பளவு 100 சதுர மைல் இருக்கலாம்.

லிருந்து வள்ளிமலை முதலிய சில கிராமங்கள் தமிழ் நாட்டில் சேர்க்கப் பெற்று வட ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதியாயின.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலிருந்த திருவண்ணா மலை வட ஆர்க்காட்டுக்கு 1911-இல் மாற்றப்பட்டது. சேலம் மாவட்டத்திலிருந்த திருப்பத்தூர் வட்டம் கலகப் பகுதியாக இருந்ததால் 1911-இல் சேலத்திலிருந்து இராணுவம் வைக்கப்பட்டிருந்த வட ஆர்க்காட்டுக்கு மாற்றப்பட்டது.

இயற்கையமைப்பு

"பல்குன்றக் கோட்டம்"-என இம்மாவட்டம் இலக் கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் எங்கு நோக்கினும் சிறுசிறு மலைகள் சிதறிக் கிடக்கின்றன. இதை நோக்கும்போது அப்பெயர் மிகவும் பொருத்தம் என்று எண்ணத் தோன்றுகிறது. இம்மலைகள் யாவும் கிழக்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்தவை.

மலைகள்

இம்மாவட்டம் மலைவளம் மிக்கது. சவ்வாது மலை, ஏலமலை, கல்வராயன் மலை ஆகிய மூன்றும் குறிப்பிடத் தக்கன. கிழக்குத் தொடர்ச்சி மலையடுக்குகள் சித்தூர் மாவட்டத்திலிருந்து இம்மாவட்டம் வழியாகச் சேலம் மாவட்டத்துக்குச் செல்லுகின்றன.

சவ்வாறு மலை இந்த மாவட்டத்திலேயே மிக உயர்ந்த மலையாகும். திருப்பத்தூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியிலும், செங்கம் வட்டத்தின் வடமேற்குப் பகுதியி லும், போளூர் வட்டத்தின் மேற்குப் பகுதியிலும் வேலூர் வட்டத்தின் தென்பகுதியிலும் சவ்வாது மலை பரவிக் கிடக்கிறது. வேலூர்-பெங்களூர்ச் சாலைக்குத் தெற்கேயும், வேலூர் - திருப்பத்தூர்ச் சாலைக்கு மேற்கேயும் இம்மலை அமைந்திருக்கிறது.

இம்மலைநாடு, சங்க காலத்தில் 'நன்னனது நாடு' என்று பெயர் பெற்று விளங்கியது. இச்செய்தி, பத்துப் பாட்டில் ஒன்றான 'மலைபடுகடாம்' என்ற இலக்கியத்தி லிருந்து தெரிகிறது. காரி உண்டிக் கடவுள் தங்கும் பருவதமலை இங்கே இருக்கிறது. மாசிச் சிவராத்திரி நாளில் பெருவாரியான மக்கள் இம்மலைக்குச் சென்று வழிபட்டு, இங்குள்ள மூலிகைகளால் உடல் நலம் பெறுகின்றனர்.

சவ்வாது மலைத் தொடரின் நீளம் 65 கி.மீ. அகலம் 16 கி.மீ. இதில் உயர்ந்த சிகரங்களாக இருப்பவை:

	உயரம் (மீட்டர்)
சாமிமலை	1274
கம்புகுடி	1164
புளியன்குப்பம்	1160
கர்நாடகக்கிரி	940
கைலாசகிரி	830
திருவண்ணாமலை	600

இம்மலைத் தொடரில் அடர்த்தியான காடுகள் இருக்கின்றன. காப்பி கடுகு போன்ற பல பொருள்கள் பயிராகின்றன. கடுக்காய், கருவேலம், தேக்கு, மூங்கில் முதலிய மரங்களும் விலை மிகுந்த சந்தன மரங்களும் இங்கே மிகுதியாக வளர்கின்றன. சேயாறு இம்மலைத் தொடரிலேயே தோன்றுகிறது.

ஏலகிரி மலை

இது திருப்பத்தூர் வட்டத்தின் நடுவே அமைந்தது. இம்மாவட்டத்தின் வளமான மலை என்று இதனைச் சொல்லலாம். 1890 அளவில் வெள்ளைக்காரர்கள் இம்மலையில் ஏலக்காய்த் தோட்டங்களையும் பழத் தோட்டங்களையும் அமைத்தனர். உள்ளத்துக்கும்

உடலுக்கும் உரம் ஊட்டும் இப்பகுதிக்குச் செம்மையான போக்குவரத்து ஏற்பட்டு வருவதால் இம்மலைக்கு ஈடாக இந்தியாவில் வேறு ஒரு பகுதியையும் ஒப்பிட இயலாத நிலை உருவாகும் என்று டாக்டர் மு. வரதராசனார் கருதுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

வளம் நிறைந்த இம்மலையைப் பற்றி இந்நூலின் பிறிதொரு பகுதியில் விரிவாகக் கூறுவோம்.

கல்வராயன் மலை

தென் ஆர்க்காடு மாவட்டத்துக் கல்வராயன் மலையின் பகுதிகள் செங்கம் வட்டத்தின் தென்பகுதி வரை உள்ளன.

கணவாய்கள்

தமிழ்நாட்டில் கணவாய்கள் மிகக் குறைவு. ஆனால், இம்மாவட்டத்தில் பல கணவாய்கள் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கவை கணியம்பாடிக் கணவாயும் செங்கண் மாக் கணவாயும் ஆகும். கணியம்பாடிக் கணவாய் கண்ணமங்கலம், கணியம்பாடி என்னும் இரு இரயில் நிலையங்களுக்கும் இடையே அமைந்த சிறு கணவாய் ஆகும்.

செங்கண்மாக் கணவாய், கண்டு இன்புறத்தக்கது. இக்கணவாய்க்கு 'தண்டம் பட்டுக் கணவாய்' என்ற பெயரும் உண்டு. ஐதர் அலியின் படைகள் இக்கணவாய் வழியேதான் படையெடுத்தன.

ஆறுகள்

பாலாறு, சேயாறு, கொட்டாறு, கௌடன்யநதி, தெள்ளாறு, நாகநதி, படவேட்டாறு (கமண்டலநதி), பொன்னியாறு, தென் பெண்ணையாறு என்னும் பல ஆறுகள் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளன.

பாலாறு

இம்மாவட்டத்திலுள்ள ஆறுகளில் குறிப்பிடத்தக்க ஆறு பாலாறு.

இது, மைசூர் மாநிலத்தில் நந்திதுர்க்கம் என்ற மலையில் தோன்றிக் கோலாறு தங்கச் சுரங்கங்களில் பாய்கிறது. பிறகு திருப்பத்தூர் வட்டத்தின் வடமேற்கு மூலையில் நுழைந்து, இம்மாவட்டத்துக் குடியேற்றம், வேலூர், வாலாஜா, அறக்கோணம், செய்யாறு வட்டங்களின் பகுதிகளையும் வளப்படுத்துகிறது. செங்கற்பட்டு மாவட்டத்துச் சதுரங்கப்பட்டினத்துக் கருகே பாலாறு கடலில் கலக்கிறது.

"பாலாற்றில் பாலும் இல்லை நீரும் இல்லை; அது 'பாழ்' ஆறு" என்று வேடிக்கையாகச் சொல்வது வழக்கம். பசுவின் மடியிலுள்ள பால், கன்று முட்டிய பின்னரே சுரக்கும் இயல்பினது. இதைப்போன்றே, பாலாறு தன் மடியையும் கரையையும் அகழ்ந்து தோண்டுபவர்க்கு வரையாது வழங்கி வருகிறது. இதனாலேயே,

"பிள்ளை தைவரப் பெருகு பால்
சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர்
பிசைந்து கைவருட
வெள்ள நீரிருமடுங்குகால் வழி
மிதந்தேறிப்
பள்ள நீள் வயற் பருமடை
யுடைப்பது பாலி!"

என்று சேக்கிழார், பாலாற்றைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

பாலாற்றின் துணையாறுகள் பல. அவற்றுள் இம் மாவட்டத்தில் தோன்றுவன சேயாறு, கொட்டாறு, கௌடன்ய நதி, தெள்ளாறு, படவேட்டாறு ஆகியன.

சேயாறு

இது முருகன் பெயரால் அமைந்த ஆறு என்று சிலரும், தாய் ஆறு ஆகிய பாலாற்றின் சேய் ஆன 'சேய் ஆறு' என்று வேறு சிலரும் கூறுகின்றனர். செய்யாறு என்ற பெயர் மக்கள் வழக்கில் நிலைத்து விட்டது.

இந்த ஆறு சவ்வாது மலையில் தொடங்கிச் செங்கம், போளூர், வந்தவாசி, செய்யாறு வட்டங்கள் வழியாக ஓடிச் செங்கற்பட்டு மாவட்டத்தில் புகுந்து பாலாற்றுடன் சேர்ந்து விடுகிறது.

பொன்னியாறு

சித்தூர் மாவட்டத்தில் தோன்றும் பொன்னியாறு, இம்மாவட்டத்துத் திருவல்லம் வழியே வந்து ஆர்க்காட்டுக்கு அருகே பாலாற்றில் கலக்கிறது.

தென் பெண்ணை

சேலம் மாவட்டத்திலிருந்து வட ஆர்க்காடு மாவட்டத்துக்கு வரும் தென் பெண்ணை, செங்கம் வட்டத்தின் தென்பகுதிகள் வழியாகப் பாய்ந்து தென் ஆர்க்காடு மாவட்டத்துக்குச் செல்லுகிறது. இதன்மீது, சாத்தனூரில் ஓர் அணை கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணையைப் பற்றி, இந்நூலின் பிறிதொரு பகுதியில் விவரமாகக் குறிப்பிடுவோம்.

செங்கம் வட்டத்தில் காட்டுப் பகுதியில் பொரசப் பட்டு என்ற ஊரில் பெண்ணையாறு சிறு குன்றுகளைப் பிளந்து கொண்டு செல்லுகிறது. அங்கேயுள்ள தூவல், மீன்மடு - இரண்டும் பார்க்கத்தக்க இடங்கள். இயற்கைக் காட்சிகள் சிறப்புற அமைந்துள்ளன. அங்கு முதலைகள் வாழ்கின்றன.

தாதுப் பொருள்கள்

இம்மாவட்டத்தில் தாதுப் பொருள்கள் மிகக் குறைவு. ஆனால், இப்பொருள்கள் மிகுந்த சேலம் தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு இடையே இருப்பதாலும் மலைகள் மிகுதியாக இருப்பதாலும் தாதுப் பொருள்கள் இங்கே கண்டுபிடிக்கப்பட்டால் வியப்படைவதற்கில்லை. தமிழ் நாட்டில் இத்துறையில் ஆராய்ச்சியைச் செம்மையான முறையில் மேற்கொள்ளுவதற்கான முயற்சிகள் தொடங் கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தென் ஆர்க்காடு மாவட்டத்து எல்லையில் 'க்குவார்ட்ஸ்' என்னும் கல்லும் இரும்புத் தாதும் சிறு அளவில் உள்ளன. நாராயணபுரத்தில் 'பாட்ஸ்டோன்' என்னும் குடக்கல்லும் போளூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் ஓரிடத்தில் பிர்ரோடைட்டு (Pyrrhotite) என்னும் கனிவளமும் ஓரளவு கிடைக்கிறது.

கட்டடம் கட்ட உதவும் கருங்கற்கள் இம்மாவட்டத்து மலைகளில் கிடைக்கின்றன. இதனால், போளூர் வேலூர் வட்டங்களில் கல் கட்டடங்கள் மிகுதியாகக் கட்டப் படுகின்றன; கல் தச்சர்களும் ஏராளமாக இருக்கின்றனர். சோளிங்கபுரப் பகுதியிலுள்ள மலைகளில் நைஸ் (Gneiss) என்னும் நீலக்கோடுள்ள வெள்ளை நிறச் சலவைக் கற்கள் கிடைக்கின்றன; இக் கற்கள் செல்வர்தம் கவினுறு மாளிகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

போளூர் வட்டத்திலுள்ள காந்தப்பாளையம், கடாப் பாளையம் மலையடிவாரங்களில் நீலம், பொன், பச்சை ஆகியவை ஆர்க்காடு நவாபுகளின் ஆட்சியில் எடுக்கப் பெற்றன.

இவ்வட்டத்துப் பெரியமலையில் பொன்கனி எடுக்கும் முயற்சி பாரி கம்பெனியாரால் 1928-இல் செய்யப்பட்டது. வெட்டியெடுக்கும் செலவு கட்டிவாராது

போனமையால், ஆக்கங்கருதி முதலிழக்க அவர்கள் முன்வரவில்லை.

இவ்வட்டத்துத் தனியார் பங்களாவுக்கு அருகே கந்தகம் கிடைப்பதைப் பற்றி ஜெர்மன் நிபுணர்கள் 1961-இல் முன்னேற்பாடு ஆராய்ச்சிகளைச் செய்துள்ளனர். ஆம்பூரில் இரும்புத் தாது கிடைப்பதைப் பற்றி அறியும் வேலையைத் தமிழ்நாடு அரசாங்கத்தின் புவியியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

செங்கம் வட்டத்தில் உச்சிமலைக் குப்பத்துக்கு அருகே 'மைகா' ஏராளமாக இருப்பதாகத் தெரிகிறது. இதை ஆயும் வேலை இந்திய அரசாங்கத்துப் புவியியல் துறையினரால் 1961 இறுதியில் தொடங்கப்படும்.

இவ்வூரருகேயுள்ள அரட்டவாடி, பிஞ்சூர், பள்ளிப் பட்டு ஆகிய ஊர்களிலும் மேட்டுப் பகுதியில் கிணறு தோண்டும்போது இன்றும் மைகா வெளிப்படுகிறது.

செங்கத்திற்கு அருகில் 1915-ஆம் ஆண்டு அளவில் சிலவகைக் கற்களை உடைத்து இரும்பு காய்ச்சி, இரும்புக் கருவிகளைக் கொல்லர்கள் செய்ததாகக் கூறுகின்றனர்.

திருமலையில் பலவகையான பழங்காலக் கற்கள் காணப்படுகின்றன. புவியியல் துறை அறிஞர் இவற்றைக் காண்பது நலம் நல்கும். மாமண்டூர்க்கருகே நீரூற்றுக்கள் இருப்பதாக 1863-இல் ஒல்டாம் என்ற நிபுணர் கூறியுள் ளார்; அப்பகுதியை ஆய்வது இன்றைய அரசாங்கத் தாரின் கடமையாகும்.

மரம் செடி கொடிகள்

சந்தன மரம், மூங்கில், குங்கும மரங்கள், அச்சா, அழிஞ்சில், கருவேலம் முதலிய மரங்கள் இம்மாவட்டத் தில் மிகுதியாக உள்ளன. சாயம் தோய்க்கவும் தோல் பத னிடவும் பயன்படும் மரப் பட்டைகளும் கிடைக்கின்றன.

உயிரினங்கள்

காட்டு எருமை, கரடி, சிறுத்தை, சிவிங்கப் புலி, பலவகை மான்கள், காட்டுப்பன்றி, யானை, குரங்கு ஆகியன இம்மாவட்டத்து மலைப் பகுதிகளில் உள்ளன. செங்கம் பகுதிக் காடுகளில் பிடிக்கப்பட்ட பெரிய யானை ஒன்றின் எலும்புக்கூடு சென்னையில் கன்னிமரா காட்சிக் கூடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

மழை

மலையும் பாலாற்றின் நீரின்மையும் சேர்ந்திருப்பதால் இம்மாவட்டத்தில் வெப்பத்தின் கொடுமை தாங்க இயலாததாக இருக்கிறது. சராசரி மழை 900 மில்லிமீட்டர். 1925 முதல் 1955 வரையுள்ள முப்பதாண்டுகளில் சராசரி மழை 460 மில்லிமீட்டர்தான். தென்மேற்கு வடகிழக்கு ஆகிய இரு பருவக் காற்றுக்களும் இம்மாவட்டத்துக்கு வரும்போதே வலுவிழந்து விடுகின்றன. போதிய அளவு மழை பெய்யாதது இம்மாவட்டத்தின் பெரிய குறையாக இருந்து வருகிறது. எப்போதாவது ஓர் ஆண்டில் வெள்ளம் போவதும் உண்டு. அறக்கோணம், செய்யாறு, வந்தவாசி வட்டங்களில் பிற வட்டங்களைவிடக் கூடுதலான மழை பெய்கிறது.

வேலூரிலும் திருப்பத்தூரிலும் மழை முதலியன வற்றைப் பதியும் கருவிகளுள்ள அலுவலகங்கள் இருந்து வருகின்றன.

✦ ✦ ✦

உ. வரலாறு

நாட்டின் பெயர்

சங்க காலத்து அருவாநாடு, பிற்காலத்துத் தொண்டை நாடு இவற்றின் ஒரு பகுதியே இன்றைய வட ஆர்க்காடு மாவட்டம்.

மலைபடுகடாம், சிறுபாணாற்றுப்படை ஆகிய பழந் தமிழ் நூல்களில் இம்மாவட்டத்தைப் பற்றிய சில செய்திகள் கிடைக்கின்றன. தொண்டை நாட்டை, தொண்டைமான் இளந்திரையன் காஞ்சியிலிருந்து ஆண்டதாக மணிமேகலை கூறும்.

பல்லவர் ஆட்சி

கி.பி. 300-இல் தொண்டை நாட்டில் பல்லவர் ஆட்சி ஏற்பட்டது. குகைக் கோயில்களைக் குடைந்த முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 600-630), வாதாபியை அழித் தவனும் மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவர் இரதங்களை அமைத்தவனுமான முதலாம் நரசிம்மவர்மன் (630-668), முதலாம் பரமேசுவரவர்மன் (670-680), காஞ்சிகயிலாச நாதர் கோயிலைக் கட்டுவித்த இராசசிம்மன் (680-720), சோழ பாண்டியரை முறியடித்த இரண்டாம் நந்திவர்மன், இம்மாவட்டத்திலுள்ள தெள்ளாறு என்னுமிடத்தில் தமிழ் மூவேந்தரையும் முறியடித்த 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்ற பெயர் பெற்ற மூன்றாம் நந்திவர்மன் (844-866) ஆகியோர் இந்நாட்டை ஆண்டனர்.

பல்லவர் காலத்தில் சமணம் இம்மாவட்டத்தில் வளர்ச்சியடைந்தது. சமணப் பள்ளிகளுக்குப் 'பள்ளிச் சந்தம்' என்னும் நிலம் விடப்பட்டது. செங்கம் வட்டத்தில்

சில இடங்களில் அருகன் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. திருமலை, பஞ்சபாண்டவர்மலை போன்ற இடங்களில் சமணக் கோயில்களை இன்றும் காணலாம். திகம்பர ஜெயினர், ஜெயின் கட்டாரியர் என்ற சமூகங்கள் இம்மாவட்டத்தில் இன்றளவும் வாழ்கின்றனர்.

சோளிங்கபுரம் (சோழலிங்கபுரம்), சோழசிங்கரடி அருகே மகேந்திரவர்மன் அமைத்த மகேந்திரவாடி, செய்யாறு அருகேயுள்ள குரங்கணில் முத்தம் என்னும் குகைக் கோயில்களும், வந்தவாசி வட்டத்தில் மகேந்திர வர்ம பல்லவனின் தந்தை பெயரால் அமைந்த சியமங்கலம் (சிஷமங்கலம்) என்னும் ஊரும், தூசிமாமண்டூரிலுள்ள இசைக் கல்வெட்டுக்களும், அதையடுத்த பல்லவபுரம் (பல்லாவரம்) என்னும் சிற்றூரும் பல்லவ இலச்சினையான நந்தியின் தொடர்புள்ள இடங்களும் பல்லவ ஆட்சியின் நினைவுச் சின்னங்களாகத் திகழ்கின்றன.

பல்லவர் காலத்தில் வைணவ சமயம் பரவிற்று. வேதம் ஓதுவதற்குப் பிராமணர்கள் வரவழைக்கப்பட்டுப் பல கிராமங்களில் குடியேற்றப்பட்டனர். காவேரிப் பாக்கம், தூசிமாமண்டூர், மகேந்திரவாடி என்னும் இடங்களில் பெரிய ஏரிகள் வெட்டப்பட்டன.

சோழர் ஆட்சி

கும்பகோணத்துக்கு அருகேயுள்ள திருப்புறம்பியத்தில் நடைபெற்ற போரில் பல்லவர் தோல்வியுடைந்தனர். இதன் பயனாகச் சோழர் ஆட்சி இங்கு ஏற்பட்டது.

இடையே 950-இல் மூன்றாம் கிருட்டினன் என்ற இராட்டிரகூட மன்னன் பராந்தகனைத் தக்கோலத்தில் தோற்கடித்தான். 968 வரை இராட்டிரகூடர் ஆட்சி செலுத்தினர்.

சோழப் பேரரசின் ஒரு பகுதியாகத் தொண்டை நாடு 1300 வரை இருந்து வந்தது. அந்நாளில் தொண்டைநாடு, 'சயங்கொண்ட தொண்டை மண்டலம்' எனப் பெயர் பெற்றது. சோழசிங்கபுரம் என்ற ஊரே சோளிங்கர் ஆகியிருக்கிறது. சோழர் காலத்தில் இம்மாவட்டத்தில் சாலைகளும் சத்திரங்களும் ஏற்பட்டன. கைலாசகிரியில் சோழர் ஓர் அரண்மனை அமைத்துக் கொண்டனர்.

ஒய்சாளர் ஆட்சி

ஒய்சாளர் பதினொன்றாம் நூற்றாண்டில் செல்வாக்குடன் விளங்கினர். அவர்கள் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். திருவண்ணாமலைக் கோயிலில் திருப்பணிகள் செய்து, பல நிபந்தங்களை ஏற்படுத்தினர்.

விசயநகர ஆட்சி

15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் விசயநகர ஆட்சி இம்மாவட்டத்தில் ஏற்பட்டது. விசயநகர ஆட்சிக் காலத்தில் தெலுங்கு மொழியினர் இங்கே குடியேறினர். இம்மாவட்டமெங்கும் பாளையக்காரர்கள் நியமிக்கப் பட்டனர்.

வேலூர்க் கோட்டை கட்டப்பட்டது. விசயநகரின் பிரதிநிதிகளான பொம்மிரெட்டியும், திம்மிரெட்டியும், ஜலகண்டேசுவரர் கோயிலையும் கல்யாண மண்டபத்தையும் கட்டினர். இவை விசய நகரத்தில் விளங்கிய கட்டிடக் கலைக்கு அழியாப் புகழைத் தந்து வருகின்றன. வேலூருக்கு ராயவேலூர் என்ற பெயர், விசயநகர காலத்திலேயே ஏற்பட்டது.

16,17-ஆம் நூற்றாண்டுகளில் விசயநகர ஆட்சியில் ராயர் அப்பாஜி என்ற அமைச்சர் வேலூர்ப் பகுதியை ஆண்டார். அவருடைய அறிவுக் கூர்மையைப் பாராட்டிப் பல கதைகள் இப்பகுதியில் வழங்குகின்றன.

மராத்திய ஆட்சி

விசயநகர அழிவுக்குப் பிறகு நிலைபெற்ற ஆட்சியாக நடைபெற்றது கர்நாடக நவாபுகளின் ஆட்சியேயாகும்.

இடையே சில ஆண்டுகள் மராத்திய மன்னர்கள் செங்கோல் செலுத்தினர். வேலூர் நகரைச் சுற்றிலும் மலைகளிலும் சிற்றூர்களிலும் மராத்தியர் கோட்டைகளை அமைத்தனர். மராத்திய மாநிலத்திலிருந்து வந்தவர்களுக்கு ஆறணி போன்ற ஜாகிர்கள் அன்பளிக்கப் பட்டன. அக்காலத்தில் இங்கு வந்து குடியேறிய பவசாகர க்ஷத்திரிய மஹாராஷ்டிரர், நாமேதேவ மராத்தியர், மராத்தி குடுகுடுப்பைக்காரன், குருவிக்காரர் ஆகிய சமூகங்கள் இன்றும் இம்மாவட்டத்தில் இருக்கின்றனர்.

நாடெங்கும் சிறுசிறு பூசல்கள் ஏற்பட்டன. 'சவுத்' என்ற புதுவரியை வசூலித்த வரி வசூலிப்பவராலும் போர்ப் படையினராலும் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது.

முஸ்லீம்களின் ஆட்சி

18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செஞ்சிக் கோட்டையை மொகலாயர் பிடித்துக் கொண்டனர். அவர்களுடைய கவர்னரான ஐதரபாது நிஜாமின் ஆட்சி ஆர்க்காட்டு நவாபுகள் வாயிலாகச் சில ஆண்டுகள் நடைபெற்றது. பின்னர் ஆர்க்காட்டில் நவாப்புக்கள் சுதந்தரமாக ஆண்டனர்.

பதினேழாம் நூற்றாண்டில் திருவண்ணாமலைப் பகுதி நவாப்பின் ஆளுகைக்கு உட்பட்டது. கி.பி.1753 முதல் கி.பி. 1760 வரை மிகுந்த குழப்பத்திற்குள்ளாகி, முராரி ராயர், கிருஷ்ணராயர், மிருத்திஸ் அலிகான், பர்க்கத் உல்லாகான், பிரெஞ்சுத் தளபதி சூப்பிரே, சாபினே, ஆங்கில காப்டன் ஸ்டீபன் ஸ்மித் முதலியோர் திருவண்ணாமலையை முற்றுகையிட்டு மாறி மாறி

வெற்றியும் தோல்வியும் அடைந்தனர். கி.பி. 1790-இல் திருவண்ணாமலை திப்புசுல்தான் வயப்பட்டது.

நவாபுகளின் ஆட்சியில் ஆர்க்காடு தலைநகராயிற்று. நாகநதிக்கு வடக்கே இஸ்லாமிய மதம் பரவிற்று; பல இடங்களில் மசூதிகள் கட்டப் பெற்றன. முஸ்லிம் செல்வாக்கின் அடையாளமாக வாலாஜா நகரமும் அன்வராதாபாத், மஷார், மேல்பஷார், பர்வாராவுத்தன் பத்தடை, லெப்பைமான் குப்பம், மொர்தானா, அன்வா ருதிகான் பேட்டை, அலியாபாத், மன்சராபாத், அப்துல்லாபுரம், அல்லாபுரம், முகம்மதுபுரம் போன்ற பல ஊர்களும் ஏற்பட்டன. இந்துக் கோயில்கள் சில இடங்களில் சேதப்படுத்தப்பட்டன.

ஆங்கிலேயர் வருகை

ஆர்க்காட்டு நவாபு, ஐதர்அலி, பிரிட்டிஷார், பிரெஞ்சுக்காரர் இவர்களிடையே ஏற்பட்ட போர்களில் முக்கிய் அரங்கமாக வடஆர்க்காடு மாவட்டம் இருந்தது. இதனால் இம்மாவட்டத்தில் 1735 முதல் 1800 வரை குழப்பம் நிலவியது. ஆறணி, போளூர், திமிரி, தக்கோலம், வந்தவாசி, ஆர்க்காடு, வாலாஜா, சோளிங்கபுரம், காவேரிப்பட்டினம், ஆம்பூர் என்னும் ஊர்களில் பல போர்கள் நடைபெற்றன. இடையே ஐதர் வேலூரை முற்றுகையிட்டார்; பிரெஞ்சுக்காரர் சில நகரங்களைப் பிடித்துக் கொண்டனர். ஆனால் இறுதியில் பிரிட்டிஷார் வெற்றி பெற்றனர்.

வெற்றி பெற்றதற்குப் பிரிட்டிஷார் கையாண்ட சூழ்ச்சிகள் பல. அவுரங்கசீப் வெளியிட்ட நாணயங்களைப் போன்ற வெள்ளி நாணயங்களை ஆர்க்காட்டில் தாங்கள் அமைத்த நாணயச் சாலையில் வெள்ளைக்காரர்கள் அடித்து 'ஆர்க்காட்டு ரூபாய்' என வங்காளத்திலும் பிற இடங்களிலும் வழங்கினர்.

பெரும்படைகளை மைசூரிலிருந்து வரவழைத்து, கப்பம் கட்ட மறுத்த பாளையக்காரர்களை அடக்கினர். அதற்காகப் பல கோட்டைகளை அழித்தனர். காடுகளை நாசமாக்கினர், வீரர்களைச் சுட்டனர். பாளையக்காரர் சிலரைக் கைது செய்தனர். இவ்வாறு இராணுவத்தின் வலிமையால் இம்மாவட்டம் ஒடுக்கி அடக்கப் பெற்றது.

1801-இல் ஆர்க்காடு நவாபிடமிருந்து ஏராளமான நகைகளைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர். இவ்வாறு கிடைத்த சில விலையுயர்ந்த ஆபரணங்கள் பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சார்ந்த சிலரால் சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க வணிகருக்கு அளவுகடந்த விலைக்கு விற்கப்பட்டன.

ஆர்க்காடு நகரத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கவும் பிரிட்டிஷ் அதிகாரிகள் தம்மாலான அனைத்தையும் செய்தனர். ஆர்க்காடு வட்டம் வாலாஜா வட்டம் என்று பெயரிடப்பட்டு, வட்ட அலுவலகங்கள் வாலாஜவுக்கு மாற்றப்பட்டன. ஆர்க்காடு கோட்டை, அங்கு வாழும் மக்களிடையே உணர்ச்சியூட்டிவிடுமென அஞ்சிய ஆங்கிலேயர் அணைக்கட்டுகள் கட்ட அக்கோட்டையின் கற்களை அகற்றினர்.

சென்னை-சேப்பாக்கத்திலுள்ள ஆர்க்காடு அரண்மனை யிலிருந்து ஆர்க்காடு நவாபு விரட்டப்பட்டு அவன் திருவல்லிக்கேணி பைக்கிராப்ட்ஸ் சாலையிலுள்ள அமீர் மகாலில் வாழ வகை செய்யப்பட்டது. சென்னையில் சேப்பாக்கத்திலிருந்து பெல்ஸ்ரோடுவரை செல்லும் வாலாஜா சாலை ஆர்க்காடு நவாபின் சொந்தச் சாலை என்பதற்குக் குறிப்பிட ஓராண்டில் ஒருநாள் இந்தச் சாலையில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டு

'தனியார் சாலை' என்று அறிக்கைப் பலகை தொங்கவிடப் படும் 'நவாபு தர்பார்' உரிமையும் அரசாங்க விருந்து களுக்கு அழைக்கப்படும் உரிமையும் ஆர்க்காட்டு நவாபின் வழிவந்த இந்நாள் ஆர்க்காட்டு இளவரசர்க்கு இன்றளவும் இருந்து வருகின்றன.

பிரிட்டிஷ் ஆட்சி

1800 முதல் 1947 வரை பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்றது. மராத்தியர் ஆட்சியிலும் நவாபுகள் காலத்திலும் ஏராளமான இன்னல்களை அனுபவித்த வட ஆர்க்காடு மாவட்டத்து மக்கள் விசயநகர ஆட்சிக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியில்தான் ஓரளவேனும் அமைதியாக வாழ்ந்தனர்.

ஆயினும், அரசியல் கொந்தளிப்புக்கள் வடஆர்க்காடு மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டன. 18-ஆம் நூற்றாண் டின் இறுதியில் திப்பு சுல்தானின் வழித் தோன்றல்கள் வேலூர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். 1806-இல் வேலூரிலிருந்த சிப்பாய்கள் கலகம் செய்தனர். மலையாள நாட்டு மாப்பிள்ளைக் கலகத்தாலும் (Moplah Uprising) முஸ்லிம் லீக் கட்சியின் வளர்ச்சியாலும் இடை யிடையே இந்து - முஸ்லிம் கலகங்கள் சில நகரங்களில் நிகழ்ந்தன.

பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்ற ஒன்றரை நூற்றாண்டுக் காலத்தில், இம்மாவட்டத்தில் கிறித்தவ மதம் வேரூன்றிக் கொண்டது. டேனிஷ்மிசன், அமெரிக்கன் ஆர்க்காட்டு மிசன் ஆகியவற்றின் வாயிலாக அச்சமயத்தினர் கல்வி நிலையங்களையும் மருத்துவமனைகளையும் கட்டினர். வேலூர்க் கோட்டையில் அரசாங்க அலுவலகங்கள் வைக்கப்பட்டன. இராணுவத்தின் ஒரு பகுதி வேலூர்

கண்டோன்மண்டில் இருந்து வந்தது. இராணிப்பேட்டையில் வெள்ளைக்கார வணிகர் சில தொழில்களைத் தொடங்கினர். இரயில் பாதை போடப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் வேலூர்ச் சிறையில் வைக்கப்பட்டனர். முதலாவது உலகப் போர், இரண்டாவது உலகப் போர் இரண்டிலும் இம்மாவட்டத்திலிருந்து ஏராளமான பேர் போர்ப் படைகளில் சேர்ந்து கொண்டனர்.

இந்து முஸ்லிம் கலக நிலையை ஒட்டி மாறிமாறி ஒரு இந்து ஐ.சி.எஸ். அலுவலரையும் ஒரு முஸ்லிம் ஐ.சி.எஸ். அலுவலரையும் பிரிட்டிஷ் ஆட்சியில் இங்கு கலெக்டராக நியமித்து வந்தனர். 1940-இல் முஸ்லிம்களைத் தந்திரமாகச் சாந்தப்படுத்த, அந்த ஆண்டில் பதவி மாறவேண்டிய கலெக்டர் மகமதுஅலி மீண்டும் மூன்றாண்டுகளுக்குக் கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

உரிமைக்குப் பின்

1947-க்குப்பின் இம்மாவட்டத்தில் புதிய தொழிற் சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மின்சார வசதிகள் பெருகியுள்ளன. கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைந்துள்ளது. போக்குவரத்துத் துறையில் பெருமுன்னேற்றம் காணப்படுகிறது. புதிய கல்வி நிலையங்கள் ஏற்பட்டுள்ளன; சாத்தனூர் அணை கட்டப் பெற்றிருக்கிறது.

✦ ✦ ✦

3. வாழும் மக்கள்

மக்கள் தொகை

வட. ஆர்க்காடு மாவட்டத்தில் 1961-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 31, 41, 903 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 15, 80, 023 பேர் ஆடவர்; 15, 61, 960 பேர் பெண்டிர்.

இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை, தமிழ் நாட்டின் மக்கள் தொகையில் 11-இல் ஒன்று ஆகும். ஆனால், தமிழ் நாட்டின் வளத்தையும் பொருளாதார வசதிகளையும் ஒப்பு நோக்கும்போது இம்மாவட்டத்தில் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு போதிய இயற்கை நலங்கள் இல்லை. பல ஆண்டுகளாக வடகிழக்குப் பருவக் காற்றுத் தவறிவிட்டமையாலும் பாலாற்றில் நீர்வராமையாலும் இம்மாவட்டத்து மக்களில் சிலர் வேலை தேடிச் சென்னை, பெங்களூர், ஷிமோகா, கோலார் ஆகிய இடங்களுக்குக் குடியேறியுள்ளனர். இதன் விளைவாக, இம்மாவட்டத்தில் 1951-இல் இருந்ததைவிட மக்கள் தொகை வளர்ச்சி இரண்டரை இலட்சம்தான் கூடுதலாக இருக்கிறது.

சமூக வாழ்க்கை

தோல் பதனிடும் தொழில், பீடி சுற்றும் தொழில், பாய் மிடைவு, பட்டு நெசவு ஆகிய தொழில்களே இம் மாவட்டத்தில் உள்ளன. சாத்தனூர் அணையையொட்டிய பகுதிகளிலும் ஆற்றுப் பாசனமுள்ள ஏனைய சில இடங்களிலும் நன்செய் வேளாண்மையும், மலைப் பகுதிகளில் புன்செய் வேளாண்மையும் நடைபெறுகிறது.

வேலையின்மை இம்மாவட்டத்தில் மிகுதி. போர்க் காலங்களில் படையில் சேர இம்மாவட்டத்தார் முந்திக் கொள்ளுவது வழக்கமாக இருந்து வருகிறது.

மொழி

இம்மாவட்டத்து மக்கள் அனைவரும் பேசும் மொழி தமிழ் மொழியாகும். விசயநகர ஆட்சியின் போது இங்கு வந்து குடியேறிய பிராமணர், நாயுடு, நாயக்கர், ரெட்டியார் ஆகிய சமூகத்தினர் தெலுங்கு மொழியையும், மராத்திய ஆட்சியில் வந்த சிலர் மராத்தி மொழியையும், முஸ்லிம் ஆட்சியில் வந்து சேர்ந்தவர்கள் உருது, அரபு மொழிகளையும், வெள்ளைக்காரர் ஆட்சியில் உருவான ஆங்கிலோ இந்தியர் ஆங்கில மொழியையும் தங்களுக்குள் பேசிக் கொள்ளுகின்றனர்.

குடியேற்றம் வட்டத்தில் 75,000 பேரும், வாலாஜா, அறக்கோணம், திருப்பத்தூர் வட்டங்கள் ஒவ்வொன்றிலும் 40,000 பேரும் தெலுங்கு மொழி தெரிந்தவர்கள் வாழ்கின்றனர்.

மதம்

மத அடிப்படையில், இம்மாவட்டத்தில் இந்துக்களே மிகுதியானவர்கள். தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்தையும்விட இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் கூடுதலாக உள்ளனர். ஆர்க்காட்டைச் சுற்றியுள்ள பகுதியிலும், மைசூர் எல்லையருகேயுள்ள நகரங்களிலும் அவர்களுடைய தொகை குறிப்பிடத்தக்க அளவாக இருக்கிறது. இம்மாவட்டத்தில் சில தொழில்கள் அவர்களுக்கே உரியனவாக இருக்கின்றன. முஸ்லிம்களில் லப்பை, அரபு, பட்டாணியர் ஆகிய பிரிவினர் உள்ளனர். சென்னையில் பழ வாணிகமும், 'சாப்புச் சாமான்' வாணிகமும் (Olimanstores) இவர்களின் தனி உரிமையாகும். இவ்வாறு தொழிலுக்காக வெளியூர் சென்றிருக்கும் ஆடவரின் குடும்பங்களுக்குச் "சோறாக்கி"கள் (சோறு வடித்துப் போடுபவர்) இருப்பதும் இம்மாவட்டத்து வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கதாகும்.

கிறித்தவர்களுடைய எண்ணிக்கை ஒன்றரை இலட்சம் இருக்கும். அவர்களில் பிராடஸ்டெண்டு, கத்தோலிக்கர் என்ற இரு பிரிவினரும் உள்ளனர். விசய நகர காலத்திலேயே முதல் கிறித்தவக் கோயில் வேலூரில் கட்டப்பட்டது. பிராடஸ்டெண்டு நிறுவனங்களில் 1853-இல் ஏற்பட்ட அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன் மிக முக்கியமானது. மருத்துவத் துறையில் பெரும்பணியாற்றிய ஸ்கட்டர் அம்மையாரைத் தந்த பெருமை இந்த மிஷனுக்கு உண்டு. டேனிஷ் மிஷன், கேரளத்திலுள்ள சிறியன் கிறித்தவ மிஷன் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் இம்மாவட்டத் தில் உள்ளனர். கத்தோலிக்கச் சமயத்தைச் சேர்ந்த பாதிரிமார்களும் தாய்மார்களும் காட்பாடி, திருப்பத்தூர் போன்ற இடங்களில் சிறந்த கல்வி நிலையங்களை நிறுவியும், சிற்றூர்களிலும் தங்கள் கிளைகளை அமைத் தும் உள்ளனர்; பிராடஸ்டெண்டுகளை விட இவர் களுடைய எண்ணிக்கையே கூடுதலாக இருக்கிறது.

சமணர்களுக்கும் வட ஆர்க்காடு ஒரு முக்கியமான மாவட்டமாகும். கருத்தப்பாக்கம், திருமலை, ஆறணி, மண்டபக்குளத்தூர் என்னும் ஊர்களில் சமணர்கள் உள்ளனர். வேறு எந்த மாவட்டத்தயும்விட, தமிழ் நாட்டில் இங்கு இவர்கள் கூடுதலாக உள்ளனர். திறக் கோல், சியமங்கலம் போன்ற சில இடங்களில் சமணர் களுடைய கோயில்கள் காணப்படுகின்றன.

இந்துக்களில் சைவ சமயத்தினரான செங்குந்த முதலியார்களும், இப்போது சென்னையில் சுற்றுப்புறத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள ஆர்க்காட்டு முதலியார் என்ற வைணவச் சமயத்தினரும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

குடியேற்றம், வேலூர், வாலாஜா, போளூர், ஆர்க்காடு, ஆறணி வட்டங்களில் சைவர்களும் பிற வட்டங்களில் வைணவர்களும் கூடுதலாக உள்ளனர்.

வன்னியர்

இம்மாவட்டத்தில், பெருந்தொகையாக வாழும் சமூகத்தார் வன்னியரே ஆவர். இவர்கள் 'வன்னியகுல க்ஷத்திரியர்' என்றும் பெயர் பெறுவர். இச் சமூகத்தார் தென்னார்க்காடு மாவட்டத்திலும், தஞ்சை மாவட்டத்து மாயூரம் பகுதியிலும் பெருவாரியாக வாழ்வதால், தமிழ் நாட்டின் அரசியல் வாழ்வில் இவர்களுக்கு ஓரளவு செல்வாக்கு உண்டு.

கவுண்டர், படையாட்சி, நாயகர் என்ற பட்டப் பெயர்களை இவர்கள் போட்டுக் கொள்ளுகின்றனர். அருவா நாட்டை அரசாண்ட குலத்தினர் என்றும், போர்ப் படையில் பணி புரிந்தவர் என்றும் படையாட்சி என்ற பெயருக்கு வரலாறு கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்துக் கள்ளர்களைப் போல இவர்களும், அரசர் களிடம் தம் முன்னோர் பெற்ற சிறப்புப் பெயர்களைத் தம் பெயர்களுடன் இணைத்து வழங்கி வருகின்றனர்.

நாயகர் என்ற பெயர், வாணிக வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகிய மக்கட் குழுவினர்க்கு வழங்கி வந்தது. இப்பொருளில் பிங்கலந்தை நிகண்டு, திவாகரம் ஆகியவற்றில் இச்சொல் குறிக்கப்படுகிறது. கப்பலேறி வாணிகம் நடத்திய இக் கூட்டத்தார், இம்மாவட்டத்தி லிருந்து ஆந்திர நாட்டில் குடியேறி நாயுடு, நாயக்கர், வடுகர் என்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றனர் என்பது மறைமலை அடிகளாரின் கருத்தாகும்.

மலையாளிகள்

தமிழ்நாட்டு மக்கள் கேரள மாநிலத்தாரை 'மலையாளிகள்' என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், சவ்வாது மலையில் வாழும் மக்களையே 'மலையாளிகள்' என்று இம்மாவட்டத்தினர் குறிப்பிடுவர்.

மலையாளிகளின் பேச்சு எளிதில் கண்டு கொள்ளும்படி நீண்டும் ஓசையோடும் இருக்கும். இவர்கள் பேசுவது தமிழே.

மலைகளில் நடந்து நடந்து பழகிய பழக்கத்தால், இவர்கள் விரைவாக அசைந்து நடக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் வைணவர்கள். "இராமன், லட்சுமணன்" போன்ற பெயர்கள் மிகுதியாக உண்டு. "கவுண்டர்" என்ற பட்டப் பெயரோடு இவர்கள் பெயர் அமையும். நாட்டாண்மைக்காரர் ஒருவர் ஒவ்வொரு மலையூரிலும் இருப்பர். அவர் இல்லாமல் ஊரில் வழக்கு, திருமணம் யாவும் நடைபெறா.

மலையாளிகள் வாழை, பலா, எலுமிச்சை, கடுகு, மொச்சை, ஆமணக்கு முதலியவற்றைப் பயிரிடுகின்றனர்.

கீழே உள்ள ஊர்களில் கூடும் சந்தைக்குக் கூடைகளில் விளை பொருள்களையும், கனி வகைகளையும் சுமந்து வந்து விற்பர். புதுப்பானை, மண்ணெண்ணெய், உப்பு, துணி முதலியவற்றை வாங்கிக் கொண்டு செல்லுவர்.

இவர்கள் தைப் பொங்கலை மிகச் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். அன்று நிகழும் ஆடல் பாடல் களை, "சேர்வையாடுதல்" என்று குறிப்பிடுகின்றனர். ஆண்களே சேர்வையாடுவர்.

இவ்வினத்து மாணவர்க்காகச் செங்கம் உயர்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு அரசாங்கத்தார் இலவச உணவு விடுதி ஒன்று நடத்தி வருகின்றனர்.

லம்பாடிகள்

இம்மாவட்டத்தில், 'லம்பாடி' என்ற சாதியினர் வாழ் கின்றனர். செங்கம் வட்டத்தில் லம்பாடி தண்டாவிலும், திருப்பத்தூர் வட்டத்தில் பொம்மிடி, இருணாமலை, வாணியம்பாடி ஆகிய ஊர்களிலும் இம்மக்கள் வாழ்கின்றனர்.

சந்தையில் காய்கறி விற்றும், பயிர்த் தொழில் செய்தும் இவர்கள் பிழைக்கின்றனர்.

இப் பெண்கள் அணிகின்ற உடையும், அணிமணிகளும், தலை ஒப்பனையும் காஷ்மீரப் பெண்களை ஒத்துள் ளன. முக்காடு இடும் பழக்கம் இவர்களிடம் உண்டு.

இவர்கள் பேசும் மொழி நீண்டு, இசையோடு அமைந்துள்ளது.

கூட்டமாகச் சேர்ந்து பெண்கள் நடனம் ஆடிப் பாடுவதுண்டு.

மராத்தியர்

மராத்தியர் என்ற சாதியினர் ஆண்டியப்பனூர், வாணியம்பாடி முதலிய ஊர்களில் வாழ்கின்றனர். இவர்களில் ஆண்-பெண் இருபாலரும் உடல் உழைப்பில் சிறந்தவர்கள். சிவாஜி படத்தையும், சிவாஜி பெயரையும் விரும்பிப் போற்றுகின்றனர். சிலம்பாட்டத்தை அறியாத மராத்திய ஆடவனைப் பார்க்க முடியாது. கத்தி விளையாட்டு இவர்களின் விருப்பச் செயல்.

இரண்டாம் உலகப் பெரும் போருக்கு இச் சாதி இளைஞர்கள் மிக ஆர்வத்துடன், பெற்றோர் மகிழ்வுடன் வழியனுப்ப, சென்றனர்.

இவர்கள் மராத்திய மொழியைப் பேசுகின்றனர். இவர்களுக்கும் தஞ்சை மாவட்ட மராட்டியருக்கும் தொடர்பில்லை.

பெருமக்கள்

இம்மாவட்டம் பெருமக்கள் பலரை ஈன்றெடுத்திருக் கிறது. திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர், அருணைக் கலம்பகம் அருணாசலப் புராணம் முதலிய சைவ சமய இலக்கியங்களை ஆக்கிய சைவ எல்லப்ப நாயனார், சங்கரபாஷ்யத்திற்கு உரைகண்ட அப்பைய தீட்சிதர்,

கொடை வள்ளல் வி.எல். எத்திராஜ், இந்திய இறுதி நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த பதஞ்சலி சாஸ்திரி, அரசியல் அறிஞர் சி.பி. இராமசாமி அய்யர், இருபதாம் நூற்றாண்டில் தமிழ்த் தொண்டில் தலைசிறந்து விளங்கும் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் ஆகியோர் இம்மாவட்டம் வழங்கியுள்ள பெருமக்களாவர்.

சந்தைகள்

இம்மாவட்டத்தில் வேலூரிலும் திருப்பத்தூரிலும் பெரிய அளவில் வியாபாரம் நடைபெறுகிறது. சந்தை நாட்களில் இங்கு எப்பொருளையும் விற்கவும் வாங்கவும் இயலும். ஆறணியில் பட்டு நெசவு வாணிபமும், இராணிப் பேட்டையிலும் திருவண்ணாமலையிலும் மாட்டுச் சந்தைகளும் குறிப்பிடக் கூடியவை. செங்கம் வட்டத்தில் உள்ள பரமனந்தல், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள நாட்டறம் பள்ளி ஆகிய இரு ஊர்களிலும் பெரிய சந்தைகள் நடைபெறுகின்றன. பரமனந்தல் சவ்வாது மலையடிவாரத்தில் இருப்பதால், அவ்வூரில் நடைபெறும் வெள்ளிக்கிழமைச் சந்தையில் மலைநாட்டு விளை பொருள்கள் யாவும் விற்பனையாகின்றன. நாட்டறம் பள்ளியில் மாட்டுச் சந்தை பெரிய அளவில் நடை பெறுகிறது; காய்கறி, துவரை, மொச்சை, கேழ்வரகு ஆகியவற்றின் வியாபாரமும் இங்கு மிகுதி.

திருவிழாக்கள்

இம்மாவட்டத்தின் மிகப் பெரிய திருவிழா திருவண்ணாமலையில் நடைபெறும் கார்த்திகைத் தீபமாகும். இதைப் பற்றிப் பிறிதோர் இடத்தில் விரிவாகக் கூறுவோம். குடியேற்றத்தில் நடைபெறும் கங்கம்மா ஜாத்ரா திருவிழாவும் மாவட்டமெங்கும் முஸ்லிம்கள் கொண்டாடும் முகரம், ரம்ஜான் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

✦ ✦ ✦

4. பாசன வசதியும் வேளாண்மையும்

வேளாண்மைத் துறையில் இந்த மாவட்டம் மிகுந்த வளம் நிறைந்ததாக இல்லாவிடினும், சில வட்டங்கள் சிறந்த பாசன வசதிகளைப் பெற்றிருக்கின்றன. இதன் விளைவாக, நன்செய் விவசாயம் 1950-க்குப் பிறகு பன்மடங்காகியிருக்கிறது.

பாசன வசதிகள்

ஏரிப் பாசனம், ஆற்றுப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்ற மூவகை வசதிகள் இம்மாவட்டத்தில் உள்ளன.

ஏரிப் பாசனம்

பல்லவர் காலத்தில், சில ஏரிகள் வெட்டப்பட்டன. ஏரிகளைப் பழுதுபார்க்கும் செலவுக்காக 'ஏரிப்பட்டி' என்ற நிலங்கள் விடப்பட்டிருந்தன. குடிமல்லத்திலுள்ள வெள்ளேரி, தும்பான்ஏரி, காவேரிப்பாக்கம் ஏரி, வந்தவாசி வட்டத்தில் மருதுநாடு ஏரி. வேலூர் வட்டத்தில் களவல்லி தடாகம் போன்ற ஏரிகளையும் இவற்றை மேற்பார்வை யிட்ட ஏரிவாரியம் என்ற பெருமக்களின் அவையையும் பல்லவர் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இம்மாவட் டத்தில் 200 ஏரிகள் உள்ளன. குறிப்பிடத்தக்க பெரிய ஏரிகள் தூசிமாமண்டூர் ஏரி, காவேரிப்பாக்கம் ஏரி, போளூர் ஏரி என்பன.

தூசிமாமண்டூர் ஏரி

தூசிமாமண்டூர் ஏரி 64 சதுர கி. மீ. பரப்புடையது. பாலாற்று நீரால் நிரம்பி, இந்த ஏரி 36 கிராமங்களுக்கு நீர்

வழங்கி 4,118 ஏக்கருக்குப் பயன்படுகிறது. பாலாறு அணைக்கட்டிலிருந்து வெட்டப்பட்டுள்ள 37 கி.மீ. தொலைவுள்ள தூசி கால்வாயின் இறுதியில் இந்த ஏரி அமைந்திருக்கிறது. செய்யாற்றிலிருந்தும் இந்த ஏரிக்குக் கால்வாய் உண்டு. மழைக் காலத்தில் இந்த ஏரியில் வெள்ளைக்காரர்கள் (அவர்களுடைய ஆட்சியிருந்த போது) படகோட்சி மகிழ்ந்தனர். இநத ஏரி நிரம்பினால், இதனால் பயனடையும் நிலங்களுக்கு நான்கு ஆண்டு களுக்கு வேண்டும் நீர் இருக்கும்.

காவேரிப்பாக்கம் ஏரி

இம்மாவட்டத்தின் பெரிய ஏரிகளுள் இதுவும் ஒன்று. இதன் நீளம் ஆறு கி.மீ. இதனால் பயனடையும் 33 கிராமங்களில் மூன்று போகம் விளையும் நிலங்களும் உள்ளன. மழை பெய்து அல்லது பாலாற்றுக் கால்வாய் வழி நீர் வந்து, இந்த ஏரி நிறைந்திருக்கும்போது, வாத்து, நீர்க்கோழி, நீண்டுயர்ந்த நாரைகள் ஆகியன நூற்றுக் கணக்கில் தங்குவதால் வேடந்தாங்களில் காணப்படுவது போன்ற காட்சியை இங்கும் காணலாம்.

போளூர் ஏரி

இது, சவ்வாதுமலை அடிவாரத்தில் இருக்கிறது. சம்பத்கிரி, வாசூர் என்னும் இரு மலைகளும் இந்த ஏரிக்குக் கரைகளாக உள்ளன. காட்டில் உற்பத்தியாகும் மஞ்சள் ஆறு என்ற காட்டாற்று நீர் இந்த ஏரிக்கு வருகிறது.

ஆற்றுப் பாசனம்

பாலாறும் அதன் துணையாறுகளும் இம்மாவட்டத் தில் செல்லுவதால் அவற்றில் நீர் இருக்கும் போது, ஆற்று நீர் பாசனத்துக்கு உதவுகிறது.

ஆர்க்காட்டுக்கு அருகே புதுப்பாடியில் பாலாற்றில் அணை கட்டி அதிலிருந்து நான்கு கால்வாய்கள் வாயிலாகப் பாசனத்துக்குத் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது.

பாலாற்றின் படுகையில் பொருத்தப்பட்டுள்ள உறிஞ்சி குழாய்கள் வாயிலாகவும் வேளாண்மைக்கு நீர் இறைக்கப் படுகிறது.

பாலாற்றிலும் செய்யாற்றிலும் ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திடீரென்று வெள்ளம் வருவது வழக்கம். மைசூர் அரசாங்கம் வெள்ளம் ஏற்படும் போது, வட ஆர்க்காட்டுக்குப் பாலாற்று நீரைத் திருப்பிவிட்டும், ஏனைய காலங்களில் வட ஆர்க்காட்டுக்குத் தண்ணீர் வராமல் தடுத்தும் வருகிறது.

செய்யாற்றின்மீது பல அணைக்கட்டுக்கள் கட்டப் பட்டுள்ளன. தூசிமாமண்டூர், தண்டரை ஆகிய ஏரிகள் செய்யாற்றையே நம்பியுள்ளன. போளூர், திருவண்ணா மலை வட்டங்களின் குறிஞ்சி நிலப்பகுதியில் பெருமழை பெய்தால்தான் இந்த ஏரிகள் நிரம்பும்.

ஆற்றுப் பாசன வசதி வழங்க, இம்மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள அணைகளுள் குறிப்பிடத்தக்கது சாத்தனூர் அணையாகும். இது, திருவண்ணாமலைக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 32 கி.மீ. தொலைவில் தென் பெண்ணையாற்றின்மீது கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆறு மைசூர் மாநிலத்துச் சென்னகேச மலைச்சரிவில் தோன்றி, சேலம் மாவட்டம் வழியே வட ஆர்க்காட்டுக்கு வந்து 33 கி.மீ. தொலைவுக்கு ஓடித் தென் ஆர்க்காடு மாவட்டம் வழியாகக் கடலில் போய்ச் சேருகிறது. இதன் மீது சேலம் மாவட்டத்தில் இரண்டு அணைகளும் தென் ஆர்க்காட்டில் இரண்டு அணைகளும் கட்டப்பட்டிருந்தன. ஆனால், வட ஆர்க்காட்டில் ஓர் அணையும் கட்டப்பட வில்லை. 10 ஆண்டுக்கொருமுறை வெள்ளம் போயிற்று. திருவண்ணாமலைப் பகுதியில் போதிய மழையில்லாத

நன்செய் நிலங்களுக்கும் மட்டமான புன்செய் நிலங்களுக்கும் தண்ணீர் வசதி செய்ய, இந்த அணை கட்ட 1952-இல் முடிவு செய்யப் பெற்றது. 1954-இல் வேலை தொடங்கப் பெற்று 1957-இல் கட்டி முடிக்கப் பெற்றது.

சாத்தனூர் அணையில் கல்லணையின் நீளம் 420 மீட்டர்; மண் அணையின் நீளம் 370 மீட்டர்; பெரிய கால்வாயின் நீளம் - 35 கி.மீ.; கிளைக் கால்வாய்களின் நீளம் - 80 கி.மீ.; நீர்த் தேக்கத்தின் கொள்அளவு 810 கோடி கனஅடி. இரண்டு கோடி 89 லட்சம் ரூபாய்ச் செலவில், 460 கோடி கனஅடி கொள் அளவுள்ள தேக்கம் 1957- இல் கட்டி முடிக்கப் பெற்றது; மேலும் 55 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து கொள் அளவை 810 கோடி கன அடி ஆக்குவதற்கான வேலைகள் 1961 இறுதியில் தொடங்கும்.

இத்தேக்கத்தின் அருகே கட்டப்பட்டுள்ள அழகிய பூங்காவைப் பற்றி இந்நூலின் 14-ஆம் கட்டுரையில் ‘செங்கம் வட்டம்’ என்ற பகுதியில் கூறுவோம்.

இந்த அணையால் செங்கம், திருவண்ணாமலை, (தென் ஆர்க்காடு மாவட்டத்துத்) திருக்கோயிலூர் வட்டங்களில் 20,000 (வ.ஆ. இல் 15,300) ஏக்கர் பயனடைந்து வருகிறது. இது தவிர 1893-இல் கட்டப் பெற்ற மருதூர் அணைக்கட்டால் 21,000 ஏக்கருக்கும், 1897-இல் கட்டப் பெற்ற பாய்னி அணைக்கட்டால் 22,000 ஏக்கருக்கும் பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது.

கிணற்றுப் பாசனம்

கிணற்று நீரை நன்கு பயன்படுத்துவதில் 1952-க்குப் பிறகு, வட ஆர்க்காடு மாவட்டத்து மக்கள் பேரார்வம் காட்டி வருகின்றனர். 50,000 பம்பு செட்டுகள் வைக்கப் பட்டுள்ளன. மின்சாரத் துறையினர் வேலூரில் ஒரு பெரிய அலுவலகமும், பிற நகரங்களில் கிளை அலுவலகங்களும் தொடங்கியுள்ளனர். அங்கு விவசாயிகள் வந்து, ‘என்ன சாமி, ப்க்கத்து கிராமத்தில் கரண்டுத் தண்ணீ வந்திருச்சு.

பச்சையைத் தட்டுறான் ஓடுது. சிவப்பைத் தட்டுறான் நிக்கிது. பாத்தா பொறாமையா இருக்குது. எங்க ஊருக்கு எப்ப சாமி கரண்டு தண்ணீர் வருவுது?' என்று கேட்ட வண்ணமாக உள்ளனர். பம்பு செட்டுகளின் பெருக்கமே இம்மாவட்டத்தில் நெல்வேளாண்மையின் விரைந்த வளர்ச்சிக்குக் காரணமாக இருந்து வருகிறது.

பாசனத் தேவை

பாலாற்று அணைக்கட்டைத் திருத்தியமைப்பதும், மைசூர் அரசாங்கத்துடன் பாலாற்று நீருக்குப் புதிய உடன்பாடு செய்வதும், ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தின் இசைவு பெற்றுக் கோதாவரியின் எஞ்சிய நீரைத் திருப்பி விடுவதும் இம்மாவட்டத்தின் பாசனத் தேவைகளாகும்.

பயிர்கள்

திருவண்ணாமலை, ஆறணி, வந்தவாசி, செய்யாறு வட்டங்கள் ஒவ்வொன்றிலும் மூவாயிரம் ஏக்கர் மூன்று போகம் விளைகிறது.

திருவண்ணாமலை, போளூர், ஆறணி, வேலூர்ப் பகுதிகள் இம்மாவட்டத்தின் நெற்களஞ்சியங்களாக உள்ளன. வேலூரில் நெல் வியாபாரம் மிகுதியாக நடை பெறுகிறது.

ஆர்க்காட்டுக் கிச்சடி, திருப்பத்தூர் பாலன் சம்பா, துய்யமல்லி, செங்கம் சுகதாஸ் என்பன இம்மாவட்டத்தின் புகழ் பெற்ற அரிசிகள். ஆர்க்காட்டு அரிசி கிச்சடி செய்ய முஸ்லிம்களால் பயன்படுத்தப்படுகிறது; செங்கம் சுகதாஸ் அரிசி பிரியாணி செய்யவும் புட்டுச் செய்யவும் ஏற்றது.*

---

*அரிசி வகைகளில் ஏனைய சில: நீர்வள்ளி, சடைசம்பா, துய்யமல்லி, சின்னசம்பா, மானாவாரி, பெரிய சம்பா, சொர்ணவாரி, சேறுசம்பா, கருடசம்பா, மிளகுசம்பா, சிவன்சம்பா, பிச்சவா, மாப்பாசி, சீதாபோகம், சீரகச்சம்பா, கம்பஞ்சம்பா, மனைக்கட்டை சம்பா, கோடஞ்சம்பா, வெள்ளைக்கார், குட்டிக்கார், நவரேகார், முட்டைக்கார், மோசனம், சுகதாசி.

சோளம், கம்பு, சாமை, கேழ்வரகு ஆகியவையும் நன்கு பயிரிடப்படுகின்றன. பிற பயிர்களில் (மல்லாக் கொட்டை என்றும் நிலக்கடலை என்றும் பிற மாவட்டங் களில் கூறப்படும்) கடலைக்காயும், கரும்பும் முக்கிய மானவை. கடலைக்காய் 1880-இல்தான் முதல் தடவை யாகப் பயிரிடப்பட்டதாகச் சொல்லுகிறார்கள்; இப் போது 15 லட்சம் ஏக்கரில் பரியிடப்படுகிறது; இம்மாவட் டத்தைவிடத் தென் ஆர்க்காட்டில் 70,000 ஏக்கரில்தான் மல்லாக்கொட்டை கூடுதலாகப் பயிராகிறது. எனவே, இரண்டு ஆர்க்காட்டு மாவட்டங்களும் மல்லாக்கொட்டை நாடாக மிளிர்கின்றன. கடலைக்காய் ஏற்றுமதியும் கடலை எண்ணெய் ஆட்டுவதும் இவ்விரண்டு மாவட்டங்களிலும் உயிர்நாடியான தொழில்களாக இருக்கின்றன.

வேலூர், திருப்பத்தூர், ஆறணி ஆகிய மூன்று ஊர்களிலும் மல்லாக்கொட்டை வியாபாரம் மிகப் பெரிய அளவில் நடைபெறுகிறது.

வேலூர், குடியேற்றம், திருப்பத்தூர் வட்டங்களில் 1930 முதல் கரும்பு வேளாண்மை பெருகி வருகிறது. ஆம்பூரில் சர்க்கரை ஆலை ஒன்று நடைபெற்று வருகிறது; திருவண்ணாமலை வட்டத்திலும் சர்க்கரை ஆலை அமைய வாய்ப்பு இருக்கிறது. குடியேற்றத்துக்கு அருகேயுள்ள மேலாலத்தூரில் கரும்பு ஆராய்ச்சிக்கான ஒரு சிறு பண்ணை 1935-இல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கரும்பு பயிரிடுவது பற்றியும் வெல்லம் காய்ச்சுவதைப் பற்றியும் இந்நிலையத்துக் குடியானவர்களுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

பஞ்சாப் 216 என்ற பருத்தி கடலைக்காயுடனும் கேழ் வரகுடனும் கலந்து பயிரிடப்படுவது இம்மாவட்டத்தில் ஒரு சிறப்பாகும். MCU1 என்ற பருத்தி புரட்டாசிப் பட்டத்தில் தனிப் பயிராக இடப்பட்டு, நல்ல மகசூல் கொடுத்து வருகிறது.

அருகேயுள்ள பெங்களூரைப் பின்பற்றி, காய்கறி வேளாண்மை செய்யும் வழக்கம் இம்மாவட்டத்தில் பரவி வருகிறது. ஜோலார்ப்பேட்டைக்கும் வாணியம்பாடிக்கும் இடையே தக்காளி பெரிய அளவில் பயிரிடப்படுகிறது. இம்மாவட்டத்தினர் முருங்கைக் கீரையை மிகுதியாக உண்ணுவதும் குறிப்பிடத்தக்கது. அதில் இரும்புச் சத்து மிகுதியாக இருப்பதால் உண்ணுபவர்க்கு வலு கூடுகிறதாம்.

மலைப்பகுதிகளில் கம்பு, பனிவரகு, தினை, கோதுமை, உளுந்து, பயறு, கொள்ளு, மொச்சை, துவரை, முத்துக் கொட்டை, கடுகு, காப்பி ஆகியன சிறு அளவில் பயிரிடப் படுகின்றன.

வேளாண்மைத் துறை

அரசாங்கத்தாரின் வேளாண்மைத்துறை வட ஆர்க்காட்டை இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து ஆங்காங்கு அலுவலகங்கள் அமைந்து வேளாண்மை அலுவலர்களை நியமித்தும் விதைகளை வழங்கியும் வருகிறது. வேலூர், குடியேற்றம், திருப்பத்தூர், வாலாஜா, அறக்கோணம் வட்டங்கள் வேலூரைத் தலைநகராகக் கொண்ட வேளாண்மை மாவட்டத்திலும், ஏனைய வட்டங்கள் போளூரைத் தலைநகராகக் கொண்ட வேளாண்மை மாவட்டத்திலும் உள்ளன.

திருவண்ணாமலை வட்டத்திலுள்ள தென்னணை யில் ஒரு விதைப்பண்ணை நடத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம்

அரசாங்கத்தார் இம்மாவட்டத்தில் செய்திருக்க வேண்டிய அரிய பணியை அமெரிக்கர்கள் செய்து வருகின்றனர். கல்வி, மருத்துவம், தொழில் - வேளாண்மை இம்மூன்று துறைகளில் அமெரிக்கன் ஆர்க்காட் மிசன் பணி தொடங்கிற்று. வேளாண்மைத் துறையில் ஈடுபட் டுள்ள நிலையம், காட்பாடி வேளாண்மை நிறுவனம்.

இதைத் தொடங்க 1920-இல் முடிவு செய்தனர்; பொருத்த மான இடம் தேர்ந்தெடுக்க டி வேலாயிஸ் என்ற அறிஞர் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப் பெற்றார். பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் வெட்டிய கசம் என்ற இடத்தில், புதிய நிறுவனத்தை அமைப்பது நலம் என டி வேலாயிஸ் முடிவு செய்தார். 1923-இல் இந்நிறுவனம் வேலை செய்யத் தொடங்கிற்று.

இங்குள்ள மாதிரிப் பண்ணையில், எல்லா வகையான கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. புதிய விதைகள் வரவழைத்து, சோதித்து விவசாயிகளுக்கு வழங்குகி றார்கள். இந்த முயற்சிகள் அனைத்திலும் அரசாங்கத்தார் இவர்களுக்கு உதவியாக உள்ளனர்.

இந்நிறுவனத்துக் கோழிப் பண்ணையில் 1000 கோழிகள் உள்ளன. இவை பல இனங்களைச் சேர்ந்தவை. இந்த இனங்களை விருத்தி செய்வதும் பரப்புவதும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டுதோறும் 15,000 ரூபாய்க்கு முட்டை விற்பனையாகிறது.

டீசல் எண்ணெய்க் குழாய்கள், இயந்திரக் கலப்பைகள், புதிய உழவுக் கருவிகள் ஆகியவை பயன்படுத்திக் காட்டப் படுகின்றன.

அரசாங்கத்தார் நடத்தும் விவசாயத் தேர்வுக்குப் படிக்க விரும்புபவர்களுக்கு இங்கு சில ஆண்டுகளாகப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஓராண்டுக் காலத்துக்குப் படிக்க வேண்டும். எட்டாம் வகுப்புப் படித்துத் தேறிய வர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். காட்பாடி - வள்ளி மலைச் சாலையில் 330 ஏக்கர் பரப்பில் இந்நிறுவனம் அமைந்திருக்கிறது. இதில் 30 ஏக்கரில் நன்செய் வேளாண் மையும், 70 ஏக்கரில் புன்செய் வேளாண்மையும் நடை பெறுகிறது. 140 ஏக்கரில் பழங்கள் பயிரிடப்படுகின்றன. எஞ்சிய நிலம் மேய்ச்சலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையத்தார், சுற்றிலுமுள்ள 70 கிராமங்களில் புதிய வேளாண்மை முறைகளைப் பல ஆண்டுகாகப் பரப்பி வருகின்றனர். இந்த நிறுவனத்துக்கு அமெரிக்காவிலுள்ள கிறித்தவக் கோயில்களும் ஏனைய அறநிறுவனங்களும் (World Neighbours Inc.) என்ற இயக்கமும் அண்மைக் காலத்தில் நமது அரசாங்கமும் நிதியுதவி வருகின்றன.

வேளாண்மைப் பள்ளி

உழவர்களின் குழந்தைகட்குப் பயன்படும் வேளாண்மைப் பள்ளிகளைத் தமிழ்நாட்டில் தொடங்க வேண்டுமென்று 1961-இல் தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்தது. அதன் விளைவாக ஏற்பட்ட முதல் பள்ளிக்கூடம் 1961 சூன் மாதத்தில் காட்பாடி வேளாண்மை நிறுவனத்திலேயே அரசாங்கத்தால் தொடங்கப் பெற்றது.

இப்பள்ளியில் செங்கற்பட்டு வட ஆர்க்காடு மாவட்டங்களின் மாணவர்கள் மட்டும் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். புதிய கருவிகளைப் பயன்படுதிதிப் பயிர்த் தொழில் செய்வதைப் பற்றியும் பூச்சிகளைத் தடுப்பது பற்றியும் இங்கு ஓராண்டுக்குக் கற்பிக்கப்படுகிறது, 20 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்; ஒவ்வொருவர்க்கும் மாதம் 35 ரூபாய் உதவிச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

பழ உற்பத்தி

இம்மாவட்டத்தில் பழங்கள் பெரிய அளவில் பயிரிடப்படுகின்றன. திருப்பத்தூரிலிருந்து வாலாஜா வரை பாலாற்றின் கரையில் மாந்தோப்புக்கள் மிகுதியாக உள்ளன. சேலம், சித்தூர்த் தோட்டங்களிலிருந்து ஒட்டுச் செடி வாங்கி வந்து இம்மாவட்டத்தார் பயிரிடுகின்றனர்.

மாம்பழ வியாபாரமும் ஏற்றுமதியும் இம்மாவட்டத்தில் பெரிய அளவில் நிகழ்கின்றன.

பெங்களூர், நீலம், காதர், தில்பசந்த், கோவா, மல்கோவா, நூன்பசந்த், பீத்தர், வாலாஜா நம்பர் 11 என்ற மாம்பழச் சாதிகளும், ஊறுகாய் போடப் பயன்படும் சிலவகை மாங்காய்களும் இம்மாவட்டத்தில் கிடைக்கின்றன.

ஆறணியில் வெள்ளிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கூடும் சந்தைகளில் மாம்பழ மண்டிகள் குறிப்பிடத்தக்கன. சித்திரை முதல் ஆனி வரை வேலூர்ச் சந்தையில் மல்கோவா குவித்துக் கிடக்கும்.

சாத்துக்குடிப் பழ உற்பத்தியும் குறிப்பிடத்தக்கது. குடியேற்றத்திற்கு அருகேயுள்ள சாத்கார் (இது உருதுச் சொல்) என்னும் ஊரிலேயே சாத்துக்குடி தென்னிந்தியா வில் முதலில் பயிரிடப்பட்டதாகக் கூறுவர். ஆம்பூர்ப் பகுதியிலும் சாத்துக்குடி பழத் தோட்டங்கள் ஏராளமாக உள்ளன. சோலூர், ஒடுக்கத்தூர், கார்கூர் என்னுமிடங் களிலும் செம்மணல் பகுதியாக இருப்பதால் அக்டோபர் முதல் ஜனவரி வரை சாத்துக்குடி ஏராளமாகப் பயிராகிறது.

சுவையான பெரிய சீத்தாப்பழம் திருப்பத்தூர், குடி யேற்றம், ஜோலார்ப்பேட்டைப் பகுதிகளில் காய்க்கிறது. இம்மாவட்டத்தார் நாள்தோறும் விரும்பி உண்ணும் உணவாக இது இருந்து வருகிறது.

மலைப் பகுதிகளில் பலா, கொய்யா, எலுமிச்சைப் பழங்கள் மலையாளிகளால் பயிரிடப்படுகின்றன.

மீன்வளம்

மீன்வளம் இம்மாவட்டத்தில் மிகக் குறைவு. சாத்தனூர்த் தேக்கத்தில் 1959 முதல் மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படுகின்றன.

கால்நடை

கால்நடை நோய்த் தடுப்பு மருந்து ஆராய்ச்சி நிலையம், இராணிப்பேட்டை (Institute of Veterinary Preventive Medicine)

இந்நிலையம் சென்னையில் நடைபெற்று வந்தது. 1941 முதல் 1945 வரை (இரண்டாம் உலகப் போர்க் காலத்தில்) இராணுவத்தினர்க்குப் பால்தூள் தயாரிக்கும் தொழிற் சாலைக்காகக் கட்டப்பட்ட கட்டிடங்கள் இராணிப் பேட்டையில் இருந்தமையால், இந்நிலையம் சென்னையி லிருந்து இங்கு மாற்றப்பட்டது.

ஆடு, மாடு, கோழி ஆகியவற்றுக்கு வரும் நோய் களைப் பற்றி ஆராயவும், அந்நோய்களைத் தடுக்கவும், நோய்களைக் குணப்படுத்தக்கூடிய மருந்துகளைச் செய்யவும், தடுப்பு மருந்துகளைத் தயாரிக்கவும் இங்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இதன் விளைவாகப் பல நூறாயிரம் கால்நடைகள் நோய்களுக்கு இரையாகாமல் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

இங்கு செய்யப்படும் பலவகை மருந்துகளும் ஊசி களும் மாட்டுக்குப் போடும் 'சீரம்' மருந்தும் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன; தென்னிந்தியாவிலும் மேற்கு இந்தியாவிலும் பல மாநிலங்களுக்கு இங்கிருந்து அனுப்பப் படுகின்றன.

இந்நிலையம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெருவளர்ச்சியடைந்திருக்கிறது; மூன்றாம் திட்டக் காலத்தில் மேலும் விரிவாக்கப்படும்.

காட்டு வளம்

இம்மாவட்டத்தில் காட்டு வளம் மிகுதி; காட்டியல் துறையினர் வேலூர் மேற்கு, வேலூர் கிழக்கு என்ற இரு மாவட்டங்களை ஏற்படுத்தியுள்ளனர். வேலூர் மேற்கில்

600 சதுர கி.மீ. பரப்புக்கும் வேலூர் கிழக்கில் 1350 சதுர கி.மீ. பரப்புக்கும் காடுகள் உள்ளன. இம் மாவட்டத்துக் காடுகள் அடர்ந்து வளர்ந்த காடுகளாகும்.

ஏலகிரி மலைக் காடுகளில் சந்தன மரமும் மூங்கிலும், சவ்வாது மலைக் காடுகளில் சந்தனம், மூங்கில், தேக்கு, கரியமுது, வேங்கை மரங்களும், சமதரைக் காடுகளில் பொரசு, வாகை, உசில், வேப்பமரம், எட்டிமரம், புளிய மரம் ஆகியனவும், பாலாற்றங்கரைக் காடுகளில் சவுக்கு, கொடிக்காப்புலி மரங்களும் உள்ளன. அவரம்பட்டை, கொன்னம்பட்டை, எட்டிக்கொட்டை ஆகியனவும் இம்மாவட்டத்துக் காடுகளில் கிடைக்கின்றன. நீலகிரித் தைல மரமும், தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மூன்று ஒட்டுப் பலகைத் தொழிற்காலைகளுக்கும் வேண்டிய மென்மையான மரங்களும் இம்மாவட்டத்துக் காடுகளில் பயிரிடப்படுகின்றன.

தமிழ்நாடு அரசாங்கத்துக்குக் காடுகளின் வாயிலாகக் கிடைக்கும் வருவாயில் 5-இல் 2 பங்கு இம்மாவட்டத்தில் கிடைக்கிறது. இதற்குக் காரணம் விலைமிகுந்த சந்தன மரம், தரத்தில் சிறந்த மூங்கில், இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன் பெறும் யானை - இவை இங்குள்ள காடுகளில் இருப்பதாகும்.

சந்தனமரம் வைத்திருந்து ஏலம் போடும் கிடங்குகள் தமிழ்நாட்டில் (சேலம் மாவட்டத்தில்) சத்தியமங்கலத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரிலுமே உள்ளன. ஆண்டுதோறும் ஒருகோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனமரம் ஏலம் போட்டு பம்பாய், கனோஜ், கான்பூர், மேட்டூர் வணிகர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. குங்கிலிய மரங்களும் ஏலகிரி, சவ்வாது மலைக் காடுகளில் உள்ளன.

திருப்பத்தூர், போளூர் வட்டங்களில் மூங்கில் மிகுதியாகக் கிடைக்கிறது. சவ்வாது மலையிலும் ஏலகிரி மலையிலும் கெட்டியான கல் மூங்கில் மரம் கிடைக்கிறது. இது கவாத்துப் பழகவும் சிலம்பம் விளையாடவும் போர்ப் படையினருக்குத் தேவைப்படுகிறது. தடிகள் செய்யப் போலீசுத் துறையினரும் இவற்றை வாங்குகின்றனர். சென்னை பெங்களூர் நகரங்களுக்கும் மூங்கில் ஏற்றுமதி யாகிறது. குடியேற்றம் வட்டத்துக் காடுகளிலுள்ள பலவகை மரங்களை விறகு மண்டி வணிகர்கள் வாங்கிச் சென்னை நகருக்குக் கொண்டு போகின்றனர்.

சவ்வாது மலைக் காடுகளில் - குறிப்பாக போளூர், திருவண்ணாமலை வட்டங்களில் - அடர்த்தியாக மரங்கள் வளர்ந்திருந்தன. இங்குள்ள உறுதியான கருங்காலி மரங்கள் இரயில் பாதையில் மரக்கட்டை போடவும் பிரிட்டனில் கப்பல் கட்டவும், செம்மரங்கள் பிரிட்டனில் துணிகளுக்குச் சாயம் போடுவதற்குரிய பொருளைச் செய்யவும் வெட்டப்பட்டன. இவற்றால் காடுகளின் அடர்த்தி குறைந்துவிட்டது. இங்கு வளரும் செம்மரம் 7 அடி சுற்றளவும், 30 அடிவரை உயரமும் உடையது. மரப்பாச்சி பொம்மை செய்ய இது திருப்பதிப் பகுதியில் பயன்படுகிறது; விலையுயர்ந்த பெரிய மாளிகைகளில் தூண்களுக்குச் செம்மரமும், குறுக்கு உத்தரத்துக்கு (தூலத்துக்கு) வேங்கை மரமும் பயன்படுத்தப்படுகின்றன.

செங்கம் பகுதிக் காடுகளில் யானைகள் உள்ளன. செங்கை மா என்ற பெயர் செந்நிறமான தும்பிக்கை யுடைய யானையைக் குறிக்கும்; அதுவே செங்கை மா ஆயிற்று என்பர். இப்பகுதியில் யானைகள் பிடிபட் டிருப்பதை 21-ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

✦ ✦ ✦

5. தொழில் வளர்ச்சி

இம்மாவட்டத்தில் வேளாண்மை, நெசவு போன்ற தொழில்களே பல நூற்றாண்டுகளாக மக்களை வாழ வைத்து வந்திருக்கின்றன. முஸ்லிம் ஆட்சியில் பீடி சுற்றுவதும் தோல் பதனிடுவதும் பெருகின. பிரிட்டிஷ் ஆட்சியில் ஐரோப்பிய வணிகர் சில புதிய தொழில்களைத் தொடங்கினர். கோவை, மதுரை மாவட்டங்களைப் போன்று புத்தம் புதிய தொழில்கள் விரைந்து தோன்றும் சூழ்நிலை இம்மாவட்டத்தில் நிலவவில்லை.

பழமையான தொழில்கள்

போரில் பயன்படுத்தப்படும் கத்திகள் ஒரு காலத்தில் சோளிங்கரில் செய்யப்பட்டன. இப்போது இத்தொழில் மறைந்து விட்டது. இன்னும் தொடர்ந்து நடந்து வரும் தொழில்களில் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்; ஆம்பூர் அருகேயுள்ள ஆளுங்குப்பத்தில் நாரை மரத்திலிருந்து மரச் சீப்புகளைச் செய்தல், ஆறணி வட்டம் சேவூரில் ஈச்சம்பாய் நெசவு, ஆர்க்காட்டுக்கு அருகேயுள்ள ஆர்ப்பாக்கத்தில் கையால் காகிதம் செய்தல், செங்கம் வட்டம் நெடுமல்லாவாடியிலும் திருவண்ணாமலை வட்டம் ஆவூரிலும் கோரைப்பாய் நெய்தல், செங்கம் வட்டம் காஞ்சியில் ஈச்சம்பாய் மிடைதல், வாலாஜாவில் போட்டோ - பிரேம் சில காடுகளில் செய்தல், மூங்கில் கூடைகள் மிடைவதும் கற்றாழையிலிருந்து நாறு செய்வதும் ஆகியன.

மண்பாண்டத் தொழில்

காட்பாடி இரயில் சந்திப்பிலிருந்து 5 கி.மீ. தொலைவில் குடியேற்ம் வட்டத்திலுள்ள கரிகேரியில் (ஆந்திர நாட்டில் கூடுரில் போல) பல நூற்றாண்டுகளாக மண்பாண்டங்கள் அழகாகச் செய்யப்படுகின்றன. கூசா, பூத்தொட்டிகள், பாத்திரங்கள், மைக்கூடு, ஊறுகாய்ப் பானைகள் ஆகியவை படங்களுடனும் பல வண்ணங் களிலும் கலைத் திறனுடன் செய்யப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் ஆர்க்காட்டு நவாபுகள் இத் தொழிலுக்குப் பேராதரவு காட்டினர். இப்போது, பொதுமக்களும் வெளிநாட்டினரும் இப்பொருள்களை வாங்கி, இவ்வூர்க் குலாலரை ஆதரித்து வருகின்றனர்.

1950 வரை நாமக்கட்டியைப் பயன்படுத்தியே, கரிகோரி மண்பாண்டங்கள் செய்யப்பட்டன. அதன் பிறகு செங்கற் பட்டு மாவட்டத்தில் கரியன் தங்கல் என்னுமிடத்திற் கருகே கிடைக்கும் களிமண்ணைப் பயன்படுத்தி வருகின் றனர். புதுமுறைச் சூளைகள் அமைத்தும் பளபளப்புத் தரும் பொருள்களை வழங்கியும் குலாலருக்கான தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தியும் அரசாங்கம் 1954 முதல் இத்தொழிலுக்குத் துணை புரிந்து வருகிறது.

கரிகேரிக் குலாலர் சிலர் சென்னையில் குடியேறி, கூட்டுறவு முறையில் மண்பாண்டங்கள் செய்து வருகின்றனர்.

பட்டு நெசவு

இம்மாவட்டத்தின் சிறப்பான தொழில்களில் இதுவும் ஒன்று. ஆறணி இத் தொழிலின் தாயகமாக உள்ளது.

பெங்களூர்க் கோராப் பட்டை வாங்கி ஆறணி நெசவாளர்கள் பட்டு உற்பத்தி செய்து வெளியூர் வணிகர்களுக்கு விற்பனை செய்கின்றனர். கோராப் பட்டின் விலை மலிவாக விற்கும்போது, இவர்களுக்கு

நிறைய வேலை கிடைக்கிறது.10 முதல் 20 நெசவாளர் வரை வைத்துக் கூலியும் நூலும் கொடுத்து அவர்களைப் பட்டுச் சேலை நெய்யச் சொல்லி வேலை வாங்கும் பெரிய நெசவாளர்கள் (Master Weavers) ஆறணி, வாலாஜா, சோளிங்கர், தண்டு குன்னத்தூர், குடியேற்றம் ஆகிய இடங்களில் உள்ளனர். வாலாஜாவிலுள்ள ரங்காரி சாதியார் சாயத் தொழிலில் சிறந்து விளங்குகின்றனர்.

ஆறணியில் கதர்ப் பட்டுச் சேலை உற்பத்தி 1959 முதல் பெரிய அளவில் நடைபெற்று வருகிறது; ஆறணியை அடுத்த சத்திய விசயநகரத்தில், அம்பர்ச் சர்க்கா செய்யும் 'சரஞ்சன் காரியாலயம்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பட்டுத் தொழில்களுக்குப் பட்டு உண்டாக்க, குடியேற்றத்துக்கு அருகே கொசவன்புதூரில் 30 ஏக்கர்ப் பரப்பில் பட்டுப் பூச்சி வளர்க்கப்படுகிறது.

பட்டுத் துகிலில் பளபளப்பாக அச்சிடும் தொழில் ஜப்பானில் போன்று, குடியேற்றத்திலும் 1940 முதல் வளர்ச்சியடைந்திருக்கிறது. மூவண்ணக் கொடிகள் செய்வதும் பட்டுத் துணியில் விளம்பரங்கள் அச்சிடுவதும் இவ்வூரின் சிறந்த தொழில்களாக இருக்கின்றன.

பட்டு நெசவு ஆலைகளும் இம்மாவட்டத்தில் உள்ளன.

போளூர் வட்டத்தில் மாம்பட்டு என்னுமிடத்தில் கைலி (கம்பாயம்) நெசவு மிகுதியாக நடைபெறுகிறது. செங்கம் வட்டத்து அணக்காவூரில் பட்டும் பஞ்சும் கலந்த கைத்தறிச் சேலைகள் நெசவாகின்றன.

இரத்தினக் கம்பளங்கள்

வாலாஜாப்பேட்டையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பூச் சித்திர வேலைப்பாடுடன் கூடிய இரத்தினக் கம்பளங்கள் நெய்யப்படுகின்றன.

இத்தொழிலுக்குத் துணையாக உள்ள உரோமப் பதனிடும் தொழிற்சாலையும் இம் மாவட்டத்தில் இருக்கிறது.

மூங்கில்

மூங்கில் வியாபாரம் இம்மாவட்டத்தில் மிகுதி. அதையொட்டி, கூடைகளும் பாய்களும் சிறுவிளார் ஆக்கித் திரைச்சீலைகளும் செய்து பலர் பிழைக்கின்றனர். ஜப்பானிய மக்களைப் போன்றே இம்மாவட்டத்து மலையடிவாரத்து வாழ்நரும், மூங்கிலை மென்மையாக்கி அழகுப் பொருள்களாகப் பொலிவுடன் செய்யும் ஆற்றல் அமையப் பெற்றிருக்கின்றனர்.

பிரம்பாலான பல பொருள்கள் வாலாஜாப்பேட்டையில் சிறந்த முறையில் செய்யப்படுகின்றன.

வடக்கயிறு செய்யும் சிறு தொழிற்சாலைகள் திருப்பத்தூர், குடியேற்றம் வட்டங்களிலும், அதற்குரிய பயிற்சி நிலையம் திருவண்ணாமலை வட்டத்திலும் நடைபெற்று வருகின்றன.

பீடி சுற்றுதல்

ஆம்பூர், வேலூர், ஆர்க்காடு, குடியேற்றம் போன்ற ஊர்களில், பெரும்பாலும் முஸ்லிம்களால் பீடித் தொழிற்சாலைகள் நடத்தப்படுகின்றன. சில நகரங்களில் நூற்றுக் கணக்கான குடும்பங்களை வாழ வைக்கும் சிறு தொழிலாகப் பீடி சுற்றும் தொழில் நடைபெற்று வருகிறது. புகையிலையும், பீடி சுற்றும் இலையும் பம்பாயிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. 30,000 தொழிலாளர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். 150 தொழிற்சாலைகள் உள்ளன.

தோல் பதனிடும் தொழில்

இம்மாவட்டத்தின் பெரிய தொழில்களில் இது ஒன்று. இராணிப்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர்,

பேரணாம்பட்டு, மேல்விசாரம் ஆகிய ஊர்களில் இத் தொழில் பெருகியிருக்கிறது. மொத்தம் 150 தொழிற் சாலைகள் உள்ளன. அவற்றின வாயிலாக 7,000 குடும்பங்கள் வாழ்கின்றன. இம்மாவட்டத்தில் பதனிடப்படும் East India Skins and Hides என்ற தோல் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகி, லண்டன் தோல் சந்தையில் நடைபெறும் ஏலத்தில் உயர்ந்த விலை பெறுகிறது. பூட்ஸ், செருப்பு போன்ற பல பொருள்கள் இம்மாவட்டத்தில் தோலி லிருந்து செய்யப்படுகின்றன. வேலூர்ச் சிறையிலுள்ள கைதிகளும் இவை போன்ற பொருள்களைச் செய்து வருகின்றனர்.

சில தரக் கட்டுப்பாடுகளுடன் காலணிகளைச் செய்ய ஒரு நிறுவனத்தையும் (Footwear Unit) , தோல் பதனிடுவதில் புதிய முறைகளைக் கையாளுவதில் பயிற்சி கொடுக்க ஒரு நிறுவனத்தையும் (Tanning Service - Cum-Training Centre), தமிழ்நாடு அரசாங்கத்தார் ஆம்பூரில் ஏற்படுத்தியுள்ளனர்.

உரோமப் பதனிடுதுறை நிலையம், விண்ணமங்கலம் (Wool Processing Unit)

விண்ணமங்கலம் என்னும் ஊர் ஆம்பூர் அருகே இருக்கிறது. இவ்வூரில் தோல் பதனிடும் தொழிற்சாலை, உரோமப் பதனிடுதுறை நிலையம் ஆகியவற்றை அரசாங்கத்தார் நிறுவியுள்ளனர்.

ஆம்பூர், வாணியம்பாடி, இராணிப்பேட்டை, விசாரம், பேரணாம்பட்டு போன்ற பல ஊர்களில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருந்தபோதிலும் பல மாதங்களுக்குத் தோலைப் பேணி வைக்கக்கூடிய முறைகளைக் கையாள இயந்திரங்களும் குளிர்சாதன அமைப்பும் கூடிய ஒரு தொழிற்சாலையைத் தமிழ்நாடு அரசாங்கத்தார் இங்கே அமைத்துள்ளனர்.

உரோமப் பதனிடுதுறை நிலையம் தமிழ்நாடு, மைசூர் ஆகிய இரு அரசாங்கங்களாலும் இந்திய அரசாங்க

உதவியுடன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தோல் பதனிடும் தொழில் பரவியிருக்கும் இடமாக இருப்பதோடு, சென்னை-பெங்களூர் நகரங்களுக்கு இடையே இருப்பதாலும் இந் நிலையம் அமைக்க விண்ணமங்கலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையம் தமிழ்நாடு அரசாங்கத்தின் மேற்பார்வையில், கம்பளக் குழு (Drugget Board) வாயிலாக நடத்தப்பட்டு வருகிறது. இதற்குரிய இயந்திரங்கள் ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டன. மூலதனச் செலவு 15 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. 1960 டிசம்பரில் இந்நிலையம் வேலை செய்யத் தொடங்கிற்று.

ஆண்டுதோறும் ஒன்பது லட்சம் கிலோ எடையுள்ள உரோமம் பதனிடப்பட்டு, மைசூரிலும் தமிழ்நாட்டிலுமுள்ள கம்பள உற்பத்தியாளர்க்கு வழங்கப்படுகிறது. இந்தியத்தரக் கட்டுப்பாடு நிறுவனத்தின் (I.S.I.) வரையறைகளுக்கிணங்க இங்கு நெய்யப்படும் கம்பளங்கள் அமெரிக்காவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நடுத்தரத் தொழில்கள்

திருப்பத்தூர், திருவண்ணாமலை, வந்தவாசி போன்ற இடங்களில் கடலைக்காய் ஆட்டும் ஆலைகள் முப்பதுக்கு மேல் உள்ளன.

மயில்பட்டு சர்க்கரை ஆலை 1950-இல் பூட்டப்பட்டு, 1960 முதல் மீண்டும் நடைபெற்றுச் சர்க்கரை செய்து வருகிறது. இது, தனியார் துறையில் இயங்கி வருகிறது.

அறக்கோணத்தில் சிமிண்டுக் குழாய்கள் (Hume Pipes) செய்யும் தொழிற்சால ஒன்று நடைபெற்று வருகிறது. சிமிண்டால் ஆகிய தூண்களும் பிற பொருள்களும்கூட இங்கு செய்யப்படுகின்றன.

குடியேற்றத்தில் இரண்டு பஞ்சாலைகள் உள்ளன.

காட்பாடியிலும் போளூரிலும் அமிலங்கள் (Acids) செய்யும் சிறு தொழிற்சாலைகள் உள்ளன.

சிறு பொறியியல் தொழில்கள்

ஜோலார்ப்பேட்டை இரயில் சந்திப்பிலுள்ள 'ரயில்வே யார்டி'ல் இரயில் இயந்திரங்களைச் செப்பனிடும் முறையில் சிறு வேலைகள் செய்யப்படுகின்றன.

அறக்கோணத்திலுள்ள இரயில்வே தொழிற்கூடம் மிகப் பெரிது; 3000 பேர் இங்கு வேலை பார்க்கின்றனர். அறக்கோணத்தில் ஒரு தொழில்பேட்டையையும் காட்பாடியில் எஃகுத் தகடு உருட்டுத் தொழிற்சாலையையும் தொடங்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

அரசாங்கத்தார் வேலூரில் 1959 முதல் நடத்தி வரும் 'ஜெனரல் பர்ப்போஸ் வர்க்ஷாப்' என்னும் தொழிற் கூடத்தில் சைக்கிளின் பகுதிகளை ஒன்று சேர்த்து, சைக்கிளை உருவாக்குகிறார்கள். சைக்கிள் உறுப்புக்கள் சிலவும், மருத்துவமனைகளுக்கு வேண்டும் தளவாடப் பொருள்கள், இரும்பு அடுப்பு, அம்பர் சர்க்காவின் உறுப்புப் பொர்ருள்கள் ஆகியவையும் செய்யப்படுகின்றன.

பெரிய தொழில்கள்

பெரிய தொழில்கள் என்று குறிப்பிடக்கூடியனவாக இம்மாவட்டத்தில் ஆம்பூரருகே ஒரு சர்க்கரை ஆலையும் இராணிப்பேட்டையில் பாரி கம்பெனியின் தொழிற் சாலையும் உள்ளன.

வடஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

இது ஆம்பூர் வட புதுப்பேட்டையில் 22-02-1961 முதல் உற்பத்தி தொடங்கியிருக்கிறது. இதன் மூலதனம் 110 இலட்சம் ரூபாய். இந்தத் தொகையில் 49%ஐக் கரும்பு பயிரிடுவோரும், தொழில் நிதியுதவிக் கழகமும் (I.F.C.) 51%ஐத் தமிழ்நாடு அரசாங்கமும் கொடுத்துள்ளன.

இந்த ஆலைக்கு வேண்டும் இயந்திரங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டன. இங்கு உற்பத்தியாகும் சர்க்கரை 'பாலாறு சர்க்கரை' என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. நாள்தோறும் 870 டன் கரும்பு பிழிந்து சர்க்கரை எடுக்கிறார்கள்; இதை 1370 டன் ஆக உயர்த்த ஏற்பாடு நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் 180 நாட்களுக்கு இந்த ஆலையில் வேலை நடைபெறும்.

பாரி கம்பெனியின் தொழிற்சாலை

இராணிப்பேட்டையிலுள்ள இத்தொழிற்சாலையின் வரலாறறைச் சுருங்கக் கூறுவோம். 3-4-1895-இல் அர்பத்நாட் கம்பெனி என்ற வெள்ளைக்கார வணிகக் குழு 'ஆர்காட் சுகர் வர்க்ஸ் அண்டு டிஸ்டில்லரிஸ்' என்ற தொழிற்சாலையை இராணிப்பேட்டையில் நிறுவிச் சர்க்கரையையும் அதனோடு இணைந்த பொருள்களையும் மூன்றாண்டுகள் உற்பத்தி செய்தது. 1898-இல் 'பிளேக்' நோய் பரவிற்று; ஆலையும் மூடப்பட்டு நெல்லிக்குப்பத்துக்கு (பாரி கம்பெனியால்) இயந்திரங்கள் கொண்டு போகப்பட்டன.

பிறகு பாரி கம்பெனியார் அக்கட்டிடத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை தொடங்கினர்; அதுவும் நட்டத்தில் நடைபெற்றது. தோல் தொழிற்சாலையில் வேலை பார்க்க முஸ்லிம்களும் பள்ளர் பறையர் ஆகியோரும் பெருந்தொகையாகக் குடியேறியிருந்தனர். அவர்களைக் கொண்டு மாட்டு எலும்பிலிருந்து உரம் (ஆஸ்திரேலியாவில் Galetine Industry-க்குத் தேவையான Bone-Meal) செய்யும் தொழிற்சாலையைத் தொடங்கினர். அதுவே இன்று உரத் தொழிற்சாலையாக இருந்து வருகிறது.

மாட்டு எலும்பைவிட பாஸ்பேட் செய்வது நல்லது என்று பாரி கம்பெனியார் கருதினர். அதற்கு 'சல்பூரிக்

ஆசிட்' தேவைப்பட்டது. அதையும் இராணிப்பேட்டை யில் செய்தனர்; சல்பூரிக் ஆசிட்டுடன் சேலம் மக்னீசைட் டைச் சேர்த்து (மலச்சிக்கலுக்கு மருந்தாகவும், தோல் பதனிடுவதற்கு உதவும் மருந்தாகவும் உள்ள) 'எப்சம் சால்ட்டு' என்னும் உப்பைச் செய்யத் தொடங்கினர். இவ்வாறு இரசாயனப் பொருள்களையும் செய்தனர். இவற்றை அடைக்க 'ஜாடி'கள் தேவைப்பட்டன. ஜாடிகளை ஏன் விலைக்கு வாங்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. ஜாடி செய்யும் தொழிற்சாலை தொடங்க முனைந்தனர். கை கழுவும் தொட்டிகள், கக்கூஸ் தொட்டிகள் ஆகிய பல பொருள்கள் செய்யும் அளவுக்கு இத்தொழிற்சாலை இப்போது பெருகியுள்ளது. சர்க்கரை - தோல் - மாட்டு எலும்பு - உரம் - சல்பூரிக் ஆசிட் - இரசாயனப் பொருள்கள் - ஜாடி - பலவகையான களிமண் பொருள்கள் - இன்னும் என்ன என்ன உண்டாக்குவரோ?

முடிவுரை

இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி போதிய தாகாது. வேலையின்மையைப் போக்கவும், இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தவும் பல தொழில்களை இம்மாவட்டத்தில் தொடங்க இயலுமென்று* நாட்டு நலனுக்காகப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராயும் நிபுணர் குழு (NCAER) வினரும், சிறுதொழில்களுக்காக வாய்ப்புக்களை ஆயும் நிறுவனத்தாரும் (SISI) 1961-இல் தெரிவித்துள்ளனர்.

* Sandalwood Oil, Animal Shoe Nail, Crown Corks, Industrial Alcohol. Ieather Board, Radio Components, Flourescent Chokes, Stoneware, Barium Chloride, Nitrates.

✦ ✦ ✦

6. வாணிகம்

பொருளாதாரத் துறையில் வட ஆர்க்காடு மாவட்டத்தின் நிலை சாதாரணமாகவே இருக்கிறது. இம்மாவட்டத்தில் வங்கிகள் ஒன்றும் - பிற மாவட்டங்களில் போல - தோன்றவில்லை; கூட்டுறவு வங்கிகள் மட்டுமே உள்ளன. தமிழ் நாட்டிலுள்ள பெரிய வங்கிகளின் கிளைகளும் இம்மாவட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், திருவண்ணா மலை, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற சில நகரங்களில் மட்டுமே உள்ளன. 'ஸ்டேட் பாங்கு ஆப் இந்தியா' என்னும் அரசாங்க வங்கியின் கிளைகள் இம்மாவட்டத்தில் 12 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இன்சூரன்சுத் தொழிலும் இம்மாவட்டத்தில் இன்னும் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலேயே இருக்கிறது.

பலர் பங்கு சேர்ந்து பெரிய மூலதனத்துடன் தொடங்கும் தொழில்களும் அவ்வாறு மூலதனம் போடும் ஆற்றலும் பழக்கமும் உள்ளவர்களும் இம்மாவட்டத்தில் குறைவு. இவற்றின் விளைவாக கோவை, மதுரை, திருச்சி, காரைக்குடி ஆகிய நகர்களில் போல இம்மாவட்டத்தில் ஓரிடத்திலும் பங்கு மார்க்கட்டு வியாபாரம் நடைபெற வில்லை.

வணிகர்கள் நிதியுதவி பெறுவதற்கான வாய்ப்புக் களும் இம்மாவட்டத்தில் மிகக் குறைவாகவே உள்ளன.

இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் பல பொருள்கள் வேலூரிலும் திருப்பத்தூரிலும் விற்பனையாகின்றன. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களில் கடலைக் கொட்டை, பதனிடப்பட்ட தோல், சந்தன

எண்ணெய், கைலி ஆகியன முக்கியமானவை. இவற்றால் இந்திய நாட்டுக்கு ஏராளமான வெளிநாட்டு நாணயம் கிடைக்கிறது. தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களுக்கும் தமிழ்நாட்டுக்கு வெளியேயும் விற்பனையாகும் பொருள் களில் பயிறு வகைகள், துவரம் பருப்பு, வெல்லம், விளக்கெண்ணெய், மல்லாக்கொட்டை எண்ணெய், பட்டுச்சேலை, கோரைப் பாய்கள், கம்பளிகள், சாடிகள், இரசாயனப் பொருள்கள், மூங்கில், மூங்கில் பொருள்கள், விறகு, சந்தனக்கட்டை, மாம்பழம், கருணைக்கிழங்கு, அவரைக்காய், காய்கறிகள், மாட்டிறைச்சி, தேங்காய், பீடி, செருப்பு முதலியன குறிப்பிடத்தக்கன.

இம்மாவட்டத்திலுள்ள தொழில்களுக்கு வேண்டும் மூலப் பொருள்களும் (பீடி சுற்றுவதற்கு இலை, பட்டு நெசவுக்குக் கோரா, கைலி நெசவுக்கு நூல்) இக்காலத்தில் தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருள்களும் வெளியூர்களிலிருந்து வருகின்றன. இம்மாவட்டத்தினர் சென்னை நகரில் மல்லாக் கொட்டை, தோல் ஏற்றுமதி களிலும் பழங்கள், தகரத்தில் அடைத்த உணவுப் பொருள்கள் (Oilmanstores) வாணிபத்திலும் சிறந்து விளங்குகின்றனர்.

மல்லாக் கொட்டை வாணிபத்தை வரையறை செய்வ தற்கான சட்டங்கள் அரசாங்கத்தாரால் செய்யப்பட்டு இம்மாவட்டத்தில் அமலாக்கப்பட்டுள்ளன. வணிகர் தங்கள் பொருள்கள் கெட்டுப் போகாமல் வைத்திருப்பதற் குரிய கிடங்கு வசதிகள் (Ware-houses) அரசாங்கத்தாரின் அரிய முயற்சிகளால் 1960-இல் இம்மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளன.

✦ ✦ ✦

7. கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவுத் துறையில் இந்த மாவட்டம் சிறந்து விளங்குகிறது. பொது மக்களும் சரி, விவசாயிகளும் சரி கூட்டுறவு முறைகளால் மிகவும் பயன் அடைந்துள்ளனர். சிறப்பாக, கடலைக்காயைப் (மணிலா) பயிரிடுவோர்க்கு வசதியான கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. பக்தவத்சல நாயுடு, பி.எஸ். ராஜகோபால் நாயுடு ஆகியோருடைய சீரிய தலைமைதான் இதற்குக் காரணம்.

வ.ஆ. மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியினர் சிறந்த முறையில், இம்மாவட்டத்தில் பலநோக்குக் கிராமிய நாணயச் சங்கங்களை நடத்தி வருகின்றனர். கூட்டுறவு பால்வழங்கு நிலையங்கள் சில இடங்களில் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்த பால்காரர்களாலும் சில இடங்களில் தனிப்பட்ட பால் வியாபாரிகளாலும் நடத்தப்படுகின்றன. வேலூர் நகரிலுள்ள பால் வழங்கும் ஒன்றிப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறது; 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தூய்மையாக்கும் கருவிகளை வரவழைத்து, தரமான பாலை வழங்க முயன்று வருகிறது. மாணவர்களுக்கான பல கூட்டுறவு நிலையங்களும், தறிகாரர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களும் உள்ளன. போர்ப் படைகளில் பணியாற்றியவர்களுக்கான கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கம் பஸ்களை நடத்தி வருகிறது. அவர்கள் பயனடைய மரவேலை செய்யும் சங்கம் ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது.

வாலாஜாப்பேட்டையில் குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், ஆறணியில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், வேலூரில் தலைமை அலுவலக முள்ள மாவட்ட மார்க்கட்டிங் சொசைட்டியும் குறிப்பிடத் தக்கன. ஆம்பூரில் கூட்டுறவு முறையில் அமைந்துள்ள சர்க்கரை ஆலையைப் பற்றி, முன்னே கூறியிருக்கிறோம்; இதனால் கரும்பு பயிரிடுவோர் நல்வாழ்வு வாழ வழி பிறந்திருக்கிறது. போலிசுக்காரர்களின் மனைவிமார்களின் கூட்டுறவுச் சங்கங்களும் இம்மாவட்டத்தில் ஏற்பட்டு, அவற்றின் வாயிலாகச் சிறுசிறு பொருள்கள் செய்து விற்கப்படுகின்றன.

✦ ✦ ✦

8. போக்குவரத்து வசதிகள்

இம்மாவட்டத்திலுள்ள போக்குவரத்து வசதிகளைப் பற்றி, இக்கட்டுரையில் விரிவாகக் கூறுவோம்.

சாலைகள்

பல்லவர், சோழர் காலங்களில் தலங்களை வழிபடுபவர்க்குப் பயன்படும் சாலைகள் இருந்தன. பிற்காலத்தில் போர்ப்படைகள் செல்லுவதற்காகவும் பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெற்ற பிறகு வாணிகத்திற்காகவும் சாலைகள் போடப்பட்டன. இக்காலத்தில் சிறந்து விளங்கும் சாலைகளிற் பல, சோழர் காலத்திலேயே முதல் தடவையாக அமைக்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட 'தேசிய நெடுஞ்சாலைகள்' எனப்படும் அகன்ற, அழகிய பெருவழிகள் இம்மாவட்டத்தில் 170 கி.மீ. தொலைவுக்குச் செல்லுகின்றன. சென்னையிலிருந்து பெங்களூருககுச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையும், சென்னையிலிருந்து கோழிக்கோட்டுக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையும் இம்மாவட்டத்தின் வழியே அமைந்திருக்கின்றன.

தமிழ்நாடு அரசாங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட சாலைகளில் இம்மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க சாலை புதுச்சேரி, கடலூர், சித்தூர்ச் சாலையாகும். இது திண்டிவனம், திருவண்ணாமலை நகரங்களின் வழியாகச் செல்லுகிறது. புதுச்சேரியில் ஆட்சி நடத்திய பிரெஞ்சுக்காரர்கள் ஆர்க்காட்டு நாட்டையும் ஆள ஆசைப்பட்டு அரும் போர்கள் புரிந்தபோது இவ்வழி ஏற்பட்டது.

ஏலகிரி மலைக்குச் செல்ல, ஒரு மலைச்சாலை போடப் பட்டிருக்கிறது.

பாலங்கள்

பெங்களூர்ச் சாலையில் மார்க்கண்டேய நதியின் மீது கட்டப்பட்டுள்ள அழகிய பாலமும் பாலாற்றின் மீது 1959-இல் கட்டப்பட்ட கவினுறு பாலமும் இம்மாவட்டத்தின் முக்கிய பாலங்களாகும். பாலாற்றுப் பாலம் இராணிப் பேட்டை, ஆர்க்காடு ஆகிய இரு நகரங்களையும் இணைக்கிறது. இதன் நீளம் 616 மீட்டர் (2024 அடி). இப்பாலத்திற்கு 29 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் சொந்தமாகக் கார் வைத்திருப்பவர் தொகை சொற்பமே. வேலூர் நகரில் மட்டும் கார்கள் ஏராளமாக இருப்பதால், போக்குவரத்து சில சமயம் தடைப்படுகிறது.

பஸ் போக்குவரத்து இம்மாவட்டத்தில் மிகுதி. இம்மாவட்டத்தின் வழியாகச் சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே தமிழ்நாடு அரசாங்க பஸ்களும் மைசூர் அரசாங்க பஸ்களும் செல்லுகின்றன. போர்ப் படைகளில் பணியாற்றியவர்கள் கூட்டுறவு முறையில் இம்மாவட்டத்தில் பல பஸ்களை நடத்தி வருகின்றனர்.

தனிப்பட்டவர்கள் பலர் நடத்தும் பஸ் போக்குவரத்து-கோவை, மதுரை, தஞ்சை மாவட்டங்களில் போல - இம்மாவட்டத்தில் சீரிய முறையில் இயங்கவில்லை. இந்நிலை பஸ் உரிமையாளர்களுக்கோ ஆட்சித் துறையினருக்கோ பெருமையளிப்பதாக இல்லை.

சென்னை, பெங்களூர், சேலம், கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களுக்கு வேலூரிலிருந்து பஸ் வசதி உண்டு.

சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பெங்களூர், சேலம், திருப்பத்தூர், கடலூர், புதுச்சேரி, சிதம்பரம், திருச்சி போன்ற நகரங்களுக்குத் திருவண்ணாமலையிலிருந்து பஸ் வசதி இருக்கிறது.

வேலூர் நகரில் டவுன் பஸ் போக்குவரத்து இருக்கிறது. திருவண்ணாலை நகரில் டவுன் பஸ் போக்குவரத்து சிலகாலம் நடந்து, பிறகு கைவிடப்பட்டது.

கேரள மாநிலத்துக்கும் தொழில் வளர்ச்சியடைந்துள்ள பெங்களூர் கோவை நகரங்களுக்கும் இம்மாவட்டத்தின் வழியாகவே சென்னை மாநகரோடு தொடர்பு இருப்பதாலும் சென்னைத் துறைமுகத்துக்கு இம்மாவட்டத்துத் தோலும் கடலைக்காயும் செல்லுவதாலும் லாரி போக்குவரத்துப் பெருகியிருக்கிறது.

இரயில் போக்குவரத்து

தென்னிந்தியாவில் ஏற்பட்ட முதல் இரயில் பாதை சென்னை நகரிலிருந்து இம்மாவட்டத்து வாலாஜா சாலைக்குத்தான் போடப்பட்டது. அகலப்பாதை, அகலக்குறைவான பாதை என்னும் இரண்டு வகையான இரயில் பாதைகளும் முறையே 211 கி.மீ. தொலைவுக்கும் 139 கி.மீ. தொலைவுக்கும் இம்மாவட்டத்தில் உள்ளன.

சென்னை நகரிலிருந்து பம்பாய், பெங்களூர், வட கேரளத்து நகரங்கள் ஆகியுவற்றுக்குச் செல்லும் இரயில்கள் இம்மாவட்டத்தின் வழியாகத்தான் செல்லுகின்றன. இவை தவிர, அறக்கோணம் - காஞ்சிபுரம் - செங்கற்பட்டு, விழுப்புரம் - திருவண்ணாமலை - காட்பாடி, காட்பாடி-சித்தூர்-ரேணிகுண்டா இரயில் பாதைகளும்

இம்மாவட்டத்தில் உள்ளன. பாரி கம்பெனியின் தொழிற் சாலைகளுக்காக வாலாஜா சாலையிலிருந்து இராணிப் பேட்டைக்கு (6½ கி.மீ. தொலைவு) இரயில் பாதை போடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. திருப்பத்தூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குப் போடப்பட்ட இரயில் பாதை, பிரிட்டிஷ் ஆட்சியின் போது மூடப்பட்டு அந்தத் தண்ட வாளங்கள் போர்க் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் புது இரயில்கள் போடப் போர்க்களங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இப்போது திருப்பத்தூர் இரயில் நிலையமே, சேலம் மாவட்டத்தின் வட பகுதிகளில் வாழ்பவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அறக்கோணம், வாலாஜா சாலை, காட்பாடி, ஜோலார்ப்பேட்டை ஆகிய இடங்களில் இரயில் சந்திப்புக்கள் உண்டு: செய்யாறு, வந்தவாசி, செங்கம் வட்டங்களுக்கு இரயில் வசதி கிடையாது. வாலாஜாப் பேட்டை, ஆறணி வட்டங்களில் இரயில் போக்குவரத்து இருந்த போதிலும் இவ்வட்டங்களின் தலைநகர்களுக்கு இரயில் வசதி இல்லை. வந்தவாசி ஆறணி செங்கம் முதலிய சில் ஊர்களுக்கு இரயில்வே அவுட் ஏஜன்சி வசதி செய்யப் பட்டிருக்கிறது.

அறக்கோணத்திலிருந்து சேலத்துக்கு மற்றோர் இரயில் பாதை - இப்போதுள்ள வழியிலேயே இரண் டாவது த்ண்டவாளம்-போடப்பட்டு வருகிறது. சென்னை நகரிலிருந்து அறக்கோணத்திற்கு மின்சார இரயில் போக்குவரத்து ஏற்பட வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் இந்திய அரசாங்கத்தின் இரயிவே அமைச்சுத் துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஆகாய விமான நிலையம்

இம்மாவட்டத்தில் ஆகாய விமானப் போக்கு வரத்துக் கிடையாது. போர்க் காலத்தில் (1941-1945) அறக்கோணத்திலும் வேலூரிலும் விமான நிலையங்கள் ஏற்பட்டன. இவை, பிறகு நன்கு பேணப்படவில்லை.

1948-இல் வேலூர் விமான நிலையம் வழியாகச் சென்னை-பெங்களூர் விமானப் போக்குவரத்து நடத்த ஜூப்பிட்டர் ஏர்வேஸ் கம்பெனி வாயிலாக டாக்டர் அழகப்பச் செட்டியார் முயன்றார்; ஆனால் அம்முயற்சி நிறைவேறவில்லை. வேலூர் விமான நிலையத்தில், விமானிகளாவதற்குப் பயிற்சி பெறுபவர்கள் மன்றம் (Flying Club) அமைக்க 1961-இல் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அஞ்சல்துறை

இம்மாவட்டத்தில் 1872-இல் 22 ஊர்களில் அஞ்சல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. அதற்கு முன்னர், அரசாங்கத் தபால்களை மட்டும் எடுத்துச் செல்லும் 'டிஸ்டிரிக்ட் டாக்' என்ற அமைப்பும், வெள்ளைக்காரர் களின் கடிதங்களை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்காக 'இம்பீரியல் போஸ்ட்டு' என்ற அமைப்பும் மட்டுமே இருந்தன. 1961-இல் 600 அஞ்சல் நிலையங்களும் 65 தந்தி நிலையங்களும் 25 நகரங்களில் தொலைபேசி வசதிகளும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளன.

மாவட்டத்திலுள்ள பஸ்கள்	416*
லாரிகள்	611
வாடகைக் கார்கள்	57

* கோவை மாவட்டத்தில் 750 பஸ்கள் இயங்குகின்றன.

இரயில் பாதைகள்

அகலப் பாதை (பிராட்காஜ்)	திறந்த தேதி	தொலைவு	
		கி.மீ.	மைல்
சென்னை சென்ட்ரல்–வாலாஜா சாலை	1–8–1856 105	65	
வாலாஜா சாலை–குடியேற்றம்–ஜோலார்ப்பேட்டை	19–5–1858, 1–2–1860	109	68
ஜோலார்ப்பேட்டை–திருப்பத்தூர்	23–5–1860	8	5
திருப்பத்தூர்–சேலம்	1–2–1861	113	70
வாலாஜா சாலை–இராணிப்பேட்டை	17–4–1899	6½	4
அகலக்குறைவான பாதை (மீட்டர்காஜ்)			
காஞ்சிபுரம்–அறக்கோணம்	1–8–1865	28	18
விழுப்புரம்–திருவண்ணாமலை	17–11–1890	68	42
திருவண்ணாமலை–காட்பாடி	18–3–1891	93	57
காட்பாடி–ரேணிகுண்டா	18–3–1891	115	71

✦ ✦ ✦

9. ஆட்சி முறை

வட ஆர்க்காடு ஒரு மாவட்டமாகப் பிரிட்டிஷாரால் 1801-இல் ஏற்படுத்தப்பட்டது. இப்பெயரிலேயே இன்னும் இந்த மாவட்டம் இருந்து வந்தபோதிலும், 160 ஆண்டு களில் இம்மாவட்டத்தின் எல்லை பல தடவைகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட் டத்திலிருந்த திருவண்ணாமலை வட்டமும் சேலம் மாவட்டத்திலிருந்த திருப்புத்தூர் வட்டமும் இம்மாவட் டத்தில் இருக்கின்றன. இம்மாவட்டத்தின் ஒரு பகுதி (இன்றைய ஆந்திரப் பிரதேசத்து) சித்தூர் மாவட்டமாக ஆகிவிட்டது; இம்மாவட்டத்திலிருந்த திருத்தணிகைப் பகுதி ஆந்திரப் பிரதேசத்தில் சில ஆண்டுகள் (1953-1960) இருந்த பிறகு இப்போது செங்கற்பட்டு மாவட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது; சித்தூரிலிருந்து 24 கிராமங்கள், 1960-இல் வட ஆர்க்காட்டுக்கு வந்தன.

வரலாற்று முக்கியத்துவமும் தமிழ், தெலுங்கு மாவட்டங்கள் அடுத்தடுத்து இருப்பதும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்தை இம்மாவட்டத்தின்பால் ஈர்த்தன. இதன் விளைவாக, இங்கு சட்டத்தையும் அமைதி யையும் நிலைநாட்டுவதிலும் காவடிகள் ஆடிக் கிருத்தி கைக்குத் திருத்தணிகைக்குச் செல்லும்போது மசூதி களுக்கு முன்பாக மேளம் வாசிப்பதால் சில சமயம் ஏற்படும் கலகங்களை அடக்குவதிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இம்மாவட்டத்தில் போர்ப்பட்டை வைக்கப்பட்டிருந்தது; போலீசுப் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்டது; போலீசுச் சுருக்கெழுத்து நிலையத்தின் தலைமை அலுவலகம் அமைக்கப்பட்டது; பெரியதொரு சிறைச்சாலை கட்டப்

பட்டது. இம்மாவட்டத்திற்குத்தான் சென்னை நகரிலிருந்து முதலில் இரயில் பாதை போடப்பட்டது. 'சென்னை இராசதானி'யிலேயே முதல் நகராண்மைக் கழகம் இம்மாவட்டத்தில் நிறுவப்பட்டது.

நில வருவாய்த் துறைக்கும் நீதிமன்றத் துறைக்கும் போலீசுத் துறைக்கும் ஒரு மாவட்டமாகவும் பிற துறைகள் பலவற்றுக்கு இரண்டு மாவட்டங்களாகவும் வட ஆர்க்காடு பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள வேலைகளுக்கு, இரண்டு அபிவிருத்தி மாவட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டத்தில் ஐந்து வட்டங்களும், தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டத்தில் ஆறு வட்டங்களும் உள்ளன; விவரம் பிற்சேர்க்கையில் காண்க.

திருப்பத்தூர், வேலூர், ஆறணி, திருவண்ணாமலை என்னும் நான்கு நகர்களிலும் கோட்ட ஆட்சி அலுவலகங்கள் (Revenue Division Office) உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் இராணிப்பேட்டையிலும் செய்யாற்றிலும் இத்தகைய அலுவலகங்கள் இருந்தன. திருப்பத்தூர் வட்டத்தில் கிரிமினல் குற்றக்ஙள் மிகுதியாக நிகழ்ந்த மையால், பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஐ.சி.எஸ். அலுவலர் ஒருவரை அங்கு கோட்ட ஆட்சித் தலைவராக வைத்திருந்தனர். திருப்பத்தூர்க் கோட்ட ஆட்சித் தலைவருக்கு மட்டும் 'அசிஸ்டண்டு கலக்டர்' என்ற பெயர் இருந்து வந்தது.

இம்மாவட்டத்தில் பதினொரு வட்டங்கள் உள்ளன. முன்னர் இருந்த பல வட்டங்கள் மாறிவிட்டன; சில வட்டங்களில் வட்டத்தின் பெயரில் மட்டும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பெரிய மாவட்டமாகிய சேலத்தி லிருந்து வந்து சேர்ந்த திருப்பத்தூர் ஒரு பெரிய வட்டமாக

வும், ஜாகிர்தாரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட்ட ஆறணி மிகச் சிறிய வட்டமாகவும் உள்ளன. 1961-இல் உள்ள வட்டங்களாவன:

		பரப்பு சதுர கி.மீ.
1.	திருப்பத்தூர்	1473
2.	குடியேற்றம்	1205
3.	வேலூர்	1080
4.	வாலாஜா	988
5.	அறக்கோணம்	800
6.	செய்யாறு	818
7.	ஆறணி	441
8.	வந்தவாசி	852
9.	திருவண்ணாமலை	938
10.	செங்கம்	1632
11.	போளூர்	1420

இம்மாவட்டத்தில் பதினொரு நகராண்மைக் கழகங்கள் உள்ளன. இவற்றுள் வேலூர் மட்டும் முதல்தர நகராண்மைக் கழகமாக இருக்கிறது; இதன் மக்கள் தொகை ஓர் இலட்சத்துக்கு மேற்பட்டது. ஏனைய நகரங்களின் மக்கள் தொகை 50,000-க்கும் குறைவே.

நகராண்மைக் கழகங்கள் அமைப்பதற்குரிய சட்டம் சென்னை அரசாங்கத்தாரால் முடிவு செய்யப் பெற்ற போது அச்சட்டத்தின்படி 1866-இல் இம்மாவட்டத்து வாலாஜாப்பேட்டைதான் நகராண்மைக் கழகமாக முதலில் அறிவிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேரும்வரை, வாலாஜாப்பேட்டைதான் தமிழ் நாட்டிலேயே மிகச் சிறிய நகராண்மைக் கழகமாக இருந்து வந்தது. ஊராட்சி மன்றங்களை நகராண்மைக் கழகமாக்கும் சட்டம் ஏற்பட்டபோது, இம்மாவட்டத்து இராணிப்பேட்டையே அவ்வாறு நகராண்மைக் கழகமாக மாறும் முதல் பேற்றினைப் பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் அலுவலகங்கள் - பிற மாவட்டங்களை நோக்க-இம்மாவட்டத்தில் குறைவாகவே உள்ளன. வருமான வரித்துறை, அஞ்சல் - தந்தி - தொலை பேசித் துறை, மத்திய கலால்வரி ஆகிய மூன்று துறைகளின் அலுவலகங்களே குறிப்பிடத்தக்கன.

இனி, இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசாங்கத்தின் முக்கியமான அலுவலகங்கள் சிலவற்றைப் பற்றிய செய்திகளைத் தெரிவிப்போம்.

போலிசுப் பயிற்சிக் கல்லூரி

தமிழ்நாடு அரசாங்கத்தார் நடத்திவரும் போலிசுப் பயிற்சிக் கல்லூரி வேலூரில், கோட்டைக்குள் இருக்கிறது. இது, இந்திய நாட்டிலுள்ள ஏனைய மாநிலங்களுக்கும் வழிகாட்டும் முறையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1902-இல் நியமிக்கப்பட்ட போலிசு கமிசனின் சிபாரிசுகளுக்கிணங்க, 1905-இல் இக்கல்லூரி ஏற்பட்டது. தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளையுடைய மாவட்டங் களுக்கு நடுவே இருந்ததாலும் கோட்டையில் வசதிகள் இருந்தாலும் இங்கு இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது.

இக்கல்லூரியில் 1948-க்கு முன், தென்னிந்தியாவி லுள்ள எல்லா அரசாங்கங்களும் அவர்களுடைய ‘இந்திய போலிசு சர்விஸ்’ அலுவலர்களைப் பயிற்சி பெற இங்கே அனுப்பினர். 1948 செப்டம்பரில், இந்தியா வெங்குமுள்ள போலிசு உயர் அலுவலர்க்கு ஒரே தன்மையான பயிற்சி வழங்குவதற்காக, இந்திய அரசாங்கம் குஜராத்திலுள்ள மவுண்டு அபூ என்னும் அழகிய சிறு நகரில், மத்தியப் போலிசுப் பயிற்சிக் கல்லூரியை நிறுவினர். அங்கு பயின்று தமிழ்நாட்டுக்குப் பணிபுரிய வருபவர்கள், வேலூரிலுள்ள இக்கல்லூரியில் நான்கு மாதம் தங்கி, தமிழ்நாட்டில் அமலில் இருக்கும் சட்டங்கள், தமிழ்நாடு போலிசின்

'ஸ்டாண்டிங் ஆர்டர்கள்' முதலியவற்றைத் தெரிந்து கொண்டு பிறகுதான் மாவட்டங்களுக்குப் போலிசு அலுவலராகச் செல்லவேண்டும்.

சப்இன்ஸ்பெக்டர்கள், போலிசுத் துறையிலுள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் ஆகியோர்க்கு ஓராண்டுப் பயிற்சியும், வேலை உயர்வுபெற இருக்கும் ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு ஆறு மாதப் பயிற்சியும் இக்கல்லூரியில் கொடுக்கப்படுகின்றன. கிரிமினல் சட்டங்கள், நீதிமன்றத்தில் சாட்சியம் கொடுப்பது பற்றிய சட்டம், குற்றம் நடந்த இடத்தின் அமைப்புப் படம் போடுவது, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான வழிகள், போலிசு நிலையத்தை நன்கு நடத்தும் முறை, கலகத்தை அடக்கக் கையாளவேண்டிய முயற்சிகள் முதலியன இங்கு கற்பிக்கப்படுகின்றன. இவ்வகையில் இவர்களுக்கு உதவியாக கெளவே என்ற ஐ.ஜி. பெயரால் ஏற்பட்ட நூலகமும் திருட்டுப் பொருள்கள், கொலை நடந்த இடங்களில் கிடைத்த அடையாளங்கள் ஆகிய வற்றின் சேகரிப்பாக அடங்கிய போலிசுப் பொருட்காட்சி நிலையமும் இக்கல்லூரியில் உள்ளன.

மேலே குறிப்பிட்ட பாடங்கள் தக்க ஆசிரியர்களா லும் போலிசு அலுவலர்களாலும் வழக்குறைஞர்களாலும் நடத்தப்படுகின்றன. இவை தவிர, பெரியோர்களின் சொற்பொழிவுகளும் உண்டு. நீதிபதிகள், உளநூல் அறிஞர்கள், பத்திரிகைக்காரரர்கள், காட்டியல் துறை அலுவலர்கள், சமூகநல வேலைகளில் ஈடுபட்டுள்ள தலைவர்கள் ஆகியோர் இத்தகைய உரைகளை நிகழ்த்து கின்றனர். கைரேகை, கால்தடம் இவற்றிலிருந்து குற்ற வாளிகளை அடையாளம் கண்டுபிடிப்பது, போட்டோக்கள் எடுப்பது, கள்ளநோட்டுத் தயாரிக்கும் கருவிகள் வைத் திருப்பதை அறிவது ஆகியவை பற்றி அத்துறைகளில் ஆராய்ச்சி செய்பவர்கள் (State Forensic Laboratory

Scientists) சொற்பொழிவு செய்கின்றனர். மோட்டார் ஓட்டுதல் - செப்பனிடல், டெலிபோனில் பேசுதல், முதல் சிகிச்சை செய்தல் ஆகிய துறைகளிலும் ஓரளவு பயிற்சி கொடுக்கப்படுகிறது. இக்கல்லூரியினர்க்கென மருத்துவ மனையும், சிறியதொரு திரைப்பட மாளிகையும், விளையாடுமிடங்களும், உணவு விடுதிகளும் உள்ளன. காலை 5 மணிக்கு ராகிமால்ட்டுக் குடித்ததும் உடற் பயிற்சியுடன் இவர்களுடைய அலுவல்கள் நாள்தோறும் தொடங்குகின்றன. உயர் அலுவலர்க்கெனத் தனியே உணவு விடுதி (Madras Police Officers Mess) கோட்டையி லிருந்து மூன்று கி.மீ. தொலைவில் இருக்கிறது; இவ்விடுதி யிலேயே இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் வேலூருக்கு 1960-இல் வந்த போது தங்கினார் என்பதிலிருந்து இம்மாளிகையின் வனப்பை உணரலாம்.

மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தேர்வு உண்டு. தமிழ் நாடு போலிசு இன்ஸ்பெக்டர் ஜெனரலின் தலைமையில் நடைபெறும் விழாவுடன், பயிற்சி நிறைவேறுகிறது.

மாவட்டப் போலிசு சூப்பரிடெண்டாக இருந்து அனுபவம் நிறைந்தவர்களே இக்கல்லூரியின் முதல்வராக நியமிக்கப்படுகின்றனர். இக்கல்லூரியைச் சேர்ந்த நூலகம், போலிசு மியூசியம், போலிசு ரெக்ரூட் பள்ளி, விரல் ரேகை நிலையம் (Finger Print Bureau), சுருக்கெழுத்து நிலையம் (Shorthand Bureau) ஆகியவற்றை மேற்பார்வையிடுவதும், ‘மெட்ராஸ் போலிசு ஜெர்னல்’ என்னும் முத்திங்கள் இதழை ஆங்கிலத்தில் வெளியிடுவதும் இக்கல்லூரி முதல்வரின் கடமைகளாகும்.

போலிசு ரெக்ரூட் பள்ளி

தமிழ்நாட்டில் இத்தகைய இருபள்ளிகள் உள்ளன. கோயம்புத்தூரிலுள்ள பள்ளிக்கூடம் மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், கோவை,

நீலகிரி மாவட்டங்களுக்காக ஏற்பட்டது. வேலூரிலுள்ள இப்பள்ளியில் சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, திருச்சி இரயில்வே ஆகிய ஏழு மாவட்டங்களிலுமுள்ள போலிசுக்காரர்களுக்காக ஏற்பட்டது. 5½ அடி உயரமும் எட்டாவது வரை படித்தவர்களுமாக உள்ள போலிசுக்காரர்களை அந்தந்த மாவட்டத்திலுள்ள போலிசுத் தலைவர் இப்பள்ளிக்கு அனுப்புகிறார். இப்பள்ளிக்கெனத் தனி உணவு விடுதி உண்டு. மாதந்தோறும் குறித்த நாளில் இவ்வாறு புதிய 'மாணவர்கள்' வருகை புரிவர். இவர்கள் இந்தியன் பீனல்கோடு, கிரிமினல் புரசீசர் கோடு, 'எவிடன்சு' சட்டம், சாலைப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது போன்றவை பற்றி ஆறுமாதக் காலம் பயிற்சி பெற்று, மாதம் ஒரு தேர்வு எழுதிச் சான்றிதழ் பெற்றுச் செல்வர்.

விரல்ரேகை நிலையம்

இது 1895-இல் சென்னை நகரில் ஏற்பட்டு, 1942-இல் ஜப்பானியர் சென்னைமீது குண்டு போட்டவுடன் வேலூருக்கு மாற்றப்பட்டது.

உலகிலேயே மிகப் பழமையான விரல் ரேகை நிலையம் இதுதான்.

குற்றவாளிகளின் விரல் ரேகைகள், அடிச்சுவடுகள் ஆகியவற்றை இந்த நிலையத்தார் பதிவு செய்து, வகைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். இவ்வாறு ஐந்து லட்சம் குறிப்புகள் இவர்களிடம் உள்ளனவாம்; இவற்றின் அடிப்படையில் சில முடிவுகளைச் செய்கிறார்கள். நீதிமன்றங்களில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு பிடிக்கச் சாட்சி கூறுகின்றனர்; அப்போது இந்த அடையாளங்களைப் பெரிய அளவில் போட்டோப் படமாக எடுத்துக் காட்டுகிறார்கள். உயில், புரோ நோட்டு, கிரயப்பத்திரம் ஆகியவற்றல் உள்ள பெருவிரல்ரேகை

சரியான ரேகை தானா என்பதை நீதிபதிகள் முடிவு செய்வதற்கு இந்த நிலையத்தின் அலுவலர்கள் உதவு கின்றனர்; தனிப்பட்டவர்கள் உரிய பணம் கட்டி இவர் களுடைய அறிவுரையைப் பெறலாம்.

திருட்டு நடக்கும் இடங்களில் அகப்படும் அடை யாளங்களைப் படம் எடுத்து, இங்குள்ள ஆதாரங்களுடன் ஒத்துப் பார்த்துப் பல திருடர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த நிலையத்தில் பணியாற்றும் நிபுணர்களில் பெண்களும் உள்ளனர்; அவர்களுடைய தீர்ப்பு ஒருகாலும் தவறியதில்லையாம்.

போலிசுச் சுருக்கெழுத்து நிலையம்

இது 1919-இல் ஏற்பட்டது. இப்போது தமிழ், ஆங்கிலம், உருது மொழிகளில் சுருக்கெழுத்து எழுதும் ஆற்றல் படைத்தவர்கள் 35 பேர் பணியாற்றுகின்றனர். 1961 முதல் இதன் கிளை நிலையம், சென்னை நகரில் இருந்து வருகிறது.

தமிழில் சுருக்கெழுத்து முறை ஏற்பட்டதற்கு இந்த நிலையமே காரணமாகும். இங்கு பணியாற்றிய சீனிவாச ராவ் தமிழ்ச் சுருக்கெழுத்து நூலை முதலில் எழுதி வெளி யிட்டார். தெலுங்கு கன்னட மொழிகளிலும் சுருக்கெழுத்து அமைத்தவர் இவரே ஆவார்.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து அரசியல் சொற் பொழிவுகள் செய்யப்பட்டபோது, அரசியல் தலைவர்கள் செய்த சொற்பொழிவுகளைத் தெரிந்து கொள்வதற்காகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர் இந்த நிலையத்தை உண்டாக் கின்றர்.

தொழிலாளர் கூட்டங்களிலும் அரசியல் கூடடங் களிலும் அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லப்படும் குறைகள் என்ன? அவற்றுக்கு மக்கள் எந்த அளவு ஆதரவு காட்டு

கிறார்கள்? என்பனவற்றை அரசாங்கத்தார் தெரிந்து கொள்ள இந்த நிலையம் உதவுகிறது. நடக்க இருக்கும் முக்கியமான அரசியல் கூட்டங்களைப் பற்றி, மாவட்டங் களிலுள்ள போலிசுத் தலைவர்கள் கம்பியில்லாத் தந்தி மூலம் வேலூருக்குத் தெரிவிக்கினறனர். உடனே வேலூரி லிருந்து சுருக்கெழுத்தாளர்கள் அந்த இடங்களுக்குப் போய்க் கூட்டத்து நிகழ்ச்சிகளைக் கவனித்து, சொற் பொழிவுகளைச் சுருக்கெழுத்தில் எழுதிக் கொள்கின்றனர். இவை பற்றி உடனடியாக ஒரு சிறு அறிக்கையையும் பின்னர் விரிவான முறையில் பேச்சுக்களையும் எழுதிப் போலிசுத் தலைமை அலுவலகத்துக்கு அனுப்புகின்றனர். இவற்றை அலுவலர்கள் படித்து, சில சமயம் ஆட்சேப கரமான பேச்சுக்கள் பேசியதற்காகவும் அவதூறுகள் பேசியதற்காகவும் பேச்சாளர்கள் மீது வழக்குத் தொடுப் பதும் உண்டு. அமைச்சர்களும் ஏனைய அலுவலர்களும் இந்த அறிக்கைகளை நாளும் படித்து நாட்டு நடப்பை நன்கு அறிந்து கொள்ளுகின்றனர். சுருங்கச் சொன்னால், சுருக்கெழுத்து நிலையத்தில் பணியாற்றுபவர்கள் அரசாங் கத்தின் கண்களும் காதுகளும் ஆவர்.

இந்த நிலையத்துத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள் மிக விரைவாகப் பேசுகின்ற பேச்சாளர்களின் பேச்சுக்களை எடுக்கும் வன்மையுடையவர்; தமிழ்நாட்டில் சுருக்கெழுத் தாளர்க்கு உரிய தலைசிறந்த பரிசுகளை இவர்களில் சிலர் பெற்றிருக்கின்றனர்.

✦ ✦ ✦

10. உரிமைப் போர்

இந்தியாவின் உரிமைப் போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்கு மிகப் பெரிது; வட ஆர்க்காட்டின் பங்கும் முக்கியமானது.

வேலூர்ப் புரட்சி*

வட இந்தியாவில் 1857-இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகத்துக்கு அடி கோலிய இராணுவப் புரட்சி வேலூரில் 1806-இல் நடைபெற்ற புரட்சியே என்று வீர சவர்க்கார் கூறியுள்ளார்.

மைசூர்ச் சீமையில் சீரங்கப்பட்டினப் போர் முடிந்து அவ்வூர் வெள்ளையர் வயப்பட்டபின், திப்புவின் மக்கள் (ஆண்மக்கள் 12, பெண்மக்கள் 6) பதினெட்டுப் பேர் வேலூர்க்கோட்டையில் பலத்த காவலில் வைக்கப் பெற்றனர். காவல் படையில் 400 ஐரோப்பியரும் இருந்தனர்.

'இராணுவப் பயிற்சிக்கு வரும் இந்துக்கள் திருநீறு பூசலாகாது; முஸ்லிம்கள் தாடி வைக்கலாகாது; எல்லோரும் மார்பில் சிலுவை போன்ற ஒரு பொருளைத் தொங்கவிட வேண்டும்' என்று ஐரோப்பியத் தளபதிகள் கட்டளையிட்டனர். இந்த ஆணைகளைத் திரும்பப் பெற வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்டது. உடனே பெரிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு, முக்காடு போட்டு, சென்னைக்கு இழுத்துச் செல்லப் பெற்றனர். அங்கு வழக்கு விசாரணைக்குப் பிறகு, 900 சாட்டையடிகள் அவர்கள் ஒவ்வொருவர்க்கும் கொடுக்கப்பட்டன.

---

*ஆதாரம் – திரு. ந. சஞ்சீவி எழுதிய '1806'

'வேலூர்ப் பட்டாளம்' என்ற பிரிவு கலைக்கப்பட்டு, புதிய படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளால் மனம் கொதித்த இராணுவ வீரர்கள் வேலூர்க் கோட்டையில் நள்ளிரவுதோறும் மறைவாகக் கூடி 'வெள்ளை ஆதிக்கத்தை வேரறுப்போம்; அடக்குமுறையை எதிர்த்தே தீருவோம்; நாமார்க்கும் குடியல்லோம்; நரகத்தில் இடர்ப்படோம்' என்று முடிவு செய்து, புரட்சி வேலைக்கான ஏற்பாடுகளை மறைமுகமாகச் செய்த வண்ணமாக இருந்தனர்.

1806 ஜூலை 10, இராணுவ நாள். அன்று அதிகாலையில் பயிற்சி செய்வதற்காக, 92 இரவு சிப்பாய்கள் கோட்டைக்குள் உறங்க அனுமதிக்கப்பட்டனர். எதிர்பாராத விதமாக வெள்ளைக்காரத் தளபதி ஓய்விலிருந்தமையால், அவனுக்குப் பதிலாகத் தலைவனாக அன்றிரவு ஜமேதார் ஷேக் காசிம் என்பவன் பணியாற்ற நேர்ந்தது, இந்திய வீரர்களின் புரட்சித் திட்டங்களுக்குப் பேருதவி யாயிருந்தது.

இராணுவ நாளில், வெள்ளையரால் சூழப்பட்டிருந்த கோட்டையின் தலைவாயில் நோக்கி இந்திய வீரர்கள் குண்டு மழை பொழிந்தனர். துப்பாக்கிகளை வெடித்தனர்; கோட்டையின் பல பகுதிகளைக் கைப்பற்றினர். வெள்ளையர் தளபதியின் வீடும் முற்றுகையிடப்பட்டது. 191 வெள்ளையர் கொலை செய்யப்பட்டனர். காப்டன் மாக்லாச்சன் என்பவன் தொடையில் நம் வீரர் குறி பார்த்து சுட்டனர். இந்நிலையில் ஆர்க்காட்டிலிருந்து ஒரு பெரும் படையுடன் காப்டன்யங், லெப்டினன்டு உட்ஹவுஸ் முதலியோர் வேலூர்க் கோட்டை வாயிலுக்கு வந்து கதவுகளைப் பீரங்கிகளால் பிளந்தனர். ஆர்க்காட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட கூலிப்படையின் துணையால் வேலூரில் புரட்சி

தற்காலிகமாக அடக்கப்பட்டது. மழை விட்டும் துவ் வானம் விடவில்லை; அப்புரட்சியில் பங்கு கொண்டவர் களுக்குச் சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப் பட்டன. அதன் எதிரொலியாக அண்டை மாவட்டங்க ளான செங்கற்பட்டிலும் சேலத்திலும் வாலாஜாபாத், சங்கரிதுர்க்கம் ஆகிய இடங்களில் குமுறல் இருந்தது; ஆனால், அவை முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன. 1806-இல் வேலூர்ப் புரட்சி நடைபெற்று முடிந்துவிட்ட போதிலும் அதன் விளைவு பல ஆண்டுகள் வரை இருந்தது. மீண்டும் வேலூரில் சிப்பாய்க் கலகம் ஏற்படுமோ என்ற நிலை 1869 வரை பல தடவை நிலவியது. வெள்ளையர் அச்சத்துடனேயே இருந்து வந்தனர்.

கேசவப்பிள்ளை

மேலே கூறிய நிகழ்ச்சிகள் நிலவியபோது, 1860-இல் இம்மாவட்டத்தில் கேசவப்பிள்ளை என்பவர் பிறந்தார். இவர் இளம் வயதிலேயே பல இயக்கங்களைத் தொடக்கி வைத்து, இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியின் கொள்கைகள் பரவுவதற்கு முன்னரே தேசிய உணர்ச்சியை வடஆர்க்காடு மாவட்டத்தில் பரப்பியவர் ஆவார். சேலம் விசயராகவாச் சாரியாரோடு சேர்ந்து பணியாற்றிய தலைசிறந்த தேசபக்தர் கேசவப் பிள்ளையே.

கிலாபத் இயக்கம்

வட இந்தியாவில் கிலாபத் இயக்கம் உச்ச நிலையில் இருந்தபோது, இந்த மாவட்டத்திலும் இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு, நாட்டுணர்ச்சியுடன் நடந்து கொண்டனர். அந்த நல்ல வாய்ப்பை நழுவவிடாது, ஆறணி சுப்பிரமணிய சாஸ்திரியார் ஒத்துழையாமை இயக்கத்துக்கு வித்திட்டார். அக்காலத்தில் வெங்கந்தூர் கணபதி சாஸ்திரிகளும் தேசியப் பிரசாரம் செய்தார்.

திருவண்ணாமலை மாநாடு

1924-இல் தமிழ்நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி பெரிய அளவில் ஏற்பட்டது. அவ்வாறு ஏற்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியது 30-ஆவது தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடு ஆகும். அம்மாநாடு திருவண்ணாமலையில் பெரியார் ஈ.வே.ரா. தலைமையில் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாநாடு, வட ஆர்க்காட்டைத் தேசியக் கோட்டையாக வளர்த்தது; 'சுகோதயம்' என்ற இதழை நடத்திய ஆறணி அரங்கசாமி அய்யங்கார், திருவண்ணாலை நா. அண்ணாமலைப்பிள்ளை, வி.எம். உபயதுல்லா போன்றோரை உருவாக்கிற்று. அண்ணா மலைப்பிள்ளையின் அயராத முயற்சிகளாலும் தியாகத் தாலும், திருவண்ணாமலை தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் நல்லிடம் பெற்றிருக்கிறது.

உப்பு சத்தியாக்கிரகம்

உப்பு சத்தியாக்கிரகம் நடைபெற்ற காலத்தில் பல வகையான அடக்கு முறைகள் ஏற்பட்டன. இந்த அடக்கு முறைகளுக்கு எதிர்ப்பு வட ஆர்க்காடு மாவட்டத்தில் பலமாக இருந்தது. வேலூர், குடியேற்றம், ஆர்க்காடு, சோளிங்கர் ஆகிய இடங்களில் வன்முறையான நிகழ்ச் சிகள் கூட நடைபெற்றன. அந்த அளவுக்குப் பொது மக்களுடைய நாட்டுணர்ச்சி சுடர்விட்டு எரிந்தது.

வேலூர்ச் சிறை

1930-க்கும் 1936-க்கும் இடையேயும், மீண்டும் 1941-க்கும் 1944-க்கும் இடையேயும் பல போராட்டங்கள் நாடெங்கும் நடைபெற்றன. அவற்றில் ஈடுபட்ட தென்னிந்தியத்

தலைவர்கள் அனைவரும் இம்மாவட்டத்து வேலூர்ச் சிறையில் சில ஆண்டுகள் வாழ்ந்தனர். இது, இம்மாவட்டத்து மக்களின் அரசியல் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. சிறையினின்றும் விடுதலை பெற்ற அரசியல் தலைவர்கள் அனைவரும் வேலூரில் உணர்ச்சி மிகுந்த சொற்பொழி வாற்றிவிட்டுத்தான், தம் ஊருக்குப் புறப்பட்டனர்.

தேசிய ஏடுகள்

தேசிய இயக்கத்துக்கு ஆதரவாகப் பல பத்திரிகைகள் இம்மாவட்டத்தில் வெளிவந்தன. அவற்றுள் (நாம் வேறு இடங்களில் குறிப்பிட்டவை தவிர) இராணிப்பேட்டையி லிருந்து வெளிவந்த 'ஜெய் பாரத்' என்ற இதழும், திருவண்ணாமலையிலிருந்து தேசபக்தர் வெ.வா. திலக் சாஸ்திரி ஆசிரியராக இருந்து நடத்தி வந்த 'தெரியுமா?' என்ற இதழும் முக்கியமானவை. 'தெரியுமா?'வில் தேசிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள் வாசகர்கள் மனத்தை உருக்கும் நிலையில் வெளியிடப் பெற்று வந்தன.

தேசிய நகர்கள் சங்கம்

வட ஆர்க்காடு தேசிய நடிகர் சங்கம் 1925 முதல் 1947 வரை நாடகங்கள் நடித்து, இம்மாவட்டத்திலும் இதை யடுத்துள்ள மாவட்டங்களிலும் தேசிய உணர்ச்சியை ஊட்டி வந்தது. திலக் சாஸ்திரி, போளூர் புண்யகோடி செட்டியார், எஸ்.எஸ். நாகேசுவரன் ஆகியோர் இதை நடத்தி வந்தனர்.

தனி நபர் சத்தியாக்கிரகம்

1939-இல் உலகப் போர் ஏற்பட்டது. இந்திய தற்காப்புச் சட்டத்தின்கீழ் புதிய விதிகள் செய்யப்பட்டன. அவ் விதிகளின்படி தமிழ்நாட்டில் முதலாவதாகக் கைது

செய்யப்பட்டவர் இம்மாவட்டத்து ஜமத்கினி ஆவார். இவர் வேலூரிலிருந்து 'வீர சுதந்திரம்' என்ற வார இதழை நடத்தி வந்தார்.

வினோபாவின் சத்தியாக்கிரகத்தைப் போன்று தமிழ் நாட்டில் யார் யார் சத்தியாக்கிரகம் செய்யலாம் என்ற பட்டியலைக் காந்தியடிகளிடம் காட்டி இசைவு பெற, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசர் வர்தாவுக்குச் சென்றார். செல்லும் வழியில் அவர் கைது செய்யப்பட்டார்; அப்போது, தமிழ்நாடு காங்கிரசின் தலைமையை ஏற்று, தனிநபர் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி வைத்தவர் வேலூர் வி.எம். உபயதுல்லா ஆவார்.

1942

1942-ஆம் ஆண்டு நடைபெற்ற உரிமைப் போராட்டத்தில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் மிகப் பெரிய அளவில் கிளர்ச்சி நடைபெற்றது. தந்தி, டெலிபோன், கம்பிகள் அறுக்கப்பட்டன. வேலூரில் போலீசார் வாழ்ந்த குடிசைகளும், வேலூருக்கு அருகே காட்டு இலாகா வினரின் தங்குமிடங்களும், பணப்பாக்கம், திமிரி என்னு மிடங்களிலுள்ள சாவடிகளும், பணப்பாக்கத்திலுள்ள பொதுப் பணித்துறைக் கட்டிடமும் தீக்கிரையாயின. பொருள்களை ஏற்றிச் செல்லும் இரயில் ஒன்று சேதப்படுத்தப்பட்டது.

அயலவருக்கு ஆட்சியை நல்கிய ஆர்க்காடு மாவட்டம், அயலவரின் ஆட்சியை அறவே அகற்றும் போராட்டத்திலும் பங்கு கொண்டது பொருத்தமே யாகும்.

✦ ✦ ✦

11. தமிழ்ப் பணி

வட ஆர்க்காடு மாவட்டத்து மக்கள் தமிழ்ப் பற்று மிக்கவர்கள். ஓயாத போர்களும் பிற மொழியாளர் படையெடுப்புக்களும் நிகழ்ந்தமையால் இம் மாவட்டத்தில் தமிழ்மொழி வளர்ச்சி சில நூற்றாண்டுகள் தடைப்பட்டது.

தொண்டை மண்டலச் சதகத்தில் இம்மாவட்டத்தைச் சேர்ந்த புலவர் பலரது வரலாறு கூறப்பட்டுள்ளது. "தொண்டை நாடு சான்றோர் உடைத்து" - என்பது அவ்வையார் வாக்கு. சங்கப் புலவர் சிலர் இம்மாவட்டத்தினர் என்பது நன்னன் நாட்டைப் பற்றிய குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. நன்னன் நாடு திருப்பதிவரை பரவியிருந்ததாகவும் சந்திரகிரியில் அவனுடைய அதிகாரிகள் ஆண்டதாகவும் தெரிகிறது. திருவண்ணாமலைக்கு அருகேயுள்ள 'ஆவூர்' என்னும் சிற்றூர் ஆவூர் மூலங்கிழார் என்ற சங்கப் புலவரை நினைவூட்டுகிறது. ஆர்க்காடு கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் என்ற புலவர் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறார்.

கலம்பகம் என்ற சிறு பிரபந்தவகை தோன்றுவதற்குக் காரணமாக இருந்த நந்திக் கலம்பகம் இம்மாவட்டத்தில் எழுந்ததேயாகும்.

தமிழ்ப் புலவர்களில் தலைசிறந்தவராகிய கம்பர் காஞ்சிபுரத்திலிருந்து மதுராந்தகத்திற்குச் செல்லும் வழியில், இம்மாவட்டத்துத் தூசிமாமண்டூர் வழியாகச் சென்றதாகவும் அப்போது அவருடைய எழுத்தாணியை அவ்வூர்க் கருமான் தீட்டிக் கொடுத்ததாகவும் கூறுவர்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவரான அஷ்டாவதம் சுப்பராயச் செட்டியார், பல நூல்களைப் பதிப்பித்தும் விரிஞ்சிநாதர் சதகத்தை ஆக்கியும் உள்ளார். ஆம்பூர் ஐயாத்துறை முதலியார் 'ஒரு துறைக்கோவை' என்னும் இலக்கியத்தைப் படைத்திருக் கிறார்.

முருகன் தமிழ்க் கடவுள். முருகனைப் பற்றிய இலக் கியங்கள் தமிழ் மொழிக்கு அணி செய்வன. 'குன்றுதோ றாடும் குமரக் கடவுளை' பல குன்றக் கோட்டமாகிய இம்மாவட்டத்து அருணகிரியார் நெஞ்சுருகப் பாடி யுள்ளார். தமிழ் நாடெங்கும் உள்ள முருகன் திருத்தலங் களுக்குச் சென்று பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இவர் பாடிப் பரவிய பாக்களே திருப்புகழாகும். சுந்தரனுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி போன்ற நூல்களையும் இவர் அருளியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சியில் ஐந்து பகுதிகள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று பாடநூல்கள் எழுதி வருதல். இரண்டு பொழுது போக்குக் கட்டுரைகளைச் சுவைபட எழுதுதல். மூன்று தமிழாசிரியர்களை உருவாக் குதல். நான்கு ஆங்கில மொழியில் தமிழ் இலக்கியங் களைத் தருதல். ஐந்து, நாவல் போன்ற புதிய துறைகளிலும், மொழிநூல் போன்ற புதிய ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுத் தமிழ்ப் பணி புரிதல். இந்த ஐந்து வகைப் பணிகளிலும் இம்மாவட்டம் சிறந்து விளங்குகிறது.

ஒன்று: தமிழ்ப் பாடநூல் எழுதுவதில் பலர்க்கும் வழிகாட்டியாக விளங்கியவர் கா.ரா. நமச்சிவாய முதலியார். இவர் இம்மாவட்டத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் பிறந்தவர். இவர், தமிழ்க்கடல் வாசகம், இளைஞர் இலக்கணம் போன்ற நூல்களால் மாணவர் உலகைக் கவர்ந்தவர்.

இரண்டு: மகிழ்ச்சியூட்டும் வகையில் நகைச்சுவைக் கட்டுரைகள் பல எழுதித் தொண்டாற்றியவர் க.ப. சந்தோஷம் என்னும் மகிழ்நன் ஆவார். இவர் வேலூரில் வாழ்ந்தவர்.

மூன்று: தமிழ்ப் புலவர் பலரை உருவாக்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆறணி வட்டம் காமக்கூர் சுந்தர முதலியாரும், வில்வாரணி மல்லிகார்ச்சுனம் பிள்ளையும், டாக்டர் மு.வ.-வும் ஆவர். சுந்தர முதலியாரிடம் பாடம் பயின்றவர் பலர் ஆவார்; அவர் மகன் முத்து சு. மாணிக்க வாசக முதலியார் தருமை ஆதீனத் தமிழ்க் கல்லூரியில் (1960 வரை) முதல்வராக இருந்தார்.

நான்கு: திருவத்தியூரில் பிறந்த பாலசுந்தர நாயக்கர் பத்துப் பாட்டைப் பற்றி ஆங்கில மொழியில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஐந்து: வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த சௌரிப்பெருமாள் அரங்கனார் குறுந்தொகையை முதலில் அச்சிட்டு, புதிய உரை எழுதியவரும் ஆவார்.

பழைய இலக்கியங்களுக்குப் புது விளக்கம் தருதல், கற்றோர் நெஞ்சத்தைக் கவரும் வண்ணம் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ற நாவல்கள் புனைதல், மொழிநூல் துறையில் புதியன படைத்தல் போன்ற பணிகளைச் செய்து வரும் டாக்டர் மு. வரதராசன் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவரே.

தமிழ்ச் சுருக்கெழுத்து முறை இம்மாவட்டத்தில் ஏற்பட்டதே. விவரம், ஒன்பதாம் கட்டுரையில் கூறுவோம்.

தமிழ்த் திருநாட் பேரவை, 1937 முதல் ஒவ்வோ ராண்டும் வேலூரில் விழாக் கொண்டாடுகிறது. இந்த அவையின் தலைவர் அண்ணல் தங்கோ ஆவார். இவரது

தமிழ்த் தொண்டும், குறள்பற்றும் நாடறிந்தவை ஆகும். இவர் சிற்றூர்தோறும் சென்று பாரதி பாடல்களைப் பரப்பியவர்; "தமிழ் நிலம்" இதழை 1947-1948இல் நடத்தியவர்.

பாரதம், இராமாயணம் படித்தலும் படிக்கக் கேட்டலும் இம்மாவட்டத்தில் மிகுதியாக உள்ளன. சமயச் சொற்பொழிவுகளால் தமிழ் மக்களைத் தம் பால் ஈர்க்கும் கிருபானந்தவாரியார் இம்மாவட்டத்தினரே.

திருவண்ணாமலையில் திருக் கார்த்திகைத் தீபத்தின் போது கோயிலில் உள்ள சத்திய விலாச சபை என்னும் மண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. இவை தேவஸ்தானத்தாரால் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இவ்வாறே ஆகஸ்டு 15-ஆம் நாளில் திருப்புகழ் பஜனையும் மறுநாள் திருக்குறள் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை, தேவிகாபுரம், திருவோத்தூர், செங்கம், பள்ளிகொண்டை ஆகிய இடங்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் தமிழ்க் கல்லூரி ஒன்றும் இல்லை. குறிப்பிடத்தக்க தமிழ் இதழ்கள்* வெளிவரவும் இல்லை.

1958-இல் வட ஆர்க்காடு தமிழ் எழுத்தாளர் சங்கம் தொடங்கப் பெற்றிருக்கிறது. இதன் அலுவலர்கள் தேவராஜ முதலியார் M.L.C., (தலைவர்), வழக்கறிஞர் ப. தாண்டவராயன் (செயலாளர்), சுமைதாங்கி மார்க்கபந்து சர்மா (துணைத் தலைவர்) ஆகியோர் ஆவர்.

இனி, இம்மாவட்டத்தின் ஊர்ப் பெயர்கள், மக்கள் பெயர்கள், வழக்குச் சொற்கள், மரபுத் தொடர்கள். பேசசு

*இம்மாவட்டத்திலிருந்து வெளிவரும் தமிழ் இதழ்களாவன: சமத்துவச் சங்கு, (பள்ளிகொண்டை), மாத சோதிடம் (வேலூர்), புரோகிதம் (ஆர்க்காடு), சத்தியசாட்சி (திருப்பத்தூர்).

மொழி, பழமொழிகள், நாட்டுப் பாடல்கள் ஆகியவற்றைத் தெரிவிப்போம்.

ஊர்ப் பெயர்கள்

வடாற்காடு என்று சிலரும், வடார்க்காடு என்று சிலரும் எழுதுகின்றனர். வட ஆர்க்காடு என்பதே சரியான வடிவம். இச்சொல் 'ஆர்க்காடு' என்ற வடிவிலேயே சங்க நூல்களில் காணப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள பல ஊர்களின் பெயர் அழகானவை. பொருளாழமும் உடையவை. சவ்வாது மலைமீதுள்ள ஊர்கள் நல்ல தமிழ்ப் பெயர்களை உடையவை. புலியூர், பலாமரத்தூர், மாமரத்தூர், நெல்லி வாசல் முதலியவை மலைமீதுள்ள ஊர்கள். இப்பெயர்கள் இயற்கையாக உள்ளன.

கேட்பதற்கு அழகான பல பெயர்கள் உண்டு; வாழைப் பந்தல், தாழங்குப்பம், தாமரைப் பாக்கம், அத்திப்பாடி போன்ற பெயர்களும், குயிலம், குருவிமலை, ஆனைமங் கலம் போன்ற பெயர்களும் எண்ண எண்ண இன்பந் தருகின்றன. மண்மலை, உச்சிமலைக் குப்பம், குன்றத்தூர் முதலியவை குறிஞ்சி நில ஊர்கள். வளவனூர், முத்தனூர், முடியனூர், மலையனூர் முதலிய ஊர்ப் பெயர்கள் மக்கள் பெயரால் வழங்குகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள 'திருப்பத்தூர்' என்று வழங்கும் ஊர் "திருப்புத்தூர்" என்பதே என்று கருதுபவர் உண்டு. மக்கள் பேசும்போது திருப்புத்தூர் என்றே வழங்குகின்றனர்.

குறிஞ்சிவளம் மிகுதியாக இருப்பதால், இம்மாவட் டத்தில் பல குன்றத்தூர்கள் உள்ளன. போளூர் அருகே ஒரு குன்றத்தூர்; களம்பூர் அருகே ஒரு குன்றத்தூர்- இன்னும் எத்துணையோ? குன்றுக்கு அருகே இருப்பதெல் லாம் குன்றத்தூர்தானே?

மலைச்சரிவுக்கு 'அடுக்கம்' என்ற சொல் மணிமேகலையில் ஆளப் பெற்றிருக்கிறது; வேலூரருகே மலையடிவாரத்தில் 'அடுக்கம்பாளையம்' என்ற பெயருடைய ஊர் இருக்கிறது.

ஆணாய்ப் பிறந்தான், நல்லாண்பிள்ளை பெத்தாள், விருது வாங்கினான், மின்னல், குரங்கணில் முத்தம், சுமைதாங்கி, பெருமணம், வேதாந்தவாடி, பவுத்திரம் என்ற பெயர்களுடைய ஊர்களும் இம்மாவட்டத்தில் உள்ளன.

பட்டு, பாடி, பள்ளி, ஏடு, பாத் என்ற இறுதிச் சொற்களுடைய ஊர்கள் இம்மாவட்டத்தில் ஏராளமாக உள்ளன. மாம்பட்டு, தண்டரம்பட்டு, சேத்துப்பட்டு, வளையாம்பட்டு, காயம்பட்டு, மூஞ்சூர்ப்பட்டு, வேப்பம்பட்டு, முனுகப்பட்டு, பேரணாம்பட்டு, துத்திப்பட்டு என்பன 'பட்டு' என்னும் இறுதிச் சொல்லுடன் கூடியன; பட்டி என்பதன் மரூஉவே பட்டு.

காட்டுப்பாடி, தானிப்பாடி, வேல்பாடி, கஸ்தம்பாடி என்னும் 'பாடி'கள் படை தங்கிய இடங்களாகும்.

மடப்பள்ளி, சுந்தரம்பள்ளி, நாட்டறம்பள்ளி, பனியாண்டபள்ளி போன்றவை ஒரு காலத்தில் சமணப் பள்ளி இருந்த இடங்களாக இருக்கலாம்.

நாகவேடு, படவேடு, தாராப்படவேடு என்பன 'ஏடு' என்று முடிகின்றன. படைவீடு என்பது படவேடு என்று மருவியிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.

மல்லவாடி, தோக்கவாடி, ராவந்தவாடி, நத்தவாடி, அரட்டவாடி என்பன 'வாடி' என்னும் ஈற்றுச் சொல்லுடைய ஊர்களாகும்.

வாலாஜாபாத், அக்பராபாத், முன்ஷதாபாத் என்பன முஸ்லிம் செல்வாக்கு மிகுந்த நாளில் ஏற்பட்ட ஊர்கள். உருது மொழியில் 'பாத்' என்பது நகரத்தைக் குறிக்கும். வட

இந்தியாவில் ஆமதாபாத் அலகாபாத் போன்ற நகரங்கள் இருப்பது நாம் அறிந்ததே.

மக்கள் பெயர்

அண்ணாமலை, வேதபுரி, மார்க்கசகாயம் என்ற ஆடவர்ப் பெயர்களும் உண்ணாமுலை, மரகதவல்லி, பாலகுசம், செங்கமலம் என்ற பெண்டிர்ப் பெயர்களும் இம்மாவட்டத்தில் மிகுதி. நாட்டுப்புறங்களில் வாழும் மக்களின் பெயர்கள் நல்ல தமிழில் அமைந்துள்ளன. பூமாலை, சோலை, முத்து, ஈட்டி, சூலன், வேலு, ஆண்டி, தாதன், பொன்முடி, மாரி முதலிய பெயர்கள் ஆண் களுக்கும்; சங்கு, வனமயில், பச்சை, அல்லி, வள்ளி போன்ற பெயர்கள் பெண்களுக்கும் உண்டு.

குழந்தைவேல், அண்ணாமலை, முருகன், வையாபுரி போன்ற பெயர்கள் மிகுதியாக வழக்கில் உள்ளன. பெண்களுக்குச் 'சென்னம்மா, அம்மணியம்மா' ஆகிய பெயர்கள் மிகுதியாக வைக்கப்படுகின்றன. ஆண்களுக்கு பூங்கான், செங்கான், மண்ணாங்கட்டி, மொட்டைத் தலையன், ஊமையன், சுருட்டையன், சோணையன், தலைவிரிச்சான், அனிச்சன் என்ற பெயர்கள் செங்கம் வட்டத்திலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உண்டு.

வழக்குச் சொற்கள்

இம்மாவட்டத்தில் மட்டுமே சிறப்பாக வழங்கும் சில சொற்களும், அவற்றின் பொருளும் கீழே தரப்படுகின்றன.

நொள்ளை	-	குருடு
களேபரம்	-	குழப்பம்
சேந்துதல்	-	(நீர்) இறைத்தல்
தோண்டி	-	இரும்பால் செய்த நீர் முகக்கும் பாத்திரம்
குந்து	-	உட்கார்

சுடாசுதல்	- வீசி எறிதல்
வாராவதி, பதனம்	- பாலம், அணைக்கட்டு
பொகுறு	- வீண்கர்வம், செருக்கு
மந்தைவெளி	- ஊர் மாடுகள் நிற்குமிடம்
சாபனை	- சாபம்
இஷ்டகாரன்	- நண்பன்
நாஷ்டா	- காலை உணவு
நத்துதல்	- நம்பூதல், அண்டி வாழ்தல்
காபிரி	- காட்டுமிராண்டி
சேமக்கலம்	- வட்ட வடிவான, ஒலி செய்யும் தகடு
தப்பை	- ஒருவகையான கொட்டுக் கருவி
தாரை	- செப்பினால் செய்த ஊது குழல்
தொண்டான்	- நீர் இறைக்கப் பயன்படும் தோல் பை
கப்பரை, மொந்தை, பல்லா	- மட்பாண்டங்களின் வகை
கூசம்	- தூண்
தூலம்	- Beam, உத்தரம்
மொசுடு	- சொல் பேச்சுக் கேளாத பிள்ளை
கூத்து நெல் குத்துதல்	- விற்பனைக்காக அரிசி தயாரித்தல்
கொட்டனம்	- அரிசி வியாபாரம்; நெல் குத்தி அரிசி விற்றல்
ரவ	- சிறிது
அத்தை	- அதை (அது+ஐ)
இத்தை	- இதை (இது+ஐ)
இக்கடா	- இவ்வளவு
துக்கிணி	- சிறிது

கண்ணேறு	-	திருஷ்டி
கண்ணாறு	-	ஆற்றின் குறுக்கே அமைந்த அணையில் நீர் செல்லும் வழி
கொடுவாள்	-	வளைவாய்ச் செய்யப்பட்ட வெட்டும் கத்தி
தெளிவு	-	பதநீர், பனஞ்சாறு
நூக்குதல்	-	தள்ளுதல் (நூக்கித் தள்ளி விட்டான்)
ஐயன்	-	பெரியவர்களைக் குறிப்பிடும் விளிச் சொல்
புழுதி ஓட்டல்	-	நிலத்தில் முதலில் ஏர் உழுதல்
சேடை கலக்கல்	-	புழுதி ஓட்டிய பிறகு தண்ணீர் பாய்ச்சி மறு ஏர் ஓட்டுதல்
வழிகட்டி அடிக்கிறது	-	வழி மறித்துத் திருடுதல் (Highway Robberry)

வழக்காறும் மரபுத் தொடரும்

இம்மாவட்டத்தில் உள்ள வழக்காறுகளையும் மரபுத் தொடர்களையும் அவற்றின் பொருளையும் காண்போம்:

நிலைநிறுத்தல்: வாழும்படி செய்தல்.

கொடியோடுதல்: குழந்தை குட்டியோடு வாழ்தல்

ஏழு மூணு தெரியாமல்: நன்மை தீமை அறியாமல்

தத்தம் பண்ணுதல்: திரும்பி வராது என்று தெரிந்தும் கொடுத்து விடுதல்.

ஒழுங்குமுத்தன்: எதிலும் அளவுக்கு மிஞ்சி ஒழுங்கு (சுத்தம்) கடைப்பிடிப்பவன்.

தலை காய்ந்தவன்: ஏழை, ஏமாந்தவன்

பாக்கு பிடித்தல்: முன்னர் நன்மை செய்தவர்க்கே கெடுதல் செய்தல்.

கொட்டை நூற்றல்: நூல் நூற்றல்

அள்ள துள்ளப் போதல்: அகால மரண மடைதல்

வாமூட்டு போட்டுக் கொள்ளல், வாசாம்பு: வாங்கியதைத் திருப்பித் தராமல் ஏமாற்றுதல்.

அடுப்பில் பூனை தூங்குதல்: அடுப்பு மூளாதிருத்தல், பசியோடு இருத்தல்.

பால் மாறுதல்: சோம்பல் மேற்கொள்ளல்.

நுளைத்தனம்: அருவருக்கத்தக்க கீழ்மை.

அங்கைப்படுதல்: பிறர்க்கு அடங்கி வாழ்தல்.

பேச்சு மொழியில் பழந்தமிழ்ச் சொற்கள்

இம்மாவட்டத்துப் பேச்சு மொழியில் பழந்தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவை எளிய மக்களின் அன்றாட உரையாடலில் ஒலிக்கின்றன.

'கட்டை' என்ற பொருளைத் தரும் 'குறடு' என்ற சொல் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. "சந்தன மென் குறடு" - என்பது அவ்வையார் வாக்கு. இங்கு வாழும் மக்கள் "சந்தனக் குறடு" என்று வழங்குவதைக் கேட்டும் போது மகிழ்ச்சி பிறக்கிறது.

'சாக்காடு' - என்ற இலக்கியச் சொல்லுக்குச் சாவு (மரணம்) என்பது பொருள். "மரத்திற்குச் சாக்காடு வந்து விட்டது" என்றால், "ஈரம்பட்டு மரம் மக்கி, உளுத்துப் போய்விட்டது" என்பது பொருள்.

'முரம்பு' என்ற சொல் வலிய மேட்டுப் பகுதியைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொல். அகநானூற்றில் இடம் பெற்றுள்ள இச்சொல் இந்நாள் மக்களின் பேச்சிலும் இடம் பெறுகிறது.

'மொக்குதல்' என்ற பழைய சொல்லுக்கு நிறைய உண்ணுதல் என்பது பொருள். நற்றிணை, புறநானூறு முதலிய நூல்களில் இச்சொல் ஆளப் பெற்றுள்ளது.

"சோற்றை 'மொக்கி' விட்டான்" என்று கூறினால், "சோறு நிறைய உண்டான்" என்பது பொருள்.

"மிதப்பு" என்ற சொல் சங்க நூலில் வெண்ணெய் என்ற பொருளில் வருகிறது. இங்கே சிலர் வெண்ணெய்யை "மிதவை" என்பர். பாண்டி நாட்டில் 'மிதப்பு' என்ற சொல் நிலவி வருகிறது.

கடைத்தெரு முற்காலத்தில் "அங்காடி" எனப்பட்டது. (இது தெலுங்கில் "அங்கிடி" ஆகிவிட்டது.) இன்றும் "அங்காடிக் கூடையை அநியாய விலை கூறாதே" என்று தலையில் காய்கறிக்கூடை சுமந்து விற்போர் கூறுவர்.

'வணக்கம்' என்ற சொல் சங்கத் தமிழில் 'வளைதல்' என்னும் பொருளில் வருகின்றது. "கயிறு வணக்கமாக இல்லை" என்றால் "கயிறு சரியாக வளைந்து கொடுக்க வில்லை" என்று பொருள்.

"கை" என்ற சொல்லுக்குச் "சிறிய" என்பது பொருள். கைவிறகு, கைஆள் என்று சொன்னால் சிறிய விறகு, சிறிய ஆள் என்று பொருள்.

"அற" என்ற சொல்லுக்கு முழுதும் என்பது பொருள். இது குறுந்தொகையுள் அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை என்ற அடியில் இடம் பெற்றுள்ளது இங்குள்ள மக்கள் "முழுதும் கொடு" என்பதை "அற கொடு" என்பர்.

தமிழ்ச் சொல்லின் ஆட்சி

தமிழில் எழுதுவோர் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்கு நேரான - சரியான நல்ல தமிழ்ச் சொற்கள் பல வழங்குகின்றன.

உடம் (ன்) பிறந்தாள்	-	சகோதரி
தீம்பு	-	கஷ்டம்
துப்பு	-	சாமர்த்தியம்
விசிப்பலகை	-	Bench
நீர்ச்சீலை	-	கோவணம்
சாறு	-	சாம்பார்
கடைக்கால்	-	அஸ்திவாரம்
ஆண்டை	-	எஜமான்
சேப்புகட்டுதல்	-	சேகரித்தல்

வேற்றுமொழிச் சொற்கள்

பேச்சு வழக்கில் சில தெலுங்குச் சொற்கள் கலந்து தமிழ் போல் ஆகிவிட்டன.

மா அறைத்தல் (அல்லது) ஆட்டுதல் என்பதை, மாவு "ருப்புதல்" என்பர். கரும்புத் துண்டை, கரும்பு "கெட" என்பர். கெட்ட நாற்றம் வரும்போது "கப்பு" அடிக்கிறதே என்பர். இவற்றில் ருப்பு, கெட, கப்பு என்பவை தெலுங்குச் சொற்கள்.

"உஷார், சவ்வாரி, ஜோலி, திம்மாக்கு, ஜல்தி, போனி" போன்ற உருதுமொழிச் சொற்களும் இம்மாவட் டத்துப் பேச்சில் இடம் பெற்றுள்ளன.

பேச்சும் ஒலியும்

இம்மாவட்டத்தில் பேச்சொலி இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. இம்மாவட்டத்தின் நடுவே சுவர் வைத்ததுபோல் நிற்கும் சவ்வாது மலையே ஒலி மாறு பாட்டிற்குக் காரணம். அம்மலை, மக்கள் போக்குவரத் தைக் குறைத்து, அவர்களுடைய பேச்சொலியையே மாற்றி விடுகிறது.

செங்கத்தில் வாழும் மக்கள் பேசும் பேச்சுக்கும், திருவண்ணாமலையில் வாழ்வோர் பேச்சுக்கும், திருப் பத்தூர் மக்கள் பேச்சுக்கும், வேலூர் மக்கள் பேச்சுக்கும் ஒலிமுறையில் வேறுபாடு உண்டு.

செங்கம் பகுதியில், "பாட்டன் வந்து பெரி மாட்டெ இஸ்துகினு பூட்டான்" என்று பேசிக் கொண்டால் "பாட்டன் வந்து பெரிய மாட்டை இழுத்துக் கொண்டு போய்விட்டான்" என்று பொருள்.

திருப்பத்தூர்ப் பக்கம் பேசும் பேச்சைக் கவனிப்போம்: "வகுறு வேக! எமுட்டு தின்றான் பாரு" என்றால், 'வயிறு வேக! எவ்வளவு தின்றான் பார்' என்று பொருள்.

திருவண்ணாமலையில் உள்ள ஒருவர் மாம்பழம் வாங்கிவரும்படி ஒரு சிறுவனை ஏவுகிறார்: "டே, பையா, போயி, ஒரு மாங்கா(ய்) பழம் நல்லதா பா(ர்)த்து வாங்கியா!"

வேலூரில் ரிக்‌ஷாக்காரன் பேசுகிறான்:

"நீ என்னா சாமி! இன்னிக்குத்தான் புச்சா என் வண்டிலே ஏறுறியா! குடுக்குறதே கொடுசாமி! நால்ணா குடுத்துடு சாமி!" இவன் ஜப்பானியர் குண்டு போட்டதும் சென்னையிலிருந்து வேலூர்க்குக் குடி வந்திருக்க வேண்டும்.

மாவட்ட வேறுபாடு

இங்கு வழங்கும் சில சொற்களும் மரபுத் தொடர் களும் மற்ற மாவட்டங்களில் வழங்குவதினின்றும் பொருளால் வேறுபடுகின்றன.

"**பொட்டை**" என்ற சொல், தஞ்சை மாவட்டத்தில் "கண் குருடு" என்ற பொருளைத் தரும். பொட்டை என்றால் இங்கே "பெண்" என்று பொருள்.

"கெட்டுப்போச்சு" என்று தஞ்சை, திருச்சி எழுத்தாளர்கள் எழுதினால், இங்குள்ளவர்கள் "தொலைந்து விட்டது" என்று பொருள் கொள்ளமாட்டார்கள். "உடைந்து விட்டது; நல்ல நிலையில் இல்லை" என்று எண்ணுவார்கள்.

கோயம்புத்தூரில் பெண்ணைக் குறிக்கும் "பிள்ளை" என்ற சொல், இம்மாவட்டத்தில் பொதுச் சொல்லாகக் குழந்தையைக் குறிக்கும். "என்ன 'பிள்ளை' பிறந்திருக்கிறது?" என்று கேட்பது இங்கு வழக்கம்.

"அய்யா" என்ற சொல் சில் மாவட்டங்களில் உயர்வான சொல்; "அப்பா" என்ற சொல் தாழ்வான சொல். இம் மாவட்டத்தில் இச்சொற்களுக்கு இவற்றுக்கு மாறான பொருள் உண்டு. "வாப்பா!" என்று சொன்னால் மகிழும் ஒருவர், "வாய்யா!" என்று சொன்னால் கோபித்துக் கொள்வார்.

"கம்பு" என்ற சொல், கழி அல்லது கோல் என்ற பொருளைத் தாராமல் "கம்பு" என்ற தானியத்தை மட்டுமே இங்கு குறிக்கும்.

"கத்துதல்" என்ற சொல் மதுரை மாவட்டத்தில் தாழ்வான பொருளில் (கழுதை கத்துதலைக் குறிக்கப்) பயன்படுகிறது. இங்கே அச்சொல் மிகுதியாகக் கூச்சலிடுவதைக் குறிக்கும்.

இராமநாதபுரத்தில் கருமாதிக்குப் "பந்தல்" போடுவர், இங்கே திருமணத்திற்கும் "பந்தல்" போடுவர்.

"தின்னு போட்டுப் போ!" என்று சேலம் கோயம்புத்தூர் மக்கள் பேச்சில் உள்ள "போட்டு" என்ற சொல், இம் மாவட்டத்து மக்கள் மொழியில் "விட்டு" என்றாகி விடுகிறது.

“வீணுக்காய் நெய்தான், வீம்புக்காய் செய்தான்” என்று திருச்சி மக்கள் பேசும் பேச்சில் உள்ள “ஆய்” இங்கு “ஆக” என்றாகி விடுகிறது. “வீம்புக்காக செய்தான்; சோற்றுக்காக உழைத்தான்” என்பர்.

“வந்துகிட்டு இருந்தான், பேசிக்கிட்டு இருந்தான்” என்ற தஞ்சாவூர்த் தமிழிலுள்ள “கிட்டு” இங்கே “கினு” ஆகிவிடுகிறது.

சிதம்பரம் பகுதியில் வழங்கும் “ஏல!” என்ற விளிச் சொல் இங்கு இல்லை. அதற்குப் பதிலாக “அடே, டே, அட” என்ற சொற்கள் வழங்குகின்றன.

“அவன் பாட்டுக்குப் போய்விட்டான்; நீ பாட்டுக்குச் சொல்லு” என்று பேசும் வழக்கம் இங்கும் உண்டு.

“தொலைத்துவிட்டான், காணாமல் போய்விட்டது” என்பனவற்றை, “தாரை வார்த்து விட்டான், தாரை வார்ந்து போய்விட்டது” என்று கூறுவர். தாரை வார்த்துத் தானம் கொடுத்த பொருளை மீண்டும் நினைக்கக் கூடாதல்லவா? தொலைந்து விட்ட பொருளையும் அப்படித்தானே கருத வேண்டும்?

இருவர் பேசுவதை-உரையாடுவதை அசதியாடுதல் என்பர்.

“செய்தல்” என்ற சொல்லுக்கு ஈடாக “பண்ணுதல்” என்ற சொல்லையே பயன்படுத்துகின்றனர்.

அப்பக்கம், இப்பக்கம் என்று குறிப்பிட வேண்டி யிருந்தால், ‘அந்தாண்ட, இந்தாண்ட’ என்று கூறுவர்.

ஒருவன் ஒரு வேலையைச் செய்யத் தயங்கினால், சோம்பல் கொண்டால்; அவன் அதைச் செய்யப் “பால்மாறு”கிறான் என்பர்.

இவ்வளவு பெரியது, அவ்வளவு பெரியது என்று கூற வேண்டியிருந்தால், இம்மாம் பெரிசு, அம்மாம்பெரிசு என்றோ, (திருச்சி மாவட்டத்தார் போல) இத்தசோடு, அத்தசோடு என்றோ கூறுவர்.

"இருக்கிறது" என்ற சொல் இங்கே "கீது" என்று குறுகி ஒலிக்கிறது.

"காடு" என்ற சொல் வயலையோ, கழனிகளையோ, குறிக்காமல் மரங்கள் அடர்ந்த பகுதியையே குறிக்கிறது. மேலும் சில சொற்களின் பின் நின்று பொருளற்று இருக்கிறது. பட்டிக்காடு, குப்பைக்காடு கொல்லைக்காடு - போன்ற சொற்றொடர்கள் வழங்குகின்றன.

மாங்காய்ப் பழம்

பிற மாவட்டத்தார் கேட்டால் பெரிதும் நகைக்கக் கூடிய இரு சொற்கள் இங்கு வழங்குகின்றன. இங்கு மாம்பழத்தை மாங்காய்ப் பழம் என்றும், வெந்நீரைச் சுடுத் தண்ணீர் என்றும் கூறுவர். "மாங்காய்" என்ற சொல் பொதுச் சொல்லாகி 'மா' என்ற சொல்லுக்குப் பதிலாக நின்று மாங்காய் மரம், மாங்காய் இலை, மாங்காய்த் தோப்பு, மாங்காய் பழம் என்று வழ்ங்குகின்றது.

தண்ணீர் என்ற சொல், "நீர்" என்ற சொல்லின் இடத்தைப் பிடித்துக் கொண்டு "வெந்நீர்" என்ற சொல்லை மறக்கச் செய்து, "சுடு தண்ணீர்" ஆகி விடுகிறது. பச்சைத் தண்ணீர், கஞ்சித் தண்ணீர், மழைத் தண்ணீர் முதலிய சொற்கள் வழக்கில் உள்ளன.

தண்ணீர் ஊற்றிக் கொள்ளுதல்

குளித்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் "தண்ணீர் ஊற்றிக் கொள்ளுதல்" என்று கூறுவர். "இம் மாவட்டத்து ஆறுகள் நீந்திக் குளிக்க ஏற்றவையல்ல.

குடத்தில் நீர் கொண்டு வந்து ஊற்றிக் கொண்டு தானே ஆக வேண்டும்" என்று காவிரிக் கரையில் பிறந்து வளர்ந்தவர் கேலி செய்வதில் பொருள் இல்லாமல் இல்லை.

அதற்காக, அவனுக்காக என்ற சொற்கள் இங்கு அதற்கோசம், அவனுக்கோசம் என்று வழங்குகின்றன.

அப்படிப்பட்டவன் என்ற பொருளில், "அப்படியாக் கொத்தவன்" என்று கூறுவர். இத்தகைய வழக்குப் புறப்பொருள் வெண்பாமாலை உரையிலும் இடம் பெற்றுள்ளது. பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெறும் போது, "நான் வரட்டுமா?" என்று கேட்டு, திருச்சியார், "வாங்க" என்று விடை தந்தால், "நம்மை அவர் கேலி செய்கிறாரோ?" என்று இம்மாவட்டத்தார் நினைத்துக் கொள்வார். (நினைத்ததும் உண்டு.)

"வரட்டுமா?" என்று சொல்லிப் பிரியும்போது, "சரி, செய்யுங்கள்," என்றோ, "போய் வாங்க" என்று தான் இங்கே கூறுவர்.

மதுரையார் தன் வீட்டிற்கு வந்த இம்மாவட்டத்தாரை நோக்கி, "அமருங்கள்" என்று பொருள்பட "இருங்க" என்று சொன்னால் இம்மாவட்டத்தார் உட்காரமாட்டார். "இரு" என்று இங்கே கூறினால், "நில்லு" என்று பொருள். "உட்காருங்கள்" என்று தான் இங்கே கூற வேண்டும்.

உயர்வுப் பன்மை - உயர்திணைக்குக் 'கள்'

பிற மாவட்டத்தாருக்குக் கோபமூட்டும் வழக்கு இங்கே உண்டு.

இங்குள்ள மக்கள் உயர்வுப் பன்மையை மிகமிகக் குறைவாகவே பயன்படுத்துகின்றனர். படிக்காத மக்கள் உயர்வுப் பன்மையை அறியார்.

"சாமி! நீ சொன்னேயே! பாத்து கூலி கொடு! உன் முகத்தைப் பார்த்துப் பிழைக்கிறேன்! நீதான் காப்பாத் தணும்!" என்று வேலைக்காரன் தலைவரிடம் பேசினால் அவன் மரியாதையின்றிப் பேசுகிறான் என்று பொருளில்லை. அவன் மிகமிக மரியாதையோடும், பயத்தோடும்தான் பேசுகிறான்! மற்ற மாவட்டத்தார் கேட்டால் எவ்வளவு கோபம் கொள்வர் அவன்மீது! என்ன செய்வது? அவன் பேசும் மொழி அப்படிப் பழகி விட்டது!

மாணவர்கள் ஆசிரியரிடத்தும், வயது வந்தவர்கள் தம் நண்பரிடத்தும், மகன் தந்தையிடத்தும், மனைவி தன் கணவனிடத்தும் பேசும்போது ஒருமையிலே உரை யாடுவர். அவர்கள் அதைக் குறையாக எண்ணுவதில்லை. மற்ற மாவட்டத்தாருடன் பழகும் போதுதான் குறை தெரிகிறது. இம்மாவட்டத்துப் பேச்சு மொழி உயர்வுப் பன்மையைப் புறக்கணித்துள்ளதை எண்ணி வருந்து பவரும் உளர்.

ஆனால், தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் இத்தகைய உயர்வுப் பன்மை இல்லை. "மன்னன் மொழிந் தான்; ஆசிரியன் கூறினான்" என்றே வழங்குகின்றன. பழந்தமிழ் வழக்கை இன்றளவும் போற்றி வருவது வட ஆர்க்காட்டுத் தமிழே என்பதை எண்ணும்போது மகிழ்ச்சி பிறக்கிறது.

நாட்டுப் பாடல்கள்

இம்மாவட்டத்தில் பாடப்படும் நாட்டுப் பாடல் களில் சில குழந்தைகளைப் பற்றியவை; சில தெய்வங்களைப் பற்றியவை; சில காதலைப் பற்றியவை; சில பாடல்கள் கண்ணீரில் பிறந்தவை.

குழந்தைப் பாடல்கள்

குழந்தை கைவீசும்போது பாடும் பாடல்கள்:

அகத்திக் கீரை பிண்ணாக்கு
ஆயா கொஞ்சம் நெய் ஊற்று
பிஞ்சு கத்தரிக்காயுக்கு
பின்னும் கொஞ்சம் நெய் ஊற்று.

குந்தா குந்தா காசு
ராம குந்தா காசு
யார் கொடுத்த காசு
மாமா கொடுத்த காசு
மாய மாய்ப் போச்சு!

குழந்தை, பேசும் நிலையில் கற்பிக்கப்படும் பாடல்கள்!

என்ன ஊர்?
மயிலாப்பூர்!
என்ன மயில்?
காட்டு மயில்!
என்ன காடு?
ஆர்க்காடு!
என்ன ஆறு?
பாலாறு!
என்ன பால்?
கள்ளிப்பால்!
என்ன கள்ளி?
இலைக்கள்ளி!
என்ன இலை?
மா இலை!
என்ன மா?
அம்மா!

சிறுவர்கள் எண்ணுவதற்குப் பாடல் மூலமாகவே பயிற்சி பெறுகின்றனர்.

ஒருகுடம் தண்ணீர் ஊற்றி
ஒரே பூ பூத்ததாம்!
இரண்டு குடம் தண்ணீர் ஊற்றி
இரண்டே பூ பூத்ததாம்!

இப்படியே பத்துவரை கூறுவர். மழை பெய்து நின்றபின் எங்கும் பெருகி ஓடும் தண்ணீரைக் கண்டு சிறுவர் பாடுகின்றனர்:

ஓடோடும் தண்ணீர்!
உருண்டோடும் தண்ணீர்!
பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்தோடும் தண்ணீர்!

சப்பாணிப் பருவத்தில் குழந்தையிடம் பாடும் பாடல்களில் இதுவும் ஒன்று.*

கொண்டா(ன்) கொண்டான் குளத்திலே
குருவி செத்துக் கிடக்குதாம்
கொண்டாடி முத்தம்மா
குருவிச்சாறு காச்சலாம்!
அடுத்த வீட்டுக்காரிக்கு
அகப்பைச்சாறு கொடுக்கலாம்
அண்டை வீட்டுக்காரிக்கு
அஞ்சு கரண்டி கொடுக்கலாம்
எதிர்த்த வீட்டுக்காரிக்கு
ஏழு கரண்டி கொடுக்கலாம்!

இந்த மாவட்டத்தில் இப்பாடலை அறியாத குழந்தைகளே இல்லை எனலாம்.

---

* இது சிறுவர்க்கு விளையாட்டாகச் சொல்லிக் கொடுக்கப்படும் பாடல் ஆகும்; இதன்கண்ணுள்ள பொருளுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லை.

வேடிக்கைப் பாடல்கள்

இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்தபோது நரிக்குறவர் கீழ்வரும் பாடல்களை மிகுதியாகப் பாடினர்:

பேபி சரோஜா—நான்
"வாரு"க்குப் போறேன்! நீ
வருத்தப் படாதே!
தண்ணீ(ர்) மேலே போனால் நான்
தந்தி அடிச்சிடுவேன்!
கம்பெனி ரோட்டிலே
கும்பெனி சைக்கில்
காற்றாய்ப் பறக்கலாச்சே!

களை எடுக்கும் போதும், நாற்று நடும்போதும் பெண்கள் பாடும் பாடல்கள்:

ஓராம் நாளு திங்களிலே
மயில் வந்து கூவுதுபார்!—புள்ளி
மான் வந்து மேயுது பார்!
இரண்டாம் நாளு திங்களிலே
மயில் வந்து கூவுதுபார்!—புளளி
மான் வந்து மேயுதுபார்!

இப்படியே பத்துவரை அடுக்கிப் பாடுவர்.

ஒரு கோட்டை நெல்லு தாரேன்!
வண்டி மாடு ரெண்டு தாரேன்!
மயிலே, குயிலே கூவ வாங்க!
இரண்டு கோட்டை நெல்லு தாரேன்!
வண்டி மாடு ரெண்டும் தாரேன்!
மயிலே, குயிலே கூவ வாங்க!

இப்படியே பத்துவரை அடுக்கிப் பாடுவர்..

தண்ணீர் கொண்டுவர ஆற்றுக்கும் குளத்துக்கும் செல்லும் சிறுமிகளைத் தாய்மார்கள் விரைந்து வரும்படி கூறுகின்றனர். அதற்கு அச்சிறுமிகள் என்ன சொல்லு கிறார்கள்? கேட்போம்:

குளத்தருகே குண்டுமல்லி
கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும்
குண்டுமல்லிப் பூ முடிக்க
பின்னுங் கொஞ்சம் நேரமாகும்!
ஆற்றருகே அடுக்கலரி
கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கும்
அடுக்கலரிப் பூ முடிக்க
பின்னுஞ் கொஞ்சம் நேரமாகும்!

தெய்வப் பாடல்கள்

வடக்கே இறங்கி மழை பேய
வாணியாற்றுத் தண்ணீர் வர
வாணியாற்றங் கரை மேலே
வள்ளி யம்மா பூசை கொண்டாள்!

(வாணியாறு: பெண்ணையாற்றுடன் கலக்கும் சிற்றாறு).

தெற்கே இறங்கி மழை பேய
செய்யாற்றுத் தண்ணீர் வர
செய்யாற்றங் கரை மேலே
செல்வியம்மா பூசை கொண்டாள்!

திருவண்ணாமலைக்கும் திருத்தணிகைக்கும் போக வேண்டும் என்ற தீராவேட்கை ஒருவர்க்கு ஏற்படுகிறது. அவர் நெஞ்சத்திலிருந்து பாடிக்கொண்டு வருகின்றன பின்வரும் பாடல்கள்:

"ஒருநாளும் அறியேன்
திருவண்ணா மலையே!
மறுநாளும் அறியேன்,
மண்டபப் படியே!"

"இருக்கிறார் முருகர்,
திருத்தணி மலைமேல்!
போவுது சனங்கள்,
பொன்மலையை நோக்கி!"

காதற் கவிதைகள்

காதல் பாட்டுக்களில் நாட்டு மக்களின் நெஞ்சத் துடிப்பும், பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறையும் தெளிவாகத் தெரிகின்றன:

கம்பு இடிக்கும் போது
கம்பமேறிப் பார்த்த மாமன்!
மாமன் கண்ணு என்ன கண்ணோ?
மாவு இடிக்க முடியலை'யே!

சோளம் இடிக்கும் போது
சுவர் ஏறிப் பார்த்த மாமன்!.
மாமன் கண்ணு என்ன கண்ணோ?
மாவு இடிக்க முடியலையே!

வண்டிக்காரனுக்கும் புல் விற்பவளுக்கும் காதல் பேச்சு நிகழ்கின்றது:

ஆரடி பில்லுக்காரி!
அறுகம் புல்லு கூடைக்காரி!
புல்லுவிலை சொல்லடி நீ
சொந்தவண்டி மாமனுக்கு!

தான் காதலிக்கும் பெண் ஒருத்திக்குக் கள்ளிப்பூ கொண்டுவர முயன்ற காதலன் பாடுகிறான்:

சதுரக் கள்ளி மலையோரம்;
சாய்ந்திருக்கும் திருகுகள்ளி!
திருகுகள்ளிப் பூ வெடுக்க
திரிஞ்சனோடி சேன காலம்!

காதலியை நினைத்து உருகுவதாக அவன் பாடுகிறான்:

வாழைப் பழத்தாளே!
வலதுகைச் சர்க்கரையே!
உள்ளங்கைத் தேனே!
உருகுறேன்டி உன்னாலே!

அவள் வாழுமிடம் மிகவும் காவல் உடையது. அவளை அடைய வழி என்ன என்று அவளையே அவன் கேட்கின்றான்:

"கோட்டைக்குள் கோட்டை காவல்;
.....அதிலொரு பையன் காவல்!
இத்தனை காவல் இருக்க
எப்படி வருவேன் பெண்ணே?"

அதற்கு அவள் வழி கூறுகிறாள்:

"பாக்கைத் தாள் அடக்கி
வெற்றிலை கைபிடித்து
சுண்ணாம்பு இல்லை'ன்னு
ஞதாடி வாடா!"

இந்தப் பாடலை கார்த்திகை மாதம் - தீபம் வைப்பதற்கு முன் பத்து நாளும், இரவில் சிறுவர்கள் கூடி மணியடித்துக் கொண்டு ஊரைச் சுற்றிப் பாடி வருவர்.

இரவு நேரத்தில் தன் காதலியைச் சந்திக்கிறான் காதலன். அவள் காதில் இருந்த பொன்னோலை கழன்று அவனுடைய நீளமான கூந்தலில் (ஆண்களும் கூந்தல்

வளர்த்தல் உண்டு) தொத்திக் கொள்கிறது. இருவரும் பிரிந்து விடுகின்றனர். காலையில் மீண்டும் அவள் அவனைச் சந்திக்கிறாள். குளத்திற்குப் போய்த் தண்ணீர்க் குடத்தோடு திரும்பி வருகையில் சந்திக்கிறாள். அவள் அவனை நோக்கி,

"எண்ணெய்த் தலையழகா!
இருகாது முத்தழகா!–உன்
வண்ணமான கூந்தலிலே
வந்ததொரு பொன்னோலை!"

என்று கூறுகின்றாள்.

அவன் அன்று இரவே, அவள் தோட்டத்திலேயே அதைக் கவனித்து விட்டான். பொன்னோலையை எடுத்துத் தோட்டத்தில் இருந்த பாகற்கொடியில் சுற்றி விட்டு வந்து விட்டான். அதை அவன் கூறுகிறான் கேட்போம்:

"தண்ணீர்க் குடத்தாளே!
தாமரைப் பூ நிறத்தாளே!
பின்னாலே பாகற்கொடி,
பூத்திருக்கும் பொன்னோலை!"

நாட்டுப் பாடலில் இவ்வாறு இடம் பெற்றுள்ள கதைகளும் உண்டு.

கண்ணீரில் மலர்ந்த கவிதை மலர்கள்

சில பாடல்கள் துன்பத்தில் பிறக்கின்றன. வாழ்க்கையில் நேர்ந்த ஏமாற்றம், இழப்பு, சாவு இவை பற்றிய பாடல்கள் பல உள்ளன.

பெரிய வீடுகளில் சோற்றுக்காக வேலை செய்வோரின் துன்பக் குரல் கீழ்வரும் பாடலில் ஒலிக்கிறது:

"சோறு நிறைந்த வாசலிலே
சொன்ன வேலை செய்தாலும்,
சோறு பெரிசு
சொன்ன வேலை சின்னது."

இறந்துபோன தாயிடம் பெண் ஒருத்தி தனக்கு நேரும் துன்பங்களைக் கூறி முறையிடுகிறாள்:

மாதம் ஒரு துக்கம் வந்து—என்
மார்பைப் பிளக்குதம்மா!
மார்பைப் பிளந்து பார்த்தால்
மாசு படிந்திருக்கும்!

நித்தம் ஒரு துக்கம் வந்து—என்
நெஞ்சைப் பிளக்குதம்மா!
நெஞ்சைப் பிளந்து பார்த்தால்
நீலம் படிந்திருக்கும்!

தாய் மாமன் தன்னை மணந்து கொள்ளவில்லை என்று பெருங்குறையுடன் பாடுகிறாள்:

மாமன்மகன் உள்ளான் என்று
மனையிலே பெண் வளர்ந்தேன்!
மாமன் மகன் பண்ணபழி
மனசைவிட்டு நீங்கலையே!

அத்தைமகன் உள்ளான் என்று
அறையிலே பெண் வளர்ந்தேன்!
அத்தை மகன் பண்ணபழி
அகலவில்லை மனசை விட்டு!

பெண்களுக்குத் தாய் வீட்டின் மேல் உள்ள பற்றும் மதிப்பும் இன்ன அளவினது என்று சொல்ல முடியாது. உடன் பிறந்த அண்ணன் தன்னை மதிக்கவில்லை என்றால்

பெண்களின் மனம் பெரிதும் புண்படும். குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சண்டை காரணமாக உடன் பிறந்தாளைத் தன் வீட்டுக்கு வரவேண்டாமென்று அண்ணன் கூறி விடுகிறான். அது அந்தப் பெண்ணின் உள்ளத்தைப் பெரிதும் தாக்குகிறது. அவளுடைய துன்பம் கீழ்வரும் பாடலில் வெளிப்படுகிறது:

சாதிப் பெருங்காம்–நான்
சமுத்திரத்து நல்வாளை
சாதியில் பழுதென்றா உங்கள்
சாக்கடையில் வேண்டாமென்றீர்?

கொத்துப் பெருங்காயம்–நான்
கோத்திரத்து நல்வாளை
குலத்தில் பழுதென்றா
கோட்டையிலே வேண்டாமென்றீர்?

இவ்வாறு பாடியபின் தாய்வீட்டுப் பெருமைகளைப் பாடுகிறாள்:

தங்கச் சிலைக் கதவு
நான் பிறந்த மதுரையிலே
தட்டித் திறந்தால் கால்
தவனம் பொடி மணக்கும்!

இரும்புச் சிலைக் கதவு
என்னைப் பெற்றார் வாசலிலே
இருபக்கம் பொன் கதவு
இருத்தி திறந்தாக் கால்
ஏலம் பொடி மணக்கும்!

தாய் இருந்தபோது தமக்குக் கிடைத்த சிறப்பைக் கூறுகிறாள்:

ஆத்தாள் வரிசையுண்டு—எனக்கு
அடிப்பானை சோறுண்டு!
பொங்கல் வரிசையுண்டு—எனக்குப்
புதுப் பானை சோறுண்டு!

செஞ்சி கிலுகிலுப்பை
சீரங்கத்துக் கண்ணாடி—என்னைப் பெற்ற அம்மா!
சிவப்பை செதுக்கி வைத்து
சீர்பாதம் செய்திடுவாள்!

வைர கிலுகிலுப்பை
வையகத்துக் கண்ணாடி—என்னைப் பெற்ற அம்மா!
வைரம் செதுக்கிடுவாள்
வரிசையிட்டுப் பார்த்திடுவாள்!

பொட்டியிலே அரிசி வரும்!
பிளந்த விறகு வரும்!
வையத்தார் பார்த்து என்
வரிசை கவிழ்ந்ததம்மா!

தன் கணவனைக் கூடைக்குக் கீழே இருந்த பாம்பு கடித்து விடுகிறது. அவள் புலம்பலைக் கேட்போம்:

அத்தை பெற்ற அருங்கிளியே!
அம்மான் துரைத்தனமே!
குற்றமற்ற கோவலரே!
கோயில் துரை மகனே!
கூடைக்குக் கீழிருந்து
குறுநாகம் தீண்டலாமோ?

நாட்டுப் பாடல் ஒன்றில் சுவையான கதை ஒன்று உள்ளது.

ஒரு பெண்ணுக்கு நான்கு அண்ணன்மார் இருக்கின்றனர். அவள் சிறிய பெண்; கன்னிப்பெண். அவளுடைய அண்ணன்மார் உழுதொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு அந்தப் பெண் சோறு கொண்டு செல்லு கின்றாள். அவள் ஓர் ஆற்றைக் கடந்து செல்ல வேண்டி யிருக்கிறது. ஆற்றில் இருந்த ஒரு பெரிய வாளை மீன் அவளை அடித்து விடுகிறது.

அவள் வீட்டிற்கு வந்து தாய் தந்தையரிடம் சின்னண்ணன் தன்னை அடித்து விட்டதாகப் பொய் கூறுகிறாள். சின்னண்ணனை அவளுக்கு பிடிக்காது போலும்!

ஆராய்ந்து பாராமல், கொடுமை மனம் படைத்த அவள் பெற்றோர் சின்னண்ணனைக் கொன்று விடுகின்றனர்!

சின்னண்ணனைப் புதைத்த இடத்தில் ஓர் அழகிய பூஞ்செடி முளைத்து விடுகிறது.

அந்தப் பெண்ணுக்கு இப்போது திருமணம்; அவளுக்குப் பூ எங்கும் கிடைக்கவில்லை. கடைசியில் சின்னண்ணனைப் புதைத்த இடத்தில் பூ இருப்பதை அறிந்து கொண்டு பறிக்க அங்கே செல்கின்றனர். பறிக்கச் செடியையும் நெருங்குகின்றனர். "பறிக்காதே! நில்" என்று ஒரு குரல் எழுகின்றது. இறந்துவிட்ட சின்னண்ணன் பாடுகின்றான்:

"வாளை அடித்திருக்க
வடதேசம் போயிருக்க
சின்னண்ணன் அடித்தான் என்று
சொன்னாளே கொடும்பாவி
கொடும்பாவி கொண்டைக்கு
என் பூ நிறக்குமா?"

பழமொழிகள்

இம்மாவட்டத்தில் வழங்கும் சில பழமொழிகள் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவூட்டுகின்றன. அவற்றை இங்கே தருவோம்.

1. ஆர்க்கரட்டு நவாபு என்றாலும் அரைக்காசுக்குப் பயனில்லை.
2. உங்கள் அப்பன் ஆர்க்காட்டு நவாபா?
3. யாருக்கு என்று அழுவேனடா ஐதரலி.
4. ஐதரலி என்றால் அழுதபிள்ளையும் வாய்மூடும்.
5. அடிபட்டாலும் ஆர்க்காட்டுச் சடாவால் அடிபட வேண்டும்.
6. கோழி ஒட்டினாலும் கும்பெனிக்கு ஓட்டு.
7. ஒரு எருமை ஒரு முருங்கைமரம் கால்காணி நிலம் இருந்தால் பஞ்சம் போகும்.
8. நீ நட்சத்திரம்தான்.
9. நவாப தர்பார்.
10. இருந்தால் நவாப் ஷா இல்லாவிட்டால் பக்கிரி ஷா.
11. நவாப் அத்தனை ஏழை, புலியத்தனை சாது.

விளக்கம்

3. ஐதரலி மக்களிடம் வரி வசூல் செய்தபோது, பாளைக்காரர்களும் மக்களிடம் வரி கேட்டு அவர்களைத் துன்புறுத்தினர்.

5. ஆர்க்காட்டு சடா-ஆர்க்காட்டு நவாபும் அவருடைய போர் வீரர்களும் அணிந்த சிறந்த காலணிகள்.

6. கும்பெனி-கிழக்கிந்தியா கும்பெனி. ஜாகிர்தார், மிட்டாதார் ஆகியோரிடம் வேலை பார்ப்பதைவிட, வெள்ளைக்காரனுக்கு வேலை பார்ப்பது மேல் என்பது பொருள். குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படு என்கிற பழமொழியைப் போன்றது.

8. நட்சத்திரம்-குரங்கு. நட்சத்திரக் கோயில் இம் மாவட்டத்தில் இருக்கிறது. இப்பழமொழி போளூர்ப் பகுதியில் மட்டும் வழங்குகிறது.

11. சாதுவான புலி கிடையாது; ஏழையான நவாபும் இல்லை.

இந்த மாவட்டத்திற்கே உரிய பிற பழமொழிகளை, இனிக் கூறுவோம்.

செங்கத்துக்கு அருகில் சவ்வாது மலைப் பிளவில் தண்டம்பட்டுக் கணவாய் உள்ளது. இதனைச் "செங்கமா கணவாய்" என்றும் கூறுவர். இந்தக் கணவாய் வழியாகச் செல்வோரைச் சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கள்ளர் கூட்டம் ஒன்று கணவாயில் பதுங்கி இருந்து கொள்ளை அடிப்பது வழக்கமாகும். வழிப்போக்கர் இக்கணவாயில் அகப்பட்டுக் கொண்டால் தப்பி ஓட முடியாதபடி இருபுறமும் மலைகள் இருக்கின்றன. அக்கணவாயில் அகப்பட்டவர் தப்ப முடியாது.

தப்புவதற்கு வழி இல்லாதபடி ஒரு துன்பத்தில் சிக்கிக் கொண்டவனை, "அகப்பட்டுக் கொண்டான் தண்டம்பட்டு கணவாயில்" என்று கூறுவர். இது பழமொழியாக பழகிய மொழியாக ஆகிவிட்டது.

திருவண்ணாமலையைப் பற்றிக் கீழுள்ள பழமொழிகள் வழங்கி வருகின்றன.

"அண்ணாமலையில் பிறந்தவனுக்கு அருணாசல புராணம் தெரியாதா?"

"நினைக்க முக்தி அண்ணாமலை."

செங்கத்திற்கு அருகில் உள்ள "முன்னறுமங்கலம்" என்ற ஊர்க் கோயிலில் உள்ள 'பெரிய முனி'யின் சிலை

அச்சந்தரும் தோற்றமுடையது. அஞ்சத்தக்க தோற்ற முடையவனை, 'முன்னூறுமங்கலத்து முனிபோல இருக்கிறான்' என்று கூறுவது வழக்கம்.

'பர்வதமலை' என்பது போளூருக்கு அருகில் உள்ள சவ்வாது மலைத் தொடரின் பகுதி. தேங்காய்க் குலை பற்றிய 'விடுகதை' ஒன்றைப் பர்வதமலைக் குரங்குகளின் மேல் வைத்துக் கூறுவதுண்டு. "பர்வதமலை மேல் அறுபது குரங்கு; அதன் அதன் தலைமேல் பிடி பிடி மயிர்."

நாட்டுப் புறங்களில் வாழும் பெண்கள் வேலூர் போன்ற நகரங்களில் வாழ்க்கைப் படுவதையே பெரிதும் விரும்புகின்றனர் என்பதைக் கீழுள்ள பழமொழி விளக்கும்.

"வேலைக்காரி என்று வேலூரில் கேட்டார்களாம்!"

பாலாற்றைப் பற்றி ஒரு பழமொழி உண்டு. "நாலாறு கூடினால் பாலாறு."

தஞ்சாவூர் மஞ்சளுக்கு வட ஆர்க்காட்டில் மதிப்பு என்பதை, "இந்த மூஞ்சிக்குத் தஞ்சாவூர் மஞ்சளா?" என்ற பழமொழியால் அறியலாம்.

நெல்லூரிலிருந்து காளைகள் வாங்கி வந்து பயிர்த் தொழில் நடத்துவதுண்டு. நெல்லூர்க் காளைகள் உள்ளூர்க் காளைகளைவிட வளமானவை. ஆதலின் வளமான உடல் உடையவளை "நெல்லூர் மாடுபோல இருக்கிறாள்" என்று கூறுவர்.

✦ ✦ ✦

12. கல்வி நிலை

கல்வி நிலையில் இம்மாவட்டம் நடுநிலையில் இருக்கிறது என்று சொல்லுவது பொருந்தும். சவ்வாது மலைக்கு வடக்கேயுள்ள பகுதி, தெற்கேயுள்ள பகுதியை விடக் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

தொடக்கப் பள்ளிகள் ஊர்தோறும் உள்ளன. உயர் நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூடியிருக்கிறது. 1961-ஆம் ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் 42 உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. கிறித்தவ மிசனரிமார் பல இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கியதைத் தொடர்ந்து திருப்பதி தேவஸ்தானத்தார் வேலூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி தொடங்கினர்; பல இடங்களில் முஸ்லிம்களும் தங்களுக்கென கல்வி நிலையங்களை நிறுவிக் கொண்டனர்.

இம்மாவட்டத்திலுள்ள உணவு விடுதிகளில் வேலூரில் மாசிலாமணி முதலியார் (இ-1948) தொடங்கிய விடுதி குறிப்பிடத்தக்கது. இவர் அரசாங்க அலுவல் பார்த்தவர்; சிக்கனமாக வாழ்ந்து, எஞ்சிய தொகையை மூலதனமாக வைத்துச் செம்மையான அடிப்படையில் விடுதி அமைத்த பெருமை இவ்வள்ளலுக்கு உரியது.

உயர்நிலைப் பள்ளிக்கு மேற்பட்ட கல்வி நிலையங் களைப் பற்றித் தனித்தனியே கூறுவோம்.

கலை விஞ்ஞானக் கல்லூரி,

ஊரீஸ் கல்லூரி, வேலூர்
(Voorhees College, Vellore)

இக்கல்லூரி பிராடஸ்டண்டு கிறித்தவர்களால் 1898-இல் தொடங்கப்பட்டது. 1945 முதல் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். வேலூர் நகரின் நடு நாயகமான இடத்தில் இக்கல்லூரிக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. நல்ல நூல் நிலையம் இருக்கிறது. 1951-இல் இக்கல்லூரியின் பொன்விழா கொண்டாடப் பெற்றது. 1958 முதல் பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன.

இஸ்லாமியா கல்லூரி, வாணியம்பாடி
(Islamich College, Vaniyambadi)

1901-இல் சென்னை நகரில் அனைத்திந்திய முஸ்லிம் கல்வி மாநாடு நடைபெற்றது. அதன் விளைவாகத் தோன்றிய பல கல்வி நிலையங்களுள் இதுவும் ஒன்று.

1912-இல் உயர்நிலைப் பள்ளி ஏற்பட்டது. 1961-இல் தென் இந்திய முஸ்லிம் கல்வி மாநாடு வாணியம்பாடியில் நடைபெற்றது. அதன் பயனாக ஐதராபாது நிஜாம், நவாபு அப்துல் ஹக்கீம் போன்ற பலர் வழங்கிய பொருளைக் கொண்டு 1921-இல் இக்கல்லூரி ஏற்பட்டது.

பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்., படிப்புக்கள் இங்கு கற்பிக்கப்படுகின்றன. எல்லா மதத்தினரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. உண்வு விடுதி உண்டு. கல்லூரிக்கு 1954-இல் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

சேக்ரட் ஹார்ட் கல்லூரி, திருப்பத்தூர் (Sacred Heart College, Tirupattur N.A.)

தொழில்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கல்வி புகட்டுவதற்காக இக்கல்லூரி சலேசியன் சொசைட்டியாரால் 1951-இல் தொடங்கப் பெற்றது.

1954 முதல் பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகளும் நடை பெற்று வருகின்றன. உணவு விடுதியும் பொதுக் கூட்டங்கள் நடத்த பெரிய மண்டபமும் கூடைப் பந்தாட்டம் ஆட மிகச் சிறந்த ஒரு விளையாட்டரங்கும் இங்கு உள்ளன. இக்கல்லூரி பல துறைகளில் பெரு வளர்ச்சியடைந்து வருகிறது.

ஆக்சிலியம் கல்லூரி காட்பாடி (Auxiliam College, Katpadi)

சலேசியன் சிஸ்டர்ஸ் இன்ஸ்டிட்டியூட் என்ற நிறுவனத்தார் மகளிருக்காக இக்கல்லூரியை 1954 முதல் நடத்தி வருகின்றனர். காட்பாடி டவுன்சிப்பில் தோற்றப் பொலிவுள்ள பெரிய கட்டிடமும் சிறந்த உணவு விடுதியும் 30 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் இக்கல்லூரிக்குக் கட்டப்பட்டுள்ளன.

பி.ஏ., பி.எஸ்சி. வகுப்புகள் நடைபெறுகின்றன. சிறந்த முறையில் நடைபெறும் கல்லூரிகளில் இதுவும் ஒன்று.

பிற கல்லூரிகள்

அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, காட்பாடி (Government Training College, Katpadi)

உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசாங்கம் 1955-இல் பல கல்லூரிகளைத் தொடங்கிற்று. அவற்றுள் இதுவும் ஒன்று.

ஆங்கிலம், தமிழ், கணிதம், சமூகநூல் போன்ற பாடங்களில் பி.ட்டி., பட்டத்துக்கு இங்கு கல்வி கற்பிக்கப் படுகிறது. காட்பாடி டவுன்சிப்பில் 22 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் கல்லூரி, உயர்நிலைப் பள்ளி, உணவு விடுதி ஆகியன கட்டப்பட்டுள்ளன.

கிறித்தவ மருத்துவக் கல்லூரி, வேலூர் (Christian Medical College, Vellore)

தமிழ்நாட்டில் தனியாரால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரி இது ஒன்றே. இது மகளிருக்காக 1918-இல் டாக்டர் ஐடா ஸ்கட்டர் என்ற அமெரிக்கப் பெருமகளால் 'எல்.எம்.பி.' கல்வி கற்பிக்கத் தோற்றுவிக்கப்பட்டது.

இப்போது இங்கு எம்.பி.பி.எஸ்., கல்வி கற்பிக்கப் படுகிறது. 25 ஆடவர்களும் 25 பெண்டிரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். எம்.டி., எம்.எஸ்., நுரையீரல் நோய் பற்றிய சான்றிதழ் (Diploma in T.B) மருந்து செய்வது பற்றிய உயர் படிப்பு, Post-Graduate Course in Thoracic Surgery ஆகிய மேற்படிப்புகள் உள்ளன. இதைச் சேர்ந்த நர்சிங் பள்ளிக் கூடத்தில் (School of Nursing), பி.எஸ்சி., (நர்சிங்) என்ற 4 ஆண்டுப் படிப்பும் (Sister Tutor Course) உள்ளன.

அமெரிக்கரும் ஏனைய அயல் நாட்டினரும் நம் நாட்டில் டாட்டா அறநிலையக் குழுவினரும் இக் கல்லூரிக்குப் பெரிய அளவில் பொருளை வாரி வழங்கி யுள்ளனர். இக்கல்லூரியைச் சேர்ந்த மருத்துவ மனையைப் பற்றி, மருத்துவ வசதி என்ற பகுதியில் கூறியுள்ளோம்.

இக்கல்லூரி இந்தியாவின் தலைசிறந்த மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றாகும். இங்கு மருத்துவக் கல்வியில் பல புதிய முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

கிறித்தவர்கள் அல்லாதவர்களும் இங்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பாக்கிஸ்தானிலிருந்து அகதிகளாக வந்த இந்து சீக்கிய மாணவர் பலர் இங்கு பயில இடங்கள் பெற்றிருக்கின்றனர். பிற நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்று, பிறகு தங்களை அனுப்பிய அந்த நாடுகளிலுள்ள கிறித்தவ மிசன்கள் நடத்தும் மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவராக வேலை பார்க்கின்றனர்.

உணவு விடுதியில் தங்கும் மாணவர் மட்டுமே கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இங்குள்ள 50 இடங்களுக்கு ஆண்டுதோறும் சராசரி 6,000 மனுக்கள் வருகின்றன.

மொழிக் கல்லூரிகள்

அரபிக் கல்லூரி, வேலூர்
(Bakiyathus Salahath Arabic College, Vellore)

இக்கல்லூரி வேலூரில் கடைத் தெருவுக்கு அருகே அமைந்திருக்கிறது; 1927 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றிருக்கிறது. உருது, அரபிக், பாரசீக மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. நூல் நிலையத்தில் 9,000 நூல்கள் உள்ளன. 150 மாணவரும் 11 ஆசிரியரும் உள்ளனர். இந்தியாவுக்கு வெளியே யிருந்தும் மாணவர் வருகின்றனர். உணவு விடுதி உண்டு.

மௌல்விகள் கீழே பாய் விரித்து ஆடிஆடிப் படிக்கும் காட்சி காணத்தக்கது.

ஜாமிய தாருஸ் சலாம் அரபிக் கல்லூரி, ஊமிராபாத்

இக்கல்லூரி எல். ஹாஜ் காக முகமது உமீர் என்ற வணிகரால், தம் பெயரால் ஆம்பூர் அருகே புதிதாக

உண்டாக்கப்பட்ட ஊரில் தொடங்கப் பெற்று 1924-இல் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்றது. அழகிய பள்ளத்தாக்கும் சுற்றிலும் பசுமையான நிலங்களும் சூழ்ந்த இடத்தில் கல்லூரியின் கவினுறு கட்டிடங்களும் யூனானி மருத்துவ நிலையமும் கட்டப்பட்டுள்ளன.

அரபிக் மொழியில் எட்டாண்டுகளுக்கு இங்கு கல்வி கற்பிக்கப்படுகிறது. பாரசீக மொழியும் கற்பிக்கப்படுகிறது. கணிதம், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்கள் உருது மொழியில் புகட்டப்படுகின்றன.

மாணவர்களின் கல்லூரிச் சம்பளம், உணவு, உறையுள், நூல்களின் விலை ஆகிய எல்லாச் செலவுகளும் கல்லூரியினரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இங்கு கற்கும் மாணவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்து அப்ஜல்-உல்-உலாமா (அரபிக்), முன்ஷி பாசில் (பெர்சியன்) தேர்வுகளை எழுதுகின்றனர்.

தொழிற் கல்லூரிகள்

வேளாண்மைப் பள்ளி, காட்பாடி,

இக்கல்வி நிலையத்தைப் பற்றி நான்காம் கட்டுரையில் விவரமாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அரசாங்க பாலிடெக்னிக், வேலூர்

இது 1959-இல் சென்னை நகரில் ஏற்பட்டு 1961-இல் காட்பாடி டவுன்சிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டது.

இங்கு எல்.சி.ஈ., எல்.எம்.ஈ., என்ற கட்டிட, இயந்திர, மின்சாரப் பொறியியல் பாடங்களில் மூன்றாண்டுப் படிப்பு நடைபெறுகிறது.

ராஜகோபால் பாலிடெக்னிக், காந்திநகர், குடியேற்றம்

இது ராஜகோபால் நாயுடு கல்வி அற நிறுவனத்தாரால் 19-8-1960இல் தொடங்கப் பெற்று, அரசாங்க உதவியுடன் நடைபெற்று வருகிறது. குடியேற்றம் நகரிலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவில், இரயில் நிலையத்துக்கு அருகே, மலையடிவாரத்தில் இக்கல்வி நிலையம் அமைந்திருக்கிறது. எல்.சி.ஈ., எல்.எம்.ஈ., எல்.ஈ.ஈ., என்ற கட்டிட, இயந்திர, மின்சாரப் பொறியியல் பாடங்களில் மூன்றாண்டுக் கல்வி இங்கு கற்பிக்கப்படுகிறது.

மாவட்ட நூலகம்

வட ஆர்க்காடு மாவட்டத்தில் நூலக இயக்கம் நன்கு நடைபெற்று வருகிறது. மாவட்டத் தலைமை நூலகத்துக்குரிய சிறந்த கட்டிடங்கள் 2,25,000 ரூபாய்ச் செலவில் வேலூர்க் கோட்டை மைதானத்தில் கட்டப்பட்டுள்ளன. தலைமை நூலகம் 1951-இல் ஏற்பட்டது; அங்கு 9,000 நூல்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் இதைச் சேர்ந்த 24 கிளை நூலகங்களும் 11 ஊர்களில் நூல் வழங்கு நிலையங்களும் உள்ளன.

சொத்துவரி செஸ் வாயிலாக இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு ஆண்டுதோறும் 40,000 ரூபாயும் அரசாங்க மானியமாக 40,000 ரூபாயும் வருவாய் கிடைக்கிறது.

✦ ✦ ✦

13. மருத்துவ வசதிகள்

கிறித்துவ மிசன் மருத்துவ மனை, வேலூர் (Christian Mission Hospital, Vellore)

இது தலைசிறந்த மருத்துவ மனை. இந்தியாவில் மட்டுமன்றி ஏனைய ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளிலும் இந்த நிறுவனம் பெரும்புகழ் பெற்றிருக்கிறது. இதை அறியாதார், அறியாதாரே.

இம்மருத்துவ மனை 'அமெரிக்கன் ஆர்க்காட் மிசன்' என்ற பிராடஸ்டண்டு கிறித்தவ சமய அமைப்பால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த அமைப்பைத் தொடங்கி யவர்களுள் ஒருவரான டாக்டர் ஸ்கட்டர் வேலூரில் ஒரு படுக்கை மட்டும் உள்ள ஒரு மருத்துவ மனையைத் தொடங்கினார். அதில் அவருடைய மகளான டாக்டர் ஐடா ஸ்கட்டர் அம்மையார் (1870-1960) தம் அரிய பணிகளை ஆரவாரமின்றிச் செய்ய முனைந்தார். அவரது முயற்சி ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி, ஆழிசூழ் உலகும் புகழும் அளவுக்கு வளர்ச்சியடைந் துள்ளது.

1902-இல் ஐடா அம்மையாரின் முயற்சியால் 40 படுக்கைகளுடன் 'மேரி டேபர் ஸ்கெல் மருத்துவ மனை' கட்டப்பட்டது. 1909-இல் நாஸ்களைப் பயிற்றும் பள்ளிக் கூடமும் 1918-இல் எல்.எம்.பி. படிப்புக்குரிய பெண்களுக் கான மருத்துவக் கல்வி நிலையமும் 1924-இல் கண் மருத்துவப் பிரிவும், 1942-இல் எம்.பி.பி.எஸ். படிப்பு உள்ள மருத்துவக் கல்லூரியும் ஏற்பட்டன. 1961-இல் இங்கு எம்.டி., எம்.எஸ்.சி. படிப்புக்களும் கற்பிக்கப்படுகின்றன; ஆராய்ச்சி

வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன; 700 படுக்கைகள் உள்ளன; ஆண்டுதோறும் ஒரு நூறாயிரம் நோயாளிகள் இங்கு வருகின்றன; இதைச் சேர்ந்த ஒரு மருத்துவமனை பஞ்சாபு மாநிலத்து லூதியானாவிலும் நடைபெற்று வருகிறது.

வேலூர் மருத்துவ மனையில் அமெரிக்கா, இங்கிலாந்து, அயர்லாந்து, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களும் நம் நாட்டினருடன் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர். நோயாளிகளும் இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்து மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் வேலூருக்கு விரைகின்றனர்.

இப் பெருமையெல்லாம் ஐடா அம்மையாரையே சேரும், அவருடைய முன்னோர்கள்-மூன்று தலைமுறை யினர் - ஜப்பானிலும் இலங்கையிலும் மருத்துவப் பணி புரிந்துள்ளனர். 1860 அளவில் அவருடைய தந்தையார் இராணிப்பேட்டையில் ஒரு சிறு மருத்துவ மனை நடத்தி வந்தார். 1876-இல் தாது வருஷப் பஞ்சம் ஏற்பட்டது; நோய்கள் பெருகின; ஆடவரிடம் மருத்துவம் செய்து கொள்ள விரும்பாமையால் பெண்கள் மருத்துவ உதவி யின்றியே மாண்டனர். இந்தியாவிற்குப் பெண் டாக்டர் களே தேவை என்ற எண்ணம் ஆறு வயதுச் சிறுமியாகிய ஐடா உள்ளத்தில் உறுதியாக ஏற்பட்டது. இந்த எண்ணம் நாளாக ஆக நலிந்து சிதைந்து மறைந்து விடாது, மேலும் மேலும் உறுதிப்பட்டது. உரியகாலத்தில் ஐடா அமெரிக்கா வுக்குச் சென்று, பிலடல்பியா மருத்துவக் கல்லூரியில் பயின்றார்; பிறகு, ஆடவர்க்கே உரியதாக இருந்த (நியூயார்க்கு நகரத்து) கார்னல் மருத்துவக் கல்லூரியில் முதல் மாணவியாகச் சேர்ந்தார். (ஆடவர் கல்லூரியில் பயின்ற முதல் பெண்ணாகிய இந்த அம்மையார், பெண்

களுக்கேயென்று மருத்துவக் கல்லூரி தொடங்கி அதில் 1947-இல் ஆண்களையும் சேர்த்துக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது) படிப்பு முடியும் நேரத்தில், வேலூரில் பிளேக் நோய் பரவியிருப்பதாயும் 'ஐடா' உடனே வந்து அவ்வூரில் வேலை பார்க்கலாமென்றும் ஆர்க்காட் மிசன் அன்பர்கள் எழுதியிருந்தனர்.

மேரி டேபர் ஸ்கெல் என்பவள் நினைவாக ஒரு மருத்துவமனை தொடங்க ஐடா அம்மையார் 10,000 அமெரிக்க டாலர் நன்கொடை பெற்றார்; அப்பணத்தைக் கொண்டு மருத்துவ மனைக்கு வேண்டும் கருவிகளை விலைக்கு வாங்கினார்; அவற்றுடன் 1900-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளில் வேலூருக்கு வந்து சேர்ந்தார்; 8 அடி அகலமும் 12 அடி நீளமும் உள்ள மருத்துவ மனையைத் தொடங்கினார். ஐந்து மாதங்களுக்குப் பிறது அவருடைய தந்தையார் இறந்து போனார்; அவர் அதனால் மனம் உடைந்து அமெரிக்காவுக்குத் திரும்பவில்லை. ஈராண்டுகளுக்குப் பிறகு, அவரிடம் மருத்துவம் செய்து கொள்ள வந்தவர் தொகை 5,000 ஆயிற்று. 1903-04இல் வேலூரில் பரவிய பிளேக் நோயைப் போக்க, கிராமங்களுக்குக் குதிரை வண்டியில் சென்று ஆயிரக்கணக்கானவர்க்கு ஊசி போட்டு, (மூடநம்பிக்கையால் கல்லால் தாக்கியவர்களைப் பொருட்படுத்தாமல்) மக்களின் மதிப்புக்குரியவரானார்.

உண்ணா நோன்பு இருக்கும் மாதத்தில் மருந்தைக் கூடப் பகலில் குடிக்கக் கூடாது என்ற முஸ்லிம்கள் கொண்டிருந்த கருத்தைப் போக்கவும் ஐடா அம்மையார் ஆவன அனைத்தையும் செய்தார். 1907-இல் அமெரிக்காவி லிருந்து தமக்கு அன்பளிப்பாக வந்த ஒரு காரில், வேலூரிலிருந்து குடியேற்றம் வரை புதன் கிழமைகளில்

சென்று, சாலைகளில் ஆங்காங்கே காரை நிறுத்தி, காரைக் கண்டு பயந்து ஓடிய பாமர மக்களுக்கு மருத்துவம் செய்து வைத்தார். இந்து முஸ்லிம் கலகங்கள் நடந்த போதும்கூட, ஐடா அம்மையார் கலவரப் பகுதிகளுக்குக் கலங்காமல் சென்று நோயுள்ளவர்களைக் குணப்படுத்தி வந்தார். இதையறிந்த மகாத்மா காந்தியடிகள் 1928-இல் அம்மையாரின் பணியை மனமாரப் பாராட்டி அவருடைய மருத்துவ மனைக்கும் வருகை புரிந்தார். இறுதிக் காலம்வரை அம்மையார் திருமணம் செய்து கொள்ளாது, தம் பணியைச் செம்மையாகச் செய்து வேலூரின் புகழைப் பரப்புவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள்.

ஐடாவின் அரும்பணி, நம் நாட்டு மக்களுக்குத் தெரிந்து நோயாளிகள் வேலூரை நாடினர்; இச்செய்தி அமெரிக்கச் செல்வர்களுக்கும் அறநிறுவனங்களுக்கும் எட்டியதும் அவர்கள் பெரிய அளவில் நன்கொடைகள் வழங்கினர்; மருத்துவர்களையும் அனுப்பினர். இவற்றால் இந்த மருத்துவமனை மிகப் பெரிய வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆண்டுதோறும் புதிய கட்டிடங்களும் புதிய துறைகளும் ஏற்பட்ட வண்ணமாக உள்ளன.

மருத்துவமனையின் வளர்ச்சியிலும், இதைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரியின் வளர்ச்சியிலும் ஒவ்வொரு கட்டத்திலும் அமெரிக்கர் பேருதவி புரிந்துள்ளனர். தனிநூல் எழுதினால்தான் அவர்களுடைய வள்ளன்மையை விரிவாகக் கூற இயலும். அமெரிக்காவில் 18 கிறித்தவ மிசன்களும், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் 18 கிறித்தவ மிசன்களும் இந்தியாவில் 21 கிறித்தவ மிசன்களும் ஆக 57 நிறுவனங்கள் வேலூர் மருத்துவமனைக்கும் கல்லூரிக்கும் நிதியுதவி வருகின்றன.

கட்டடங்களுக்கு ஏற்படும் செலவுகள் அவ்வப்போது அள்ளிக் கொடுக்கும் அறநிலையங்களால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனைய செலவுகள்-நடை முறைச் செலவுகள்-ஆண்டுதோறும் 25 லட்சம் ரூபாய் ஆகும்; நோயாளிகளிடமிருந்து 16 லட்சம் ரூபாய் மட்டுமே வசூலாகிறதாம்.

இந்த மருத்துவ மனையில் அறுத்து ஒட்ட வைக்கும் சிகிச்சைகள், மூளையைப் பிரித்து அறுவை மருத்துவம் செய்தல், போலியோ மருத்துவம், ரேடியம்தெரபி, எலும்பு முறிவு மருத்துவம், இருதய நோய்கள் ஆகிய பகுதிகளும் மஞ்சக்காமாலையின் அடிப்படைக் காரணங்கள் பற்றிய ஆராய்ச்சித் துறையும் (Sprue Research Unit) சிறப்பாக அமைந்திருக்கின்றன.

குழந்தைகளுக்கான படுக்கைகளுள்ள பகுதியில் குழந்தைகளின் மனநிலையை ஆயும் உள இயல் ஆராய்ச்சி யாளரும் உள்ளனர். இத்துறையில் கல்வி பயிலுவதற்கும் இங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.* நோயுற்ற குழந்தைகள் விளையாடவும் படிக்கவும் ஏற்பாடுகள் உள்ளன. குற்றம் புரிபவர்களின் விரல்கள், கால்கள் ஆகியவற்றை ஆராயும் துறையும் இம்மருத்துவ மனையில் உண்டு.

படுக்கையில் இராமல், வெளியே இருந்து வந்து கைகாட்டி மருந்து வாங்கிச் செல்லுபவர்களின் நோய் களைப் பற்றி 25 ஆண்டு வரலாறு அடங்கிய குறிப்புக் களைத் தயாரிக்கும் ஆராய்ச்சித் துறை (Medical Record System) 1958-இல் இராக்கிபெல்லர் அறநிலையத்தின் ஆதரவுடன் இங்கே தொடங்கப்பட்டது. இதனால், Medical Record Librarian Course என்ற ஒரு புதிய படிப்பு இங்கே ஏற்படக் கூடும்.

* 4-year B.Sc., Course and 3-year Certificate Course in Paediatries.

குட்டநோய் மருத்துவம் செய்வதற்கென இங்கு 150 படுக்கைகள் உள்ளன. இத்துறையில் பல ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, சுவீடன், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் துணையால், குட்ட நோய் அறுவை சிகிச்சை மருத்துவர்களுக்குப் பயிற்சி தரும் நிலையம் 1961-இல் தொடங்கப்பட்டிருக்கிறது. வேறு சிலவகை உடற்கூறுகளைப் பற்றிப் பயிற்சி பெறுபவர் களுக்கு விடுதிகள் கட்ட மேற்கு ஜெர்மனியிலிருந்தும் சுவீடிஷ் செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்தும் நன்கொடைகள் வழங்கப் பெற்றுள்ளன.

மருத்துவத் துறையில் இந்தியநாடு அறியாத பல புதிய முறைகளை இம் மருத்துவ மனை கையாண்டு வருகிறது.

சுற்றுப்புறக் கிராமங்களில் இந்த மருத்துவ மனையின் நடமாடும் மருத்துவ நிலையங்கள் பணியாற்றுகின்றன. கரிகேரியில் குட்ட நோயால் வாடும் குழந்தைகளுக்கென ஒரு மருத்துவ நிலையமும், வேலூரிலிருந்து குடியேற்றத் திற்குச் செல்லும் வழியிலுள்ள காவனூரில் கிராமியக் குட்டநோய் விடுதியும், வேலூரிலிருந்து 100 கி.மீ. சுற்றளவி லுள்ள பகுதிகளில் கண்மருத்துவ முகாம்களும், வேலூரி லிருந்து எட்டு கி.மீ. தொலைவிலுள்ள பெண்ணத்தூரில் நுரையீரல் நோய் விடுதியும் இந்த மருத்துவ மனையின ரால் நடத்தப்பட்டு வருகின்றன.

இதைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரியைப் பற்றி, கல்வி நிலையங்கள் என்ற பகுதியில் விரிவாகக் கூறியிருக்கிறோம்.

இம்மருத்துவ மனை பற்றிய செய்திகள் அடங்கிய திங்கள் இதழ் இங்கிருந்து வெளிவருகிறது.

பெதஸ்டா மருத்துவமனை, ஆம்பூர் (Bethesda Hospital)

மிசனரிமார்கள் நடத்தி வரும் இந்த மருத்துவ மனையும் குறிப்பிடத்தக்கது.

சேலம் மாவட்டத்தில் 1896 முதல் நடைபெற்று வந்த மிசௌரி இவாஞ்சலிகல் லூத்தரன்மிசன், ஆம்பூரில் 1921-இல் மருத்துவப் பணியை மேற்கொண்டது. மருத்துவ மனை, 1923-இல் சிகாகோ நகரினரான டாக்டர் டி. டோடர்லெயின் என்னும் அமெரிக்கரால் நிறுவப் பட்டது; 1949 முதல் இது இந்தியர்களின் ஆளுகையில் இருந்து வருகிறது. 1950-இல் இம்மருத்துவ மனைக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

வெளிநாட்டினருட்பட 13 பேர் இங்கு வேலை பார்க்கின்றனர். 175 படுக்கைகள் உள்ளன. சிறந்த அறுவை சிகிச்சையும் கிருமிகள் சோதனையும் உடற் கூறு மருத்துவமும் செய்யப்படுகின்றன.

நுரையீரல் நோய்க்கென (T.B.) 90 படுக்கைகள் உள்ளன. இந்த நோய் நீக்கத்துக்கென கொலராடோவிலுள்ள வீட்ரிட்ஜ் அறநிலையம் பொருளுதவி செய்து வருகிறது.

புத்தூர் மருத்துவம்

அறக்கோணத்திற்கு அருகேயுள்ள புத்தூரில் முறிந்து போன எலும்புகளைச் சேர்த்துக் கட்டிப் பச்சிலைகளால் குணப்படுத்துவதில் வல்லவர்களான மருத்துவர் உள்ளனர்.

அரசாங்க மருத்துவ மனைகள்

அரசாங்க மருத்துவ மனைகள் இம்மாவட்டத்தில் பல இடங்களில் உள்ளன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது வேலூரிலுள்ள தலைமை மருத்துவ மனை. பொதுமக்கள் தங்களுடைய ரத்தம், உடல் உறுப்புக்களின் வலு ஆகியவற்றைச் சோதித்துக் கொள்ளுவதற்கான ஆய்வுக் கூடமும் (Public Health Regional Laboratory) வேலூரில் இருக்கிறது.

நாட்டு மருத்துவம்

சவ்வாது மலையிலும் அதன் மீதுள்ள காடுகளிலும் கீழ்வரும் மூலிகைகள் கிடைக்கின்றன. நாட்டு மருத்துவர்களும் குடும்பப் பெண்களும் இவற்றைப் பயன்படுத்தி வருகின்றனர்:

சீந்திக் கொடி, பிரம்மதண்டு, கடுகு, நாய்வேளை, மாவளிங்கசெடி, மயிர்மாணிக்கம், பூவரசு, பெரும்துத்தி, நெருஞ்சில், வில்வம், பொரசு, கருவேலம், சீமை அகத்தி, பொன் அவரை, புங்கம், நன்னாரி, நிலாவரை, ஊமத்தம், செம்பை, ஆகாச கருடக்கிழங்கு (Bryonia Epigala), வேம்பு, சிக்காமுட்டி.

யூனானி மருத்துவமுறை இம்மாவட்டத்தில் எல்லாச் சமூகத்தாரிடமும் செல்வாக்குப் பெற்றிருக்கிறது..பேரணாம் பட்டு, திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் சிறந்த யூனானி மருத்துவர்கள் உள்ளனர். கசாயம், லேகியம் ஆகியவற்றை அவர்கள் செய்கிறார்கள்.

இம்மாவட்டத்திலுள்ள பல நகராண்மைக் கழகங்கள் சித்த மருத்துவ நிலையங்கள் நடத்தி வருகின்றன.

✦ ✦ ✦

ஊர்களைப் பற்றிய குறிப்புகள்

வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

14. திருப்பத்தூர் வட்டம்

மாவட்டத்தின் பெரிய வட்டங்களில் இது ஒன்று. வேலூர் வட்டத்தைப் போலவே இவ்வட்டத்திலும் மக்கள் தொகை நான்கு லட்சத்துக்கு மேற்பட்டதாகும்.

இவ்வட்டம் மலைவளமும் வாணிபச் சிறப்பும் உடையது. இங்கு பெரிய நகரம் வாணியம்பாடி (மக்கள் தொகை 47,810) தலைநகரம் திருப்பத்தூர் (30,788). இரயில் போக்குவரத்துச் சந்திப்பாக உள்ள ஜோலார்ப்பேட்டை (16,358)யும் நல்வாழ்விடமான ஏலகிரி மலையும் இவ் வட்டத்தில் இருக்கின்றன. 1910 வரை இவ்வட்டம் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

திருப்பத்தூர்

இராமநாதபுர மாவட்டத்திலும் இப்பெயரில் ஓர் ஊர் இருக்கிறது; அதைத் திருப்புத்தூர் என்று தேவாரம் கூறுகிறது. இந்நகரை, அந்நகரினின்றும் வேறுபடுத்திக் காட்ட, 'சேலம்-திருப்பத்தூர்', 'வேலூர் திருப்பத்தூர்', 'வட ஆர்க்காடு திருப்பத்தூர்' என்று பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.* பஸ் போக்குவரத்தில் முக்கியமான ஊராகவும் பல ஊர்களுக்குச் செல்லும் சாலைகளின் திருப்பத்திலும் இவ்வூர் அமைந்திருக்கிறது.

திருப்பத்தூர், ஒரு நகராண்மைக் கழகம் உள்ள ஊர்; வட்டத்தின் தலைநகர்; துணைக் கலெக்டரின் அலுவலகம் உள்ள இடம்; 1792-இல் சேலம் மாவட்டத்தின் தலைநகராக

* ஊரைச் சுற்றிலும் அழகிய 10 ஊர்கள் இருப்பதால் திருப்பத்தூர் என்ற பெயர் ஏற்பட்டதாக இவ்வூரினர் கூறுவர்.

இருந்த சிறப்புக்கு உரியது. வடஆர்க்காடு மாவட்டத்தில் இந்நகர் சேர்க்கப்பட்ட பிறகே, சேலம், ஓரளவு குறிப்பிடத் தக்க நகரமாக ஆயிற்று. பிற இடங்களில் ரெவினியூடிவிசன் ஆபீசர் இருந்தபோதிலும் இப்பகுதியின் முக்கியத்துவம் கருதி ஆங்கிலேயர் ஆட்சியில் ஓர் ஐ.சி.எஸ். அலுவலர் இங்கு ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டு 'சப்கலெக்டர்' என்ற பதவிப் பெயருடன் இருந்து வந்தார்.

திருப்பத்தூர்க்குக் கிழக்கில் (ஒரு கல் தொலைவில்) உள்ள ஒரு சிற்றூரில் ஆறடி உயரம் உள்ள "புத்தர் சிலை" ஒன்று நல்ல நிலையில் இருக்கிறது. திருப்பத்தூரைச் சேர்ந்த ஒரு பகுதிக்கு "கௌதமன்பேட்டை" என்னும் பெயர் வழங்குகிறது. இவற்றை நோக்க "இங்கே புத்த மதம் சிறந்திருந்ததோ?" என்று கருத இடம் ஏற்படுகிறது.

வாணிபத்தில் இந்நகர் சிறந்து விளங்குகிறது. துவரம் பருப்பு, வெல்லம், மிளகாய் உற்பத்தி மிகுதி. லுங்கி, சேலை நெசவுத் தொழில்களும் வளர்ச்சியடைந்துள்ளன. சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்று இங்கு உண்டு. அரசாங்கத்துக் காட்டியல் துறையினர் சந்தனக் கட்டை களை வைத்திருக்க இந்நகரில் ஒரு கிடங்கு ஏற்படுத்தி யுள்ளனர். ஏலகிரிமலை இங்கிருந்து எட்டு கிலோ மீட்டர்த் தொலைவில் இருக்கிறது.

கல்வி நிலையங்களில், நூற்றாண்டு விழாக் கொண் டாடிய நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியும், சிறந்த முறையில் நடைபெற்று வரும் 'சேக்ரட்ஹார்ட் கல்லூரி'யும் குறிப்பிடத்தக்கவை. சேக்ரட்ஹார்ட் கல்லூரியை சலேசியன் சொசைட்டி என்ற கத்தோலிக்க நிறுவனம் நடத்தி வருகிறது.

சலேசியன் சொசைட்டி 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் ஜான் பாஸ்கோ என்ற துறவியால் தொடங்கப் பட்டது. சிறுவர்களுக்குச் சமய அறிவும் தொழில் கல்வியும் புகட்டுவது இதன் நோக்கம். இயேசு சபைப் பாதிரிமார்கள்

அமைப்புப் போன்று இதுவும் பெரிய நிறுவனமாக நடை பெற்று வருகிறது. தென் இந்தியாவில் இதைச் சேர்ந்த 640 குருமார்கள் உள்ளனர். இவர்களுடைய பிஷப் வேலூரி லும், ஆர்ச்சு பிஷப் மைலாப்பூரிலும் இருக்கிறார்கள்.

இந்நிறுவனத்தின் கிளை 1935-இல் திருப்பத்தூரில் தொடங்கப் பெற்றது. கல்லூரியைத் தவிர உயர் நிலைப் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளி, ஏழைச் சிறுவர் இல்லம் ஆகிய நிலையங்களையும் இந்நகரில் இவர்கள் நடத்தி வருகின்றனர்.

கிறித்து குல ஆசிரமம்

திருப்பத்தூரிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் இந்த ஆசிரமம் இருக்கிறது. பல நூறு ஏக்கர் பரப்புள்ள இந்த நிலையம், உயர்ந்த தளத்தில் இருக்கிறது. கேம்பிரிட்சில் மருத்துவக் கலை பயின்ற டாக்டர் பாரஸ்டர் பாடன் என்ற ஸ்காட்லாந்து கோடீசுவரர் இந்த ஆசிரமத்தை நடத்தி வருகிறார். டாக்டர் ஜேசுதாசன் சவரிராயன், டாக்டர் ராஜா சவரிராயன் ஆகிய புகழ் பெற்ற மருத்துவர்களும் இங்கு பணியாற்றி வருகின்றனர். கண் மருத்துவம், எக்ஸ்ரே மருத்துவம் ஆகிய துறைகளில் தலைசிறந்த மருத்துவர்கள் ஆசிரமத்தில் உள்ளனர். காந்தியடிகளும தீனபந்து ஆண்டிரூசும் இந்த ஆசிரமத்தைக் கண்டு மகிழ்ந்துள்ளனர். இங்கு இலவச மருத்துவம் செய்யப்படுகிறது. 100 படுக்கைகள் உள்ளன.

1920 அளவில், ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து இந்துக்களின் கோயில் போல கோபுரம், மண்டபம் முதலியன அமைத்து, கருங்கல்லில் கிறித்தவ தேவாலயம் ஒன்று கட்டப் பெற்றது. தமிழ்க் கீர்த்தனைகள் பாடி, தமிழரிடம் கிறித்தவ சமயத்தின் அடிப்படையான உண்மை களைத் தாங்கள் வாழ்ந்து காட்டி இந்த ஆசிரமத்தார் மற்றவர்களுக்கு அறிவித்து வருகின்றனர். எளிய வாழ்க்கை வாழ்ந்து உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருப்பதால்

இந்த ஆசிரமத்தாரின்பால் மக்களுக்குப் பெருமதிப்பு உண்டு.

கிறிஸ்து குல ஆசிரமம் தொடங்கிய பாட்டன் துரை தேசியக் கிளர்ச்சிகளை ஆதாரித்துக் காங்கிரசில் ஈடுபாடுடையவராக இருந்தார். அதனால் சென்னை அரசாங்கம் 1931-இல் அவரைச் சிறையில் வைத்தது; பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் அவரை விடுவிக்கும்படி ஆணையிட்டனர்.

ஆலங்காயம்

இச்சிற்றூருக்கு அருகே ஏலமலைகளும் சவ்வாது மலைத் தொடரும் மிக நெருக்கத்தல் சந்திக்கின்றன. இவ்விடம் 'ஆலங்காயம் பள்ளத்தாக்கு' என்று கூறப்படுகிறது. சவ்வாது மலைத் தொடரில் 138 சிற்றூர்கள் இருக்கின்றன. ஆலயங்காயத்திலிருந்து புறப்பட்டுச் சென்று மலைகள் மீதுள்ள ரெட்டியூரை அடையாலம். அதன் அருகேயுள்ள மேட்டு நிலப் பகுதி மிக்க அழகிய தோற்றம் உடையது. அம்மேட்டு நிலப்பகுதியில் ஒருவகைப் பசும்புல்லால் மூடப்பெற்ற ஆழமான பள்ளங்கள், பூங்கா போன்ற காட்சி நல்கும் பசிய புல்வெளிகள், அப்புல்வெளிகளில் மூங்கிற் புதற்கள், ஆங்காங்கு நீர் நிலைகள் ஆகியவை காட்சியளிக்கின்றன.

ஆலங்காயத்திலிருந்து கிழக்கே இறங்கி, போளூருக்குச் செல்லலாம். இவ்வழியிலுள்ள கோமுட்டி ஏரி என்னுமிடம் அமைதியாகச் சிலநாள் கழிப்பதற்கு ஏற்ற மலைப் பகுதியாகும்.

வாணியம்பாடி

வாணிகம் நடைபெறும் இடம் வாணியம்பாடி.

பாலாற்றின் கரையில் தமிழ்நாட்டில் அமைந்த முதல் நகரம் இது. பாலாற்றின் கிளைகளால் சூழப் பெற்ற தீவுகளால் இவ்வூர் ஏற்பட்டது. 1874-இலும் 1903-இலும்

வெள்ளத்தால் இவ்வூர் மிகவும் சேதம் அடைந்தது. 1886-இல் இங்கு ஒரு நகராண்மைக் கழகம் நிறுவப் பெற்றது. இந்நகரில் (நகராண்மைக் கழக எல்லைக்குள் 41,943 மக்களும் அதைச் சுற்றிய பகுதிகளில் 5,867 மக்களும்) மொத்தம் 47,810 பேர் வாழ்கின்றனர்.

தோட்ட விவசாயம் இங்கு மிகுதி. தோல் பதனிடும் தொழிலில் பெரும் பொருளீட்டியுள்ள முஸ்லிம் வணிகர்கள் சலவைக்கல்லால் கட்டிய மாடமாளிகைகளில் வாழ்கின் றனர். ஆயினும் பெண்களிடம் கோஷா முறை நிலவுவ தால், வீடுகளில் கதவுகள் சாத்தப்பட்டே உள்ளன. இவ் வூரில் இஸ்லாமியாக் கல்லூரி நடைபெற்று வருகிறது.

தாஜ்மகாலின் மாதிரி வடிவாக நியூ டவுனில் ஒரு மசூதி கட்டப் பெற்றிருக்கிறது.

10 வீடுகளுக்கு ஒரு கிணறு மட்டுமே உண்டு.

வெல்லம் பெரிய அளவில் உற்பத்தியாகிறது. கோரைப் பாய் மிடையும் தொழிலும் இங்கு பரவியிருக்கிறது. பீடித் தொழிற்சாலைகளும் எண்ணெய் ஆலைகளும் ஏராளமாக உள்ளன. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மிகுதியாக இருக்கின்றன; அவற்றிலிருந்து செல்லும் கழிவு நீரைத் தூய்மைப்படுத்தி, இரசாயனப் பொருள்களைப் பயன் படுத்தி மீண்டும் அந்த நீரைப் பாலாற்றில் விடுவதற்குரிய திட்டங்களை இந்திய அரசும் மாநில அரசும் வகுத்துள்ளன.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் கிளை இவ்வூரில் இருக்கிறது. இவ்வூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு வட்டம் அமைய வேண்டுமென்று இவ்வூரினர் விரும்பு கின்றனர்; முன்னர், ஒரு துணை வட்டத்தின் அலுவலகங்கள் இவ்வூரில் இருந்தனவாம்.

பழைய வாணியம்பாடி எனப்படும் பேட்டையில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இங்கு கோயில் கொண்டிருக்கும் விருத்தீசுவரரின் உருவம் மேற்கு நோக்கி யிருக்கிறது.

ஏலகிரி

இது சீர்ப் பயணத்துக்குரிய இடம். வளம் மிகுந்த இச்சிறுநகர் செழிப்பான ஓர் மலைமீது அமைந்திருக்கிறது. வாணியம்பாடியிலிருந்து 16 கி.மீ. தொலைவிலும் ஜோலார்ப்பேட்டையிலிருந்து 5 கி.மீ. தொலைவிலும் இம்மலைக்குச் செல்லுவதற்குரிய சாலை தொடங்குகிறது. இச்சாலையின் நீளம் 9 மைல் (15 கி.மீ.) 13 இடங்களில் வளைந்து சென்று, மலை உச்சியை அடைய வேண்டும். 1960 வரை, குதிரை மீதேறி அல்லது டோலியில் கரடும் முரடும் நிறைந்த மாமூல் வழியில் 12 கி.மீ. தொலைவு சென்று மலையை அடைய வேண்டியதிருந்தது.

மலையின் அடிவாரத்தில் அழகிய பூங்காவும் மலை மீது 'சர்க்கூட் ஹவுஸ்' என்னும் அரசாங்க மாளிகையும் அமைக்கப்பட்டுள்ளன.

மலையின் உயரம் 970 மீட்டர் அல்லது 3200 அடி (கோடையும் உதகையும் 7000 அடி; ஏர்க்காடு 4800 அடி.)

அழகிய பள்ளத்தாக்கையும் வளம் மிகுந்த அடர்ந்த காடுகளையும் வகை வகையான உயிரினங்களையும் மலை மீதிருந்து காண்பது உவகை தரும்.

மலையுச்சியின் பரப்பளவு 5 சதுர மைல் (13 சதுர கி.மீ.) அங்கு 13 கிராமங்களில் 8,000 மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் ஒருசிலர் நெடுங்காலமாக வாழ்ந்தோரின் வழித் தோன்றல்கள்; பெரும்பாலோர் முஸ்லிம்களின் படையெடுப்பின் போது மலையேறித் தஞ்சமடைந்து பிறகு மலை வாழ்வு மனத்திற்கேற்றதாக இருந்ததால் நிலைத்து விட்டவர்களின் வழிவந்தோர். இயற்கை வளத்தாலும் சூழ்நிலையாலும் இங்கு வந்து குடியேறியுள்ள ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும் சில நூறு பேர் உள்ளனர். ஒரு சிலர் மட்டும் உறுதியான கட்டிடங்களும் பெரும்பாலான மக்கள் குடிசைகளிலும் இருந்து வருகின்றனர்.

மலைமீது மலையாளிகள் என்ற சாதியாரும் வாழ்ந்து வருகின்றனர்; அவர்கள் காப்பி, சோளம் போன்ற பல்வேறு உணவுப் பொருள்களைப் பயிரிடுகின்றனர். வெள்ளைக் காரர்கள் ஏற்படுத்திய தக்காளி, ஏலக்காய், மாதுளை, சாத்துக்குடி பழத் தோட்டங்களும் இம்மலையில் உள்ளன.

ஏலகிரி வாழ்நர் அனைவருமே வேளாண்மையைத் தொழிலாக உடையவர்கள் ஆவர். நெல், ராகி, சோளம், பருப்பு, கொள்ளு, உழுந்து, சாமை, காப்பி, கொய்யா, பலா, மாதுளை, வாழை ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். இதற்கு வேண்டும் வளமான நிலமாகவும் 25 அடி (7 மீட்டர்) ஆழத்தில் எந்த இடத்திலும் தண்ணீர் கிடைக்கும் பகுதியாகவும் ஏலகிரி அமைந்திருக்கிறது. ஆங்கிலோ இந்தியர் சிலர் கோழிப் பண்ணை வைத்திருக்கின்றனர்.

மழையும் இங்கு போதிய அளவு (ஆண்டுதோறும் 45 அங்குலம் அல்லது 1130 மி.மீ.) பெய்கிறது; வைகாசி முதல் கார்த்திகை வரை மழைக் காலம். பங்குனி - சித்திரை மாதங்களில் வேலூரில் 110^0 பா. வரை வெப்ப மிருக்கும் போது, ஏலகிரியில் 65 அல்லது 70^0 பா. வெப்பம் மட்டுமே உண்டு. எனவே, கோடைகால வாழ்க்கைக்கு இது ஏற்ற ஊர். ஏர்க்காடு, கோடைக்கானல், உதகமண்டலம் போல, மக்கள் மகிழ்ச்சியாகப் பொழுது போக்க ஏற்ற இடமாக ஏலகிரி மலையையும் அமைக்க, அரசாங்கம் 16½ லட்சம் ரூபாய் செலவிட முன்வந்திருக்கிறது. மின்சாரம், குடி நீர்க் குழாய் வசதிகள், உணவு விடுதிகள் - இவை ஏற்பட்டு விட்டால், ஏலகிரி இணையற்று விளங்கும். ஏனைய மலைவாழ்விடங்களைவிட, சென்னைக்கு அருகே (140 மைல் அல்லது 225 கி.மீ.) இருப்பதால் ஏலகிரியின் எதிர்காலம் ஏற்றம் நிறைந்ததாக இருக்கும்.

✦ ✦ ✦

15. குடியேற்றம் வட்டம்

இவ்வட்டம், வட ஆர்க்காடு மாவட்டத்தின் வட பகுதியில் ஆந்திரப் பிரதேசத்தின் எல்லையில் இருக்கிறது. 1961-இல் இவ்வட்டத்தின் மக்கள் தொகை 3,84,412.

இவ்வட்டத்தின் தலைநகர் குடியேற்றம். 1961-இல் இந்நகரின் மக்கள் தொகை 50,365. பேரணாம்பட்டு (19,516), தாரப்படவேடு (8,984), உதயேந்திரம் (5,889) ஆகியவையும் பெரிய ஊர்களாகும்.

கரும்பு வேளாண்மை, பட்டுத்துணி நெசவு, மணிலாக் கொட்டை விற்பனை, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் - இவை வட்டத்தின் சிறப்புக்கள். சித்தூர் மலையும் பாலாறு, பொன்னியாறு, ஆம்பூர் ஆறு, குடியேற்றம் ஆறுகளும் இவ்வட்டத்திலும் உள்ளன.

1957-இல் இவ்வட்டத்தில் நடைபெற்ற ஒரு துணைத் தேர்தலில், மாநில முதல் அமைச்சரான காமராசர், சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

குடியேற்றம்

இந்நகர் பாலாற்றுக்கு வடக்கே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. 1885 முதல் இங்கு நகராண்மைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வூர்க் கங்கை அம்மன் திருவிழா (கங்கம்மா ஜாத்திரா) பெரிய அளவில் நடைபெறுகிறது. 'ராஜகோபால் பாலிடெக்னிக்' என்ற தொழிற் கல்வி நிலையம் நடைபெற்று வருகிறது. குடியேற்றத்தின் பெரிய தொழில் நெசவுத் தொழில். 10,000 தறிகளும் இரு பஞ்சாலைகளும் ஒரு பட்டு நெசவு ஆலையும் இருக்கின்றன. இவ்வூரிலிருந்து சிறு தொலைவில் கரும்பு ஆராய்ச்சிப்

பண்ணை இருந்து வருகிறது. குடியேற்றம் மாட்டுச் சந்தை புகழ் பெற்றது. வெல்லம், தோல், புளி, புகையிலை வாணிகம் நடை பெறுகிறது. மக்கள் தொகை 45,667 (1951); 50,365 (1961).

உதயேந்திரம் (5,889)

நந்திவர்ம பல்லவனுக்கு, தக்க காலத்தில் உதவி ஒரு போரில் அவனுக்கு வெற்றி தேடித்தந்த அவனுடைய சேனாபதியான உதயசந்திரன் பெயரால் அமைந்த ஊர் இது. இந்நிகழ்ச்சிகள் உதயேந்திரம் செப்பேடுகளில் விரிவாகக் கூறப்படுகின்றன. உதயேந்திரமங்கலம் என்பதன் மரூஉவே உதயேந்திரம்.

ஒடுகாத்தூர்

இவ்வூரருகேயுள்ள முதுகுமரன் மலையில் முருகன் கோயில் இருக்கிறது. இங்கு திருக்கார்த்திகையன்று திரளான மக்கள் வழிபடுகின்றனர்.

கரிகேரி

கலைச் சிறப்புடைய மண்பாண்டங்கள் இவ்வூரில் அழகாகச் செய்யப்படுகின்றன. பழைய கோட்டையின் சிதைவுகளும் குட்ட நோய் மருத்துவ மனையும் இங்கு உள்ளன.

காட்பாடி

வேலூர் நகரையடுத்து இவ்வூர், பாலாற்றின் மறுகரையில் இருக்கிறது. இங்கு இரயில் சந்திப்பு நிலையமும் புதிய குடியிருப்புக்களும் ‘ஆக்ஸிலியம் காலேஜ்’ என்ற மகளிர் கல்லூரியும் உள்ளன. கிறித்தவ மிசனரிமார் இங்கு பல பணிகளைச் செய்து வருகின்றனர். மரச் செயப்படுபொருள் தொழிலும் குடிசைக் கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்துள்ளன. வேளாண்மைப் பள்ளி ஒன்று நடைபெற்று

வருகிறது. இவ்வூரின் பெரும் பகுதி தாரப்படவேடு ஊராட்சி மன்றத்துக்குட்பட்டது.

திருப்பத்தூரில் மாவட்ட தலைமை நிலையமுள்ள சலேசியன் சொசைட்டியார் காட்பாடியில் டான் பாஸ்கோ உயர் நிலைப் பள்ளியையும் (சென்ட் ஜோசப்ஸ் ஹோம் டிரேட் ஸ்கூல்) என்ற ஒரு தொழில் கல்விக் கூடத்தையும் நடத்தி வருகின்றனர்.

காட்பாடி, கடல் மட்டத்திலிருந்து 700 அடி (210 மீட்டர்) உயரத்தில் இருக்கிறது. இங்கிருந்து சென்னை, ஜோலார்ப்பேட்டை, விழுப்புரம் ஆகிய இடங்களுக்கு இரயில் பாதைகள் செல்லுகின்றன. கீல்வாத நோய் உள்ளவர்களை இவ்வூரின் சூழ்நிலை குணப்படுத்துகிறது. காட்பாடி என்பது காட்டுப்பாடி என்பதன் மரூஉ.

காட்டுப்பாக்கம் என்ற தொல்காப்பிய கால வரிவடிவின் ஒலிப்பு இக்கால மேலையுலக ஒலிக்குறிப்பின்படி காட்பாடி என்பதாகவே அமையக்கூடும் என்பர் மொழி நூலோர்.

காங்கேய நல்லூர்

இது காட்பாடியிலிருந்து மூன்று கிமீ. தொலைவில், சத்துவான்சேரிக்கு எதிரில் பாலாற்றின் மறுகரையில் உள் சிற்றூர். இங்குள்ள முருகன் கோயில் கிருபானந்த வாரியாரின் முயற்சியால் அழகாகப் புதுப்பிக்கப் பெற்றிருக்கிறது.

சாத்கூர் (சாத்துக்குடி)

பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்தில் இவ்வூரின் பெயரால் ஒரு வட்டம் இருந்தது.

மலைகள் மிகுந்த செழிப்பான பகுதியில் இவ்வூர் அமைந்திருக்கிறது. தெலுங்கு மொழியில் 'ஏடு கொண்டல

துர்க்கம்' என்றும் உருது மொழியில் 'சாத்கட்' என்றும் இவ்வூர்க்குப் பெயர்கள் உண்டு; இவற்றின் பொருள் ஏழு கோட்டைகள் அல்லது ஏழு வீடு என்பதாகும். இவ் வூரருகே யுள்ள ஏழு குன்றுகளில் விசயநகர, மராத்திய மன்னர்கள் ஏழு மலைக்கோட்டைகளையும் ஆலயங்கள், மண்டபங்கள், நீர் நிலைகளையும் கட்டியிருக்கின்றனர். இம்மலைகளுள்மிக உயர்ந்தது 718 மீட்டர். முகமதியர் ஆட்சியில் இக்கோட்டைகளுக்கருகே, வாலாஜா நவாபு சுவை மிகுந்த சாத்துகுடி தோட்டங்களைப் பயிரிட்டான். தரைப் போரின் முக்கியத்துவம் தவிடு பொடியாகி விட்ட இந்நாளில் கோட்டைகளின் பெருமை குன்றி, சாத்துக்குடி யாலேயே இவ்வூரின் புகழ் பரவி வருகிறது. அருகேயுள்ள பேரணாம்பட்டு வளர்ச்சியடைந்து வருகிறது.

திருவல்லம்

இவ்வூரின் பெயர் 'திருவலம்' என மருவியிருக்கிறது. திருவலம் இரயில் நிலையத்திலிருந்து இரண்டு கி.மீ. தொலைவிலும் சென்னை மாநகரிலிருந்து 120 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது. இவ்வூரிலிருந்து 2½ கி.மீ. தொலைவில் பாலாறும் பொன்னையாறும் கூடுகின்றன.

திருவல்லம் கோயில் பொன்னையாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. சம்பந்தராலும் அருணகிரிநாதராலும் இத்தலம் பாடப் பெற்றிருக்கிறது. பல்லவச் சிற்பங்களும் கல்வெட்டுக்களும் இறைவனைப் போன்றே கிழக்கு நோக்கியிருக்கும், நந்தியும் வல்லநாதர் வரசித்தி விநாயகர் விக்கிரகங்களும் காணத்தக்கவை.

வல்லம் என்ற சொல் அரணுடைய ஊரைக் குறிக்கும். இவ்வூர் பாண மன்னர்களுக்குரிய ஒரு கோட்டையாக இருந்தது என்றும் பத்தாம் நூற்றாண்டின் சிறந்த படை வீடாக இருந்ததென்றும் கல்வெட்டுக்களால் தெரிகிறது.

இங்கிருந்து 13 கி.மீ. தொலைவில் வள்ளிமலை இருக்கிறது.

திருவிரிஞ்சிபுரம்

இவ்வூர் வேலூருக்கு மேற்கே 13 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இது ஒரு வைப்புத்தலம். அருணகிரிநாதர் பாடல் பெற்றது. கோயில் சன்னிதியில் நிகழும் திருமணங் களுக்கு வரதட்சிணை கொடுப்பதோ வாங்குவதோ கூடாதென அந்தணர்கள் முடிவு செய்ததாக இக்கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

இவ்வூரிலிருந்து ஆறு கிமீ. தொலைவிலுள்ள மகாதேவ மலை (130 மீட்டர் உயரம்)யில் சூரியன் பார்க்காத சுனை இருக்கிறது. மலைமீதுள்ள சிவன் கோயிலருகே நாள் தோறும் நடுப்பகலில் கழுகுகள்-திருக்கழுக்குன்றத்திற் போலவே - வந்து கோயில் குருக்கள் கையிலிருந்து உணவு உண்டு செல்லுகின்றன.

பேரணாம்பட்டு (19,516)

குடியேற்றத்துக்கு அடுத்தபடி இவ்வட்டத்தில் பெரிய ஊர் இதுவே; குடியேற்றம்-ஆம்பூர்ச் சாலையில் இருக்கிறது. முஸ்லிம்கள் மிகுதியாக வாழ்கின்றனர். தோல் பதனிடு தொழில் பெரிய அளவில் நடைபெறுகிறது. பல ஆண்டு களுக்குமுன் இங்கு ஒரு சர்க்கரை ஆலை இருந்தது.

வள்ளிமலை

திருவலம் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 13 கி.மீ. தொலைவில் இந்த அழகிய மலை இருக்கிறது. சித்தர் பலர் உறைந்த சிறப்பும் வள்ளியம்மை பிறந்து, வாழ்ந்த பெருமை யும் வளம்மிக்க இம்மலைக்கு உரியன. பல்லவர் குடை வரைக் கோயிலும், நாயக்கர்களின் மண்டபமும், வள்ளி மஞ்சள் அறைத்து நீராடிய சுனையும், வள்ளி தெய்வானை முருகன் மயில் உருவங்களும், சமண விக்கிரகங்களும் ஆசிரமமும் காணத்தக்கவை.

✦ ✦ ✦

16. வேலூர் வட்டம்

வேலூர் வட்டம், இம்மாவட்டத்தில் மக்கள் நெருக்கம் மிகுந்த வட்டமாகும். வேலூர் நகரமும் இதில் அடங்கி யிருப்பதால் நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

மலைவளம் இங்கு மிகுதி. வீரர் ஏற இயலாதவாறு செங்குத்தாகக் கட்டப்பட்ட பல கோட்டைகள் இம்மலை களின் மீதுள்ளன. இவற்றில் வாழ்ந்த அரசர்களைப் பற்றியும் நவாபுகளைப் பற்றியும் சுவையான கதைகள் சொல்லப்படுகின்றன.

இங்கு வெப்பம் மிகுதி; மழை 50 அங்குலம் (1270 மில்லி மீட்டர்) பெய்வதாகக் கணக்கிடப் பெற்றிருக்கிறது. மலைப் பகுதிகளிலிருந்து வடியும் தண்ணீர் தேங்கி நிற்கும் பல ஏரிகள் இந்த வட்டத்தில் உள்ளன. மைசூர் மாநிலத்தில் தென்மேற்குப் பருவக் காற்றால் பெருமழை பெய்தால், பாலாற்றுக்கு நீர் வரும்; அப்போது இவ்வட்டம் பயனடையும்.

இவ்வட்டத்தின் பெரிய ஊர்கள் வேலூர், ஆம்பூர், பள்ளிக்கொண்டை, தோரப்பாடி (6,719), சாத்துவச் சேரி, கோண வட்டம் (2,645) ஆகியவை.

வேலூர்

வேலூர் வ.ஆ. மாவட்டத்தின் தலைநகரம்; இம் மாவட்டத்தின் பெருநகரமும் இதுவே. இராணுவக் கட்டிடக் கலையின் சிகரமெனக் கருதப்படும் பெரிய தொரு கோட்டையும், எந்நாட்டவரும் கண்டின்புறும்

கல்யாண மண்டபமும், மூர்த்தியில்லாக் கோயிலும், சிறந்த மருத்துவ மனையும் இந்நகருக்கு அளப்பரிய மதிப்பைத் தருகின்றன.

பாலாற்றின் கரையிலும் 500 அடி (150 மீட்டர்) உயர முள்ள மலைத் தொடரின் அடிவாரத்திலும் அமைந்தது வேலூர்.

இந்நகரின் மக்கள் தொகை 1871-இல், 43,000; 1951-இல் 1,06,024; 1961-இல் 1,13,580.

பாலாற்றின் மறுகரையிலுள்ள காட்பாடி, வேலூர் நகராண்மைக் கழக எல்லைக்குட்பட்டதன்று. காட்பாடி யின் மக்கள் தொகையும் சேர்த்துக் கணக்கிட்டால், வேலூர் தமிழ்நாட்டின் ஐந்தாவது பெரு நகரமாகும். வேலூரும் காட்பாடியும்-திருச்சி ஸ்ரீரங்கம், கல்கத்தா ஹௌரா, பூடா பெஸ்டு போன்று-ஆற்றால் இணைக்கப் பெற்ற இரட்டை நகரங்களாகும்.

'வேலூர் முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்த நிலப் பகுதியில் உள்ளது. அங்கே அவரை, பவளம் போல வளர்ந்திருக்கும் மயிலின் கழுத்தைப் போன்ற நிறத்துடன் காயா மலர்கள் பூத்திருக்கும். மகளிரின் கை விரல் போல் காந்தள் காட்சி அளிக்கும். நெடிய வழிகளிலெல்லாம் முல்லைக் கொடிகள் இனிய காட்சி தரும்' என்ற இலக்கியச் செய்தியை உறுதிப்படுத்தும் வகையில் இன்றும் வேலூரி லிருந்து நாள்தோறும் பல்லாயிரம் கூடைகளில் முல்லைப் பூ ஏற்றுமதியாகிறது. வேலூரின் இறக்குமதிகள்-வெளியூரி லிருந்து நோயாளிகளும் கைதிகளும், வேலூரில் பெரும் அளவில் வியாபாரம் நிகழும் பொருள் நவதானியம்.

பெயர்க் காரணம்

வேலூரின் பெயருக்குப் பல காரணங்கள் கூறப் படுகின்றன. அவையாவன:

1. வேல மரங்கள் மிகுதியாக இருந்ததால் வேலூர் என்ற பெயர் வந்தது.

2. பாலாற்றின் வடகரையில் காங்கேயன் நல்லூர் முருகன் கோயிலிலுள்ள இறைவனுக்கு வேல் முருகன் என்று பெயர் உண்டு. வேல் உடைய வேலூர் ஆயிற்று.

3. பகைவரைக் கொல்லுவதற்காகக் கையில் வேல் ஏந்திய வீரர் நிறைந்த ஊர் ஆகையால் இது வேலூர் ஆகும்.

4. 'வேல மரங்கள் நிறைந்த காட்டில் வேலப்பாடி என்னும் புதுக் குடியிருப்பு உண்டாகி, நாளடைவில் காடு நாடாயிற்று. கோட்டைகள் கொத்தளங்கள் உடையதாய் வேலூர் சிறப்புற்றபோது ஆதியில் உண்டான வேலப்பாடி அதன் அங்கமாய் அமைந்து விட்டது' என்பது டாக்டர ரா.பி. சேதுப்பிள்ளை கருத்து.

5. வேலவன் அருளால் நல்லியக்கோடன் ஒரு போரில் வெற்றி பெற்ற ஊர்; ஆதலால் வேலூர் ஆயிற்று.

மக்கள் வழக்கில் இந்நகர் 'இராய வேலூர்' என்று பெயர் பெற்றிருக்கிறது. கோதாவரி வட்டத்திலுள்ள எல்லூரினின்றும் வேறுபடுத்திக் காட்டவும், விசயநகர இராயர்களுக்கு உட்பட்டிருந்ததை உணர்த்தவும் 'இராய' என்ற அடைமொழி சேர்க்கப்பட்டது.

இன்றைய வேலூர் அரசாங்க அலுவலக நகரமாகவும் வணிக நகரமாகவும் மருத்துவ நகரமாகவும் இருக்கிறது. அரசியல் தலைவராக இருந்த தியாகராசச் செட்டியார்

பெயரால் ஏற்பட்ட ஒரு குடியிருப்பு இப்போது '21 பங்களா' என்ற பெயரில் இருந்து வருகிறது.

வேலூரில் காணத்தக்க பழமையான இடங்கள் சில வற்றைப் பற்றி, இனிக் கூறுவோம்.

வேலூர்க் கோட்டை

தமிழ்நாட்டில் பல இடங்களில் கோட்டைகள் உள்ளன. ஆனால், வேலூர்க் கோட்டை தனிச்சிறப்புடையது; ஈடு இணையற்றது; வரலாற்றுப் பெருமையுடையது; பகையரசர் பல நாட்கள் முற்றுகையிட்டாலும் உள்ளே நுழைய முடியாதவாறு கருங்கற்களால் காட்டப் பெற்றது.

இருப்பிடம

இக்கோட்டை இன்றைய வேலூரின் நடுநாயகமான இடமாக இருக்கிறது. பாலாற்றின் தென்கரையிலும் மலை அடிவாரத்துக்கு அருகேயும் உளது.

அகழி

அகழி சூழ்ந்த கருங்கல் மதில்களால் சதுர வடிவத்தில் இக்கோட்டை அமைக்கப்பட்டிருக்கிறது. வேலூர் நகரின் கிழக்கேயுள்ள மலைநீர் வந்து சேரும் சூரிய குளம் என்னும் ஏரியிலிருந்தும் பாலாற்றிலிருந்தும் இந்த அகழிக்கு நீர்க் கால்கள் உள்ளன. அகழியின்மீது முன்னாளில் அசைவுப் பாலம் இருந்தது. இப்போது கற்பாதை போடப்பட்டிருக் கிறது.

கோட்டையின் அமைப்பு

அகழியையடுத்துள்ள மதிற் சுவர்கள் மிக்க வலிமை யுடையன. அவை கொத்தளங்களையும் உள் அறைகளை யும் பீரங்கிகள் வைத்துச் சுடுவதற்குரிய துணை அமைப்பு களையும் உடையன.

மதிற்சுவர்களின் உயரமும் கோட்டையின் பரப்பளவும் ஏறத்தாழ சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குச் சமமானவை. வேலூர்க் கோட்டையின் மேல் தளத்தில் கார்கள் செல்லக்கூடிய அளவு அகன்ற வீதி இருக்கிறது.

கோட்டை கட்டப்பட்ட வரலாறு

இக்கோட்டை எப்போது கட்டப்பட்டது என்று உறுதியாகத் தெரியவில்லை. 13-ஆம் நூற்றாண்டிலேயே இது கட்டப்பட்டது என்பது சிலர் கருத்து. 17-ஆம் நூற்றாண்டில்தான் கட்டப்பட்டது என்று வேறு சிலர் கூறுகின்றனர். 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டது என்று இன்னுஞ் சிலர் கூறுவது ஏற்கத்தக்கது.

இக்கோட்டையைக் கட்டியது யார் என்பது பற்றியும் முடிந்த முடிபாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பத்திரா சலத்திலிருந்து வந்த பொம்மிரெட்டி, திம்மிரெட்டி என்பவர்கள் கோட்டை கட்டி ஆண்டனர் என்ற கொள்கைக்கு ஓரளவு ஆதாரம் உண்டு. இத்தாலியிலுள்ள இராணுவக் கோட்டைகளின் அமைப்பு முறை வேலூர்க் கோட்டையைப் போன்று இருப்பதால், இத்தாலிய இராணுவ வீரர்கள் இதை அமைத்திருக்க வேண்டும் எனறு சிலர் எழுதியுள்ளனர். பொம்மிரெட்டி கட்டிய கோட்டையை, மராத்தியரும் பிற்காலத்தவரும் மேலும் திருத்தியமைத்திருக்கக் கூடும்.

திம்மிரெட்டி இக்கோட்டையை விசயநகர அரசர்களிடம் ஒப்புவித்தான். அவருள் ஒருவனான வேங்கிட ராயன் 1550-இல் வேலைக்காரி ஒருத்தியுடன் உறவு கொண்டாடி கிருஷ்ணதேவன் என்ற குழந்தையைப் பெற்றான். குழந்தையைக் கொன்றுவிடும்படி அரசன் ஆணையிட்டான். ஆனால், ஒரு வண்ணானும் ஒரு சக்கிலியனும் அக்குழந்தையை வளர்த்தனர். அவன் 1586-இல்

பட்டத்துக்கு வந்தபோது, தனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த இருவர்க்கும் ஆளுக்கொரு கோட்டை அன்பளித்தான்; அவையே வேலூர் நகரருகேயுள்ள வண்ணான் கோட்டை, சக்கிலியன் கோட்டை என்பன.

இவனுக்குப் பிறகு இக்கோட்டை பீஜப்பூர் சுல்தான், மராத்திய வீரனான துக்கோஜிராவ், சூல்பிர்கான், ஆர்க்காட்டு நவாபுகள் ஆகியோரிடம் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியில் திப்புசுல்தான் குடும்பத்தினர் இங்கு காவலில் வைக்கப்பட்டனர்; அந்த இடங்கள் ஹைதர் மஹால், திப்பு மஹால் என்ற பெயர்களில் உள்ளன. தரை மட்டத்திலும் முதல் மாடியிலும் ஒவ்வொன்றிலும் திப்பு மஹாலில் 67 அறைகளும், ஹைதர் மஹாலில் 130 அறை களும் ஆக மொத்தம் 394 அறைகள் உள்ளன. இவை இப்போது போலிசுப் பயிற்சிக் கல்லூரி விடுதியாகப் பயன்படுகின்றன. ஹைதரின் மனைவி, திப்புவின் மனைவியர், திப்புவின் உறவினர், வேலையாட்கள் ஆகிய 400 பேர் களின் சமாதிகள் ஆர்க்காட்டுச் சாலைக்கு மேற்கேயுள்ள அருகண்டாம்பூண்டியில் உள்ளன. 1806-இல் இக்கோட்டை யில் தங்கியிருந்த சிப்பாய்கள் பிரிட்டிஷாருக்கு எதிராகக் கலகம் செய்தனர்.

இன்றைய கோட்டை

இக்கோட்டையில் 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பல தெருக்களும் கடைகளும் இருந்ததாகத் தெரிகிறது. கோட்டை கட்டப்பட்ட காலத்திலேயே ஜலகண்டேசு வரர் கோயில், கல்யாண மண்டபம் ஆகியவையும் கட்டப்பட்டன. முஸ்லிம் ஆட்சியில் ஒரு மசூதியும், பிரிட்டிஷ் ஆட்சியில் செண்ட் ஜான் சர்ச்சும் கட்டப் பட்டன. வடஆர்க்காடு மாவட்ட கலெக்டர் அலுவலகமும், நீதி மன்றங்களும் போலிசுத் துறையைச் சேர்ந்த ஏராளமான அலுவலகங்களும் கோட்டைக்குள் உள்ளன.

ஜலகண்டேசுவரர் கோயில்

கோட்டைக்குள் வடகிழககுப் பகுதியில் உள்ள இக்கோயிலும் பொம்மிரெட்டியாலேயே கட்டப்பட்ட தாகவும் இதைக் கட்டிக் கொடுத்தவன் பத்ரிகாசி இமாம் என்ற வடநாட்டுச் சிற்பி என்றும் சொல்லப்படுகிறது. பொம்மிரெட்டியின் உருவமும் இக்கோயிலில் இருக்கிறது. இக்கோயிலை நான்காம் கரிகாற் சோழன் கட்டினான் என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இறைவன் நீர் மட்டத்துக்குக் கீழே இருந்ததால் ஜலகண்டேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது என்பர்.

கி.பி. 1212-இல் வேலை தொடங்கி, 1221-இல் வேலை முடிவடைந்தது என்பதும் 330 ஆண்டுகள் இக்கோயிலில் பூசைகள் நடந்தன என்பதும் இக்காலத்தில் பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளும் செய்திகளாகும்.

முஸ்லிம்களின் ஆட்சியில் இக்கோயிலில் பூசை நின்று போவதும், மராத்தியர் ஆட்சியில் மீண்டும் பூசை நடப்பதும் இங்கு மாறிமாறி நடைபெற்றிருக்கின்றன. மகமதிய இளவரசன் ஒருவன் எழிலரசி ஒருத்தியைச் சந்தித்து இக்கோயிலிலேயே அவளைப் பலவந்தப்படுத்தியதாகவும் அவள் அவனை வாளால் வெட்டியதாகவும் வரலாறு உண்டு. கடைசியாகப் பூசை எப்போது நின்றது, யாருடைய ஆட்சியில் இறைவனின் திருவுருவம் வெளியேற்றப் பட்டது என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. இந்நிகழ்ச்சிகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முனனரே நடைபெற்றவை. வேலூரிலிருந்து நான்கு கி.மீ. தொலைவிலுள்ள சத்துவாச்சேரி என்னுமிடத்தில் இப்போது ஜலகேண்டேசுவரரின் விக்கிரகங்கள் உள்ளன.

முஸ்லிம் ஆட்சியில் கோயில் நகைகளும் சொத்துக்களும் கொள்ளையடிக்கப்பட்டன; ஹம்பியில் செய்தது போல இதை அவர்கள் தரைமட்டமாக்கிவிடவில்லை!

இக்கோயிலை 1955-இல் பார்வையிட்டபோது (மைசூர் விதான சபைக்குப் பத்துக்கோடி செலவிட்டவரான) மைசூர் முதலமைச்சர் அநுமந்தையா, 'இது சிறந்த கற்கோயில்; பல்பக் கல்லாலான மைசூர் சோமநாதபுரம் கோயிலைவிடச் சிறந்தது. என்னுடைய இராச்சியத்தில் இந்தக் கோயில் இருந்தால், 24 மணி நேரத்தில் இதை மேம்பட்ட நிலைக்குக் கொண்டு வருவேன்' என்று கூறினாராம்.

வட இந்தியாவில் குசரத்து மாநிலத்தில் ஜுனகத் நவாப் ஆட்சியில் சோமநாத் கோயில் இவ்வாறே பாழ்பட்டிருந்தது. சர்தார் வல்லபாய் பட்டேலின் தலைமையில், கே.எம். முன்ஷியின் முயற்சியால் சோமநாத் கோயில் புதுப்பிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வருகிறது.

எம்மதத்தினரும் சென்று பார்க்கவும் பூட்ஸ் முதலிய காலணிகளுடன் செல்லுவதற்கும் வாய்ப்பாக ஒரு கோயில் இருக்கட்டும் என்று அரசாங்கத்தார் கருதுகின்றனர் போலும், வேலூர்க் கோயிலில் வழிபாடு நடத்த 1958-59இல் பல முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் இராசேந்திர பிரசாதும் உமாயூன் கபீரும் அதற்கு ஆதரவாக இல்லை.

பழமைப் பெருமையை உணர்த்தும் இடங்களைப் பேண அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கோடிகளை அள்ளித் தெளிக்கின்றனர். 1715-இல் புகழுடன் நிலவிய (வர்ஜினியாவின் தலைநகரான) கலோனியல் வில்லியம்ஸ்பர்க் என்னும் நகரை அன்றைய நிலையில் இருந்தவாறு-அணுவளவும் மாறாமல் - அமைக்க 25 ஆண்டு பழைய

கட்டிடங்களைப் போலக் கட்டப்பட்டன; பழங்காலத்து மரங்கள் நடப்பட்டன; அக்காலத்துக் கோச்சு வண்டிகளும் செய்யப்பட்டன. ஆனால் கலைவளம் நிறைந்த வேலூரில் பழமைச் சின்னமான கோயில் தேடுவாரின்றியும் கோட்டை அரசாங்க அலுவலகமாகவும் இருக்கிறது. நாம் இந்தியாவில் இருக்கிறோம்; அமெரிக்காவில் இல்லை.

கல்யாண மண்டபம்

ஜலகேண்டேசுவரர் கோயிலில் ஒரு கல்யாண மண்டபம் இருக்கிறது. தமிழ் நாட்டுச் சிற்பக் கலையின் களஞ்சியம் என்று இதைச் சொல்லலாம்.

சிறந்த கைவன்மையுடன் ஒற்றைக் கற்களில் அமைக்கப் பெற்ற சிலைகள், தூண்களிலுள்ள குதிரை வீரர் போன்ற கலைப்படைப்புகள், யாழி-யானை-போர்வீரர் வடிவங்கள், ஏறத்தாழ இரண்டு ஆள் உயரத்தில் உள்ள துவார பாலகர் உருவங்கள் ஆகியவை இங்கு உள்ளன. இவற்றுக்கு ஈடு இணை உலகில் வேறு எங்கும் இல்லை. கல்யாண மண்டபத்தைப் பற்றி அரசாங்கம் ஒரு திரைப் படம் எடுக்க வேண்டுவது இன்றியமையாதது.

இவ்வாறு நமது சிற்பக் கலைத்திறமை அனைத்தும் ஒளிர அமைந்துள்ள கல்யாண மண்டபத்தை, தம் நாட்டில் பிரைட்டன் என்ற ஊரில் கொண்டுபோய் வைக்கப் பிரிட்டிஷார் முடிவு செய்தனர். மண்டபத்தின் கற்கள், தூண்கள் ஒவ்வொன்றிலும் இலக்கம் குறித்து, தனித்தனியே அளந்து ஒவ்வொரு கல்லும் தூணும் ஆடாமல் அசையாமல் அவற்றைப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கேற்ற அமைப்புக்களுடன் ஒரு கப்பல் கட்டப்பட்டது. கல்யாண மண்டபத்தை ஏற்றிச் செல்ல அந்தக் கப்பல் இந்தியாவுக்கு வரும் வழியில் கடலில்

மூழ்கிவிட்டது. அதன் பயனாக இக்கலைச் செல்வம் இன்றும் தமிழர் தம் தனிச் செல்வமாக விளங்குகிறது. இன்றேல், மதுரையில் இருந்த ஒரு கல்மண்டபம் இப்போது அமெரிக்காவில் இருப்பது போன்று,* இந்த மண்டபமும் அயலவரிடம் இருக்கும். நல்ல வேளையாக, இக்கலைக் கருவூலத்தை - சிற்பக் கலையின் அணிகலத்தை - தமிழ்நாடு இழந்து விடவில்லை.

சேண்பாக்கம் பிள்ளையார் கோயில்

இது வேலூர் நகருக்கு மேற்கே பாலாற்றின் கரையில் இருக்கிறது. இப்பிள்ளையாருக்கு உருவம் கிடையாது.

வேலூர் மத்திய சிறைச்சாலை

தமிழ்நாட்டிலேயே பெரிய சிறைச்சாலை இதுதான். 'நான் வேலூரில் இரண்டாண்டுகள் இருந்திருக்கிறேன்' என்று ஒருவர் சொன்னால், அது அவர் அந்நகரில் வேலை பார்த்ததைக் குறிக்கலாம் அல்லது சிறையில் இருந்ததைக் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம்.

4,500 ஆடவர்க்குரிய சிறை, 1,200 பெண்டிர்க்குரிய சிறை ஆகிய இரண்டும் தனித்தனியே உள்ளன. தமிழ் நாட்டில் பெண்டிர்க்கெனத் தனியாகச் சிறை இங்கு மட்டுமே இருக்கிறது.

கொலை, களவு போன்ற குற்றங்களுக்காகச் சிறையில் இருப்பவர்கள் செருப்பு தைப்பது, தையல்வேலை, தச்சு வேலை, மரச்சாமான்கள் செய்தல் ஆகிய வேலைகளையும் செய்ய வேண்டும். அரசாங்க அலுவலகங்களுக்கு வேண்டும் கூடாரங்களும், அச்சகமும், நெசவுக்கூடமும்

---

* விவரம்: மதுரை மாவட்டம் என்னும் என் நூலிற் காண்க.

இங்கு இருக்கின்றன. மாவட்டத் தலைமை மருத்துவ அலுவலரின் மேற்பார்வையில் இங்குள்ள மருத்துவமனை நடைபெற்று வருகிறது.

உரிமைப் போராட்டத்தில் அரசியல் கைதிகள் இங்கு வைக்கப்பட்டிருந்ததால் இச்சிறைச்சாலை, இந்திய நாட்டு வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. ச. இராசகோபாலாச்சாரியார் (ராஜாஜி) இருந்த அறை, வரலாற்றுச் சின்னமாகப் பேணப்பட்டு வருகிறது.

பள்ளி கொண்டை

இது பெரியாழ்வார் பாடல் பெற்ற வைணவத்தலம், மக்கள் தொகை 10,563.

வேலூரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலும் குடியேற்றம் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலும் பாலாற்றின் கரையில், சோலைகளுக்கிடையே இத்தலம் அமைந்தது. தெலுங்கில் இத்தலம் பள்ளிகொண்டை எனப்படுகிறது. இங்கு கோயில் கொண்டுள்ள பெருமாள் பள்ளிகொண்ட கோலத்தில் இருக்கிறார்; ஆண்டுதோறும் தைப்பொங்கல் நாளில் இப்பெருமாள் இவ்வூரருகேயுள்ள உச்சிக்காழ்மலைக்கு எழுந்தருளுவது வழக்கம்.

ரங்கநாதர், சோட்டா ரங்கநாதர் என்று முஸ்லிம்கள் தங்கள் படையெடுப்பின்போது ஏளனமாகக் குறிப்பிட்ட கஸ்தூரிரங்கர், ராமன், கண்ணன், ஆண்டாள் சன்னிதிகளும், குலசேகர ஆழ்வார் சிலையும் காணத்தக்கன.

திருவரங்கத்தில் இருப்பது போலவே பள்ளி கொண்டையிலும் ஓங்கற விமானம் உண்டு. இதைப் பல்லவர் கட்டியதாகச் சொல்லுவர்.

இக்கோயில் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள எட்டு வகையான உருவங்களின் வேலைப்பாடு வியக்கத்தக்கது.

இவ்வூர் 19-ஆம் நூற்றாண்டில் வேலூர் வட்டத்தின் தலைநகராக இருந்தது. போரில் மடிந்தவர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் இவ்வூர் மலையடிவாரத்தில் உள்ளன. இவ்வூரின் பழைய பெயர் 'வித்தூர்' என்று கல்வெட்டுக் களிலிருந்து தெரிகிறது.

விரிஞ்சிபுரம்

வேலூரிலிருந்து 13 கி.மீ. மேற்கேயும், விரிஞ்சிபுரம் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தெற்கேயும் வைப்புத் தலமான திருவிரிஞ்சிபுரம் இருக்கிறது. இங்குள்ள மண்டபம் பொம்மிரெட்டியால் கட்டப்பட்டதென்பர். மதில் மிக அழகாக அமைந்திருக்கிறது. இதை 1523-இல் லிங்கப்ப நாயக்க மன்னன் கட்டியதாகக் கூறுவர். இங்குள்ள இறைவன் வழித்துணை நாதர்; இறைவி பச்சைப்பசுங்கொடி. வழித்துணை நாதர் கோயிலருகே கீழ் வழித்துணையான் குப்பம் மேல் வழித்துணையான் குப்பம் என்ற ஊர்கள் உள்ளன. இப்போது இவை K.V. குப்பம், M.V. குப்பம் ஆகிவிட்டன. சீனிவாசமூர்த்தி, எஸ்.வி. மூர்த்தி ஆகிவிடும் இந்நாளில் வழித்துணை நா்தர் பெயரும் உருத்தெரியாமல் சுருங்கிவிட்டது. சைவ எல்லப்ப நாவலர் இத்தலத்துக்கு ஒரு புராணம் இயற்றியுள்ளார்.

கார்த்திகைக் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் பெண்கள் இக்கோயில் கிணற்றில் நீராடி இறைவன் சன்னிதியில் படுத்துறங்குவர்; மகப்பேறில்லாதவர்களும் ஏவல், சூனியம் போன்றவற்றால் துன்பப்படுபவர்களும் இங்கு வந்து வழிபடுவர்.

இங்குள்ள முருகனைப் பற்றி, திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூலை 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த மார்க்கசகாயதேவர் ஆக்கியிருக்கிறார்.

ஆம்பூர்

இம்மாவட்டத்தின் பெரிய ஊர்களில் இதுவும் ஒன்று. மக்கள் தொகை 39,256. பழமையான ஊராகவும் இருக்கிறது. கிரேக்கர்களுக்கும் இவ்வூர் தெரிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதி யான சவ்வாது மலை இவ்வூரில் தொடங்குவதாலும் பாலாற்றின் கரையில் அமைந்திருப்பதாலும், மைசூர் மாநிலத்துக்கு அருகேயிருப்பதாலும், ஆம்பூர் இராணுவ முக்கியத்துவம் உடையது.

1749-இல், கர்நாடகப் போர் இவ்வூரிலும் நடை பெற்றது; 1757-இல் அப்போரில் ஈடுபட ஆர்க்காடு நவாபு 40,000 வீரரை இங்கு வைத்திருந்தார். மகாராட்டிரரும் 1781-இல் வெள்ளைக்காரர்களும் இவ்வூரைக் கைப்பற்றினர்.

நவதானியங்கள் - பழங்கள் வியாபாரம், பெதஸ்டா மருத்துவமனை, வளமான மண், வெப்பமில்லாத இயற்கை நிலை, தண்ணீர் வசதி ஆகியன இவ்வூரின் பெருமைகள். வெற்றிலைக் கொடிக்கால் இங்கு மிகுதியாக உண்டு. 200 ஏக்கர் பரப்புள்ள தோட்டங்களில் மல்லிகைப் பூ பூக்கிறது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் இவ்வூரில் இருக் கின்றன. பழமையான நாகநாதசுவாமி கோயிலும் சில மசூதிகளும் உள்ளன. இந்துக்களும் முஸ்லிம்களும் மாறிமாறி இந்நகராண்மைக் கழகத்தில் தலைவராக இருந்து வருவது வழக்கம். ஆம்பூருக்கு அருகேயுள்ள உமராபாத்தில், முஸ்லிம் மதத்தைப் பற்றிப் பயிற்சி தரும் கல்லூரி ஒன்று நடைபெற்று வருகிறது.

ஆம்பூரிலிருந்து 80 கி.மீ. தொலைவில் மைசூர் எல்லையும் 160 கி.மீ. தொலைவில் பெங்களூர் நகரும் உள்ளன.

துத்திப்பட்டு

இந்த மலைக்கோட்டைக்குத் துர்க்கம் என்றும் கெடாம்பூர் என்றும் பெயர் உண்டு. இது ஆம்பூரிலிருந்து 6 கி.மீ. தொலையில் இருக்கிறது. இதன் உயரம் 300 மீட்டர்; ஒரே செங்குத்தான பாறை. இங்கே சில போர்கள் நிகழ்ந்துள்ளன. ஆர்க்காட்டின் முதல் நவாபாக இருந்த அன்வார்திகான் சமாதி, இங்கே இருக்கிறது. சமாதியும் சுனையும் குகையும் முழு நிலா நாளில் கண்டு மகிழத் தக்கவை.

கைலாசகிரி

இம்மலை வேலூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இதன்மீது சில குகைகளும், பீரங்கி வைத்திருந்த இடங்களும் (அண்மையில் அமைக்கப்பட்ட) சுப்பிரமணியர் கோயிலும் உள்ளன.

✦ ✦ ✦

17. வாலாஜா வட்டம்

இவ்வட்டம் 1861-இல் ஏற்பட்டது. சோளிங்கபுரம், காவேரிப்பாக்கம் வட்டங்களையும் பழைய திருவல்லம் வட்டத்தின் சில கிராமங்களையும் சேர்த்து இவ்வட்டம் உருவாக்கப்பட்டது. 1960-இல் ஆந்திர மாநிலத்துச் சித்தூர் வட்டத்திலிருந்து வேல்பாடி பிர்க்கா இவ்வட்டத்தில் சேர்க்கப்பட்டது.

வேல்பாடி பிர்க்காவில் 22 கிராமங்கள் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை புகழ் பெற்ற வள்ளிமலையும் பொன்னிக்கரையில் சோழர் கோயிலுள்ள வேல்பாடியும் ஆகும்.

இவ்வட்டத்தில் முக்கிய நகரங்கள் ஆர்க்காடு (24,992), இராணிப்பேட்டை (22,961), விசாரம் (14,438), வாலாஜாப் பேட்டை (13,171), சோளிங்கபுரம் (11,483).

பாலாறும் செய்யாறும் இவ்வட்டத்தில் பாய்கின்றன. கலவை ஏரியும் பெருங்காஞ்சி ஏரியும் பாசனத்துக்குப் பயன்படுகின்றன. இவ்வட்டத்தின் தலைநகரம் வாலாஜாப் பேட்டை; சுருக்கமாக இது வாலாஜா எனப்படுகிறது.

வாலாஜாப் பேட்டை

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆர்க்காட்டு நவாபாக வாலாஜா என்ற முகம்மது அலி இருந்தார். அவர் பெயரால் அமைந்தவையே சென்னை நகரத்து வாலாஜா சாலையும், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் வாலாஜா வாயிலும் ஆகும்.

அவர் பெயரால் அவருடைய அமைச்சரான ராயோஜியால், இந்நகரம் புதிதாக உண்டாக்கப்பட்டது. ஒவ்வொரு வார்டிலும் ஒரு கோயிலாக, இங்கு 18 கோயில்கள் உள்ளன.

19-ஆம் நூற்றாண்டில் வாலாஜாப் பேட்டை மிகப் புகழ் பெற்றிருந்தது; பெரிய வணிக நகராக இருந்தது. இன்றும் இந்நகர் நெசவுத் தொழிலிலும் கைத்தொழில் களிலும் சிறந்து விளங்குகிறது; நெல் அறைக்கும் இயந் திரங்கள் ஏராளமாக உள்ளன. சாலைகளின் நேரான அமைப்புக்களும் மசூதிகளின் தோற்றமும் இந்நகர் வழியே செல்லுவோர் கவனத்தை ஈர்ப்பன. தமிழ் நாட்டின் மிகப் பழமையான நகராண்மைக் கழகம் இதுவே.

02-12-1952-இல் இராணிப்பேட்டையில் தொடங்கப் பட்ட காந்தி மிசன் பாலர் இல்லம் 02-03-53-இல் வாலாஜா பேட்டை தீன்பந்து ஆசிரமமாக மாறி அமைந்தது. திக்கற்ற குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம், கைத்தொழில் கல்வி, இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசியலார் உதவியாலும் பொதுமக்களின் நன்கொடை களாலும் இது, நடைபெற்று வருகிறது.

வாலாஜாவிலிருந்து 6 கி.மீ. தொலைவில் பாலாற்றின் மீது புதுப்பாடி அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது.

சென்னை நகரிலிருந்து இவ்வூர் 68 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அடிக்கடி இந்நகருக்குப் பஸ் போக்குவரத்து உண்டு. வாலாஜாபாத் என்னும் ஊர் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது.

ஆர்க்காடு

தென்னிந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற இவ்வூர் பாலாற்றின் தென்கரையிலுள்ளது. பாலாற்றையே அகழி யாகக் கொண்டு ஒரு பெரிய கோட்டை இங்கு கட்டப் பட்டது. வேலூர்க் கோட்டையை அமைத்த பொம்மி

ரெட்டியே இதையும் கட்டியதாகவும், பிற்காலத்தில் ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கர்நாடக முஸ்லிம்கள் கோட்டையைப் பலவாறு உறுதிப்படுத்திப் பெருக்கி, புது மாளிகைகளைக் கட்டி, பேட்டையில் 18 தெருக்களை அமைத்து ஆர்க்காட்டு நகரத்தை மேம் படுத்தியதாகவும் வரலாற்று நூலோர் வரைந்துள்ளனர்.

1712-இல் சாதுத் உல்லாகான் மைசூரைப் படை யெடுக்கத் தம் படைகள் தங்குமிடமாக இதை அமைத்துக் கொண்டார் என்றும் அவருக்குப் பிறகு மொகலாய கவர்னராக இருந்த தோஸ்த் அலி ஆர்க்காட்டைத் தம் தலைநகராக்கிக் கொண்டார் என்றும் வரலாற்று வாயிலாக அறிகிறோம்.

பிரிட்டிஷ், பிரெஞ்சு, ஹைதர்அலி ஆட்சிகளிலும் ஆர்க்காடு இருந்திருக்கிறது. 1751-இல் கிளைவ் என்ற ஆங்கிலேயர் இங்கு நடைபெற்ற போரில் ஆர்க்காட்டு நவாபின் படைகளைத் தோற்கடித்துப் பெரு வெற்றி யடைந்தார். இதை நினைவூட்டும் வெற்றித் தூண் ஒன்று தாலுகாக் கச்சேரிக் கட்டிடத்திற்கு எதிரில் ஊன்றப்பட் டிருக்கிறது.

நவாபுகள் காலத்தில் ஆர்க்காட்டில் 360 மக்கான்கள் இருந்தன. நகரைச் சுற்றி 8 கி.மீ. தொலைவுள்ள மதில் இருந்தது. பல வாயில்களும் அரண்மனையும் இருந்தன. அவை பெரும்பாலும் அழிந்து விட்டன. இன்று காணும் நிலையில் இருப்பவை டில்லி வாயில், வாவி, பள்ளிவாசல், சில நவாபுகளின் சமாதிகள் ஆகியவை மட்டுமே.

நவாபுகளின் காலத்தில் துணி நெசவும் நெசவான துணியில் அச்சிடும் தொழிலும் ஆர்க்காட்டில் பெரிய அளவில் நடைபெற்றன. 1768-இல் வாலாஜா் என்ற ஆர்க்காட்டு நவாபு இவ்வூரைவிட்டுச் சென்னைக்கு ஓடியதால் செல்வரும் அவரைப் பின் தொடர்ந்தனர்

அதனால் ஆர்க்காட்டில் வாணிகமும் தொழில்களும் குன்றின.

ஆர்க்காட்டு நவாபின் தலைநகரம் சென்னைக்கு மாற்றப்பட்ட பிறகு நவாபின் பிரதிநிதிகளாக அச்சன பண்டிட், ராஜ பீர்பர் என்ற பேர்காளல் அழைக்கப்பட்ட பிராமண கவர்னர் ஒருவர் ஆர்க்காட்டில் ஆட்சி நடத்தினார். அவர் 1780-இல் ஆர்க்காட்டுச் சீமையை ஆங்கிலேயர்க்கு எழுதிக் கொடுத்தார். 1787-லும், 1792-லும் ஆர்க்காட்டு நவாபு ஆங்கிலேயருடன் உடன்பாடு செய்து கொண்டார். அதன் விளைவாக ஆங்கிலேயர் இராணுவத்தை ஆர்க்காட்டில் வைத்துக் கொள்ளவும், அதற்காக அவர்களுக்கு ஆண்டுதோறும் ஒன்பது லட்சம் ரூபாய் கொடுக்கவும் ஆர்க்காட்டு நவாபு இசைந்தார்.

ஆர்க்காடு என்ற பெயரால் ஒரு கிறித்தவ மிசன் நடைபெற்று வருகிறது. இந்த அமெரிக்க நிறுவனம் வட, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் பிராடெஸ்டண்டு கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காக ஏற்பட்டது ஆகும்.

ஆர்க்காட்டு முதலியார்கள் என்ற பெயர் தொண்டை மண்டலத்திலுள்ள முதலியார் மரபினர்க்கு உண்டு. இந்நாளில் வட இந்தியாவாழ் தமிழர்கள் தங்களை 'மதராஸ்'காரர் என்று பெருமையாகக் குறிப்பிட்டுக் கொள்ளுவது போல, 18-ஆம் நூற்றாண்டில் முதலியார்கள் (நவாபு வாழ்ந்த) ஆர்க்காட்டைத் தங்கள் சாதிப் பெயருடன் இணைத்துக் கொள்வதை மதிப்பாகக் கருதினர் போலும்!

ஆர்க்காட்டிலுள்ள சில வரலாற்றுச் சின்னங்களை அரசாங்கத்தார் பேணி வருகின்றனர். இங்குள்ள சமாதிகளில் வாரமொரு முறை சில சடங்குகள் நடைபெறவும் அச்சமாதிகளின் ஆண்டுவிழா நாட்களில் ஏழை முஸ்லிம்களுக்கு உண்வு படைத்து வரவும் அரசாங்கத்தார் மானியம் வழங்கி வருகின்றனர்.

ஆர்க்காட்டில் இருப்பவை

ஏராளமான நெல் அறைக்கும் இயந்திரங்கள், அழிந்து போன அரண்மனைகள், சீர் செய்யப்படாத மசூதிகள், இடிந்த சுவர்கள், செங்கல்லாலும் காரையாலும் கட்டப் பட்ட அகழிகளின் அறிகுறிகள், லங்கர் மக்கான்கள் (சோறு போடும் வீடுகள்), ஹஜ்ரத் மக்கான்கள் (மௌல்வி களின் வீடுகள்), வண்டிப் பேட்டைகள், சென்னைக்குச் செல்ல ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ்.

ஆர்க்காட்டில் காணத்தக்கவை

1. டில்லி கேட், 2. கோட்டையிலுள்ள தனானா (ஆசை நாயகிகள் வாழும் இடம்), 3. நவாபின் அந்தப்புரத்தில் (தரைவரை சலவைக் கல்லால் அமைக்கப்பட்ட) குளம், 4. பச்சைக்கல் சமாதி. இது பச்சைக் கல்(Green Laterite)லால் கட்டப் பெற்றது. முஸ்லிம் பெருமக்கள் பலரது சவங்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இராணிப்பேட்டை

இந்நகரம் பாலாற்றின் இடது கரையில் இருக்கிறது. பாலாற்றின் மற்றொரு கரையில் இருக்கிற ஆர்க்காட்டைப் போலவே இந்நகரம் பழமைப் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் உடையது. இந்நகரம் வேலூரிலிருந்து 24 கி.மீ. தொலைவிலும் சித்தூரிலிருந்து 45 கி.மீ. தொலைவிலும் சென்னையிலிருந்து 114 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது.

தேசிங்குராஜன் இறந்தபோது அவனுடன் உடன்கட்டை ஏறிய இராணியின் நினைவாக ஏற்பட்ட ஊர் ஆகையால் இராணிப்பேட்டை என்ற பெயர் வந்தது.

1855 வரை இது போர்ப் படையினர் தங்கும் இடமாக இருந்தது. மருத்துவத் துறையில் சிறந்து விளங்கும் வேலூர் மருத்துவமனை தொடங்கிய டாக்டர் ஐடா ஸ்கட்டர் இவ்

ஷூரில்தான் முதல் தடவையாக மருத்துவமனை ஏற்படுத்தினார். கத்தோலிக்கரும் அமெரிக்க மிஷனரிமாரும் தங்கள் கிளைகளை 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இங்கு தொடங்கினர். இவ்வூரில் இன்ஸ்பெக்ஷன் பங்களா என்னும் அரசாங்க அலுவலர் தங்கும் விடுதி 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்ற சிறப்புடையது. தமிழ்நாட்டிலேயே மிகப் பழமையான ஆசிரியர் பயிற்சிப் பள்ளி இவ்வூரில் இருக்கிறது. தமிழ்நாட்டில் ஊராட்சி மன்றமாக இருந்து பிறகு நகராண்மைக் கழகமாக மாறிய முதல் ஊர் இதுவே.

தொழில் துறையிலும் இந்நகரம் புகழ் பெற்றது. பாரி கம்பெனியாரின் பெரிய தொழிற்சாலை இங்கு இருக்கிறது. உரம், சல்பூரிக் ஆசிட், பலவகைச் சாடிகள், சுகாதாரத் தொட்டிகள்,இராசயன உப்புவகைகள்,மட்டப் பொன்னைத் தங்கமாக்க ஆசாரிகள் பயன்படுத்தும் நைட்ரிக் ஆசிட் ஆகியவை இங்கு செய்யப்படுகின்றன. இத் தொழிற் சாலைக்காக வாலாஜா சாலையிலிருந்து இவ்வூருக்கு இரயில் பாதை ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை மருத்துவ ஆராய்ச்சிக் கூடத்திற்கும் ஏனைய அரசாங்க நிலையங்களுக்கும் பாரி கம்பெனியார் தண்ணீர் விற்கிறார்கள். ஆறு நயா பைசாவுக்கு 100 கேலன் கொடுக்கிறார்களாம்.

வெள்ளிக் கிழமை தோறும் நடைபெறும் சந்தையில் நவதானியம், சவுளி, நல்ல ஆடுகள், மேற்கத்திய மாடு என்று சொல்லப்படும் மைசூர்க் காளைகள் ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன.

பாலாற்றின் கரையில் இராணிப்பேட்டையிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருந்த நௌலக் தோட்டம் இப்போது அழிக்கப்பட்டு விட்டது. இது மொகலாய ஆட்சிக் காலத்தில் நவாபுகள் களிப்பாகப் பொழுது

போக்க ஒன்பது இலட்சம் மரங்கள் வைத்து உண்டாக்கப் பட்ட பூங்கா ஆகும். இதன் பரப்பு 100 ஏக்கர். இதனுள் ளேயே நீர் ஊற்று இருக்கிறது. இப்போது மரங்கள் அடர்த்தியாக இல்லை. எழில்மிக்க இடங்கள் பெருக வேண்டும் என்று கருதும் அரசாங்கத்தார் இத்தகைய பழத் தோட்டங்களையும் பூந்தோட்டங்களையும் நல்ல முறையில் வைத்திருக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

சோளிங்கபுரம்

காஞ்சிபுரத்திலிருந்து 65 கி.மீ.; திருத்தணிகையி லிருந்து 32 கி.மீ.; அறக்கோணத்திலிருந்து 29 கி.மீ.; சோளிங்கபுரம் இரயில் நிலையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவுகளில் இவ்வூர் இருக்கிறது. இரயில் நிலையம் உள்ள இடம் பாணாவரம் எனப்படுகிறது.

சோழலிங்கபுரம் என்பதன் மரூஉவே சோளிங்கபுரம் என்று வழங்கி வருகிறது. எக்காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. நோழ நாட்டைப் போன்ற நிலவளமும் சோழ நாட்டிலில்லாத மலைவளமும் இவ்வூரில் ஒரு சேரக் காணத்தக்கன. பல்லவர் தொடர்பும் இவ்வூருக்கு உண்டு. 1781-இல் பிரிட்டிஷ் தளபதி சர் அயர்கூட், ஹைதர் அலியின் படைகளை இங்கு நடைபெற்ற போரில் தோற்கடித்தார். அப்போரில் இறந்துபோன மைசூர் வீரர்களின் சவங்கள் அடக்கம் செய்யப் பெற்ற இடம், இவ்வூர் வாலாஜா சாலையில் ஆவணக் களரிக்கு எதிரே இன்றும் காணத் தக்க நிலையில், அரசாங்கப் புதை பொருள் துறையினரால் குறிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியில், இவ்வூர் வட ஆர்க்காடு மாவட்டத்திலிருந்த போதிலும் இங்குள்ள நீதிமன்றம் சித்தூர் மாவட்ட நீதி மன்றத்துக்குட்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

திருத்தணிகை (வழியாகத் திருப்பதி), பள்ளிப்பட்டு, சித்தூர், வேலூர், அறக்கோணம் ஆகிய நகரங்களுக்கு இங்கிருந்து சாலைகள் பிரிகின்றன.

இங்கு அமைதி தவழும் அழகிய மலைகள் இருக்கின் றன. இவை பெரியமலை, சிறியமலை எனப்படுகின்றன. இவற்றிலுள்ள வைணவக் கோயில்கள் பேயாழ்வாராலும் திருமங்கை மன்னனாலும் மங்களா சாசனம் செய்யப் பெற்றவை.

இம்மலைகள் சிங்க வடிவில் அமைந்துள்ளன. பெரிய மலையின் உயரம் 400 அடி. அதன் மீது ஒரு கல்லூரி இருந்திருக்க வேண்டுமென்று கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. பல சுனைகள் மலைமீது உள்ளன. இம்மலையை ஏறினால் வாய்வு நோய் போய்விடுவதாகக் கூறுவர். 1961-இல், இம்மலைமீது யாவரும் எளிதில் ஏறுவதற்கு வசதி யான படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. எனினும் இதை ஏறுவது சற்றுக் கடினமே. ஏறியபின், குரங்குகளின் தொல்லையும் உண்டு.

பெரிய மலையில் யோக நரசிம்மரும் சிறிய மலையில் யோக ஆஞ்சனேயரும் கோயில் கொண்டுள்ளனர். பெரிய மலையில் வெள்ளிக்கிழமைகளிலும் சிறிய மலையில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தென்கலை வைணவர் கூட்டம் மிகுதி. அந்நாட்களில் அபிடேகங்கள் சிறப்பாக நடைபெறும். சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், புளியோதரை ஆகிய பிரசாதங்கள் கிடைக்கும்.

சிறிய மலைமீதுள்ள ஒரு சுனையில் கார்த்திகை மாதத்தில் நீராடினால், பேய் பிசாசு பிடித்தவர்களுக்கு அப்பிணி நீங்கிவிடுவதாக நம்பப்படுகிறது. சாதாரண நாட்களிலும் இங்கு நீராடி இறைவன் அருள் பெற்று, நோய்களைப் போக்கிக் கொள்ள வடநாட்டு மக்களும் தென்னாட்டு மக்களும் வருகின்றனர். பலர் ஒரு மண்டலம்

(44 நாட்கள்) தங்கி, நலம் பெறுகின்றனர். பைத்திய நோயினின்றும் குணமடைந்தவர்களும் உண்டு. சிலர் இரண்டு மண்டலம் தங்கிய பின்னரே நலம் அடைகின் றனராம். இவ்வாறு தங்குவோர் நாள்தோறும் இரு மலைகளிலும் ஏறுகின்றனர். இங்குள்ள ஒரு சுனைநீர் சுவைதரும் குடிநீராக இருக்கிறது. சத்துள்ள உலோகங் கள் நிறைந்தது. அதை வண்டியில் வைத்து, ஊராட்சி மன்றத்தினர் சோளிங்கபுர மக்களுக்கு விலைக்கு விற்கின்றனர்.

சோளிங்கபுரத்துக்குச் செல்லுவோர் மலைமீதுள்ள அழகிய திருவுருவங்களையும் ஊருக்குள் இருக்கும் உற்சவ மூர்த்திகளையும் காணவேண்டும். சேர்ளிங்கபுரத்தில் இருப்பவை; 'மூன்சீபு கோர்ட்டு', 'மலர்ச்சோலை', ஒரு சுப்பிரமணியர் கோயில், ஒரு பிராடஸ்டண்டு ஆலயம், மலையடிவாரத்தில் ஆறு சத்திரங்கள்.

திமிரி

இது ஆர்க்காட்டுக்குத் தெற்கே ஐந்து கி.மீ. தொலைவி லுள்ள சிறிய ஊர். பொம்மிரெட்டியின் சகோதரி திம்மக்காள் இங்கே கட்டியிருந்த சிறிய கோட்டை 1751இல் கிளைவின் படைகளால் கைப்பற்றப் பட்டது. 1758இல் இங்கு ஒரு போர் நடைபெற்றது; அப்போரில் பிரெஞ்சுத் தளபதியான லாலிக்கு இவ்வூர் சரணடைந்தது. அக்காலத்திய திமிரியின் நிலையைப் பற்றி ஓர்மீஸ் என்பாரின் நூலில் விளக்கமாக எழுதப் பட்டிருக்கிறது.

கர்நாடகத்தை ஆண்டு வந்த சந்தா சாஹிப் தோல்வி யடைந்து இறந்துபோன ஊர் திமிரியே. ஊர் முழுவதும், கோட்டைக்குள் அடங்கியிருக்கிறது.

விசாரம்

இது ஆர்க்காட்டுக்கு அருகே இருக்கிறது. மேல் விசாரம் என்று இவ்வூருக்குப் பெயர் உண்டு.

இவ்வூரருகேயுள்ள ஒரு காட்டுக்குள் வால்மீகிக்குக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது.

தோல் பதனிடும் தொழில் விசாரத்தில் சிறந்து விளங்கு கிறது. இந்தியத் தோல் பதனிடுவோர் கூட்டமைப்பின் (I.L.F.) தலைமை அலுவலகம் இவ்வூரில் இருக்கிறது. இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெருந் தொகையாக வாழும் ஊர்களில் விசாரமும் ஒன்று.

மகேந்திரவாடி

சோளிங்கர் இரயில் நிலையத்துக்குத் தென்கிழக்கே ஐந்து கி.மீ. தொலைவிலுள்ளது. இவ்வூர் ஏரி மகேந்திர வர்ம பல்லவன் வெட்டியது; இங்குள்ள குகைக் கோயில் இவன் காலத்தியது.

மகேந்திரவாடி புகழ் பெற்றிருந்த காலத்தில் அதன் கீழ்வீதியாக இருந்த பகுதி, இன்று அந்நகரினின்றும் வேறுபட்டு, கீழ்வீதி என்னும் பெயரில் ஐந்து கி.மீ. தொலைவில் தனித்ததொரு சிற்றூராகக் காட்சி தருகிறது.

பஞ்சபாண்டவர் மலை

ஆர்க்காடு நகருக்குத் தென்கிழக்கே ஆறு கி.மீ. தொலைவிலுள்ள இக்குன்று சமணத் தொடர்புடையது. சமண உருவங்களும், பஞ்ச பாண்டவர் பற்றிய சித்திர வேலைப்பாடுகளுள்ள ஏழு வாயிற்படியும் இங்கு காணப் படுகின்றன. வாலாஜா வட்டத்திலுள்ள பெருங்கங்கி, பூண்டி என்னும் ஊர்களும் சமணத் தொடர்புடையன.

✦ ✦ ✦

18. அறக்கோணம் வட்டம்

இவ்வட்டம், மாவட்டத்தில் வடகிழக்குப் பகுதியில் செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லையில் அமைந்திருக்கிறது. தலைநகராகிய அறக்கோணத்தில் 1961-இல் நகராண்மைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. ஏனைய பெரிய ஊர்கள்: காவேரிப்பாக்கம் (7,891), பணப்பாக்கம் (5,370), தக்கோலம், குருவராஜ்பேட்டை, நெமிலி ஆகியவை.

இவ்வட்டத்தின் தென்பகுதி வளமானது; இங்கு 'கீழ்ப்பாங்கில் தண்ணீர்' (Sub-Soil Water) இருக்கிறது. வேளாண்மைத் தொழிலில் வன்னியரும் நாயுடுக்களும் நெசவுத் தொழிலில் செங்குந்த முதலியார்களும் சிறந்து விளங்குகின்றனர். காவேரிப்பாக்கத்திலும் பணப்பாக்கத்திலும் பெரிய ஏரிகளும் அணைக்காப்புத்தூரில் கேசாவரம் அணைக்கட்டும் உள்ளன. ஒரு போகம் நெல்லும் ஒரு போகம் கடலைக்காயும் விளைவிப்பது இங்கு வழக்கம். 1939-க்குப் பிறகு பல ஆயிரம் 'பம்பு செட்டுக்கள்' இவ் வட்டத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. தக்கோலம். குருவராஜ்பேட்டை, நெமிலி ஆகிய ஊர்களில் ஏராளமான தறிகள் உள்ளன.

பட்டாஸ்கர் தீர்ப்புப்படி, சித்தூர் மாவட்டத்திலிருந்த சில கிராமங்கள் 1960-இல் இவ்வட்டத்துக் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் சேர்க்கப் பெற்றன.

அறக்கோணம் வட்டம் சென்னை நகருக்கு அருகேயிருப்பதால், சிறு நகரங்களிலிருந்தும் சென்னைக்கு நேர் பஸ்கள் செல்லுகின்றன. இதன் பயனாக, இங்கு வாழும் மக்களுக்குச் சென்னை மோகம் மிகுதி. மாவட்டத்

தலைநகரான வேலூரைப் பார்க்காதவர்கள் பல்லாயிரம் பேர் இவ்வட்டத்தில் உள்ளனர். மாவட்டத்தில் பிற வட்டங்களுடன் தொடர்பில்லாத வட்டம் என்று அறக்கோணம் வட்டத்தைக் குறிப்பிடலாம்.

அறக்கோணம்

இந்நகரம் சென்னையிலிருந்து (இரயில் வழி) 68 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இரயில் சந்திப்பால் வளர்ச்சி யடைந்த நகரம் என்று இந்நகரைச் செல்லலாம். இங்கிருந்து சென்னைக்கு அடிக்கடி இரயில்கள் உண்டு. ஒரு மணி நேரத்தில் எக்ஸ்பிரஸ் இரயில்கள் செல்லுவதால், சீசன் டிக்கட்டு வாங்கி வைத்துக் கொண்டு இவ்வூரினர் ஓராயிரம் பேர் நாள்தோறும் கல்வி கற்கவும் வேலை பார்க்கவும் சென்னைக்குச் சென்று திரும்புகின்றனர்.

இரயில்வே தொழிற்கூடம் ஒன்று இவ்வூரில் இருக் கிறது. இதில் தச்சுவேலை, கொல்லுவேலை முதலியன நடைபெறுகின்றன. பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு வேண்டும் சில சிறு உறுப்புக்கள் இங்கே செய்யப்படுகின்றன. 3,000 தொழிலாளர் இங்கே (1961-இல்) வேலை பார்க்கின்றனர். இத் தொழிற் கூடத்தை விரிவுபடுத்தி மேலும் 2,000 தொழிலாளர்க்கு வேலை கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

அறக்கோணம் சந்திப்பிலிருந்து 2½ கி.மீ. தொலைவி லுள்ள ‘ஆபல்ஸ்பேட்டை’ (Affelspet) என்னுமிடத்தில் ‘லோகோ ஷெட்’ இருக்கிறது. இங்கு இரயில் இயந்திரங்கள் பழுது பார்க்கப்படுகின்றன.

இரயில்வேத் தொழிற்கூடத்தையும் லோகோ ஷெட்டையும் ஒட்டி இவ்வூரில் (1950-க்கு முன்) ஆங்கிலோ இந்தியர் ஏராளமாக இருந்தனர். இப்போது கிறித்தவர்கள் பெரும்பாலும் கத்தோலிக்கர்-ஏறத்தாழ 10,000 பேர் உள்ளனர்.

செண்ட் ஆண்ட்ரூஸ் சர்ச் என்ற பிராடஸ்டண்டு தேவாலயமும் செண்ட் மேரீஸ் சர்ச் என்ற கத்தோலிக்கத் தேவாலயமும் இவ்வூரில் உள்ளன. தேர்வுகளில் சிறந்து விளங்கும் செண்ட் ஆண்ட்ரூஸ் உயர்நிலைப் பள்ளியும் இங்குள்ள கிறித்தவ நிறுவனங்களில் குறிப்பிடத்தக்கது.

1941-இல் அறக்கோணத்தில் 900 ஏக்கர்ப் பரப்பில் அகாய விமான நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. பல அமெரிக்கரும் நீக்ரோக்களும் அப்போது அறக்கோணத்தில் வாழ்ந்தனர். அவர்களுக்காகப் பல கட்டிடங்களில் குளிர்சாதன அமைப்புப் பொருத்தப் பட்டது. அக்காலத்தில் Winterpet, Girgilspet, Stuartpet என்ற பெயர்கள் அவர்கள் தங்கிய குடியிருப்புக்களுக்கு இடப்பட்டன.

போர் முடிந்தது. அறக்கோணத்தின் பொற்காலமும் முடிவடைந்தது. விமானநிலையம் தேடுவாரின்றிச் சீர்கெட்டது. அங்கிருந்த பொருள்களும் களவு போயின. அந்த இடத்தில் ஒரு தொழிற்பேட்டை தொடங்க முடிவு செய்திருப்பதாக, தமிழ்நாடு அரசாங்கம் 1961-இல் அறிவித்திருக்கிறது.

இந்நகரில் 17 மாவு மில்கள் உள்ளன. இவை அறைக்கும் பொருள்கள் அறக்கோணத்தைச் சுற்றிய பகுதிகளில் விளைகின்றன. கைத்தறி, பீடி, சுருட்டுத் தொழில்களும் இந்நகரில் நடைபெறுகின்றன.

அறக்கோணத்தில் வியாபாரம் ஓரளவு நடைபெறுகிறது; தண்ணீர்த் தட்டுப்பாடு கிடையாது. எதிர்காலம் உள்ள ஊர் என்று தங்குதடையின்றிச் சொல்லலாம். இங்கிருந்து சென்னை, ஜோலார்ப்பேட்டை, பம்பாய் (ரேணிகுண்டா வழி), செங்கற்பட்டு (காஞ்சிபுரம் வழி) ஆகிய நகரங்களுக்கு இரயில்போக்குவரத்து இருக்கிறது. தென் இரயில்வேயின் அகலப் பாதை, அகலம் குறைந்த

பாதை இரண்டும் இங்கே சந்திக்கின்றன. ஆவடியில் (48 கி.மீ.) பாதுகாப்பு அமைச்சரவையின் 'டாக்குத் தொழிற் சாலை' ஏற்பட இருப்பதால், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திலேனும் சென்னையிலிருந்து அறக்கோணம் வரை மின்சார இரயில் வசதி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

அறக்கோணத்திலிருந்து சென்னைக்கு, திருவாலங்காடு திருவள்ளூர் வழியாக ஒரு நெடுஞ்சாலை போடப் பட்டிருக்கிறது. 1962 முதல் இவ்வழியாக பம்பாய்-சென்னை, பெங்களூர்-சென்னை லாரிகளும், சென்னை-திருப்பதி (திருப்பதி அறக்கோணத்திலிருந்து 84 கி.மீ.) பஸ்களும் செல்லும்.

அறம் நடந்த கோணம் என்ற பெயரில் (அறந்தாங்கி போல) இவ்வூர்ப் பெயர் அறக்கோணமாக இருந்திருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். மக்கள் வழக்கில் இவ்வூரின் பெயர் 'அரக்கோணம்' என்று நிலவி வருகிறது. 'அறக்கோணம்' என்பதே சரியான பெயர் என்பார், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை. என் கருத்தில் இவ்வூரைத் தலக்கோணம் என்று சொல்லலாம். இங்கிருந்து 13 கி.மீ. சுற்றளவில், மூன்று கோணங்களில் மூன்று பாடல் பெற்ற தலங்கள் - குமரன் கோயில் கொண்டுள்ள திருத்தணிகை, திரு ஊறல் என்ற பெருமைக்குரிய தக்கோலம், நடராச நடனத்தால் நாடெங்கும் புகழ்பெற்ற திருவாலங்காடு- உள்ளன.

அணைக்காப்புத்தூர்

இது தக்கோலத்திலிருந்து 3 கி.மீ. தொலைவு. இங்கு கட்டப்பட்ட கேசாவரம் அணைக்கட்டிலிருந்து கொரட் டலையாறு, கூவம் என்ற இரண்டு ஆறுகள் பிரிகின்றன. கொரட்டலையாறு பூண்டிக்கும், கூவம் ஆறு சென்னைக்கும் செல்லுகிறது.

அய்யன் குளம்

இது பாலாற்றின் கரையில் தூசி மாமண்டூர் அருகே யுள்ள சிற்றூர். இங்குள்ள பழமையான பெருமாள் கோயில் அழகிய அமைப்புடன் கூடிப் பொலிவுடன் காட்சி தருகிறது.

காவேரிப்பாக்கம்

பாக்கம் என்ற இறுதிச் சொல்லுடைய காவேரிப் பாக்கம், கைப்பாக்கம், வெண்பாக்கம், முட்டப்பாக்கம், பொய்ப்பாக்கம் போன்ற ஊர்கள் இவ்வட்டத்தில் உள்ளன.

இவ்வூரைக் காவிதிப்பாக்கம் என்றும் சொல்லுவர். படைத் தலைவர்களுக்குப் பண்டைய அரசர்கள் 'காவிதி' என்று பட்டம் வழங்கினர்.

1752-இல் இங்கு நடைபெற்ற போரில் பிரெஞ்சுக் காரரைக் கிளைவ் தோற்கடித்தார்.

இங்குள்ள ஏரி மிகப் பெரிது. இதைப் பற்றிய விவரம் 39-ஆம் பக்கத்தில் காண்க. பாலாற்றின் வாய்க்கால் வழி நீர் வந்து இது நிரம்புகிறது. இந்த ஏரியின் உபரி நீரே கூவம் ஆறாக உருவெடுத்து, கல்லாறு வழி தக்கோலத்துக்குச் செல்லுகிறது. பிரமதேசம் என்பதே இவ்வூரின் பெயர். பெரியதொரு ஏரி ஏற்பட்ட பிறகு, 'கா-ஏரிப்பாக்கம்' என்ற பெயர் ஏற்பட்டது.

நெமிலி

சோளிங்கர்-தக்கோலம் சாலையில் இவ்வூர் இருக்கிறது. இங்கு நெசவு மிகுதி.

தக்கோலம் (திருஊறல்)

சென்னை நகருடன் (65 கி.மீ. தொலைவு) இவ்வூர், பஸ் போக்குவரத்தால் இணைக்கப்பட்டிருக்கிறது. அறக்கோணத்

திலிருந்து 11 கி.மீ. தொலைவிலும், செங்கற்பட்டு-அறக் கோணம் இரயில் பாதையிலுள்ள தக்கோலம் என்னும் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது.

தேவாரம் இவ்வூரைத் திருஊறல் என்று கூறுகிறது. இது காரணப் பெயர்.

இவ்வூரில் அமைந்த கங்காதரேசுவரர் கோயிலிலுள்ள நந்தியின் வாய் வழியாக எப்போதும் நீர் ஊறிக் கொண்டிருந்ததால் 'திருஊறல்' என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வூரில் 400 பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் இறைத்து வேளாண்மை நடைபெறுவதால் 1940 முதல், இந்நந்தியின் வாயில் நீர் ஊறுவது நின்று விட்டதாக இவ்வூரினரும் வெளியூரினரும் என்னிடம் கூறினர். 1961 செப்டம்பர் 3-ஆம் நாளில் யான் இக்கோயிலுக்குச் சென்றேன். அப்போது நந்தியின் வாயிலிருந்து நிறைய நீர் வந்து கொண்டிருந்தது. மூன்று மாதமாக மீண்டும் நீர் வருவதாக அர்ச்சகர் கூறினார். ஆற்றங்கரையில் அமைந்த இக்கோயில் மிக அபாயமான நிலையில் இருப்பதும் இதை ஒருவரும் தேடாமலிருப்பதும் வருந்தத்தக்கன. கங்காதரேசுவரர் மண்டபத்துக்குப் பின்புறம், நந்தி மிகத் தாழ்ந்த கட்டத்தில் இருக்கிறது. அதன் வாயிலிருந்து ஊறும் நீர், மண்டபத்து அகழியைச் சுற்றிக் கொண்டு ஆற்றில் போய்ச் சேருகிறது.

இக்கோயிலுக்குச் சிறிது தொலைவில் ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தக்கோலம் உமாபதி ஈசுவரர் கோயில் இருக்கிறது. இக்கோயிலும் கல்லாற்றின் கரையில் அமைந்தது; வயல்களால் சூழப் பெற்றது; பழமையான கோயில்; வருவாய் குறைந்த கோயில். அம்மன் மோகன வல்லி; வடக்குப் பார்த்தது. இக்கோயிலிலுள்ள சோழர் செப்புச் சிலைகளில் தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரமன், துர்க்கி ஆகிய திருவுருவங்கள் காணத்தக்கவை.

கி.பி. 949-இல் ராட்டிரகூட மன்னரான மூன்றாம் கிருஷ்ணனுடன் இவ்வூரில் போர் செய்து ராஜாதித்தியச் சோழன் உயிர்நீத்தான். 'யானைமேல் துஞ்சிய ராஜஞ்திததன்' என்று புகழப்படும் சோழமன்னன் இவனே. போர் நடந்த இடம் ஊரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தொலைவிலுள்ள 'கோட்டைக் கரைமேடு' என்ற பகுதி. இப்போரில், உமாபதி ஈசுவரர் கோயில் மதிற்சுவர்கள் சேதமடைந்ததை இன்றும் காணலாம். தக்கோலம் மக்கள் வரலாற்றுணர்ச்சி மிக்கவர். ஆதலால், அதைச் செப்பம் செய்ய அவர்களுக்கு மனம் இல்லை.

கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திலும் தக்கோலத்தில் ஒரு போர் நடைபெற்றது. வரலாற்றில் புகழ்பெற்ற போர்க் களங்களில் தக்கோலமும் ஒன்று.

தக்கோலத்தில் இருப்பவை

22 தெருக்கள், 5000 மக்கள், 'எழில் மண்டபம்', கிளை நூலகம், 1,000 தறிகள், தேர்தல் காலத்தில் வள்ளலாக விளங்கும் செல்வர்கள், தேடுவாரின்றியும் வருவாய் இன்றியும் தவிக்கும் புகழ் பெற்ற கோயில்கள்.

வெற்றிலைப் பாக்கு சுண்ணாம்பு சேர்ந்த பொருளுக்கு (இன்றைய பீடா) 'தக்கோலம்' என்ற பெயர். 'தக்கோலம் தின்று தாள் நோகுது என்றீரே' என்று ஒரு நாட்டுப் பாடல் உண்டு. நாலடியார் 43-ஆம் பாடலிலும் இச்சொல் ஆளப் பெற்றிருக்கிறது.

இவ்வூரிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் செங்கற் பட்டு மாவட்டத்தின் எல்லை தொடங்குகிறது. அம் மாவட்டத்திலுள்ள கூவம், திருவாலங்காடு என்னும் தலங்கள் இவ்வூருக்கு அருகே உள்ளன.

திருப்பாற்கடல்

இது ஒரு வைணவத் தலம்.

திருப்புட்குழி (திருப்பக்குழி)

காவிரிப்பாக்கத்திற்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையே உள்ள வைணவத் தலம்.

மாமண்டூர்

பிறிதொரு மாமண்டூரினின்றும் வேறுபடுத்த இவ் வூரையடுத்த தூசி என்னும் கிராமத்தின் பெயரையும் சேர்த்து 'தூசி மாமண்டூர்' என்று இவ்வூர் குறிப்பிடப் படுகிறது.

காஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 10 கி.மீ. தொலைவிலும் செய்யாற்றிலிருந்து 14 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் இருக்கிறது. மகேந்திரவர்ம பல்லவன் அமைத்த பெரிய ஏரி இவ்வூரில் இருப்பதால் இதனால் இப்பகுதி இயற்கை வளம் மிகுந்தது.

ஏரியை அடுத்து ஒரு சிறுகுன்று இருக்கிறது. இக் குன்றில் நான்கு கோயில்களும், பல்லவர் குகையும் மண்டபமும், இசை பற்றிய கல்வெட்டுக்களும் மகேந்திர வர்ம பல்லவனைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்களும் உள்ளன. வடமொழியில் புலமை பெற்ற பலர் இவ்வூரினர் ஆவர்.

வேலூர்ப் பாளையம்

இவ்வூர் அறக்கோணத்துக்கு வடமேற்கே 11 கி.மீ. தொலைவில் இருக்கிறது. மூன்றாம் விஜயநந்திவர்ம னுடைய செப்பேட்டுச் சாசனங்கள் இங்கே 1911-இல் கண்டுபிடிக்கப்பட்டன.-

✦ ✦ ✦

தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

19. செய்யாறு வட்டம்

இது செங்கற்பட்டு மாவட்டத்து எல்லையில் அமைந்த வட்டம்; செய்யாறு பாய்ந்து வளம் சுரக்கும் பகுதி; அக்காரணத்தாலேயே அவ்வாறு பெயர் பெற்றது. இவ்வட்டத்தில் இரயில் வசதி கிடையாது. இவ்வட்டத்தின் தலைநகர் செய்யாறு. இவ்வூரைத் திருவெத்திபுரம் என்றும் சொல்லுவர்.

திருவெத்திபுரம்

இது காஞ்சிபுரத்திலிருந்து 29 கி.மீ. தொலைவில் இருக்கிறது. திண்டிவனம்-வேலூர்ச் சாலை இவ்வழியே செல்லுகிறது. மக்கள் தொகை 15,397.

வேதத்தை அந்தணர்களுக்கு ஓதிய ஊர் ஆகையால் இவ்வூர்க்குத் திரு ஒத்தூர் என்ற பெயர் ஏற்பட்டது. தலப் புராணத்திலும் சம்பந்தர் பாடலிலும் இப்பெயரே இடம் பெற்றிருக்கிறது. இந்நாளில் ஊரின் பெயர் திருவெத்தி புரம் என்று குறிப்பிடப்படுகிறது; திருத்தூர் என்று சிதைந்து வழங்குகிறது.

இவ்வூர், செய்யாற்றின் வடகரையில் அமைந்து வளமாக இருக்கிறது. ஆற்றின் தென்கரையில் அனக்காவூர் இருக்கிறது.

சமயத்துறையில் திருஓத்தூர் மிக முக்கியமானது; திருஞானசம்பந்தர் ஆண் பனையைப் பெண் பனை ஆக்கிய தலம் இதுவே. அவரைத் தவிர பட்டினத்தடிகளும் சேக்கிழாரும் இவ்வூரைப் பாடியுள்ளார். இறைவன் வேதபுரிநாதர்; இறைவி இளமுலைநாயகி.

இத்தலத்துக்குத் தூங்கானை மாடக்கோயில் என்று பெயர். நந்தி லிங்கத்தைப் பார்க்காமல் கிழக்கே பார்த்துக் கொண்டிருக்கிறது. கல்லினால் ஆன ஒரு பனைமரம் கோயிலுள் இருக்கிறது. அனக்காவூரில் 1940 அளவில் எடுக்கப்பட்ட மகாவீரர், புத்தர் சிலைகள் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. நீர்பூச்சி முதலியார் என்ற சமூகத்தினர் இவ்வூரில் வாழ்கின்றனர்; இவர்கள் சமணராக இருந்து ஏழாம் நூற்றாண்டளவில் திருநீறு பூசிச் சைவ சமயத்தில் சேர்ந்தவர்களின் வழியினர்.

காடுவெட்டி விநாயகர் கோயிலில், அழகான சிற்ப வேலையுடன் கூடிய திருவுருவங்கள் உள்ளன. இக்கோயில் பல்லவர் காலத்தில் ஏற்பட்டதென்பர்.

12, 13-ஆம் நூற்றாண்டுகளில் பஞ்சம் ஏற்பட்டு, சோழ மன்னன் ஒருவன் வரி தள்ளி (வஜாசெய்து) ஆணையிட்டதை அறிவிக்கும் கல்வெட்டு ஒன்று இங்கு இருக்கிறது.

இங்கு வீடு கட்டிப் புதையல் எடுத்தவர் பலர் ஆவர். மிளகாய் விதை போன்ற தங்கப் பொடிகள் கிடைத்துள்ளனவாம்.

வேளாண்மைக்கு அடுத்தபடி, இங்கு பெரிய தொழில் பட்டுச்சேலை நெசவு.

இவ்வூரில் காந்தியடிகள் பெயரால் ஓர் ஆசிரமம் நடைபெற்று வருகிறது.

தண்டரை

இது இரயில் நிலையமுள்ள ஊர்.

இங்கு செய்யாற்றின் குறுக்கே 77 இலட்சம் ரூபாய்ச் செலவில் ஓர் அணை கட்ட அரசாங்கம் முயன்று வருகிறது.

முன்னர் இப்பகுதியில் அடர்ந்த காடுகள் இருந்தன. கருவேப்பிலை மரங்கள் ஏராளமாக உள்ளன.

பிரமதேசம்

இவ்வூர் வெண்பாக்கத்துக்கு அருகே இருக்கிறது. கல்வெட்டுக்களில், 'கடைக்கோட்டுப் பிரமதேசம்' என்று இவ்வூர் குறிப்பிடப்படுகிறது. முதற் குலோத்துங்கனால் அவன் மனைவியாகிய தீனசிந்தாமணி சதுர்வேத மங்கலம் என்பது பிற்காலத்தில் பிரமதேசம் ஆகிவிட்டது.

குரங்கணின் முட்டம்

காஞ்சிபுரத்துக்குத் தெற்கே 10 கி.மீ. தொலைவில் இவ்வூர் உளது. குரங்கு, அணில், முட்டம் (காக்கை) இம் மூன்றும் இத்தலத்தை வழிபட்டதாகக் கூறுவர். சம்பந்தர் தேவாரத்தில் இத்தலத்துக்கு 11 பாடல்கள் உண்டு.

கழுகு, சடாயு, யானை, பாம்பு, மயில், காமதேனு ஆகிய உயிரினங்கள் வழிபட்டதால் பெயர் பெற்ற கழுக் குன்றம், புள்ளிருக்கும் வேளூர், திருஆனைக்கா, நாகப் படினம், மாயூரம், கருவூர் ஆனிலை என்னும் ஊர்களைப் போல இத்தலமும் இங்கு வழிபட்ட பறவைகளாலும் விளங்குகளாலும் பெயர் பெற்றிருக்கிறது.

✦ ✦ ✦

௨0. ஆறணி வட்டம்

இம்மாவட்டத்தில் பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய வட்டம் இதுவே. இப்பகுதி வளம் குறைந்தது; இரயில் போக்குவரத்து இல்லாதது. இவ்வட்டத்தின் தலைநகர் ஆறணி.

மராத்தியர் ஆட்சியில் 120 கிராமங்கள் கொண்ட ஆறணிப் பகுதி வேதாஜி பாஸ்கர் பந்த் என்ற மராத்திய பிராமண வம்சத்தார் ஒருவருக்கு வழங்கப்பட்டது. அவர்களுடைய தலைநகர் சத்திய விசயநகரத்தில் இருந்தது.

ஆறணி ஒரு ஜாகிர். பாளைக்காரர்கள் விசயநகர ஆட்சியில் ஏற்பட்டவர்கள்; ஜமீன்தார்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் நியமனமானவர்கள்; ஜாகிர்தார்கள் முஸ்லிம் ஆட்சியின் சின்னங்கள்.

மராத்திய அரசர் காலத்தில் தோன்றிய ஆறணிச் சிற்றரசு 1761-இல் தன் உரிமை இழந்து, முஸ்லிம் ஆட்சியில் 1789-இல் புதிதாக ஜாகிர் ஆக்கப்பட்டது. ஜமீன்தார்களுக்கு நிலவரி வசூலிக்கும் உரிமை மட்டுமே உண்டு. ஜாகிர்தார்களுக்கு மேல்வாரம் ‘குடிவாரம் என்று இரு பாத்தியதைகளும் இருந்தன. உரிமை பெற்ற இந்தியாவில் இனாம் ஒழிப்புக்கு முன்னரே, ஜாகிர்தார்கள் ஒழிக்கப் பட்டு விட்டனர்.

ஆறணி சுபேதாராக இருந்த கான்சாகிபு சும்மந்தான், தமிழ் நாட்டில் தேசிய உணர்ச்சியூட்டிய வீரர்களில் ஒருவனாவன்.

கமண்டல நதியும் நாக நதியும் இவ்வட்டத்தில் பாய்கின்றன. இவை ஒன்று சேர்ந்து கமண்டல நாகநதி என்ற பெயரில் செய்யாற்றில் கலக்கின்றன.

ஆரணி

அழகிய ஆறு உடைய ஊர் என்ற காரணப் பெயர் இவ்வூருக்கு உண்டு. ஆரணி, கமண்டல நதியின் கரையில் அமைந்தது. சிவபெருமானுக்கு ஆறணிவேணியன் என்று பெயர் உண்டு. மக்கள் தொகை 34,341.

மழை அருமையாகவே பெய்வதும், பெய்தபோது ஆற்றில் தண்ணீர் இருப்பதும் இப்பகுதியின் இயல்பு.

பழங்காலத்து நாணயங்கள் இவ்வூர் வயல்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனால் உழவர் பலர் செல்வர்களாக இருக்கின்றனர்.

பழைய கோட்டை ஒன்று இவ்வூரில் இருக்கிறது. கோட்டைக்குள் இப்போது அரசாங்க அலுவலகங்களும் உயர்நிலைப்பள்ளியும் நடைபெறுகின்றன. 1875வரை இவ்வூர் இராணுவத் தளமாக இருந்தது. இராணுவ வீரர் ஒருவர் எதிர்பாராத விதமாக, கைத்தவறுதலால் தம் சகோதர வீரர் ஒருவரைச் சுட்டதால் அவர் இங்கு இறந்து போனார். இந்த நிகழ்ச்சியின் நினைவாக அமைந்த நீண்டுயர்ந்த தூண் ஒன்று நின்று நிலவுகிறது.

நெல் அரிசி வாணிகம் இவ்வூரில் மிகுதி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லிம் ஆட்சியில் ஆதரிக்கப் பட்டுத் தோன்றிய பட்டு நெசவுத் தொழில் இன்னும் இங்கு சிறந்து விளங்குகிறது. ஆரணிப் பட்டுச் சேலைகள் அனைத்திந்தியாவிலும் புகழ் பெற்றவை. பட்டு நூல்காரர் பலர் இவ்வூரில் வாழ்கின்றனர்.

ஒண்ணுபுரம்

நெசவுத் தொழில் இவ்வூரில் சிறந்து விளங்குகிறது. இதனருகேயுள்ள ஆரணி ஜாகிர்தாரின் கோடைகால மாளிகை காணத்தக்கது.

கண்ணமங்கலம்

செழிப்பான நஞ்சை நிலங்கள் இவ்வூர்ப் பகுதியில் உள்ளன.

காமக்கூர்

சுந்தர முதலியார் என்ற தமிழ்ப் பெரும் புலவர் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இங்கு வாழ்ந்தார்.

சத்திய விசயநகரம்

இது ஆறணியிலிருந்து நான்கு கி.மீ. தொலைவில் செய்யாறு சாலையில் இருக்கிறது. ஆறணி ஜாகிர்தார்கள் காலத்தில் இங்கு தசரா விழா நடைபெற்றது.

ஆறணி ஜாகிர்தாரின் அரண்மனையில் இப்போது கிராம சேவக நிலையமும் கிராமிய விரிவுப் பணிப் பயிற்சி நிலையமும் இருக்கின்றன.

இக்காலத்தில் இந்த ஊரின் பெயர் எஸ்.வி. நகரம் என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது.

இங்கு கமண்டல நதியின் குறுக்கே இரண்டரை லட்சம் ரூபாய்ச் செலவில் ஓர் அணைக்கட்டு கட்டும் வேலை 1961-இல் தொடங்கியிருக்கிறது.

பூசுமலைக்குப்பம்

இது ஆறணியிலிருந்து 16கி.மீ. தொலையில் மலைப் பகுதியில் இருக்கிறது. கோடைக்காலத்தில் தங்குவதற்குத் தகுந்த இடம், இங்கு ஆறணி ஜாகிர்தார்கள் அமைத்த அழகிய மாளிகை இருக்கிறது.

பூண்டி

இது ஆறணியிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்குள்ள பொன்னிநாதர் கோயில் என்ற சமணர் கோயிலில் ஆண்டுதோறும் தைப் பொங்கலுக்குப் பின் நான்காம் நாளில் சமணர்கள் கூடி விசேடமான முறையில் பூசைகள் செய்கின்றனர்.

✦ ✦ ✦

21. வந்தவாசி வட்டம்

இது, வரலாற்றில் புகழ் பெற்ற ஆனால் வளம் குன்றிய வட்டம். பல சமணக் கிராமங்கள் இவ்வட்டத்திலுள்ளன. தென் இந்தியாவிலேயே இங்கே சமணர் மிகுதியாக உள்ளனர். இவர்கள் திகம்பர வகுப்பினர். திக்கையே ஆடையாக உடைய இறைவனை வழிபடுவர் திகம்பர் ஆவர்.

வட்டத்தின் தலைநகர் வந்தவாசி. மக்கள் தொகை 12,553. பாண்டிய அரசன் ஒருவன் இவ்வூருக்கு வந்து உடல் நலம் பெற்றதால் 'வந்தவாசி' என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர்.

வரலாற்றுப் பாடம் பயிலும் மாணவரைப் பாடு படுத்தும் வந்தவாசிப் போர் நடந்த இடம் இதுவே. 1750 முதல் பல போர்கள் இங்கு நிகழ்ந்தன. 1780-இல் ஐதர் அலியின் படைகளை, பிளின்ட் என்ற ஆங்கிலத் தளபதி தோற்கடித்தார்.

பிரெஞ்சுக்காரர்க்கும் ஆங்கிலேயர்க்கும் இங்கு நடைபெற்ற போரில், சர் அயர் கூட் என்ற பிரிட்டிஷ் தளபதி பெரு வெற்றி பெற்றார். இவ்வூரில் ஆங்கிலேயர் தோல்வியடைந்திருந்தால், தென்னிந்தியா முழுவதும் பிரெஞ்சுக்காரரான டூப்ளேயின் ஆளுகைக்குட்பட் டிருக்கக் கூடும்.

இவ்வூர்க் கோட்டை மராத்தியர்களால் கட்டப்பட்டு ஆர்க்காட்டு நவாபின் குடும்பச் சொத்தாக இருந்தது. 18-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையே

நிகழ்ந்த ஆதிக்கப் போர்களில் பல தடவை இக்கோட்டை ஒரு போர்களமாக இருந்தது. சில பகுதிகள் மட்டுமே இக்கோட்டையின் நினைவாகப் பேணப்பட்டுள்ளன.

இவ்வூர் மலைமீதுள்ள தளவகிரிநாதர் கோயிலில் கார்த்திகை உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது.

வந்தவாசியில் லப்பைகள் கோரைப்பாய் நெசவுத் தொழிலில் சிறந்து விளங்குகின்றனர். வேளாளர் நஞ்சையும் கோரையும் பயிரிடுவர். சமணர் பலர் இவ்வூரில் வாழ்கின்றனர். குடிதண்ணீர் கிடைப்பது இவ்வூரில் அருமையாக இருக்கிறது.

ஆவணியாபுரம்

இது ஆறணி - வந்தவாசிச் சாலையில் இருக்கிறது. ஒரு குன்றின் மீது நரசிங்கப் பெருமாள் கோயில் இருக்கிறது.

இங்கிருந்து ஒரு கிமீ. தொலைவில் அமைக்கப்பட்ட ஓர் அணைக்கட்டிலிருந்து செய்யாறு வட்டத்திலுள்ள 40 ஏரிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சக் கால்வாய்கள் உள்ளன.

கர்நாடிகர்

இங்கு உறுதியான மலைக்கோட்டை ஒன்று கட்டப் பட்டிருக்கிறது.

சீயமங்கலம்

குடைவரைக்கோயிலும், பல தூண்களுள்ள மண்டபங் களும், நான்கு துவார பாலகர்களும் இங்கே காணத் தக்கவை. சிம்மமங்கலம் என்பதே சீயமங்கலம் என மருவியிருக்கிறது. இங்குள்ள குடைவரைக் கோயில் சிம்ம விஷ்ணு வர்ம பல்லவன் பெயரால் அமைந்தது. தூணாண் டார் கோயில் என்ற பெயரும் இக்கோயிலுக்கு இருந்தது.

சாம்புவராசன் இங்கு ஒரு மண்டபம் கட்டியதாக வரலாறு உண்டு.

திரக்கோல்

இங்குள்ள குன்றின்மீது, மூன்று சமணர் கோயில்களும் மூன்று குகைகளும் உள்ளன.

தெள்ளாறு

வந்தவாசி-திண்டிவனம் சாலையிலிருந்து சற்று விலகிச் சென்று இச்சிற்றூரை அடைய வேண்டும். திண்டிவனத்திலிருந்து 24 கி.மீ.யிலும் வந்தவாசியிலிருந்து 13 கி.மீ. தெற்கோயும் தெள்ளாறு இருக்கிறது. இது வெண்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த ஊர் என்று கல்வெட்டு வாயிலாகத் தெரிகிறது.

தெள்ளாறு ஒரு போர்க்களமாக இருந்தது. நந்தி வர்ம பல்லவன் தெள்ளாற்றைச் சாம்பலாக்கியதாக வரலாறு கூறுகிறது. நந்திக் கலம்பகத்திலும் பல்லவர் வரலாற்றிலும் இவ்வூர் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

தெள்ளாற்றுப் போர் கி.பி. 840-இல் நடைபெற்றதாக, ஆராய்ச்சியறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி கருதுகிறார். மூன்றாம் நந்திவர்மன் நடத்திய பல போர்களில் இதுவே முக்கியமானது. இப்போரால், அவன் பெயர் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் என்று ஆயிற்று. தெள்ளாற்றுப் போர், பெருந்தேவனாரின் பாரத வெண்பாவிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கவுண்டர்களும் (வன்னியர்கள்), வேளாள முதலியார்களும் இவ்வூரில் வாழ்ந்து வரும் சமூகங்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவ்வூர்ச் சிவன் கோயிலைச் சுற்றி அகழி இருப்பதால் ஒரு கோட்டை இருந்திருக்க வேண்டு

மென்று கருதப்படுகிறது. இக்கோயிலிலுள்ள இறைவன் திருமூலீச்சுவரர்; இறைவி அகிலாண்ட நாயகி.

தேசூர்

வந்தவாசியிலிருந்து ஏறத்தாழ 27 கி.மீ. வடக்கே உளது. குறுநில மன்னரின் தலைநகராக 16-ஆம் நூற்றாண்டில் இருந்தது. தஞ்சை நாயக்கர் வம்சத்தைத் தொடங்கிய கேசவப்ப நாயக்கன் இவ்ரிவூனனே. குன்றின் அடி வாரத்தில் ஊரும் பாழடைந்த நிலையில் கோயிலும் உள்ளன. குன்றின் சிகரம் நெடுந்தொலைவிலிருந்து பார்த்தாலும் தெரியும்.

பொன்னூர்மலை

வட மொழியில் இவ்வூரை ஹேமக் கிராமம் என்பர். இங்கிருந்து மூன்று கி.மீ. தொலைவில் நடுக்காட்டில் ஒரு குன்று உண்டு. சமணர்களுடைய தத்துவங்கள் பற்றி ஆராய்ந்த ஏலாச்சாரியாரின் பாதம் இக்குன்றில் இருக்கிறது. இந்த ஏலாச்சாரியாரே திருக்குறளை ஆக்கியவரென்று சமணர்கள் கருதுகின்றனர். ஆண்டுதோறும் தை மாதத்தில் சமணர்கள் இந்தப் பாதத்துக்குப் பூசை செய்கின்றனர். பஞ்சாஸ்திகாயம், சமயசாரம், பிரவசன சாரம் ஆகிய மூன்று கிரந்தங்களையும் பிராகிருத மொழியில் இயற்றியவர் ஏலாச்சாரியாரே. இவர் காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

வெண்குன்றம்

வந்தவாசியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர்த் தொலைவிலுள்ள இக்குன்றின்மீது ஒரு சிவன் கோயில் இருக்கிறது.

✦ ✦ ✦

௨௨. திருவண்ணாமலை வட்டம்

இம்மாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்திருக்கும் இவ்வட்டம் சமய வாழ்விலும் வரலாற்றுத் துறையிலும் புகழ் பெற்றதாகும். இவ்வட்டத்தின் மக்கள் தொகை 1961-இல் 2,58,780.

1911 வரை, இவ்வட்டம் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது; பிறகே இம் மாவட்டத்தில் சேர்க்கப்பட்டது.

விழுப்புரம்-காட்பாடி இரயில் பாதை இவ்வட்டத்தின் வழி செல்கிறது. சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, திருச்சி, சேலம் மாவட்டங்களுக்கு இவ்வட்டத்தின் தலைநகரிலிருந்து பஸ் போக்குவரத்து உண்டு. திருவண்ணாமலை நகரம் விழுப்புரத்திலிருந்து 68 கி.மீ.; வேலூரிலிருந்து 95 கி.மீ. (சாலை வழியாக 82 கி.மீ.) தொலைவுகளில் இருக்கிறது. சித்தூர் (107 கி.மீ.) கடலூர் (116 கி.மீ.) நகரங்களை இணைக்கும் சாலை இவ்வூர் வழியே செல்லுகிறது. மேற்கே போளூரும், வடக்கே செஞ்சியும் திருவண்ணாமலையிலிருந்து 32 கி.மீ. தொலைவிலுள்ளன. திருவண்ணாமலைக்குச் செல்லுபவர்கள் இங்கிருந்து செஞ்சிக்கோட்டை, சாத்தனூர் அணை, பூங்கா ஆகியவற்றையும் காணுவது நலம்.

பிற இடங்களில் திரௌபதை அம்மன் கோயிலில் போத்தராஜா திருவுருவம் இருக்க, இவ்வட்டத்தில் சில இடங்களில் போத்தராசாவுக்குத் தனிக் கோயில்கள் உள்ளன.

இவ்வட்டத்தில் நல்லாண்பிள்ளை பெற்றான் என்ற பெயருடன் ஓர் ஊர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலை

திருவண்ணாமலை வட்டத்தின் தலைநகராக உள்ள இவ்வூர், தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டத்தின் தலைநகராகவும் இருந்து வருகிறது. இந்நகரின் பரப்பளவு 12 சதுர கி.மீ.

வரலாறு

சோழ அரசர் திருப்பணிகளும் கல்வெட்டுக்களும் இங்கு உள்ளன. மகதநாட்டு (நடுநாடு) அரசனான மகதைப் பெருமாள் இக் கோயிலுக்குப் பொன் வேய்ந்திருக்கிறான். ஒய்சாள மன்னர் இங்கே தங்கியிருந்ததற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. விசயநகர அரசர்களின் கட்டிடக்கலைச் சிறப்பை இங்குள்ள கோயிலில் காண இயலுகிறது. செங்கம் கணவாயைத் தாண்டியதும் உள்ள முதல் நகரமாக இருப்பதால், திருவண்ணாமலை இராணுவத் தளமாகவும் இருந்திருக்கிறது. 1767 முதல் 1782 வரை இவ்வூரில் ஆங்கிலேயருககும் ஐதர் அலிக்கும் போர் நடைபெற்றது. 1791 வரை பல தடவை இவ்வூர் முற்றுகையிடப்பட்டது.

மராத்தியர், மகமதியர், பரங்கியர், படையெடுப்புக் களில் இந்நகரும கோயிலும் இன்னல்களுக்குப்பட்டன. மக்கள் கொல்லப்பட்டனர். வீடுகள் தீக்கிரையாயின. சொத்துக்கள் சூரையாடப்பட்டன. மகளிர் கற்பழிக்கப் பட்டனர். பிரெஞ்சுக் கும்பெனியார், தியாகதுர்க்கம் கிள்ளேதார் கிருஷ்ணாராவ், ஐதர்அலி, திப்புசுத்தான் ஆகியோர் வரலாறு திருவண்ணாமலையைப் பற்றிய வரை இரத்தம் தோய்ந்த எழுத்துக்களில்தான் எழுதத் தக்கது. அரசியல் கொந்தளிப்புக்களிலும் அயலவரின்

எக்களிப்புக்களிலும் எவ்வளவோ சிக்குண்டும்கூட, ஊரும் கோயிலும் தம் சீரிளமை சிறிதும் குன்றாது, வழக்க ஒழுக்கங்கள் வழுவாது நிகழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கது.

கல்வெட்டுக்கள்

கல்வெட்டுச் செல்வம் நிறைந்த கோயில்களுள் திருவண்ணாமலை மிக முக்கியமானது. இங்குள்ள கல்வெட்டுக்களின் எண்ணிக்கை 106, இவை சோழ, பாண்டிய, விசயநகர அரசர்கள் நிறுவிய நிபந்தங்களைப் பற்றிக் கூறுகின்றன.

இவற்றுள் மூன்றாம் இராஜராஜ சோழன் கல்வெட்டு களும் மெய்கண்டத்தேவர் பற்றிய கால ஆராய்ச்சிக்கு உதவும் கல்வெட்டுக்களும் குறிப்பிடத்தக்கன. பழந் தமிழரின் பழக்கவழக்கங்கள், சமயம், வரலாறு, கோயில் புதுப்பிக்கப் பெற்ற விவரங்கள் இவற்றிலிருந்து தெரிகின்றன. மான்வேட்டையில் கைக்கணை தப்பி ஒரு மனிதன்மேல் பட்டு அவன் இறக்க அதற்குக் கழுவாய்க் கோயிலில் விளக்கேற்றி வைக்கப் பசுக்களையும் எருதுகளையும் ஒருவன் ஈந்த செய்தி ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. மாடவீதியிலுள்ள மனைகளை விற்பதற்குரிய விதிகள் ஒரு கல்வெட்டில் பொறிக்கப் பெற்றுள்ளன.

அருணகிரிநாதர்

அமிழ்தினுமினிய திருப்புகழைத் தந்த அருணகிரி நாதர் பிறந்த பதி இதுவே. அவருடைய திருவுருவம் மலையில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. அவருக்குத் தனிச் சந்நிதி இருக்கிறது.

அருணகிரிநாதர் வேதனை தாங்காது உலக வாழ்வை வெறுத்து உயிரை மாய்க்க வல்லாள மகாராசன் கோபுரத்தின் மீதேறிக் குதித்தார். அப்போது முருகனே வந்து அருணகிரிநாதரைத் தாங்கி அவருக்கு அருள் காட்டினார். அன்று முதல் அருணகிரிநாதர் அவன் புகழ் பாடினார்; அதற்காகத் தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள முருகன் உறைவிடங்களுக்குச் சென்றார் என்பது வரலாறு.

கோயில்

திருவண்ணாமலையிலுள்ள அருணாசல ஈசுவரர் கோயில் தமிழ்நாட்டின் மிகப் பெரிய கோயில்களுள் ஒன்று. இதன் சுற்றளவு ஒரு மைல். இக்கோயிலின் பரப்பு 24 ஏக்கர் (சிதம்பரம் கோயிலின் பரப்பு 40 ஏக்கர்) உருவத்தால் மட்டுமின்றி, பழமைப் பெருமையாலும் சிறப்புப் பெற்ற பெரிய கோயில் திருவண்ணாமலைக் கோயில். இதனை, 'பெரிய கோயில்' என்றே பெண்கள் கூறுவர். இக்கோயிலைக் காணாத அல்லது காண விரும்பாத தமிழர் எவரும் இரார்.

இக்கோயில், அண்ணாமலை என்னும் மலையின் அடி வாரத்தில் அமைந்தது. மலையின் சுற்றளவு 8 மைல் (13 கிமீ.). உயரம் 2,668 அடி (810 மீட்டர்). மலையின் நடுப் பகுதியிலும் அடிவாரத்திலும் குகைகளும் ஆசிரமங்களும் தீர்த்தங்களும் உள்ளன. மலையைச் சுற்றி எட்டுத் திக்குகளிலும் லிங்கங்களும் நந்திகளும் ஏராளமான இடங்களில் 16 கல் மண்டபங்களும் இருக்கின்றன. திருக்கார்த்திகைத் திருவிழாவிலும் தை சங்கராந்தி விழாவிலும் அண்ணாமலையாரின் உற்சவத் திருவுருவம் இம்மலையை வலம் வருவது வழக்கம்

அண்ணாமலை என்னும் பெயர் திருவண்ணாமலை யில் உள்ள குன்றினைத்தான் குறிக்கிறது. வடமொழியில் அவ்வூருக்கு "அருணாசலம்", "அருணகிரி", "சோணாசலம்", "சோணசைலம்", "சோணகிரி" என்றெல்லாம் பெயர்கள் வழங்குகின்றன. ஆதியில் அதனை "அண்ணா" என்றுதான் பெயரிட்டு அழைத்தார்கள். அண்ணாவில் இருந்த மலைக்கு அண்ணாமலை என்ற பெயர் உண்டாயிற்று. அண்ணா, என்ற இந்த நகரைத் தலைநகராகக் கொண்டு அண்ணா நாடு என்ற ஒரு சிறிய நாடு இருந்ததாகவும் தெரிகின்றது. தொண்டை மண்டலத்துக்குப் பெருஞ் சிறப்பை அளிக்கும் திருவண்ணாமலைக்கு நடுநாயகமாக விளங்குவது அண்ணாமலைதான். அதன்மேல் கோயில் ஒன்றும் கிடையாது. அம்மலையையே இறைவனது திருவுருவமாக மக்கள் கருதி வணங்குகின்றார்கள். 'மலை வடிவமான சிவபெருமான்' என்ற பொருளிலேயே 'அண்ணாமலை', 'அருணாசலேசுவரர்' என்ற சொற்றொடர்கள் ஏற்பட்டுள்ளன.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் அரும்பெரும் சோதியாகக் காட்சி தரும் திருமலை அண்ணாமலை என்பது சைவர்களின் கொள்கை. சிவபெருமான் கோயில் கொண்டு விளங்கும் திருமலைகளைத் தொகுத்துரைத்த போது,

> ***'அண்ணாமலை ஈங்கோயும் அத்திமுத்தாற கலா***
> ***முதுகுன்றம் கொடுங்குன்றமும்'***

என்ற சம்பர் தேவாரம் திருவண்ணாமலையையே முதற் கண் சிறப்பிக்கிறது.

ஆரூரில் பிறக்கவும், தில்லையைக் கண்டு வழிபடவும், காசியில் இறக்கவும் பெறும் முத்தி அண்ணாமலையை

உள்ளத்தில் உன்னுபவர்க்கு அக்கணத்திலேயே கிட்டும் என்பது சைவ சமயக் கொள்கை ஆகும். பரம்பொருளான சிவபெருமான் ஆன்மாக்களிடம் வைத்துள்ள பெருங் கருணையின் பொருட்டுப் பல உருவங்கள் எடுத்திருக்கிறார். இயற்கையின் கூற்றுக்கான மண், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐந்தும் இறைவனின் வடிவங்களே. எனவே, காஞ்சியில் மண் இலிங்கமாகவும் (பிருத்வி), திருக்காளத்தி யில் காற்று இலிங்கமாகவும் (வாயு), திரு ஆனைக்காவில் நீர் இலிங்கமாகவும் (அப்பு), தில்லையில் ஆகாய இலிங்க மாகவும் (ஆகாசம்) உருவெடுத்துள்ள சிவபெருமான் திருவண்ணாமலையில் நெருப்பு (ஜோதி) இலிங்கமாகக் காட்சி தருகிறார்.

சிவபெருமான் திருக்கார்திகையன்று இங்கு பிரகாச மான வெளிச்சமாகத் தோன்றியதாக வரலாறு உண்டு. அண்ணாமலை என்னும் இம்மலையே நெருப்பிலிருந்து தோன்றியது என்ற கருத்தைப் புவியியல் அறிஞர்கள் வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருக்கார்த்திகையன்று இங்கு வரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆண்டவனுக்குக் கர்ப்பூரம் செலுத்துவர். இங்கே செலுத்தப்படும் கர்ப்பூரத்தை மலையில் இடுவர். அப்பிழம்பின் சுடர்ஒளி சுற்றிலுமுள்ள ஊரெல்லாம் சில நாட்களுக்குச் சீரிய காட்சி நல்கும்.

சிவபெருமான் குடிகொண்டதாகிய இத்தலம் நாயன் மார்களால் பாடப்பெற்றது. மணிவாசகப் பெருமானால் சிறப்பிக்கப் பெற்றது. பெரியபுராணம், கந்தபுராணம், பதினோரம் திருமுறை போன்ற ஐம்பது நூல்கள் இத் தலத்தைப் புகழ்கின்றன. திருவெம்பாவையில் இருபது

பாசுரங்களை மாணிக்கவாசகப் பெருமான் இத்தலத் திலேயே அருளினார்.

இக்கோயிலின் நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்கள் உள்ளன. கிழக்கிலுள்ள இராஜ கோபுரம் 11 நிலைமாடமாகும். இது விசயநகர அரசரான கிருஷ்ண தேவராயரால் தொடங்கப் பெற்று, தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கரால் கட்டி முடிக்கப் பெற்றது என்பர். இதன் உயரம் 217 அடி (திருச்சி மலைக்கோட்டை 273 அடி). பரத சாத்திரத்திலுள்ள தாண்டவ லட்சணம் என்னும் நாட்டிய நிலைகள் 108-ஐயும் விளக்கும் சிற்ப வடிவங்கள் இக்கோபுர வாயிலில் உள்ளன.

பேய்க் கோபுரம், திருமஞ்சனக் கோபுரம், அம்மணி அம்மாள் கோபுரம் ஆகிய மூன்றும் பிற மூன்று வாயில் களில் உள்ளன. இவை தவிர ஏனைய கோபுரங்களுள் பதினான்காம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட வல்லாள மகராசா கட்டிய வல்லாள மகாராசன் கோபுரமும் கிளி உருவம் உள்ள கிளிக்கோபுரமும் முக்கியமானவை. இக்கோபுரங்களைப் பற்றி எம்.எச். கிரேவ்லி என்ற வெள்ளைக்காரர் அரிய ஆராய்ச்சி நூலை ஆக்கியுள்ளார்.

விசயநகர அரசர்களுக்குப்பின் சில நூற்றாண்டுகள் இக்கோயிலின் இருண்ட காலம் என்று குறிப்பிடத் தக்கவை. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய தன வணிகர் ஒரு கோடி ரூபாய் வரை செலவு செய்து இக்கோயிலைப் புதுப்பித்துள்ளனர்; பல கட்டளைகளை நிறுவியிருக்கின்றனர்.

இங்கே காணத்தக்கவை

பல நந்தவனங்கள், பல தீர்த்தங்கள், 1,000-க்கு மேற்பட்ட விக்கிரகங்கள், துவார பாலகர், யாளி உருவங்கள், 1,008 காலுள்ள மண்டபம்*, மிகப் பழமையான பகுதிகளாகக் கருதப்படும் கர்ப்பக் கிரகமும் கம்பத்தடியும், ரமண மஹரிஷி தங்கித் தவம் கிடந்த பாதாளலிங்கேசுவரர் சந்நிதி**, கோயிலின் வெள்ளி ரதமும் நகைகளும், 'அடி அண்ணாமலை' என்னும் தலம்.

திருவண்ணாமலையில் இருப்பவை

6 லட்சம் வருவாயுள்ள நகராண்மைக் கழகம், கோட்ட ஆட்சி - வட்ட ஆட்சி அலுவலகங்கள், முன்சீபு கோர்ட்டு, 360 தீர்த்தங்கள், 6 'பஸ் ஸ்டாண்டுகள்', ஒரு இரயில் நிலையம், அரசாங்க அலுவலகங்களுக்கும் பள்ளிக் கூடங்களுக்கும் கடைகளுக்கும் வாடகைக்கு விடப்பட்டது போக எஞ்சிய இடத்தைத் திருமணம் நடத்த வாடகைக்கு விடும் நூற்றுக்கு மேற்பட்ட பெரிய சத்திரங்கள், காரைக்குடி கோயிலூர் சைவமடத்தின் கிளைமடம், வழிபட வருபவரை நம்பி வாழும் பிச்சைக்காரர்கள்.

---

* இது ஆயிரக்கால் மண்டபம் எனப்படும். இவ்வகை மண்டபங்கள் திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை, திருநெல்வேலி, திருவரங்கம், காஞ்சி ஏகாம்பரம், திருவாரூர், திருவானைக்கா என்னும் இடங்களில் மட்டுமே உள்ளன.

** பாதாளலிங்கக் குகை ஆயிரக்கால் மண்டபத்தின் மேல் புறத்தில் தெற்குத் திக்கில் இருக்கிறது. தாராப்பூர்வாலா என்ற பார்சிச் செல்வரின் பொருளுதவியைப் பெற்று திருவாட்டி பெரோசா தலையர்கான் என்ற பார்சி அம்மையார் இந்தக் குகையை புதுப்பித்து வைத்தார். இதை 14–5–1949இல் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக அப்போது பதவியிலிருந்த ச. இராசகோபாலாச்சாரியார் திறந்து வைத்தார்.

திருவண்ணாமலையில் இருந்தது

டவுன் பஸ்.

திருவண்ணாமலையில் கேட்கும் ஒலி

'அண்ணாமலையானுக்கு அரோகரா!
அன்னக் காவடி தர்மம் தாயி!'

திருவண்ணாமலையின் பெரிய திருவிழா

திருக்கார்த்திகை. (இது பத்துநாள் விழா. ஐந்தாம் நாளிலிருந்து கூட்டம் மிகுதியாக இருக்கும். பத்தாம் திருநாள் அன்று இரண்டு லட்சம் மக்கள் கூடுவர்.)

திருவண்ணாமலையின் விற்பனை

திருக்கார்த்திகையையொட்டி நிகழும் சந்தையில் மாடுகளும், வீசைக்கணக்கில் பழைய (சிலசமயம் அரிய) புத்தகங்களும்.

திருவண்ணாமலைப் பகுதியின் விளைபொருள்கள்

நெல், கடலைக்காய், மிளகாய்.

ரமண ஆசிரமம்

திருவண்ணாமலை, நகரின் ஒரு கோடியில், இரயில் நிலையத்திலிருந்து 3 கிமீ. தொலைவில் செங்கம் சாலையில், திருவண்ணாமலை மலையின் அடிவாரத்தில் இந்த ஆசிரமம் இருக்கிறது.

இது, பகவான் ரமண மஹரிஷியால் 1922-இல் தொடங்கப்பட்டது. இந்த மஹரிஷி திருவண்ணாமலைக்கு வந்து பாதாள லிங்கேசுவரர் சந்நிதியில் பல காலம் தங்கித் தவம் கிடந்து, ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்டார்.

இச்சந்நிதி திருவாட்டி பெரோசா தலையார்கான் என்ற பார்சிச் சீமாட்டியாரால் திருப்பணி செய்யப்பட்டது.

ரமண மஹரிஷி இந்த ஆசிரமத்தின் வாயிலாக இந்து மதத்தின் பெருமையை உலகுக்கு அறிவித்தார். பல நாட்டினரும் புகழும் நிலையில் கருணைக் கடலாகவும் எல்லோர்க்கும் எளியராகவும் அமைதிக் கோலத்தில் வெற்றாரவாரமின்றி வாழ்ந்து ஆத்மீக அறிவைப் பரப்பி வந்தார்.

உலகப் புகழ் பெற்ற நாவலாசிரியரான சாமர்சட் மாகம் இங்கு 1936-இல் வந்திருந்தார்; இவர் திருவண்ணா மலைக் கோயிலைப் பற்றியும் இந்த ஆசிரமத்தில் தம் உள்ளத்தை ஈர்த்த காட்சிகளைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார்.

ரமண மஹரிஷிக்கு இங்கிலாந்திலும் அமெரிக்காவி லும் சீடர்கள் உள்ளனர். 14-4-1950-இல் ரமண மஹரிஷி சோதியில் கலந்து விட்டார். இவருடைய சீடர்கள் இதுவரை 'பகவான்' என்றே குறிப்பிடுவர். இவரது சமாதிமீது சிறந்ததொரு கோயில் கட்ட வெளிநாட்டுச் சீடர்கள் பொருளுதவியுள்ளனர்.

1950 முதல் ஆசிரமம் பகவானின் சகோதரராலும் சீடர்களாலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆசிரமத்துக்கு ஏராளமான கட்டிடங்களும் சொத்துக்களும் உள்ளன. இங்கிருந்து பல நூல்கள் வெளியிடப்படுகின்றன. பிரெஞ்சு, ஜெர்மன் உள்ளிட்ட பல மொழிகளில் தத்துவம், சமயம் பற்றிய 4,000 நூல்கள் இங்கு இருக்கின்றன.

பகவானின் மகா சமாதி, பகவான் மகா நிர்வாணம் அடைந்த இடம், பகவானின் தாயாரின் சமாதி, உணவு

படைக்கும் மண்டபத்திலுள்ள உலகப் பெருந்துறவிகளின படங்கள், வேதபாடசாலை, பசுமடம், நந்தவனம் ஆகியவையும் தாயார் சமாதியிலுள்ள மேரு ஸ்ரீசக்கரத்துக்கு வெள்ளிக்கிழமைகளிலும் தமிழ் மாதப் பிறப்பு நாட்களிலும் நடைபெறும் மூன்று மணிநேரப் பூசையும் காணத்தக்கவை. மார்கழி புனர்பூச நாளில் பகவானின் ஜெயந்தி விழா நடைபெறுகிறது.

காற்றோட்டமான இடத்தில் அமைந்து மயில்கள் ஆடும் கோலம் இந்த ஆசிரமத்தின் இயற்கைச் சூழ்நிலைக்குச் சான்றாகும். பகவானுக்கும் அவர் தாயாருக்கும் மட்டுமின்றி, பகவான் வளர்த்த பசு, மான், காக்கை ஆகியவற்றுக்கும் இங்கே சமாதிகள் கட்டப்பட்டுள்ளது, 'காக்கை குருவி எங்கள் சாதி' என்ற பாரதி பாடலை நினைவூட்டுகிறது.

பள்ளிகொண்டாப்பட்டு

இக்கிராமம் திருவண்ணாமலையின் கீழ்புறம் ஐந்து கி.மீ. தொலைவில் இருக்கிறது. வல்லாள மகாராசாவிற்கு மகனாக, சிவபெருமானே தோன்றி அரசர்க்கு இறுதிச் சடங்குகள் செய்து வைத்த நிகழ்ச்சி மாசி மாதத்தில் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

✦ ✦ ✦

23. செங்கம் வட்டம்

மாவட்டத்தின் தென்மேற்குக் கோடியில் இவ்வட்டம் அமைந்திருக்கிறது. சவ்வாதுமலை இதன் எல்லையாக இருக்கிறது. இம்மலையில் (செங்கத்திலிருந்து) 25 கி.மீ. தொலைவில் தோன்றும் செய்யாறும், சேலம் மாவட்டத் திலிருந்து வரும் தென் பெண்ணையும் இவ்வட்டத்தை ஓரளவு வளப்படுத்துகின்றன. சாத்தனூர் அணை இவ்வட் டத்தில் கட்டப்பட்டிருக்கிறது. இங்கு மழை 900 மி.மீ. (35 அங்குலம்) தான்; சில ஆண்டுகளில் மழை முற்றிலும் தவறுவதும் உண்டு; கிணறுகளிலும் அப்போது நீர் இருப்பதில்லை.

இவ்வட்டத்தின் பரப்பில் ஐந்தில் இரண்டு பங்கு காடுகளாகும். காடுகளில் யானை முதலிய உயிரினங்கள் உள்ளன. சவ்வாது மலையின் விளைபொருள்கள் செங்கம், பரமனந்தல், சந்தை புதுப்பாளையம் என்னும் ஊர்ச் சந்தைகளில் விற்பனையாகின்றன.

சவ்வாது மலையில் இவ்வட்டத்துப் பகுதியில் வாழும் மலைவாணர் கொங்குவேளாளர் என்று தம்மைக் கூறிக் கொள்ளுகின்றனர். இவர்கள் 18 'நாடு'களில் வாழ்கின்றனர். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு நாட்டானும், நாட்டுக்குள் அடங்கிய ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ஊரானும் உண்டு. இவர்களுடைய சிறப்புத் தேவதை காளி.

பெண் பருவமடைந்தவுடன் அவளை ஒரு காட்டில் மூன்று வாரங்களுக்கு வைத்திருந்து தொலைவிலிருந்து அவளுக்கு உணவு வழங்குவது இவர்களுடைய வழக்கம்.

இறந்தவரைப் புதைக்கும் வரை அடிக்கடி துப்பாக்கி வெடிக்கிறார்கள். சவத்துடன் புகையிலைக் கட்டுகளையும் புதைப்பதும் மரபு.

இவ்வட்டம் வரலாற்றுச் சிறப்புடையது. நன்னனால் ஆளப் பெற்ற நாடு இதுவேயாகும். செங்கத்தின் கிழக்கே யுள்ள கோட்டைமேடு என்னும் பகுதியில் ஓர் அரண்மனை இருந்ததன் அறிகுறிகள் காணப்படுகின்றன. திப்புசுல்தான் தென் ஆர்க்காட்டைப் படையெடுக்கும் வழியில் இப்பகுதிக் காடுகளிலும் போர் புரிந்ததாக வரலாறு உண்டு. இதன் விளைவாக துக்காபேட்டை, பக்கிரிபாளையும் போன்ற ஊர்களில் முஸ்லீம்கள் வாழ்கின்றனர். நம்மியந்தலில் ரோமன் கத்தோலிக்கக் கோயில் உண்டு.

இவ்வட்டத்தில் இரயில் பகுதி கிடையாது. இரயிலைப் பார்க்காத பலரை இங்கு பார்க்கலாம். இவ்வட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையும், பொரசப்பட்டு என்ற சிற்றூரும், காடும், கணவாயும் காணத்தக்கவை. தலைநகரம் செங்கம். இந்நகரின் மக்கள் தொகை 8,900.

செங்கம்

ஊர்ப் பெயர்

மலைபடுகடாம் என்னும் சங்க நூல் இவ்வூரை 'செங்கண்மா' என்று குறிக்கிறது. "அறுந்த மாங்கனி பொருந்திய செங்கம்" என்று இவ்வூரைக் குறிப்பிடுவர். பெண் கொலை புரிந்த நன்னனைப் பற்றிய கதையை ஒட்டி இம்மொழி எழுந்தது போலும்! இவ்வூரிலிருந்து 19 கி.மீ. தொலைவிலுள்ள கணவாய்க்கு 'செங்கமாக் கண்வாய்' என்ற பெயரே இன்றும் உண்டு.

இவ்வூர், பெரும்பாணாற்றுப் படைத் தலைவனான செங்கண் மாத்து வேளின் தலைநகரமாக இருந்தது.

இவ்வூர்க் கோயில் கல்வெட்டுக்களில் 'செங்கை மாநகர்' என்ற சொற்றொடர் காணப்படுகிறது. தெருக் கூத்துக்களிலும் சிலம்புப் பாடல்களிலும் வாழ்த்துக்கூறும் போது 'செங்கை மாநகரில் வசித்து வருகின்ற...' என்று கூறுவது மரபாக இருந்து வருகிறது.

இக்காலத்தில் ஊரின் பெயர் செங்கம் என மருவி விட்டது. செங்கம் என்னும் பிறிதொரு ஊர், மேற்கே எட்டு கி.மீ. தொலைவில் இருப்பதால் அது மேல் செங்கம் எனவும் இவ்வூர் 'கீழ்ச் செங்கம்' எனவும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. புதுப்பாளையம் செல்லும் வழியில் புதூர்ச் செங்கம் என்ற ஊரும் உள்ளது.

கோயில்கள்

சிவன் கோயிலும் பெருமாள் கோயிலும் இவ்வூரில் உள்ளன. பெருமாள் கோயிலில் (17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிற்றரசனான) தளவாய் நாய்க்கன் உருவச்சிலை இருக்கறிது. இவன் பெயரால் ஒரு குளமும் ஒரு பேட்டை யும் இவ்வூரில் இருக்கின்றன.

செங்கத்திலும் சுற்றுப்புற ஊர்களிலும் தீப்பாயந்தாள் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கணவனின் சவத்துடன் உயிர்நீத்த மகளிரின் நினைவாக, செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டு தேர் போன்று கட்டப்பட்டுள்ளன. இவ்வூரைச் சுற்றிலுமுள்ள மேடுகளை அகழும்போது கல் நந்திகளும் சிவலிங்கமும் வெளிப்படுகின்றன.

திருவிழாக்கள்

கருடசேவை, வசந்த உற்சவம், திருவூடல், தைப்பூசம், நெருப்பு மிதித் திருவிழாக்கள் இங்கு நடைபெறுகின்றன.

அமைப்பு

இவ்வூர், செய்யாற்றின் கரையில்அமைந்தது. நிலவளத்தால் ஊர் விரிவடையப் போதிய இடம் இங்கு இல்லை.

போக்குவரத்து

திருவண்ணாமலையிலிருந்து மேற்கேயுள்ள சேலம், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு இவ்வூர் வழியாகப் பஸ்கள் செல்லுகின்றன. இங்கிருந்து 16 கி.மீ. தொலைவில் சேலம் மாவட்டத்துச் சிங்காரப்பேட்டையில் மின்சார நிலையம் உள்ளது.

செங்கத்தில் இருப்பவை

கல்வெட்டுக்கள் உள்ள சிவன் கோயில், கருடசேவை நடைபெறும் வேணுகோபால பார்த்தசாரதி கோயில், நெல் அறைக்கும் ஆலைகள், கூட்டுறவு முறையில் இயங்கும் மரச் செயப்படுபொருள் தொழிற்சாலை, தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் சமணச் சிலைகள், ராஜவீதி.

செங்கத்தில் இல்லாதவை

வங்கி, திரைப்பட மாளிகை.

செங்கத்தின் ஏற்றுமதிகள்

தேங்காய், தாழம்பூ, அரிசியும், புகையிலையும் மலைப் பொருள்களும் இவ்வூர்ச் சந்தையில் மிகுதியாக விற்பனையாகின்றன.

காஞ்சி

இது செங்கத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில், செய்யாற்றின் கரையில் திருவண்ணாமலைக்கு அருகேயுள்ள சிற்றூர். ஆற்றங்கரையில் கரைகண்டேசுவரர் கோயிலும் குன்றின் மீது முருகன் கோயிலும் உள்ளன.

சாத்தனூர் அணை

இந்த அணையைப் பற்றிப் பாசன வசதிகள் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளோம்.

சாத்தனூர்ப் பூங்கா

சாத்தனூர் அணையருகே இப் பூங்கா அமைக்கப் பட்டுள்ளது. இயற்கை நலம் மனிதனின் கைவண்ணத்தால் பேரழகு பெறுகிறது. சுற்றிலும் குன்றுகளும் வளமான காடுகளும் சூழ்ந்த ஆற்றுப் பகுதியில் இது அமைந் துள்ளது. கலையார்வம் நிறைந்த கட்டிடக் கலைஞர் களிடம் நீர்வளம் மிகுந்த இடங்கள் கிடைத்தால் அவற்றை எவ்வாறு அழகுபடுத்த இயலும் என்பதற்கு இது எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இது செங்கம் வட்டத்தில் இருக்கிறது. திருவண்ணாமலை செங்கம் சாலையிலுள்ள கொட்டகுளத்திற்குத் தெற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ளது; திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. இலும் சென்னையிலிருந்து 219 கி.மீ.இலும் இருக்கிறது.

'தமிழ்நாட்டுப் பொதுப் பணித்துறையினர் அணையைக் கட்டுமுன்னே பூங்காவைக் கட்டி விடுகின்றனர்' - என்று வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. இப்பூங்காவைக் காணும்போது, வேடிக்கையான இந்த உரையிலும் உண்மை உள்ளதை உணரலாம்.

பொலிவு மிக்க இந்தப் பூங்காவைத் திரைப்படங்கள் பலவற்றில் படமாக்கியுள்ளனர். இங்குப் பொருத்தப் பட்டுள்ள வண்ண விளக்குகள் சனி ஞாயிறு ஆகிய நாட் களிலும் மற்றச் சிறப்பான நாட்களிலும் ஒளி வீசுகின்றன. மாடிப்படிகள் போன்று பல தட்டுகளில் ஏழு ஏக்கர்ப் பரப்புக்கும் அமைக்கப்பட்டுள்ள ஏராளமான சிறு பூங்காக்களையும் வண்ண மலர்களையும் செடி கொடி களையும் அணைமீது நின்று ஆற அமரக் காண்பது இன்பம் தரும் காட்சியாகும். அவற்றைக் காணாத கண் என்ன கண்ணே!

கரடி, (பல வண்ணங்களில்) கினிப் பன்றி, முயல் குட்டி ஆகிய விலங்குகளும்; புறா, பல நிறக் கிளிகள் - போன்ற பறவைகளும் பூங்காவுக்கு வருகை புரிவோர் பார்வைக்காக வளர்க்கப்படுகின்றன. சிறுவர் விளையாடுவதற்கான வசதிகளும், பெரியோர் நீந்தி மகிழ நீந்து குளமும் உள்ளன. படகில் இன்ப உலா வந்து நீர்த் தேக்கத்தைக் காணவும் வாய்ப்பு உண்டு. பழைய கோட்டைகளை பார்க்காத வர்கள் இங்குள்ள 'மாதிரிக் கோட்டை' மீதாவது ஏறி நின்று பார்க்கலாம். ஆறு, தேக்கம், அணை, பூங்கா - ஆகியவை விளக்கமாகத் தெரியும்படி "மாதிரி அணை" அமைக்கப்பட்டுள்ளது. தொங்கு பாலம், மீன் பண்ணைகள் ஆகியவையும் காணத்தக்கவை.

சிலைகள்

உயிருள்ள மனிதர்களோ என்று வியக்கும் வண்ணம் அமைந்துள்ள வண்ணச் சிலைகள் பலவற்றைச் செய்து வைத்துள்ளனர். அணைகட்ட உதவிய உழைப்பாளிகள் வேலை செய்த நிலையைச் சில சிலைகள் விளங்குகின்றன. பொறியியல் அலுவலர் ஒருவர் தம் வேலையில் முனைந்து

நிற்கிறார். அகத்தியர் நீர் ஊற்றுகிறார். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் தலையில் கங்கை நீர் சொரிய, குன்றில் அமர்ந்துள்ளார்.

அணை கட்டும் போது நிழல் தந்து உதவிய மரத்தைச் சுற்றி, விளக்கும் பூங்காவும் அமைத்து நன்றி கூறும் வகையில் நினைவுச் சின்னம் ஏற்படுத்தியுள்ளனர். யூகலிப்டஸ் மரங்களும் இங்கு உள்ளன. பழத் தோட்டமும் உருவாகி வருகிறது.

இங்கு வருபவர்கள் தங்குவதற்கு மலிவான வாடகையில் அறைகளும் சிறு வீடுகளும் அரசாங்கத்தார் கட்டியுள்ளனர். இவற்றில் இருக்க இசைவு பெற, முன்கூட்டி,

Assistant Engineer P.W.D.
Sathanur Project
Sathanur Dam, N.A.Dt.

என்ற முகவரிக்கு எழுதி ஐந்து ரூபாய் அனுப்பினால் தங்கும் இடம் உறுதியாகக் கிடைக்கும்.

இந்த அணையில் அரசாங்கத்தார் செய்யக் கூடிய சில செயல்களை இங்கே சுட்டிக் காட்டலாம். அணையையும் பூங்காவையும் காண வருவோரிடம் ஒரு சிறு தொகை (10 நயா பைசா) வசூலித்து அத்தொகையையும் பூங்கா வளர்ச்சிக்குச் செலவிடலாம். பூங்காவிற்குள்ளேயே சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைக்கலாம். இங்குள்ள காட்சிகளை வண்ணப் படங்களாக அச்சிட்டு விற்பனை செய்யலாம். செய்திப் படங்கள் போன்றவற்றைக் காட்டலாம். கிளை நூல் நிலையம் அமைக்கலாம். சென்னையிலுள்ள சித்திரப்பள்ளி (School of Arts & Crafts) போன்ற கலைக் கல்வி நிலையங்களை மக்கள் நெருக்கம் மிகுந்த சென்னையிலிருந்து அகற்றி இங்கே அமைக்கலாம். அவ்வாறு செய்தால்

மாணவரின் கலையுணர்ச்சி இங்குள்ள சூழ்நிலையால் வளம்பெறும்.

திருவண்ணாமலை இரயில் நிலையத்திலிருந்து இப் பூங்காவிற்கு (Out Agency Bus) போக்குவரத்து வசதி செய்யப்பட வேண்டும். இரயில்வேத் துறையினரே இங்கும் ஓர் உணவுச் சாலை தொடங்கலாம்.

'போர்க்களம் புகும்போது வீரமும் பூஞ்சோலையைக் காணும் போது காதலும் தோன்றுதல் இயல்பு. காதலியின் மென்கரம் பிடித்து உள்ளம் மகிழ அழைத்து வந்து இன்புற வேண்டிய இடம் இது' என்று ஒரு நண்பர் கூறினார். இது உண்மையே. தனியாக வந்து, 'குடும்பத்தோடு வரவில்லையே' என்று ஏங்காமல், குடும்பத்துடன் வருவதே நலம்.

சென்னை சமுத்திரம்

செங்கத்திற்கு மேற்கே ஐந்து கி.மீ. தொலைவில் இவ்வூர் இருக்கிறது. இவ்வூரினரான அம்மணி அம்மாள் என்னும் துறவி (மைசூர்ச் சிற்றரசர்களிடம் பொருளுதவி பெற்று) திருவண்ணாமலையில் அம்மணி அம்மா கோபுரம் கட்டினார்; தென்பெண்ணைக் கரையில் அம்மா பேட்டை என்னும் ஊரை அமைத்தார்; ஒரு காட்டில் விலங்குகள் நீர் குடிக்க 'அம்மணியம்மா குளம்' வெட்டினார். செங்கத்துக்கு அருகேயுள்ள ஒரு பாறை இந்த அம்மையார் பெயரால் விளங்கி வருகிறது. இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இறுதி என்பர்.

தண்டுமேடு

இது செங்கத்திலிருந்து (பக்கிரி பாளையம் அருகே) 8 கி.மீ. தொலைவில் உள்ள இடம். ஐதர்அலியின் படைகள்

முதல் மைசூர் யுத்தத்தின் போது இங்கு கூடாரம் அடித்த தால் இப்பெயர் ஏற்பட்டது.

நீர்பத்துறை

இது செங்கத்திலிருந்து 24 கி.மீ. தொலைவில் தென் பெண்ணைக் கரையில் இருக்கிறது. இங்கு சென்னமா கோயிலும், வேங்கடசாமி கோயிலும் உள்ளன.

பரமநந்தல்

இது செங்கத்திற்கு வடக்கே ஐந்து கி.மீ. தொலைவில் சவ்வாது மலையின் ஒரு பகுதியின் அடிவாரத்தில் உள்ளது. இங்கு வெள்ளிக்கிழமை தோறும் கூடும் சந்தையில் மலை விளை பொருள்களை வெளியூர் வணிகர் வாங்கி, மாவட்ட மெங்கும் விற்பனை செய்கின்றனர்.

பள்ளிப்பட்டு

இது செங்கம் - திருப்பத்தூர்ச் சாலையில் உள்ள ஊர். இக்குன்றின்மீது முருகன் கோயில் இருக்கிறது. கார்த்திகை தோறும் இங்கு மிகுதியான மக்கள் வழிபடுகின்றனர்.

மண்மலை

இது செங்கத்திலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் ஐந்து கி.மீ. தொலைவிலிருக்கிறது. மண் குவித்து வைத்தது போன்று இக்குன்று இருக்கிறது. இதன் மீது முருகன் கோயில் ஒன்று உண்டு.

✦ ✦ ✦

24. போளூர் வட்டம்

இம்மாவட்டத்தின் பின்தங்கிய வட்டங்களுள் இது ஒன்று. சவ்வாது மலையும் வீரப்பனூர்க் காடுகளும் செய்யாறும் இவ்வட்டத்தில் உள்ளன. மலைமீதுள்ள திருமூலர் கோயிலுக்கு 1312-இல் நிபந்தம் ஏற்பட்டதாக ஒரு கல்வெட்டு உண்டு.

மாதிமங்கலத்துக்கு அருகேயுள்ள பர்வதமலை மலைபடுகடாத்தில் குறிப்பிடப்பட்ட நவிர மலையே யாகும். இதைப் பற்றித் திரிசூலகிரி புராணம் ஏற்பட்டிருக் கிறது. மலையடிவாரத்தின்கீழ் பல மண்டபங்கள் உள்ளன.

போளூர் வட்டத்துக் காடுகளில் கடுக்காய், கோந்து வகைகள், அரக்கு, தேன், தேன் மெழுகு, காட்டு மஞ்சள், கஞ்சா, நாட்டு நன்னாரி ஆகிய பொருள்கள் கிடைக் கின்றன. சிறுத்தை, கரடி, கழுதைத் குறத்தி, கலைமான், புள்ளிமான், கட்டுப்பன்றி, புலி, காட்டெருமை ஆகிய உயிரினங்கள் உள்ளன.

மழைக் காலத்தில் ஆற்று வெள்ளத்தால் சில கிராமங்கள் அவதிப்படுகின்றன. எனவே அங்கு கரைகள் கட்டும் வேலையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இவ்வட்டத்தில் அரிசி வேளாண்மை மிகுதி.

வட்டத்தின் மக்கள் தொகை 2,45,483. தலைநகரம் போளூர் (14,758), பிற நகரங்கள் சேத்துப்பட்டு (10,914); களம்பூர் (9,337).

போளூர்

வட்ட ஆட்சி அலுவலகங்களும் வேளாண்மை மாவட்டத்தின் தலைமை அலுவலகங்களும் இங்கு உள்ளன. பதினெட்டாம் நூற்றாண்டில் இவ்வூரில் நடைபெற்ற போரில் கலனல் பெய்லி என்ற வெள்ளைக் காரத் தளபதி படுதோல்வியடைந்தார். பிரிட்டிஷாரின் கொட்டத்தை அடியோடு ஒடுக்கி விடுவதாக ஐதர் அலி பயமுறுத்தியது இவ்வூரில்தான்.

தும்பைக்காட்டு அம்மனாகிய தும்பை நாச்சியாருக்கு இங்கு பெரியதொரு திருவிழா நடைபெறுகிறது. வேளாண் மைத் தொழிலில் இப்பகுதி சிறந்து விளங்குகிறது. போளூர்ச் சுருட்டு மிகவும் புகழ் பெற்றறது.

திருவண்ணாமலையிலிருந்து 32 கி.மீ. தொலைவிலும் ஆறணியிலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் போளூர் இருக்கிறது. இது விழுப்புரம்-காட்பாடிப் பாதையிலுள்ள இரயில் நிலையம்.

அலியாபாத் ஏரி

இது சோழர் காலத்தில் வெட்டப் பெற்றது. முஸ்லிம் ஆட்சியில் இப்பெயர் ஏற்பட்டது.

கர்நாடகிரி

சவ்வாது மலையின் உயர்ந்த சிகரம் இதுவே. இதன் உயரம் 2,700 அடி இருக்கலாம். மிக உயர்ந்த மதில் சுவர்களால் உறுதியாக அமைக்கப்பட்ட கோட்டையும் பெரிய மாளிகைகளையும் மருந்துக் கிடங்குகளையும் மராத்தியர் கட்டியிருந்தனர். அவற்றின் சின்னங்கள் உள்ளன. இங்கிருந்து பார்த்தால் சிறுசிறு மலைகளும் மேகங்களும் தெரியும்.

கலசம்பாக்கம்

இங்கு செய்யாற்றில் திருவண்ணாமலையிலிருந்து அண்ணாமலையார் திருக்கோலம் கொண்டு எழுந்தருளும் விழா தை மாதத்தில் ரத சப்தமியன்று நிகழும். அன்று மக்கள் எருக்க இலையைத் தலையில் வைத்துக் கொண்டு ஆற்றில் நீராடித் 'தென்புலத்தார் கடன்' செய்வர்.

காந்தப்பாளையம்

இது போளூரிலிருந்து 22 கி.மீ. தொலைவிலுளது. நவரத்தினங்களில் ஒன்றான கெம்பு இங்கு 1850-இல் கிடைத்தது.

குன்றத்தூர்

போளூர் அருகேயுள்ள இச்சிற்றூரில் மலைமீது ஒரு முருகன் கோயில் இருக்கிறது.

சேத்துப்பட்டு

இங்குச் செருப்புச் செய்யும் தொழில் நடைபெறுகிறது. தங்கிப் பொழுது போக்க ஏற்ற அமைதி இவ்வூரில் தவழு கிறது. கர்நாடகப் போர்கள் இவ்வூரிலும் நடைபெற்றன. கத்தோலிக்கருக்கு இது ஒரு புண்ணியத்தலம்.

தச்சாம்பாடி

இங்குள்ள ரோமன் கத்தோலிக்கக் கோயிலில் அழகிய உருவங்கள் உள்ளன.

தாலியறுப்பார் குன்று

இது போளூர் அருகே இருக்கிறது. அடிவாரத்தில் தாமரைக் குளம், சிவன் கோயில், பல தலைமுறைகளாக வற்றாத இனிய ஊற்று - இம்மூன்றும் காணத்தக்கன.

ஐதர் அலியின் கடைசிப் படையெடுப்பின்போது, பயந்த பெண்கள் இக்குன்றின் மீது ஒளிந்து கொண்டனர்; இக்குன்றுக்கும் சென்று ஐதரின் படைவீரர்கள் பெண்டிரின் தாலிகளை அறுத்துச் சென்றனர்.

திருமலை

இது போளூரிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும் காட்பாடி-விழுப்புரம் வழியிலுள்ள வடமாதிமங்கலம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. ஒரு குன்றில் சிகாமணிநாதர் என்ற சமண உருவம் இருக்கிறது. இதன் உயரம் 3 மீட்டர். ஆண்டு தோறும் பொங்கலுக்கு மூன்றாம் நாளில் தமிழ்நாட்டுச் சமணர் இங்கு கூடி, இவ்வுருவத்துக்கு அபிடேகம் செய்கின்றனர். இக்குன்றில் பல கல்வெட்டுக்கள் உள்ளன.

> "வட ஆர்க்காட்டில் திருமலை என்னும் குன்றம் ஒன்றுண்டு. அது வைகாவூரை அடுத் திருத்தலால் வைகைத் திருமலை எனவும் வழங்கும். மன்னரால் மதிக்கப் பெற்ற சமண முனிவர்கள் அம்மலையில் வாழ்ந்ததாகத் தெரிகிறது. இராஜராஜ சோழன் காலத்தில் கொலைபுரியும் படையரசர் கொண்டாடும் குண வீரமா முனிவன் என்று புகழப்படுகின்ற ஒரு முனிவர் திருமலை யேரிக்குக்கலிங்கு கட்டி, வைகை மலையின் இருமருங்கும் நெல்விளையக் கண்டு களித்தார் என்று அம்மலைக் கல்வெட் டொன்று கூறுகிறது.

இராஜராஜன் தமக்கையாராகிய குந்தவைப் பிராட்டியார் வைகைத் திருமலையில் ஒரு

ஜினாலயம் அமைத்தார். அது குந்தவை ஜினாலயம் என்று பெயர் பெற்றது. பொன்னூரைச் சேர்ந்த ஒரு நங்கை அம்மலையில் அருகன் திருவுருவை நிறுவினாள். பொன்னெயில் நாதனை வைகைத் திருமலைக்கு ஏறியருளப் பண்ணினாள் அந்நல்லாள் என்று சாசனம் கூறுகின்றது.

இங்ஙனம் சிறப்புற்று விளங்கிய வைகைத் திருமலையை அருக தேவனுக்குரிய மலையாகச் சமணர் கருதுவாராயினர். தமிழ் நாட்டின் வடக் கெல்லையிலுள்ள வேங்கட மலை நெடியோன் குன்றம் என்று கூறப்படுதல் போலவும், பொதிய மலை அகத்தியர் மலை என்று குறிக்கப்படுதல் போலவும், அருகதேவன் வீற்றிருந்த திருமலை "எண்குண இறை திருமலை" என்று ஒரு கல்வெட்டிற் கொண்டாடப்படுகின்றது. எண்குணன் என்பது அருகனைக் குறிக்கும் பெயர்களில் ஒன்று. எனவே, அருகு தேவனுக் குரிய மலைகளுள் மிகச் சிறந்ததாக இத்திருமலை கொள்ளப்பட்டதென்பது இனிது விளங்கும்."

என்பது டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை கருத்து.

பரவாதிமல்லரும், அவர் மாணாக்கரான அரிஷ்ட நேமி ஆச்சாரியாரும் வாழ்ந்தது திருமலையில்தான் என்றும், குணவராம முனிவர் திருமலையில் (இராச ராசன் காலத்தில்) கலிங்கு ஒன்று அமைத்தார் என்றும் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் (சமணத் தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில்) கருதுகிறார்.

"இங்குள்ள குன்றின் மேல் நேமிநாத தீர்த்தங்கரரின் திருவுருவம் பாறையில் பெரிதாகச் செதுக்கப்பட்டு மிகக் கம்பீரமாகக் காணப் படுகிறது. 16 அடி உயரம். குந்தவை ஜினாலயம் என்று சாசனங்களில் இதற்குப் பழைய பெயர் கூறப்படுகின்றது. சோழ அரசர் குடும்பத்தில் பிறந்த குந்தவை என்னும் அம்மையாரால் இது அமைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் உள்ள சமணத் திருவுருவங்களில் இவ்வுருவமே பெரியது என்று கருதப்படுகிறது. இக்குன்றின் அடிவாரத்திலும் இரண்டு சமணக் கோயில் உள்ளன. இக்குன்றில், இயற்கையும் செயற்கையுமாக அமைந்துள்ள குகையில் சோழர் காலத்து ஓவியங்கள் சிதைந்து காணப்படுகின்றன இவற்றில் சமவசரணம் போன்ற சித்திரம் ஒன்று சிதைந்து காணப் படுகிறது. பிற்காலத்து ஓவியங்களும் இங்குக் காணப்படுகின்றன. பாறையில் சில சிற்ப உருவங்கள் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.."

என்று அறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி "சமணமும் தமிழும்" என்னும் நூலில் கூறுகிறார்.

தேவிகாபுரம்

இம்மலைமிது பழமையான ஒரு சிவன்கோயில் இருக்கிறது.

நட்சத்திரக் கோயில்

இது வில்வாரண்யத்திற்கு அருகே இருக்கிறது. கிருத்திகை நட்சத்திரத்தன்று இக்கோயிலில் கூட்டம்

மிகுதியாக இருக்கும். குரங்குகள் இங்கு நிறைய இருப்பதால், நட்சத்திரம் என்ற சொல் குரங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது.

படைவீடு

இது போளூர்-வேலூர்ச் சாலையில் சந்தை வாசலுக்கு அருகேயிருக்கிறது. பல்லவரின் மிகப் பழமையான கோட்டை இவ்வூரில் கட்டப்பட்டிருந்தது. குறும்பர்கள் 3,000 ஆண்டுகட்குமுன் வாழ்ந்ததாகவும் இந்நகரின் பெரும்பகுதி அனுமானுடைய சாபத்தால் அழிந்ததாகவும் கூறுவர். நந்தராசா என்ற குறும்ப அரசனால் இக் கோட்டை அமைக்கப் பெற்றதாகக் கருதப்படுகிறது. படைவீடு, படவேடு என்று மருவிவிட்டது. படைவீடு அம்மன் கோயிலில் ரேணுகாம்பாள் கோயில் கொண் டிருக்கிறார்; அடி வெள்ளிக்கிழமைகளில் இங்கு கூட்டம் மிகுதி. 13-ஆம் நூற்றாண்டு வரை இங்கே குறு நில மன்னராக இருந்த சம்புவராயர்களை அழித்த பிறகே, விசயநகரப் பேரரசு ஏற்பட்டது. சம்புவராயரே படைவீடு கட்டியதாக ஒரு வரலாறு உண்டு. சம்புவராயர் பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவராப் பல்கலைக் கழகத்தால் தெலுங்கில் வெளியிடப்பட் டுள்ளன.

இவ்வூரில் இருப்பவை:

கர்ண பரம்பரைக் கதையுள்ள ஜமத்கினி ஆசிரமம், தோண்டி யெடுக்கப்பட்ட ராமர் கோயில், பக்தர்கள் விரும்பும் வரம் நல்கும் ரேணுகாம்பாள் அம்மன் கோயில்.

பருவதமலைச் சிகரம்

சவ்வாது மலையின் உயர்ந்த பகுதிகளில் இதுவும் ஒன்று. இதன் உயரம் 3,000 அடி (910 மீட்டர்) நவிரமலை என்று இதை மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. இம்மலையின் அமைப்பு தனிச் சிறப்புடையது; செங்கம்-திருவண்ணாமலை; செங்கம்-போளூர்ச் சாலையிலிருந்து பார்ப் பதற்கு இனிய காட்சியாக இருக்கும்.

இங்குள்ள பருவதவர்த்தினி ஈசுவரன் கோயில் நன்னனால் கட்டப் பெற்றது என்பர். இங்கு மார்கழி மாதத்தில் அன்ன அபிடேகம் நடைபெறுகிறது. இம் மலைமீது ஏறுவது கடினம். ஏணிப்படி, அந்தரப்படி, ஆகாயப்படி என்ற ஏற்றங்கள் உள்ளன.

பாக்மார்ப்பேட்டை

வேலூர்க்கு வடக்கே மூன்று கி.மீ. தொலைவில் இருக்கிறது. நவாபுகள் இங்கு புலிவேட்டை ஆடியதால் இவ்வாறு பெயர் ஏற்பட்டது. இப்போது 'குத்துக்காடு' என்ற பெயர் நிலவி வருகிறது.

இக்காட்டில் அரசாங்க அலுவலரும் ஏனையோரும் தங்கும் விடுதி ஒன்று இருக்கிறது. முருகாப்பாடி (முருகு ஆர்ப்பாடி)யில் தேன் நிறையக் கிடைத்ததாகக் கூறுவர்.

பொத்தறை

போளூர் அருகே இச்சிற்றூர் இருக்கிறது. இங்கு 19-ஆம் நூற்றாண்டில் காந்தக் கற்கள் கிடைத்தன. 'பூண்டிப் பொத்தறை ஏண்டிகத்தறே' என்று ஒரு பழமொழி உண்டு.

மண்டபக்குளத்தூர்

இது ஒரு பிர்க்காவின் தலைநகர். பல்லவர் காலத்தில் வேதம் ஓதுவதற்காக இங்கு 200 பிராமணர்கள் வைக்கப் பெற்றனர். இந்திய இறுதி நீதி மன்றத் தலைமை நீதிபதி யாக இருந்த பதஞ்சலி சாஸ்திரியார் இவ்வூரினரே.

மன்சுராபாத்

இங்கு துணி நெசவு சிறந்து விளங்குகிறது.

மாம்பட்டு

இவ்வூர் போளூரிலிருந்து மேற்கே மூன்று கி.மீ. தொலைவில் இருக்கிறது. கைலி (கம்பாயம்) நெசவு இங்கு மிகுதி. இவை சிங்கப்பூருக்கு அனுப்பப்படுகின்றன. இவ் வியாபாரத்தின் நிலைக்குத் தக்கவாறு இவ்வூரின் பொருளாதார நிலையில் ஏற்றமும் தாழ்வும் உண்டு.

வசூர்க்குளம்

இது போளூரிலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் இருக்கிறது. இக்குளம் போளூர் ஏரியில் ஒரு கலங்கல். 300 அடி (91 மீட்டர்) உயரமுள்ள குன்றுகளின் அடிவாரத்தில் இந்தக் குளம் இருக்கிறது. குன்றுகளிலிருந்து குரங்குகள் குளத்தில் குதித்து விளையாடும் காட்சி காணத்தக்கது.

வில்வாரணியம்

இவ்வூர் செங்கம் சாலையில் போளூரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் இருக்கிறது. இங்கு நெசவு மிகுதி. தமிழ்ப் புலவர் பலர் இவ்வூரினர் ஆவர்.

✦ ✦ ✦

௨5. குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்

1063 திருவண்ணாமலையில் கிளிக் கோபுரம் கட்டப் பெற்றது.

1274 வேலூர்க்கோட்டையும் கோயிலும் கல்யாண மண்டபமும் கட்டப்பட்டன.

1295 வேலூர்க்கு ராயவேலூர் என்று பெயர் ஏற்பட்டது.

1340 திருவண்ணாமலையில் வல்லாள மஹாராஜன் கோபுரம் கட்டப் பெற்றது.

1516 திருவண்ணாமலையில் மேற்குக் கோபுரம் கட்டப் பெற்றது.

1565 தலைக்கோட்டைப் போர்; விசயநகரப் பேரரசு வீழ்ந்தது.

1586 கிருஷ்ணதேவராயர் ஆட்சி.

1650 பிஜப்பூர் சுல்தான் வேலூர்க் கோட்டையைப் பிடித்துக் கொண்டார்.

1676 மராத்தியர் வேலூர்க் கோட்டையைப் பிடித்தனர்.

1714 ஆர்க்காட்டு நவாபு சதாத்துல்லாகான் செஞ்சியை ஆண்ட தேசிங்கு ராஜனைத் தோற்கடித்தார்.

1751 இம்மாவட்டத்தில் சில நகரங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் பிடித்துக் கொண்டனர். ஆர்க்காட்டில் கிளைவ் முற்றுகை.

1757 கர்நாடகத்தின் மீது மராட்டியர் போர் தொடுத்தனர்.

1759 வந்தவாசிப் போர்.

1760 வந்தவாசியில் நடைபெற்ற போரில் பிரெஞ்சுக்காரரை ஆங்கிலேயர் தோற்கடித்தனர்.

1765 வேலூர்க் கோட்டை ஆங்கிலேயர் வயப்பட்டது.

1780 ஐதர்அலி வேலூர்க் கோட்டையை முற்றுகையிட்டான்.

1781 சோளிங்கரிலும் போளூரிலும் ஐதர்அலியை, சர் அயர்கூட் தோற்றடிகத்தார்.

1782 திப்புசுல்தான் மைசூர் மன்னரானார்.

1799 மைசூர் மாநிலத்துச் சீரங்கப்பட்டினம் பிரிட்டிஷார் கைக்கு வந்தது. திப்புவின் 12 குழந்தைகளும் வேலூர்க் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர்.

1800 பிரிட்டிஷ் ஆட்சி தொடக்கம்.

1801 முதல் தடவையாக இம்மாவட்டத்துக்கு ஒரு கலக்டர் நியமிக்கப் பெற்றார்.

1805 முதல் தடவையாக மாவட்ட நீதிபதி நியமனம்.

1806 வேலூர்ப் புரட்சி.

1830 வேலூர் மத்திய சிறை ஏற்பட்டது.

1853 ரெவரண்டு எச்.டபிள்யூ. ஸ்கட்டர் சென்னையிலிருந்து வாலாஜாபேட்டைக்கு வந்தார். 'அமெரிக்கன் ஆர்க்காடு மிசன்' தொடங்கப்பட்டது.

1872 22 ஊர்களில் அஞ்சல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

1900 டாக்டர் ஐடாஸ்கட்டர் வேலூரில் மருத்துவப் பணியாற்றத் தொடங்கினார்.

1904 ஆறணியில் பிளேக் நோய்.

1907 முதல் மோட்டார்கார் இம்மாவட்டத்துக்கு (அமெரிக்காவிலிருந்து டாக்டர் அன்பளிப்பாக) வந்தது.

1908 திருப்பத்தூரில் பிளேக் நோய்.

1916 திருவண்ணாமலைத் தேருக்கு விபத்து.

1917 திருப்பத்தூரில் புயலும் வெள்ளமும்.

1928 வேலூருக்கு மகாத்மா காந்தி வருகை.

1929 செங்கம் வட்டம் இருவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

1933 திருப்பத்தூரில் சலேஷியின் சொசைட்டி.

1941 குடியேற்றத்தில் இந்து–முஸ்லிம் கலகம்.

1942 கமண்டல நாகநதியில் வெள்ளம்.

1943 செய்யாற்றில் வெள்ளம்.

1950 ரமண மகிரிஷி மறைவு.

1951 ஆறணியில் நகரண்மைக் கழகம் ஏற்பட்டது.

1954 சாத்தனூர் அணை–வேலை தொடக்கம்.

1955 வேலூருக்கு இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு வருகை.

1957 சாத்தனூர் அணை கட்டி முடிக்கப் பெற்றது.

1960 விண்ணமங்கலம் உரோம பதனிடும் தொழிற்சாலை, பெண்ணாத்தூரில் நுரையீரல் நோய் மருத்துவமனை தொடக்கம்.

டாக்டர் ஐடாஸ்கட்டர் மரணம்.

1961 ஆம்புரில் சர்க்கரை ஆலை உற்பத்தி தொடங்கிற்று.

1961 காட்பாடியில் வேளாண்மைப்பள்ளி தொடக்கம்.

1961 பாலாறு அணைக்கட்டைச் சீராக்க அரசாங்கம் 48 லட்சம் செலவிட முன் வந்தது.

✦ ✦ ✦

௨௬. பிற்சேர்க்கை

வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

கோட்டம்	வட்டங்கள்
திருப்பத்தூர்	திருப்பத்தூர், குடியேற்றம்
வேலூர்	வேலூர், வாலாஜா, அறக்கோணம்.
தெற்கு வேலூர்	**அபிவிருத்தி மாவட்டம்**
ஆறணி	செய்யாறு, ஆறணி, வந்தவாசி
திருவண்ணாமலை	திருவண்ணாமலை, செங்கம், போளூர்

வட்டாரங்களின் பட்டியல்

வடக்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

வட்ட	அதைச் சேர்ந்த வட்டாரங்கள்
திருப்பத்தூர்	திருப்பத்தூர், கந்திலி, ஆலங்காயம், வாணியம்பாடி.
குடியேற்றம்	காட்டுப்பாடி, குடியேற்றம், பேரணாம் பட்டு, கீ.வ. குப்பம்.
வேலூர்	மாதனூர், அணைக்கட்டு, வேலூர், கனியாம்பாடி.
வாலாஜா	ஆர்க்காடு, வாலாஜா, சோளிங்கர், திமிரி.
அறக்கோணம்	அறக்கோணம், நெமிலி, காவேரிப்பாக்கம்.

தெற்கு வேலூர் அபிவிருத்தி மாவட்டம்

வட்டம்	அதைச் சேர்ந்த வட்டாரங்கள்
செய்யாறு	வெம்பாக்கம், செய்யாறு, அணைக்காவூர்.
ஆறணி	கஸ்தம்பாடி, ஆறணி
வந்தவாசி	வந்தவாசி, தெள்ளாறு, பெர்ணமல்லூர்.
திருவண்ணாமலை	துரிஞ்சபுரம், திருவண்ணாமலை, கீழ்ப் பெண்ணாத்தூர்.
செங்கம்	செங்கம், புதுப்பாளையம், தண்டராம் பேட்டை.
போளூர்	சேத்துப்பட்டு, கலசப்பாக்கம், போளூர்.

நகராண்மைக் கழகங்கள் மக்கள் தொகை

	1951	*1961*

செலக்சன் கிரேடு

இந்தத் தரத்தில் இம்மாவட்டத்தில் ஒரு நகராண்மைக் கழகமும் இல்லை.

முதல் தரம்

1. வேலூர்	*1,06,024*	*1,13,580*

இரண்டாம் தரம்

2. திருவண்ணாமலை	*40,718*	*46,393*
3. குடியேற்றம்	*45,667*	*50,365*

மூன்றாம் தரம்

4. ஆம்பூர்	39,992	39,256
5. திருப்பத்தூர்	27,003	30,788
6. வாணியம்பாடி	38,712	41,943
7. ஆறணி	24,567	31,341
8. வாலாஜாபேட்டை	12,601	13,171
9. அறக்கோணம்	23,032	30,659
10. ஆர்க்காடு	21,124	24,992
11. இராணிப்பேட்டை	18,945	22,961

நகரமைப்பு

12. காட்பாடி

1961-இல் மக்கள் தொகை

மாவட்டம் 31,41,983

வட்டங்கள்

அறக்கோணம்	-	2,53,380
வாலாஜா	-	3,61,724
குடியேற்றம்	-	3,84,412
திருப்பத்தூர்	-	4,07,217
வேலூர்	-	4,07,872
ஆறணி	-	1,69,620
செய்யாறு	-	2,09,845
வந்தவாசி	-	2,21,174
போளூர்	-	2,45,483
செங்கம்	-	2,22,476
திருவண்ணாமலை	-	2,58,780

இம்மாவட்டத்திலுள்ள பாராளுமன்றத் தொகுதிகள்-4

1. வேலூர்
2. வந்தவாசி
3. திருவண்ணாமலை
4. திருப்பத்தூர்

சட்டசபைத் தொகுதிகள்-20

1. ஆர்க்காடு
2. அறக்கோணம்
3. ஆறணி
4. செங்கம்
5. வேலூர்
6. செய்யாறு
7. போளூர்
8. வாணியாம்பாடி
9. இராணிப்பேட்டை
10. சோளிங்கர்
11. துரிஞ்சபுரம்
12. திருப்பத்தூர்
13. ஆம்பூர்
14. வந்தவாசி
15. குடியேற்றம்
16. திருவண்ணாமலை
17. தெரநல்லூர்
18. காட்பாடி
19. தனிப்பாடி
20. ....

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள தலங்கள்

சிவத்தலங்கள் (பாடல் பெற்றவை)	வட்டம்
திருஊறல் (தக்கோலம்)	அறக்கோணம்
திருமாற்பேறு (திருமால்பூர்)	அறக்கோணம்
திருஓத்தூர் (திருவெத்திபுரம்)	செய்யாறு
குரங்கணில் முட்டம்	செய்யாறு
வண்பார்த்தான் (பனங்காட்டூர்)	செய்யாறு
திருவல்லம் (திருவலம்)	குடியேற்றம்
வள்ளிமலை	குடியேற்றம்
திருவண்ணாமலை	திருவண்ணாமலை

வைப்புத் தலங்கள்

கீழைவழி (கீழ்வழி)	அறக்கோணம்
பொய்கைநல்லூர்	அறக்கோணம்
வளைகுளம் (வளர்புரம்)	அறக்கோணம்
அத்தி	செய்யாறு
செய்யாறு	செய்யாறு
அணி அண்ணாமலை	திருவண்ணாமலை
திருக்கரபுரம் (திருப்பாற்கடல்)	வாலாஜாபேட்டை
தெள்ளாறு	வந்தவாசி.

முருகன் தலங்கள்

விரிஞ்சிபுரம்	வேலூர்

விஷ்ணு தலங்கள்

பள்ளிகொண்டை	வாலாஜாபேட்டை
திருக்கடிகை (சோளிங்கபுரம்)	வாலாஜாபேட்டை

அம்மன் கோயில்கள்

கங்கையம்மன்	திருவண்ணாமலை
காளியம்மன்	வேலூர்
எல்லையம்மன்	வெட்டுவானம்
ரேணுகாம்பாள்	படவேடு (படைவீடு)
முத்தாலம்மன்	குடியாத்தம்
கன்னிகா பரமேசுவரியம்மன்	வாலாஜா

தஞ்சியம்மன்	படியம்பட்டு
மாரியம்மன்	காந்தப்பாளையம்
துப்பை நாச்சியம்மன்	தும்பைக்காடு (போளூர்)
ஓசூரம்மன்	கணியம்பாடி

சமணத் தலங்கள்

திருமலை (திருவைகாவூர்த் திருமலை) போளூர் வட்டம்

புகழ் பெற்ற மசூதிகள்

வேலூர்	வாலாஜா
ஆம்பூர்	வாணியம்பாடி
ஆர்க்காடு	

குறிப்பிடத்தக்க கிறித்தவத் தேவாலயங்கள்

வேலூர்	ராணிப்பேட்டை
காட்பாடி	சேத்துப்பட்டு
திருப்பத்தூர்	

✦ ✦ ✦

எமது நூல்கள்

சிலப்பதிகாரம்
மணிமேகலை
தொல்காப்பியம்
கலித்தொகை
புறநானூறு
நளவெண்பா
முக்கூடற்பள்ளு
செல்வப் பெட்டகம் (கவசக் கொத்து)
பரிபாடல்
பழமொழி நானூறு
அகநானூறு களிற்றியானை நிரை
மணிமிடை பவளம்
நித்திலக் கோவை
நற்றிணை முதற்பகுதி
இரண்டாம் பகுதி
புறபொருள் வெண்பாமாலை
கலிங்கத்துப் பரணி
ஐங்குறுநூறு மருதமும் நெய்தலும்
குறிஞ்சியும் பாலையும்
முல்லை
பதிற்றுப்பத்து
திருக்குற்றாலக் குறவஞ்சி
காளமேகம் தனிப்பாடல்கள்
ஔவையார் தனிப்பாடல்கள்
கம்பன் தனிப்பாடல்கள்
நன்னூல் விருத்தி உரை
யாப்பருங்கலக்காரிகை
நீதிநூற்கோவை
முத்தொள்ளாயிரம்

பாரி நிலையம்
90, பிராட்வே, சென்னை—600 108.
Ph: 25270795